SEMINAR REPORT

326

# இளைஞரும் அபிவிருத்தியும்

SRI LANKA FOUNDATION INSTITUTE

# இளைஞரும் அபிவிருத்தியும்

# YOUTH AND DEVELOPMENT

SRI LANKA FOUNDATION INSTITUTE
COLOMBO
THE DEMOCRATIC SOCIALIST REPUBLIC OF SRI LANKA
1979

*இலங்கை மன்றக் கல்லூரி,*
*100, சுதந்திர சதுக்கம்,*
*கொழும்பு 7.*
*இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு*

SRI LANKA FOUNDATION INSTITUTE,
100, INDEPENDENCE SQUARE,
COLOMBO 7,
THE DEMOCRATIC SOCIALIST REPUBLIC OF SRI LANKA,

# இளைஞரும் அபிவிருத்தியும்

# இளைஞரும் அபிவிருத்தியும்

இமக ''கருத்தரங்கு அறிக்கைகள்'' இலங்கை மன்றக் கல்லூரியினாலும் (இமக) ஜேர்மன் சமஷ்டிக் குடியரசின் பிரெட்ரிச் ஈபர்ட் ஸ்டிப்டுங்கினாலும் இணைவாக ஒழுங்கு செய்யப்பட்ட கருத்தரங்குகள் / தொழில் முகாம்களில் அளிக்கப்பட்ட ஆய்வு அறிக்கைகள், பத்திரங்கள், விரிவுரைகள், பேச்சுக்கள், முடிவுகள், சிபார்சுகள் என்பனவற்றின் சுருக்க தொகுப்பாகும்.

கருத்தரங்கு அறிக்கைகளை வெளியிடுவதன் மூலம் இமக ஆய்வுகட்கான சூழ்நிலையை உருவாக்கவும், கருத்துக்களையும் அனுபவங்களையும் பரிமாறிக் கொள்ளவும் முயல்கிறது.

இமக கருத்தரங்கு ஆய்வுப் பத்திரங்கள், அறிக்கைகள், செயல்முறைகள் பற்றி தனது சேகரிப்பை அதிகரிக்க ஆர்வம் கொண்டுள்ளது. அதனால் அதன் சொந்த வெளியீடுகளை ஏனைய நிறுவனங்களின் ஒத்த வெளியீடுகளுடன் பரிமாற்றம் செய்வதையும் வரவேற்கின்றது. இவை இமக நூலகத்தின் ஒரு பகுதியை உருவாக்குவதுடன், எமது கருத்தரங்குப் பயிற்சி வகுப்புகளில் பங்கு கொள்ளும் பங்கு பற்றுநர்க்கும் முக்கியம் வாய்ந்ததாகவும் பொதுவாக இமக நூலகத்தினை பயன்படுத்தும் மாணவர்கட்கும் ஆராய்ச்சியாளர்கட்கும் உதவுவதாகவும் அமையும்.

எல்லா தொடர்புகளும் இவ்வாறு விலாசமிடப்படல் வேண்டும் :—


இலங்கை மன்றக் கல்லூரி
— நூலகம் —
த. பெ. இல. 1203
கொழும்பு 7
இலங்கை சனநாயக சோசலிச குடியரசு

# பொருளடக்கம்

முன்னுரை

இளைஞரும் கல்விச் சீர்திருத்தங்களும் 01
திரு. எஸ். சந்திரசேகரம்
(விரிவுரையாளர், விஞ்ஞான தொழில்நுட்பக் கல்விப்பகுதி
கொழும்புப் பல்கலைக் கழகம்)

இளைஞரும் ஆக்கமும் 07
திரு. என். கனகசூரியர்
(இயக்குநர், தேசிய இளைஞர் சேவை மன்றம், கொழும்பு)

இளைஞர் தலைமையும் அபிவிருத்தியும் 12
திரு. ஏ. சிவராஜா
(விரிவுரையாளர், பொருளியல், அரசியல் விஞ்ஞானத்துறை,
பேராதனைப் பல்கலைக்கழகம்)

இளைஞரும் தலைமையும் 17
திரு. க. குகதாசன்
(கணக்காளர், மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் கொழும்பு)

பண்பாடு, அபிவிருத்தி, இளைஞர் 28
பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி
(இணைத்தமிழ்ப் பேராசிரியர், தமிழ்த்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை)

கிராம பகுதியின் சமூக மாற்றத்தில் இளைஞர் பங்கு 35
செல்வி எம். கந்தையா
ஆசிரியை, இந்துமகா வித்தியாலயம் குருணாகல்)

இளைஞரும் விவசாய அபிவிருத்தியும் 42
திரு. இரா. சிவசந்திரன்
விரிவுரையாளர், களனிப் பல்கலைக் கழகம், களனி.)

இளைஞர்களும் வேலைவாய்ப்பும் குடியேற்றத் திட்டங்களும் 49
திரு. எம். எம். மக்பூல்
(உதவி காணி ஆணையாளர் கொழும்பு.)

கூட்டு விவசாய முறையும் இளைஞரும் 62
திரு. ஜி. கிருஷ்ணமூர்த்தி
(உதவி அரசாங்க அதிபர், முசலிப் பிரிவு, சிலாவத்துறை)

விவசாய விரிவாக்க சேவைகள் 74
திரு. எஸ். எஸ். கணேசானந்தன்
(பிரதி இயக்குநர்,
கிராமிய கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு, கொழும்பு)

இளைஞர்க்கான கடன் வசதியும் நிதி உதவியும் 78
திரு. கே. ஜெகநாதன்
(உத்தியோகத்தர், வங்கி மேற்பார்வைப் பிரிவு
இலங்கை மத்திய வங்கி, கொழும்பு)

இளைஞர்களும் சுய தொழிற்திட்டங்களும் 83
திரு. ரி. குமாரதாசன்
(உதவிச் செயலாளர்,
கிராமிய கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு, கொழும்பு)

ஜனநாயக மரபுகளைப் பேணி வளர்த்தல் 87
திரு. ஆர். சிவகுருநாதன்
(பிரதம ஆசிரியர் – "தினகரன்" லேக்ஹவுஸ் – கொழும்பு)

சூழலைப் பாதுகாத்தல் 92
பேராசிரியர் சோ. செல்வநாயகம்
(தலைவர், புவியியற்றுறை,
யாழ்ப்பாண பல்கலைக்கழகம், இலங்கை)

★

# முகவுரை

நாட்டின் குடித்தொகையில் கணிசமான பங்கினைக் கொண்டுள்ள இளம் தலைமுறையினர் பிரச்சனைகள், அவர்களது எதிர்காலம் தொடர்பாக நாம் ஆராய்ந்த சில ஆக்க பூர்வமான கருத்துக்களை இந்நூற் தொகுப்பு மூலம் இளம் தலைமுறையினராகிய உங்கள் முன் வைக்க முடிந்ததையிட்டு நான் மகிழ்சியடைகின்றேன்.

இலங்கை மன்றக் கல்லூரி தேசிய நலன் கருதி, முக்கியமான விடயங்களில் பல்வேறு கருத்தரங்குகள், பயிற்சி வகுப்புகளை ஒழுங்கு செய்து நடத்தி வருகின்றது. ஆயினும் குறிப்பாக எமது கல்வி நடவடிக்கைகளின் நோக்கு இளைஞர் நடவடிக்கைகள், தொழிலாளர் கல்வி, சமுதாய அபிவிருத்தி ஆகிய மூன்று முக்கிய துறைகள் சார்ந்தனவாகும். இத்துறைகள் தொடர்பாக கருத்தரங்குகள், பயிற்சி வகுப்புகள் நடத்துவதோடு மட்டுமன்றி வெளிக்கள ஆய்வுகள் மேற்கொள்ளுதல், வெளியீடுகளை வெளிக்கொணர்தலில் கல்லூரி ஆர்வம் காட்டி வருகின்றது.

இளம் தலைமுறையினருக்காக 1972ம் ஆண்டில் 40 கருத்தரங்குகள் ஒழுங்கு செய்து நடத்தப்பட்டதுடன், நாட்டின் பல்வேறு பகுதிகளிலுமுள்ள இளைஞர் நிறுவனங்கட்கும் கருத்தரங்கில் பங்குபற்ற சந்தர்ப்பம் அளிக்கப்பட்டது. மேலும் தேசிய இளைஞர் சேவை மன்றத்துடன் இணைவாகவும் பல கருத்தரங்குகள் ஒழுங்கு செய்து நடத்தியதுடன், இளம் தலைமுறையினர் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகளையும் நேரில் அறியும் வகையில் பல வெளிக்கள கருத்தரங்குகளையும் முன்னின்று நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

இளம் தலைமுறையினருக்கு 'தலைமை' பயிற்சியளித்தல், சமூக, பொருளாதார பின்னணியினை விளக்குதல், வேலையில்லாப் பிரச்சினைக்குரிய காரணங்கள் சுய வேலைத்திட்டங்கள், சமூக முரண்பாடுகளைக் களைதல், உலக விவகாரங்கள், ஆளுமை வளர்ச்சிபோன்ற அம்சங்கட்கு இளைஞர்கட்கான கருத்தரங்குகளில் முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றது. இளம் தலைமுறையினரது நடவடிக்கைகள் தொடர்பான சகல விடயங்களையும் நாம் குறைந்த கால எல்லையில் நடத்தும் கருத்தரங்குகள் மூலம் பூரணமாக நிறைவேற்ற முடியாவிடினும், ஆக்கபூர்வமான சில விடயங்களை அவர்கட்கு தெரிய வைப்பதில் வெற்றி கண்டுள்ளோம். இவ்வகையில் பல்வேறு அம்சங்களை அடக்கிய ஆய்வுக் கட்டுரைகளைத் தாங்கி வெளிவரும் இந்நூற் தொகுப்பு, இலங்கை மன்றக் கல்லூரி இளம் தலைமுறையினருக்காக நடத்திய பல்வேறு கருத்தரங்குகளில் சமர்ப்பிக்கப்பட்ட கட்டுரைகளின் தொகுப்பாகும்.

இவ்வாய்வுக் கட்டுரைகளை வெளியிடுவதன் மூலம் இளம் தலைமுறையினரின் பிரச்சினைகளை முற்றுமுழுவதாக தீர்துவிடமுடியுமென நாம் கருதாவிடினும், எமது கருத்தரங்குகளில் பங்குகொள்ள சந்தர்ப்பம் கிடைக்காத பல்வேறு பகுதிகளிலும் உள்ள இளைஞர்கட்கும் யுவதிகட்கும் இந்நூற் தொகுப்பு வரப்பிரசாதமாக அமையும் என்று நம்புகின்றேன்.

இந் நூல்தொகுப்பு வெளிவர ஆய்வுக் கட்டுரைகளை சருத்தரங்குகளில் சமர்ப்பித்து உதவிய கட்டுரைகளின் ஆசிரியர்கட்கு எனது நன்றியைத் தெரிவிப்பதுடன் இந்நூலினை தொகுத்து, கருத்தரங்க அறிக்கையாக வெளிவர சகல வழிகளிலும் உதவிய எமது விரிவுரையாளர் திருமதி எஸ். சிவசந்திரனுக்கு எனது பாராட்டுக்களையும் தெரிவிக்க விரும்புகின்றேன்.

இளம் தலைமுறையினரின் தேவைகள் உணரப்படும் இக்கால கட்டத்தில் இந் நூல் வெளியாவதை யிட்டு மகிழ்ச்சியடைவதுடன் "இளைஞரும் அபிவிருத்தியும்" எனும் இக்கருத்தரங்க அறிக்கையினை நீங்கள் வரவேற்பீர்கள் என்றும் எதிர்பார்க்கின்றேன்.

ட. வெகும்பெரும
இயக்குநர்

# இளைஞரும் கல்விச் சீர்திருத்தங்களும்

திரு. எஸ். சந்திரசேகரம்
*விரிவுரையாளர், விஞ்ஞான தொழில்நுட்பக் கல்விப்பகுதி, கொழும்புப் பல்கலைக்கழகம்.*

குழந்தைப் பருவத்துக்கும் முதிர்ந்தோர்ப் பருவத்துக்கும் இடைப்பட்ட பருவத்தை இளமைப் பருவம் எனலாம்; 14 அல்லது 16 வயதில் தொடங்கும் இளமைப் பருவத்தில் உள, உடல் வளர்ச்சிகள் வேகமாக ஏற்படும் இளமைப் பருவத்தை அடைபவர்கள் 8 அல்லது 10 ஆண்டுகளாகப் பாடசாலையில் கல்வி பயின்றிருப்பவர் இப்பருவத்தினர் பொருளாதார பணிகளில் ஈடுபட அல்லது உயர் கல்வி பயிலத் தொடங்குவர். இது உளவியலாளர்கள், சமுகவியலாளர்கள். கல்வியாளர்கள் ஆகியோர் ஏற்றுக் கொள்ளும் விளக்கமாகும்.

உளவியலாளர்கள் கூறும் குமரப் பருவம் 20, 21 வயதில் முடிவடைந்த போதிலும் 30 வயது வரையுள்ளவர்கள் இளைஞர்கள் என்று கருதப்படுகின்றனர்; பொதுவாக 14 – 30 வரையுள்ள வயதுள்ளவர்களை இளைஞர்கள் என்பர். எனினும், இவ்வயதெல்லை இளைஞர்களின் பிரச்சினைகள் பற்றி ஆராய பொருத்தமானதல்ல. 14 வயதுக்கு குறைந்த பிள்ளைகள் இலங்கை போன்ற நாடுகளில் தொழில் செய்து வருகின்றனர். அவர்களில் பலருக்கு கல்வி வாய்ப்புகள் இல்லை (இலங்கையில் 25 %) மேலும் 14 வயது வரை இளைஞர் பெறும் கல்வி முக்கியத்துவமுள்ளதாயினும், 14–30 வயதெல்லையின்படி ஆரம்ப நிலைக் கல்வி, கனிட்ட இடை நிலைக்கல்வி பற்றி ஆராய முடியாது போய்விடும்.

இளைஞர்கள் பெறுகின்ற ஆரம்ப, இடைநிலை, உயர்நிலைக் கல்வி நிலைகள் பற்றி நோக்குதல் வேண்டும். இவற்றில் அதிக முக்கியத்துவம் வாய்ந்தவை பின்னவை இரண்டுமாகும், இதுவரை காலமும் இளைஞர்கள் கௌரவமான தொழில்களைப் பெற இவ்விருவகைக் கல்வி நிலைகளையே நம்பியிருந்தனர். ஆனல், இன்று இவ்விருவகைக் கல்வித் தகுதிகளும் வேலைகளைப் பெற்றுத் தரும் என்பதற்கு உத்தரவாதம் எதுவும் இல்லை.

இலங்கையில் விரிவான வளர்ந்தோர் கல்விமுறை இல்லை; அத்துடன் வளர்ந்தோர் கல்வி விதிமுறையான (Formal) கல்விமுறையின் ஒரு பகுதியாகவுமில்லை. எனவே, இந் நாட்டில் எக்கல்விச்சீர்த்திருத்தங்களும் இளைஞர்கள் மீதே தாக்கத்தை ஏற்படுத்துகின்றன; கல்விமுறை என்பது இளைஞர்களின் கல்வியையே கருதுகிறது.

இலங்கையின் உழைப்பினரில் (Labour Force) 11.5% வேலையற்றவர்களாவர். சில ஆசிய நாடுகளுடன் ஒப்பிடும்போது இவ் வீதம் மிக அதிகமானதாகும். (எடுத்துக்காட்டு: இந்தியா 1.8% பிலிப்பைன்ஸ் 6.7%, இந்தோநேசியா 2.3%). வேலையற்றோரில் 75% அதிகமானவர்கள் 15—24 வயதுக்குட்பட்டவர்களாவர்; அதாவது, இளைஞர்களாவர். இவ்வம்சம் இவ்வாய்வுக் கட்டுரைக்குப் பொருத்த

மானதாகும். இவர்கள் வேலையற்றிருப்பதற்கு காரணம் அவர்கள் பெற்ற கல்வியே என்று கூறப்படுகின்றது. எனவே இளைஞர், கல்வி, வேலைவாய்ப்புகள் ஆகிய மூன்றும் ஒன்றோடொன்று தொடர்புள்ள ஆய்வுப் பொருட்கள் எனலாம்.

வேலையற்றவர்களாக உள்ள 15—24 வயதுக்குட்பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் சமுதாயத்தால் வழங்கப்படும் இருவகையான வாய்ப்புகளை இழந்தவர்களாவர். ஒருபுறம் அவர்களுக்கு வேலை வாய்ப்புகள் இல்லை; மறுபுறம் அவர்கள் முழுமையான கல்வி வாய்ப்புகளையும் பெறவில்லை. வேலையற்றவர்களில் 3% மட்டுமே க. பொ. த நிலைக்கு மேல் கல்வி பயின்றவர்களாவர்.

பொருளாதார அமைப்பில் வேலைவாய்ப்புகளைப் பெருக்கும் திட்டங்கள் இருக்கவில்லை; வரையப்பட்ட திட்டங்கள் நிறைவேறப் பல தடைகள் இருந்தன. ஐந்தாண்டுத் திட்டம் 810000 வேலைவாய்ப்புகளை உருவாக்க முற்பட்ட போதிலும் அதில் வெற்றிகிட்டவில்லை. நாட்டின் கல்விமுறை இதுவரை காலமும் கற்றோர் வர்க்கமொன்றினை (Elite) உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டிருந்தது. இலவசக் கல்விமுறை, போதனமொழி மாற்றம், மத்திய பாடசாலைகளின் தோற்றம் ஆகிய கல்விச் சீர்திருத்தங்கள் இக்கற்றோர் வர்க்கத்தினரின் தொகையைக் கூட்டவும் பின்தங்கிய வகுப்பினரும் இவ்வர்க்கத்தில் சேர்ந்து கொள்ளவுமே வழிவகுத்தன. வேலைவாய்ப்புப் பிரச்சினை உண்மையில் பொருளாதார முறையுடன் தொடர்புடையதாயினும் கல்விமுறையும் அப்பிரச்சினை தீவிரமடைய ஓரளவுக்குக் காரணமாயிற்று. பொருளாதார முறை வேண்டி நின்ற திறன்களுக்கும் கல்விமுறையினால் வழங்கப்பட்ட திறன்களுக்குமிடையில் பெருத்த இடைவெளி காணப்பட்டது.

இன்று வேலையற்றிருப்போரில் பெரும்பாலானவர்கள் கற்ற இளைஞர்கள் என்றும், கற்றோரின் வேலையின்மை அபாயகரமானது என்றும் கூறப்படுகின்றது. இது தவறான முடிவுகளுக்கு இட்டுச் செல்லும். கல்விக்கு எழுத்தறிவது வரைவிலக்கணமாகக் கூறினால் மட்டுமே வேலையற்றோரில் பெரும்பாலானவர்கள் கற்றவர்கள் எனக்கொள்ள முடியும். இன்று எழுத்தறிவைக் கொண்டு கல்வி வளர்ச்சியை மதிப்பிட முடியாது. எழுத்தறிவு கல்விபெற ஓர் அடிப்படை அறிவேயன்றி, இன்று அறிவு வளர்ச்சி பெருகியுள்ள நிலையில் எழுத்தறிவுக்கு அதிக முக்கியத்துவமளிக்க முடியாது. வேலையற்றிருந்போரில் 3 வீதமானவர்கள் மட்டுமே க. பொ. த. நிலைக்கு அதிகமான தகுதி பெற்றவர்கள். 25 வீதமானவர்கள் மட்டும் க. பொ. த. தகுதியுடையவர்கள். எனினும், வேலையற்ற பெண்களில் 42 வீதமானவர்கள் க. பொ. த. தகுதியுடையவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இன்று நாட்டில் உள்ள உழைப்போர் அனைவரையும் ஆராய்ந்தால் அவர்களுடைய கல்வித்தரம் பெரிதும் குறைந்த தொன்றாகும். உழைப்போரில் 4 வீதம் மட்டுமே பல்கலைக் கழகப் பட்டம் பெற்றவர்களாவர். க. பொ. த. தகுதி உள்ளவர்கள் 6 வீதத்தினர்; 60 வீதமான உழைப்போர் 7 ஆம் வகுப்புக்கு அப்பால் கல்வி பயிலச் செல்லவில்லை. 20 வீத மானவர்கள் பாடசாலைகளுக்கே செல்லவில்லை. இந்நிலை உழைப்போரும் உழைப்பினை வேண்டி நிற்போரும் கல்வித் தகுதியில் குறைந்தவர்கள் என்பதைக் காட்டுகின்றது.

ஒரு கல்விமுறையின் சிறப்பினை மதிப்பீடு செய்ய இரு அளவுகோல் உண்டு. முதவாவது, கல்வி எந்த அளவுக்கு சகல தர மக்கள் மத்தியிலும் பரவியுள்ளது என்பது; இரண்டாவது, பயிற்சி நெறியின் உள்ளடக்கத்துடன் தொடர்புடையது. முதலாவது அளவுகோல் கல்விமுறை மக்களின் கல்வித் தகுதியை எந்த அளவுக்கு உயர்த்தியுள்ளது என்பது பற்றியது. இத்தகைய நோக்கில் எமது கல்விமுறை அதிகம் வெற்றி பெறவில்லை என்பதையே மேற்கண்ட புள்ளி விபரம் காட்டுகின்றது.

எனவே, முதற்கண் கல்விச் சீர்த்திருத்தங்கள் மக்களின், குறிப்பாக இளைஞர்களின் கல்வித் தரத்தை உயர்த்துவதை நோக்கமாகக் கொள்ள வேண்டும். இன்று 10ஆம் வகுப்பிலும், பல்கலைக்கழகங்களிலும் அனுமதி பெற பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. நாட்டின் மனிதவலுத் தேவைகளின்படி 30000 பேர் மட்டுமே 10 ஆம் வகுப்பில் அனுமதி பெறலாம் என்று கூறப்பட்டது; பல ஆயிரக்கணக்கானவர்கள் (120000) பல்கலைக்கழகத்தில் அனுமதி பெறத் தகுதி பெற்ற போதிலும் ஏறத்தாழ 3509 பேர் மட்டுமே உண்மையில் அனுமதி பெற்றனர். கடந்த பத்தாண்டுகளில் பல்கலைக்கழக மாணவர்களின் மொத்தத் தொகை 13000 – 14000 மாகவே இருந்து வந்துள்ளது. உயர் கல்விக்குரிய வயதெல்லையில் உள்ளவர்களில் 1 வீதத்துக்கும் குறைந்தவர்களே பல்கலைக்கழகக் கல்விபெறும் வாய்ப்புகளைப் பெற்றனர். ஆசிய நாடுகளான இந்தியா, பிலிப்பைன்ஸ், மலேசியா, யப்பான் ஆகிய நாடுகளுடன் ஒப்பிடும்போது இது மிகவும் பின்தங்கிய நிலையாகும். தேசிய வருமானத்தில் 5 வீதம் கல்விக்கென செலவிட்டபோதிலும் 1976 – 77 ஆம் ஆண்டில் (93 கோடி ரூபாய்) இந்நிலை காணப்படுவது வருந்தத்தக்கது.

பாடசாலைக் கல்வி நிலையில் மாணவர் கல்வியை இடை நிறுத்துவது பெருகி வருகிறது. 1973 இல் முதலாம் வகுப்பில் சேர்ந்த மாணவரில் 50 வீதமானவர்கள் ஐந்தாம் வகுப்பை அடையுமுன்னர் பாடசாலையை விட்டு நீங்கி விட்டனர். இத்தகைய இடை நிறுத்தங்களைச் சகல வளர்வுறும் நாடுகளிலும் காணலாம்.

இந்நிலையில், இளைஞர்களை எதிர்நோக்கும் கல்விப் பிரச்சினை கல்வி வாய்ப்புகளின்மையாகும். கல்வி முறையின் முக்கிய அங்கமான பயிற்சி நெறிகளில் அல்லது கல்விப் பொருளில் எத்தகைய குறைகள் இருந்தாலும், அவற்றில் சில அடிப்படைச் சிறப்புகள் உள்ளன. கற்றோர் வர்க்கத்தை (elite) உருவாக்கும் ஆற்றல் அப்பயிற்சி நெறிகளுக்கிருந்தது. பயிற்சி நெறிகளில் மாற்றம் ஏற்படுத்துவது ஒருபுறமிருக்க, கல்வி வாய்ப்புகளைப் பெறுவதற்குப் பொருளாதாரமோ பெற்றோரின் வருமானமோ ஒரு தடையாக அமையும் நிலை நீக்கப்படல் வேண்டும். பெற்றோர்கள் தமது பிள்ளைகளைப் பாடசாலைகளுக்கு அனுப்ப போதிய ஊக்கம் வழங்கப்படல் வேண்டும். பல்கலைக்கழகக் கல்வியைப் பெறும் மாணவர் தொகை அதிகரிக்க வேண்டும்.

மேலைநாடுகளில் சமூகமாற்றங்களைத் தொடர்ந்து கல்வி முறைகள் மாற்றமுற்றன. இங்கிலாந்தில் கைத்தொழிற் புரட்சியைத் தொடர்ந்து மத்தியதர வகுப்பினர் எழுச்சி பெறவே அந்நாட்டில் கல்வி வாய்ப்புகள் விரிவு செய்யப்பட்டன. ஆனால் இலங்கை போன்ற நாடுகளில் கல்வி விருத்தியின் விளைவாகவே சமூக

மாற்றம் ஏற்படலாம் என்று கல்வியாளர்கள் கூறுகின்றனர். இலங்கையில் சமூக மாற்றத்தை இளைஞர்களே ஏற்படுத்த வேண்டும். அதற்கு ஏதுவாக அவர்கள் கல்வி வாய்ப்புகளைப் பெறவேண்டும்.

இலங்கையில் இளைஞர்கள் கல்வி பெறச் செய்ய பாடசாலைக் கல்வி கட்டாய மாக்கப்படல் வேண்டும். இலங்கையில் கட்டாயக் கல்வியை வலியுறுத்தும் திட்ட வட்டமான சட்டவிதியில்லை என்று தேசியக் கல்வி ஆணைக்குழு எடுத்துக் கூறியது. இலங்கையில் 5 – 14 வயது வரையுள்ள மாணவரில் 25 வீதமானவர்கள் பாட சாலை செல்வதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

பல்கலைக்கழகத்தில் அனுமதிபெறும் மாணவர் தொகையை அதிகரிக்குமுகமாக பல்கலைக்கழகங்களில் இடவசதிகள் விரிவு செய்யப்படாமையால் குறைந்த இடங் களுக்குப் போட்டியிடுவோர் தொகை அதிகரித்து வருகிறது. திறமை சித்திகட்கு முக்கியத்துவமளிக்காது அனுமதி வழங்கப்படுவதால் அதிவிசேட ஆற்றல் உடை யோர் கல்வி வாய்ப்புகளைப் பெறுவது கடினமாக உள்ளது. மாவட்ட அனுமதிப் பங்கு முறை முதலியன இளைஞரில் ஒரு சாரார் மத்தியில் பதட்ட நிலையை ஏற்படுத்தியுள்ளது. திறமைக்கு முதலிடம் அளிக்கும் அதேவேளையில் உயர் கல்வி வசதிகளை விரிவு செய்வதன் மூலம் பின்தங்கிய பகுதிகளுக்கு இடமளித்து சமரசத் தீர்வு காணும் வழிமுறைகளைக் கண்டறிய வேண்டும்.

பல்கலைக்கழக அனுமதியில் ஏற்படும் தாமதங்களும் பல்கலைக்கழகங்களில் இடம்பெறும் வேலைநிறுத்தங்களும் மாணவர்களின் பயிற்சிக் காலத்தை நீடிப்பதால் காலவிரயம் ஏற்பட நேரிடுகின்றது. உயர்கல்வி பெற வாய்ப்புப் பெறும் ஒருசிலரும் சமூகமாகக் கல்வி பெறும் நிலை பல்கலைக்கழகங்களில் இன்னும் உருவாகவில்லை.

பல்கலைக்கழகங்களில் அனுமதி பெறும் இளைஞர்களில் பெரும்பாலோர் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்தவர்களாவர். அவர்களுக்கு பல்கலைக்கழகம் ஏற்பாடு செய்துள்ள கடன்வசதிகள் போதுமானதாய் இல்லை.

பல்கலைக்கழகங்களில் கல்வி பயிலும் கலைத்துறை மாணவர்கள் தொழிலை அடிப்படையாகக் கொண்ட பயிற்சி நெறிகளில் சேர்ந்து கல்வி பெற்றபோதிலும், அவர்கள் சித்தி எய்தியதும் குறிப்பிட்ட தொழில்களுக்குச் செல்லக்கூடியதாக இல்லை. பொறியியல் கல்வி பயின்றவர்களுக்கும் வேலை கிடைப்பது கடினமாக உள்ளது. கல்விமாணிப்பட்டம் பெற்ற நூற்றுக்கணக்கான பட்டதாரிகளில் பலர் ஐந்து ஆண்டுகள் காத்திருந்து பின்னரே ஆசிரியர் பதவி பெற்றனர். எனவே, பல்கலைக்கழகக் கல்விச் சீர்திருத்தங்கள் மட்டும் பிரச்சினைகளைத் தீர்த்துவிட மாட்டா.

பல்கலைக்கழகங்களில் 11ஆம் அல்லது 10ஆம் வகுப்பிலும் அனுமதி பெறத் தவறும் இலட்சகணக்கான இளைஞர்கள் பெறும் இடைநிலைக் கல்வியும் தரத்தில் குறைந்ததாகும். புதிய சீர்திருத்தங்களுக்கு முன்னர் வழங்கப்பட்ட கல்வி வெறும் ஏட்டுக்கல்வியாக இருந்தது. சமூக சூழலுடன் தொடர்பற்றதாகவும் அதன் காரணமாக கருத்தற்றதாகவும் இருந்தது. மாணவர்கள் இடையில் பாடசாலையை விட்டு நீங்கியமைக்கு ஒரு காரணம் இதுவாகும். மாணவர்கள் கல்வியில் ஊக்க மும் அக்கறையும் செலுத்தவேண்டுமாயின் பாடசாலைக் கல்வி கருத்துள்ளதாகவும்

வாழ்க்கைப் பயனுடையதாகவும் இருத்தல் வேண்டும். கல்வித்தகுதிகளைப் பெறு வதையே மாணவர்களும் பாடசாலைகளும் நோக்கமாகக் கொண்டனரேயொழிய ஒரு தொழிலைச் செய்வதற்கான அறிவையும் திறனையும் கல்விமுறை வழங்கவில்லை, டட்லிசியர்ஸ் அறிக்கை இதனையே சுட்டிக்காட்டுகின்றது. அரசாங்க, கூட்டுத் தாபன பதவிகளைப் பெறத்தேவையான கல்வித் தகுதிகளை வழங்குவதே கல்வி முறையின் நோக்காக இருந்தது. பொருளாதார முறையின் மனிதவலுத் தேவை களுக்கும் கல்வி முறைக்கும் தொடர்பு இருக்கவில்லை. நவீன வாழ்வு விஞ்ஞா னத்தின் தேவையை வலியுறுத்தினாலும் இடைநிலையில் விஞ்ஞானக் கல்வி யாவ ருக்குமுரியதாக இருக்கவில்லை.

புதிய கல்விச் சீர்திருத்தங்கள் இக்குறைகளைக் கருத்திற்கொண்டனவாய் அமைந்தன. இலான்ஈலிச் போன்றோர் பாடசாலைகள் அற்ற சமுதாயத்தை விரும்பிய அளவுக்கு நாம் செல்லாவிடினும் கல்விக்குப் பதிலாக கல்வித் தகுதிக் கும் வாழ்க்கைக்குப் பதிலாக வாழ்வுடன் தொடர்பற்ற கல்விக்கும் நாம் முக்கியத் துவமளித்து வந்துள்ளதை மறுக்க முடியாது. புதிய கல்விச் சீர்திருத்தம் பொரு ளாதார அமைப்புடன் பொருந்தக்கூடிய திறன்களை உடையவர்களை உருவாக்கி விடும் என்று கூறமுடியாது. தொழில் முன்னிலைப்பாடம் அகில இலங்கைரீதியாக வெற்றிகரமாகக் செயல்படுவதாகக் கூறமுடியாது. இது வெற்றிகரமாக செயல் பட வேண்டியது முக்கியமானது. இன்று, மீண்டும் 10ஆம் வகுப்பில் அனுமதி பெறுவதே மாணவர்களின் குறிக்கோளாகிவிட்டது. பெற்றோர்களும் பாடசாலை அதிபர்களும் மாணவர்கள் 9ஆம் வகுப்பில் பெறும் ''ஏ'' புள்ளிகள் பற்றிப் பேசத் தொடங்கிவிட்டனர். பாடசாலைகள் மீண்டும் சான்றிதழ்களுக்கு முக்கியத் துவம் கொடுக்கத் தொடங்கிவிட்டன. இலான்ஈலிச் இதனையே கண்டித்தார்.

பரீட்சைகள், கல்வித்தகுதி, போட்டி உணர்வு, நூற்கல்விச்சார்பு, விடய அறிவு என்பனவற்றுக்கு முக்கியத்துவமளிக்கும் கல்விமுறை அடிப்படையில் குறை பாடுடையதாகும். இவை அனைத்தும் தனித்தனி குறைபாடுகள் அல்ல. ஒன்றுக் கொன்று தொடர்புள்ள, ஒன்றில் ஒன்று தங்கியுள்ள குறைபாடுகளாகும். இளை ஞர்கள் நாட்டின் அபிவிருத்தியில் பயனுள்ள முறையில் பங்குகொள்ள இக்குறை கள் அற்ற கல்விமுறை உருவாக்கப்படல் வேண்டும். எடுத்துக்காட்டாக, கல்வி யின் நோக்கம் இளைஞர்கள் ஒத்துழைப்பு மனப்பாங்குடன் அபிவிருத்தியில் பங்கு கொள்வதாக இருக்க வேண்டும். ஆனால் இன்றைய பாடசாலைகள் போட்டி முகாம்களாக மாறிவிட்டன. இறுதிப் பரீட்சைகள் போட்டியின் உச்சக்கட்டமாக உள்ளன. அப்பரீட்சைகள் வழங்கும் கல்வித்தகுதி இன்று பெரிதும் மதிக்கப்படு கின்றது. அக்கல்வித் தகுதியைப் பெற விடய அறிவினை மனனம் செய்யவேண்டி யுள்ளது. இக்குறைபாடுகளை அகற்றக் கொண்டுவரப்பட்ட புதிய கல்விச் சீர்திருத் தங்கள் இப்பாரம்பரியக் குறைபாடுகளில் இருந்து தம்மை விடுவித்துக்கொள்ள வில்லை.

இளைஞர்கள் பொருளாதார அபிவிருத்தியில் ஈடுபட முன்னர் அவர்கள் எப் பொருளாதாரப்பணிகளில் ஈடுபடவுள்ளனர் என்பதைத் தீர்மானிக்க வேண்டும்., அவர்கள் ஈடுபடக்கூடிய புதிய பொருளாதாரப்பணிகள் உருவாக்கப்படல் வேண் டும். அப்பணிகளை இனங்கண்டு வகைப்படுத்திக்கொள்ளுதல் வேண்டும். அப்பணி களை திறம்படச் செய்யத் தேவையான அடிப்படைத்திறன்கள், விசேடதிறன்கள், உளப்பாங்குகள், பயிற்சிகள், அனுபவங்கள் முதலியனவற்றை வழங்குவனவாகக்

கல்விமுறை அமைய வேண்டும். பொருளாதார அமைப்பின் மனிதவலுத்தேவைகளைக் கருத்திற்கொள்ளாத கல்விமுறை இளைஞர்களை அபிவிருத்திப்பணியில் ஈடுபடுத்தத் துணைபுரியாது. பொருளாதாரத் திட்டத்தின் ஓர் அங்கமாக அமையும் கல்வித்திட்டமே இளைஞரை அபிவிருத்திக்குப் பயன்படுத்தக்கூடியது. உற்பத்திக்குப் பயன்படும் ஒரு மூலவளமாக இளைஞரை மாற்றுவதற்குக் கல்விமுறை உதவ வேண்டும். கல்வியின் மீதான அரசாங்கச் செலவு (93 கோடி ரூபாய்) சமூகநலச் செலவாக அல்லாமல் மனிதசாதனத்தின் மீதான முதலீட்டுச் செலவாகக் கருதப்படல் வேண்டும்.

இளைஞர்களுக்குத் தொழிற்றிறன்களை வழங்குமுகமாக கல்விச் சீர்திருத்தங்களைக் கொண்டுவருவதில் பல தடைகள், உண்டு. நூற்கல்விப் பாரம்பரியத்திலிருந்து விடுபடுவதற்கு பெற்றோர்களும் ஆசிரியர்களும் கல்விநிர்வாகிகளும் தயங்குவது சகல வளர்வுறும் நாடுகளுக்கும் பொதுவானது. தொழில்களைக் கற்பிக்கத் தெரிந்த தொழிற்றிறன் மிக்கோர் ஆசிரியர் பதவிக்கு வருவதில்லை. எனவே, தொழிற்கல்வியை வெற்றிகரமாகக் கற்பிக்கத் தகுதியான ஆசிரியர்களைப் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளது. சாதாரண நூற்கல்வியைக் கற்பிப்பதைவிட தொழிற்கல்வியைக் கற்பிப்பதற்கு அதிக நிதி தேவை. இலங்கை போன்ற நாடுகள் இன்று கல்விக்கு ஒதுக்கியுள்ள தொகைக்கு மேலதிகமாக எதனையும் ஒதுக்க முடியாது உள்ளது. மேலும், இந்நாடுகளில் வழங்கப்படும் ஆரம்பக் கல்விதரத்தில் குறைந்ததாதலின் இடைநிலையிலும் தொடர்ந்து பொதுக்கல்வியைக் கற்பிக்க வேண்டியுள்ளது. அத்துடன், இந்நாடுகளில் பொருளாதாரப்பணிகளில், எந்நிலையில் பயிற்சி வழங்கப்படல்வேண்டும்? நாட்டின் மனிதவலுத்தேவைகள் யாவை? என்பது பற்றிய சரியான மதிப்பீடுகள் செய்யப்படவில்லை.

இக்காரணங்களால் இளைஞர்கள் அபிவிருத்திக்கு உதவக்கூடிய கல்வியைப் பெறமுடியாத நிலை தொடர்ந்து காணப்படுகின்றது. நாட்டின் அபிவிருத்தி இளைஞர்களிலும், இளைஞர்களின் பணியும் பங்கும், அவர்கள் பெறும் கல்வியிலும் தங்கியுள்ளன. மேற்கூறப்பட்ட குறைபாடுகளின் பின்னணியில் நோக்குமிடத்து இளைஞர்களின் சக்தியும் நேரமும் வீண்விரயம் செய்யப்படுவதைக் கவலையுடன் நோக்க வேண்டியுள்ளது. அபிவிருத்தி பற்றிய கொள்கைகளைத் திட்டமிடுவோர் இக்கருத்துக்களை அக்கறையுடன் நோக்குதல் வேண்டும்.

★

# இளைஞரும் ஆக்கமும்

**திரு. என். கனகசூரியர்**
*இயக்குநர், தேசிய இளைஞர் சேவை சபை*

ஒரு நாட்டின் அபிவிருத்தி என்பது அந்த நாட்டிலுள்ள வளங்களில் தங்கியுள்ளது. அவ்வளங்கள், இயற்கை வளங்களையும் மனித வளங்களையும் உள்ளடக்கியதாகும். இருவளங்களில் இயற்கை வளங்களைப் பயன்படுத்தி எந்தத் திட்டத்தையும் வெற்றிகரமாகச் செய்வதற்கு மனிதவளம் அவசியமானதாகும். இந்த மனித வளத்தைக் கூர்ந்து அவதானிக்கும்பொழுது அந்த நாட்டிலுள்ள இளைஞர்களே நாட்டின் ஆக்க அபிவிருத்திகட்கு மிக மிக முக்கியமானவர்களாகும். இளைஞர்கள் என்பதற்கு வரைவிலக்கணம் கூறுவதில் சமூக, அரசியல், பொருளாதாரக் கண்கொண்டு நோக்குபவர்கள் வெவ்வேறான விளக்கங்களை அளிப்பதனால் இவர்களுக்கிடையே கருத்துவேறுபாடுகள் காணப்படுகின்றன. இதுபோன்று வயது ரீதியான கணிப்பீடுகளிலும் முரண்பாடுகள் இருப்பினும் பொதுவாக 16 - 30 க்கும் இடைப்பட்ட வயதையுடையவர்களை இளைஞர்கள் என்னும் பிரிவுள் அடக்கலாம்.

ஒரு நாட்டின் அபிவிருத்தியில் முக்கியமானவர்களாகவும், ஆக்க நடவடிக்கைகளில் முதுகெலும்பாகவும் விளங்குபவர்கள் இளைஞர்கள். ஆனால் தற்போது இளைஞர்கள் எம்மத்தியிலே ஒரு கேள்விக்குறியாகவும், விவாதத்திற்குரியவர்களாகவும் விளங்குகிறார்கள். இது இலங்கையில் மட்டுமல்ல, இந்தியாவில் மட்டுமல்ல, உலகத்தின் எல்லா நாடுகளிலும் காணப்படும் ஒரு பெரும் பிரச்சினையாகும். ஆனால் இப்பிரச்சினையின் தாக்கம் குறைவிருத்திப் பொருளாதார நாடுகளில் இருப்பினும் குறிப்பாக ஆசிய நாடுகளிலேயே மிகக்கூடியதாக இருக்கின்றது.

இலங்கையைப் பொறுத்தவரையில் நம்முடைய இளைஞர்கள் இந்நாட்டுச் சரித்திரத்தையே மாற்றியமைக்கக் கூடிய நிலையில் உள்ளவர்கள். கடந்த பொதுத் தேர்தலிலே ஆளும் கட்சியின் வெற்றிக்கு இளைஞர்களின் பங்கே முதல் காரணம் என்பதை யாரும் மறுக்க முடியாது. ஒரு இளைஞன் தான் பிறந்த குடும்பத்தை அழிக்கவோ, ஆக்கவோ, அன்றில் தன் ஊரைக் கெடுக்கவோ, திருத்தவோ முடியும். அதுபோல, ஒரு நாட்டை ஆக்கி சிறந்த முறையில் கொண்டுவர அந் நாட்டு இளைஞர்கள் முக்கிய பங்கெடுக்க வேண்டும். இலங்கையைப் பொறுத் வரையில் இது மிகவும் பொருத்தமானதாகும்.

நம் நாட்டைக் கட்டி எழுப்ப எந்த எந்த விதத்தில் இளைஞர்களைப் பயன்படுத்தலாம் என்று பெற்றோர்களோ, அரசியல் தலைவர்களோ கருதுவதில்லை. பெற்றோர்கள் தம் பிள்ளைகள், ஒரு டாக்டராகவோ, ஒரு எஞ்சினியராகவோ அல்லது ஒரு எக்கவுண்டனாகவோ வரவேண்டுமென்று உத்தியோகத்தை எதிர்பார்த்து அதற்கு ஆகவேண்டிய வழிவகைகளைச் செய்ய முற்படுகிறார்களே தவிர தம்பிள்ளைகள் ஒரு அறிவாளியாக நாட்டின் அபிவிருத்திக்குப் பங்கு செலுத்துபவனாக வேண்டுமென்று நினைப்பதில்லை. அரசியல் தலைவர்கள் தம்முடைய சுய

நலத்திற்காக, தம்முடைய அபிலாசைகளை அடைவதற்காக இளைஞர்களைப் பகடைக்காய்களாக நினைக்கிறார்கள். இப்படிப்பட்ட இளைஞர்கள் வாழ்க்கையில் ஒரு குறிக்கோள் இல்லாதவர்களாய் நல்வழிகாட்டிகள் இல்லாதவர்களாய், இலட்சியம் இழந்து, ஏமாற்றமடைந்து விரக்தி மனங்கொண்டவர்களாகின்றனர். இளைஞர்களுக்காக அவர்களின் மனோபாவங்களை ஆராய்ந்து, அவர்களை நல்வழிகளில் செலுத்த நம் நாட்டில் பெரிய ஆய்வுகூடங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும். இந்த அரசாங்கம் இளைஞர்களுக்கென ஒரு அமைச்சை விரைவில் அமைக்க இருப்பது வரவேற்கத்தக்கது.

நம் இளைஞர்கள் பொறுமையிழந்து, வெறுமையில் வாழ எத்தனிக்கிறார்கள். சமூகம் இயந்திர மயமாக மாறிக்கொண்டு போகிறது. தொழில் நுட்ப ரீதியில் மனித வாழ்க்கை அமைக்கப்படுகிறது. வாழ்க்கை இயற்கையை விட்டு செயற்கையாகிவிட்டது. இந்த செயற்கை வாழ்க்கையின் பிடியில் இளைத்திருக்கும் இளைஞர்கள் பாலியலில் தம்முடைய சக்தியையும், முயற்சியையும் திசை திருப்புகிறார்கள். ஆண்களும் சரி, பெண்களும் சரி பாலியல் புரட்சியில் ஈடுபட்டு ஒரு வெறுமையான தனிமைக்குத் தள்ளப்பட்டு விடுகிறார்கள். இந்த நிலையில் சில இளைஞர்கள் அமைதியைத் தேடி ஓடுகிறார்கள். சிலரோ விரக்தியடைந்து வன்செயல், புரட்சி, தற்கொலை, போதைமருந்து, அதிகாரத்துக்குச் சவால் விடுதல், இயற்கையை வெறுத்தல் ஆகியவற்றில் ஈடுபட்டு புதுப்புதுக் கோலங்களை அடைகிறார்கள். இப்படிக் கோலங்களைக் கொண்ட இளைஞர்கள் பொறுப்புணர்ச்சி இல்லாதவர்களாகவும், உடல் வலிமையும் உக்கிரமான மனக்கிளர்ச்சியும் உடையவர்களாக இருப்பதாலும், மிகத் துணிச்சலாகவும், வேட்கையாகவும் வன் செயல்களில் ஈடுபடுகிறார்கள்.

நம் நாட்டிலும் சரி, பிற நாட்டிலும் சரி இப்போ இளைஞர்கள் பல குற்றச் செயல்களிலும் வன்செயல்களிலும் மிக விருப்போடு ஈடுபடுகிறார்கள். பயங்கரமான ஆயுதங்களைச் சிறு வீட்டுச் சண்டைகளிலும் கூட பாவித்து உயிர்ச்சேதம் செய்கிறார்கள். நோக்கமில்லாத, பிரதிபலனில்லாத வன்செயல்களைச் செய்து தம் உயிரையும் கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள். இந்த நிலைமை ஏன் இந்த இளைஞர்களுக்கு வந்தது? இந்த நிலையை அவர்கள் தேடிக்கொண்டார்களா அல்லது இந்த நிலைக்கு அவர்கள் தள்ளப்பட்டார்களா? இதை நன்றாக ஒவ்வொரு இளைஞனும் அலசி ஆராயவேண்டும்.

இன்றைய இளைஞர்கள் முயற்சியின்றி, குறுக்குவழியிலே நினைத்ததைச் சாதிக்க முனைகிறார்கள். விரும்பியதை அடையவேண்டிய விதிகளை அனுசரித்து தாம் அடையவேண்டியதை அடைய பொறுமையில்லாதவர்களாக இருக்கிறார்கள். தாம் நினைத்ததைச் சாதிக்க முடியாதபோது – தாம் நினைத்ததை அடையாதபோது – தம்மை மற்றவர்கள், ''இவன் ஒரு தியாகி'' என்று கூறாதவிடத்து ஒரு இளைஞன் கட்டுக்கடங்காது சமூகத்துக்கு முரணான கொள்கைகளைக் கடைப்பிடிக்கின்றான். அத்திவாரமற்ற வாழ்க்கையில் ஈடுபடுகிறான். சமூகத்தொடர்பு, சமூக மதிப்பு, இனசனபந்துக்கள் யாவுமே அவனுக்கு ஒரு சூனியமாகிறது. அப்போ அவனுக்குக் கடமை, கருணை, தியாகம், வீரம், அன்பு, அதிகாரப் பொறுப்பு, தலைமை தாங்கும் தன்மை ஆகியவைகளைச் சிந்திக்க அவனுடைய மனம் பக்குவம் அடைவதில்லை. மாடி வீட்டிலிருக்கும் மனிதர்களைக் கண்டால் வெறுக்கிறான். புதுக் காரில் பவனி வருபவர்களைக் கண்டால் புழுங்குகிறான். இந்த நிலையிலும் அவன்

தன் முயற்சியில் நம்பிக்கைவைப்பதில்லே. முயற்சியில் ஈடுபட நினைப்பதில்லே. இந்த வேளையில் ஒரு இளைஞன் தன்னை பயங்கரமான வழிகளில் ஈடுபடுத்திக் கொள்ள முனைகிறன்.

நாட்டின் ஆக்கத்திற்கும் பொருளாதாரப் பெருக்கத்திற்கும் எவ்விதம் இந்த இளைஞர்களைப் பயன்படுத்தலாம்; இந்த இளைஞர்களை எந்த விதத்தில் பொறுப்புள்ள தலைவர்களாக்கலாம்; இளைஞர்கள் கனவுகாணும் உலகை நாம் எப்படி நனவாக்க முடியும். பெரும்பான்மை, சிறுபான்மை என்ற அநியாயக் கொள்கையை எப்படி மாற்றியமைக்க முடியும்? இளைஞர்களின் பிரச்சினைக்கு என்னவிதத்தில் முற்றுப்புள்ளி வைக்கலாம்? ஒவ்வொரு இளைஞனும் நாட்டின் பிரசையாக, அபிவிருத்தியின் அடித்தூண்களாக ஆக்குவதற்கான வழிவகைகளை நாம் நன்ருக ஆராயவேண்டும்.

1976 ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின்படி இந்த நாட்டில் கிட்டதட்ட 3584810, 30 வயதிற்குட்பட்ட இளைஞர்கள் உள்ளார்கள். இவர்கள் 1807259 ஆண்கள், 1777551 பெண்கள். இந்த இளைஞர்களில் 57.5% வீதம் இந்த நாட்டின் பொருளாதார ஆக்கவேலைகளில் ஈடுபடக்கூடியவர்களாக இருக்கிருர்கள். மிகுதி 42.5% வீதமான இளைஞர்கள் இந்த நாட்டின் பொருளாதார ஆக்கத்தில் ஒரு விதமான பங்கும் எடுக்காமல் இருக்கிருர்கள். கிட்டத்தட்ட 3402 இளைஞர்கள் நிர்வாக சேவையிலும், முகாமை பதவிகளிலும் இருக்கிருர்கள். மற்றவர்கள் விவசாயம், கைத்தொழில், மீன்பிடி, போக்குவரத்து போன்ற தொழில்களில் ஈடுபட்டுள்ளார்கள்,

அட்டவணை

| | தொழில் விபரம் | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1. | தொழில் நுட்ப சம்பந்தப்பட்ட தொழில்கள் | 26379 | 19339 | 45718 |
| 2. | நிர்வாக – முகாமைச் சேவை | 3083 | 320 | 3402 |
| 3. | இலிகிதர்சேவை | 56193 | 12122 | 98315 |
| 4. | கைத்தொழில் | 97236 | 4275 | 101511 |
| 5. | யுத்த - காவல் - படைகள் | 61259 | 18456 | 79225 |
| 6. | விவசாய, கால்நடை, மீன்பிடி | 42386 | 226163 | 650019 |
| 7. | கூலி, போக்குவரத்து, உற்பத்தி | 305915 | 80638 | 38655 |
| | தொகை | 1001602 | 371511 | 1373113 |

ஆதாரம்: குடிசனமதிப்பீடு 1971

எங்கள் நாட்டுப் பொருளாதாரம் விவசாயத்தை அடிப்படையாகக் கொண்டிருப்பதனுல் கூடிய இளைஞர்கள் விவசாயத்திலும், விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட தொழில்களிலும் ஈடுபடுவதே புத்தியானதாகும். வேலையில்லாமல் எத்தனையோ இலட்சக்கணக்கான இளைஞர்கள் இருப்பதனுல் எங்களுடைய பொருளாதார வளர்ச்சி வெகுவாகப் பாதிக்கப்படுகின்றது. வெளிநாட்டுச் செலா

வணி வீணுகச் செலவாகின்றது. பெரிய ஆலேகளிலோ அல்லது கைத்தொழில் சாலேகளிலோ நம் இளைஞர்களை வேலேக்கமர்த்துவது சாத்தியமாகாது. ஒவ்வொரு அரசாங்கமும் கூடியவரையில் இளைஞர்களைத் தொழில்களில் அமர்த்துவதற்கு முயற்சி செய்தன. 1966 ஆம் ஆண்டில் இந்நாட்டில் படித்த வேலேயற்ற வாலிபர் திட்டங்கள் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது. இந்தத் திட்டங்கள் சில இடங்களில் வெற்றியை அளித்தன. இவற்றுள் முத்தையன்கட்டுத் திட்டம், ராஜாங்கணேத் திட்டம் ஆகியவை குறிப்பிடத்தக்கவை. வேறு பல திட்டங்கள் படுதோல்வியடைந்தன. இத்தோல்விக்கும் வெற்றிக்கும் பல காரணங்கள் உண்டு. இளைஞர்களின் ஊக்கமும், விடாமுயற்சியும் சில திட்டங்களின் வெற்றிக்கு முதல் காரணமாகும். வர்த்தக, கைத்தொழில் பகுதியில் இருக்கும் வசதிவாய்ப்புக்கள் விவசாயப் பகுதியில் இல்லாதபடியினுலும் முயற்சியின்றி வருவாயை எதிர்பார்க்க முடியாதபடியினுலும் விவசாயத் தொழிலில் இளைஞர்கள் நாட்டம் கொள்வதில்லே. உண்மையாக முயற்சியில் ஈடுபட்ட விஸ்வமடுக் குளம், திருவையாறு போன்ற படித்த வாலிபர் திட்டங்களில் இருக்கும் வாலிபர்களைப் போல் ஒவ்வொரு இளைஞனும் பாடுபடுவானுகில் இந்த நாட்டின் பொருளாதாரம் நல்ல நிலேக்கு வந்துவிடும்.

நாளுக்கு நாள் எங்களுடைய இளைஞர்களின் எண்ணிக்கை பெருகுவது போல தொழில் வசதிகள் பெருகுவதில்லே. ஆற்றலும் அறிவும் இருக்கும் இளைஞர்களுக்கு வேண்டிய தொழில் வசதிகள் இல்லே. தொழில் சாலேகள் இல்லாத இடங்களில் பண வசதி படைத்தோர்கள் பல தொழில்சாலேகளைக் கட்டியெழுப்பவேண்டும். தனியார் துறையினர் சிறு குடிசைக் கைத்தொழில் பலவற்றை ஆங்காங்கே அமைத்தல் வேண்டும். இளைஞர்கள் தாம் குடியிருக்கும் ஊரே தஞ்சம் என்று எண்ணுமல் ''திரைகடலோடியும் திரவியம் தேடு'' என்ற முதுமொழிக்கிணங்க தம் இருப்பிடம் விட்டுப் பெயர்ந்து சிறந்த காணி நிலங்களே அமைத்து விவசாயம் சம்பந்தமான தொழில் நுட்பங்களை உபயோகிக்க வேண்டிய பொறுப்பு எமது வாலிபர்களினுடையதாகும். கிராமப்புறங்களில் ஏற்பட்டுக்கொண்டுவரும் விவசாயப்புரட்சியை துரிதப்படுத்துவதில் வாலிபர்கள் முன்னணியில் நிற்கவேண்டும். உடல் உழைப்பில் ஈடுபட்டிருக்கும் பாமர மக்களுக்கு இவர்களே அறிவூட்டும் விதமாக தலைமை வகிக்க வேண்டும். இளைஞர் சங்கங்கள் விவசாயிகளுக்கு அவர்களிடம் இருக்கும் பணம் வீணுன செலவுகளில் செலுத்தப்படாமல் அவர்களது நிலத்தின் எதிர்கால அபிவிருத்திக்குப் பயன்படுத்தப்படும் விதமாக உதவியும், ஆலோசனையும் கூற முன்வரவேண்டும். மேலும் ஒவ்வொரு இளைஞனும் கொடுக்கப்பட்ட எந்தத் தொழிலேயும் செய்ய ஆயத்தமாக இருக்கவேண்டும். எந்தத் தொழிலாக இருந்தாலும் முயற்சியினுல் மேன்மையடையலாம். ஊக்கம் இன்றேல் ஆக்கம் இல்லே. இளைஞர்கள் எந்தத் தொழிலிலும் சோர்வடையக் கூடாது. இளைஞர்கள் தம் கல்விக்கேற்ற தொழில் வரும்வரை காத்துக்கிடத்தல் பிழையானது. கல்விக்கேற்ற தொழில் கிட்டாமையால் மனம் சோர்ந்து நம்பிக்கையிழக்காது நாட்டின் அபிவிருத்திக்காகத் தங்களின் பங்களிப்பைச் செய்ய வேண்டும்.

இந்த வகையில் வேலேவாய்ப்பை வழங்கும் வகையில் அமைக்கப்பட்ட தேசிய இளைஞர் சேவை வேலேவாய்ப்பையும் அபிவிருத்தியையும் செய்வதில் பெரும் பணியாற்றி வருவதுடன், கட்டுப்பாடும் ஒழுக்கமும் மிக்க ஒரு இளைஞர் சமுதாயத்தினை உருவாக்குகின்றது. மாவட்டம் தோறும் இளைஞர்களைத் தெரிந்தெடுத்து படங்கல, எறமினிய, போன்ற இளைஞர் பயிற்சி நிலேயங்கட்கு இளைஞர்களே

அனுப்புவதன் மூலம் பயிற்செய்கை, மிருக வளர்ப்புப் போன்ற துறைகளில் பூரணமான ஆற்றலை தேசிய இளைஞர் சேவைச் சபை அவர்களுக்கு வழங்குகிறது. அத்துடன் அவர்களிடையே காணப்படும் கலைத் திறமைகளை வளம்படுத்தும் வகையில் பல வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலம் அவர்களின் திறமைக்கு உற்சாகம் அளிக்கப்படுகிறது. மேலும் அங்கு அளிக்கப்படும் பயிற்சிகள் சமூக, பொருளாதார சிக்கல்களையும் கடந்து இளைஞர்களுக்கு தலைமைத்துவத்தையும் வழங்குகின்றது.

இத்தகைய பயிற்சிபெறும் இளைஞர்களில் கல்வித்தகைமையும் ஏனைய திறமைகளும் உள்ளன பலர் வெளிநாடுகளுக்குச் சென்று விவசாய, கைத்தொழில் பயிற்சிகளைப் பெற்று புதிய முறைகளில் எமது நாட்டின் நடவடிக்கைகளையும் அமைக்க வழிவகுக்கப்படுகிறது.

பயிற்சிபெற்ற ஒவ்வொரு இளைஞனும் அபிவிருத்தியில் பங்குகொள்வதற்கு ஏற்றவகையில் தேசிய இளைஞர் மன்றத்திஞல் விவசாய நிலங்கள் வழங்கப்பட இருக்கின்றன. ஆஞல் இளைஞர்களுக்கான தனி அமைச்சு அமைக்கப்பட்டதும் ஏனைய வேலைவசதிகளும் இளைஞர் சேவை மன்றத்தின் ஊடாக வழங்கப்பட விருப்பது சிறப்பம்சமாகும்.

★

# இளைஞர் தலைமையும் அபிவிருத்தியும்

திரு. ஏ. சிவராஜா
(விரிவுரையாளர், பொருளியல், அரசியல் விஞ்ஞானத்துறை, பேராதனைப் பல்கலைக் கழகம்)

இளைஞர் தலைமையும் அபிவிருத்தியும் என்ற இந்தத் தலையங்கத்துள் நுழையு முன்பு, தலைமை என்றால் என்ன, அபிவிருத்தி என்பது எதனைக் குறித்து நிற்கிறது என்பதை விளக்குதல் அவசியமாகின்றது.

தலைமை என்பது சமூகக் கட்டமைப்புகளான, குழுக்கள், ஒருங்கமைப்புகள், சமூகங்கள் அல்லது தேசங்களின் மீது அதிகாரம் செலுத்துதல் அல்லது அவற் றின் மீது செல்வாக்குச் செலுத்துதல் எனப் பொருள்படும். இவ்வதிகாரம் கீழே குறிப்பிடப்படும் மூன்று மிகவும் பொதுவான அல்லது தொடர்பான நட வடிக்கைகளை நோக்கி அறிவுறுத்தப் படலாம். கூட்டமைப்பின் இலக்குகள், நோக்கங்கள் என்பவற்றை உருவாக்கி நிலைநிறுத்துதல்; அக் கூட்டமைப்பின் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கான கட்டமைவுகளை உருவாக்குதல்; அக் கட்டமைவுகளை பராமரித்தல் அல்லது வளர்த்தல்.

அதிகாரத்தை நடைமுறைப்படுத்தல் அல்லது செல்வாக்குச் செலுத்துதல் என்பது மற்றவர்களைக் கொண்டு விடயங்களை நிறைவேற்றல் என்பதையே குறிக் கிறது. இந்த நோக்கத்தினை அடைந்து கொள்ள தலைவர்கள் பல்வேறு நடவடிக் கைகளில் ஈடுபடலாம். தலைவர்கள் மற்றவர்களது முயற்சிகளை ஒருங்கிணைத்து, கட்டுப்படுத்தி வழிப்படுத்தலாம் அல்லது அங்கத்தவர்களோடு கலந்துரையாடி, ஆதரவு கொடுத்து, உற்சாகப்படுத்தி அமைப்பின் இலக்குகளை அடைந்து கொள்ளலாம்.

Schmidt என்பவரின் கருத்துப்படி எங்கு ஒரு குழு நிர்ப்பந்தத்தின் பேரில் அல்லாது தன்னிசையான தெரிவின்படி, கண் மூடித்தனமான முயற்சிகளுக்கல்லாது அறிவு சார்ந்த, நேர்க்கணியமான முயற்சிகளுக்கு ஆதரவளித்து, ஒரு தனிப்பட்ட வரை பின்பற்றுகின்றதோ அங்கு தலைமை என்ற தொடர்பு எழுகின்றது.

இனி அபிவிருத்தி என்றால் என்ன என்பதை நோக்கலாம்: அபிவிருத்தி என்பது பல தன்மை வாய்ந்தது. அது கட்டமைவு, இயலளவு, உற்பத்தி என் பவற்றில் மாற்றங்களைக் கொண்டு வருதலையே குறிக்கிறது. அபிவிருத்தி என்பது மனிதர் தமது ஆளுமையினை அடைந்து கொள்வதற்கு அவசியமான சூழ்நிலைகளை ஏற்படுத்தலாம் — வறுமையான நாடுகளில் அடிப்படை தேவைகளை அடைவதற்கு அவசியமான குறைந்தளவு வருமானம், வேலை வாய்ப்பு, சமமின்மையைக் குறைத்தல் என்பவற்றையே குறிக்கிறது.

ஒரு சமுதாயத்தில் இளைஞர் மிகவும் சக்தி வாய்ந்த ஒரு பகுதியினரை பிரதி நிதித்துவப்படுத்துகின்றனர். எமது நாட்டில் இளைஞர்களின் தொகை சனத் தொகையில் மிகவும் பெரும்பான்மையினராக இருப்பது குறிப்பிடத்தக்க அம்ச

மாகும். 1970-ம் ஆண்டு நடத்தப்பட்ட சமூக, பொருளாதார ஆய்வுப்படி 34 வயதுக்குட்பட்டோர் மொத்த சனத் தொகையில் 72.80% எனக் கணக்கிடப் பட்டுள்ளது. 35 தொடக்கம் 44 வயதுக்குட்பட்டோர் 10% ஆவர். ஆகவே 44% க்கு உட்பட்டோர் மொத்த சனத்தொகையில் 82.8 % ஆவர்.

அட்டவணை

| வயதுப் பிரிவு | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|
| 0–14 | 39.4 | 39.3 | 39.3 |
| 15–24 | 20.2 | 22.4 | 21.3 |
| 25-34 | 11.8 | 12.6 | 12.2 |
| 35–44 | 9.9 | 10.0 | 10.0 |
| 45–54 | 8.3 | 7.4 | 7.9 |
| 55–64 | 7.4 | 7.9 | 5.0 |
| 65 and Over | 5.0 | 3.9 | 4.4 |

Source: Socio conmic urvey - 1969–70

இலங்கையின் சனத்தொகையில் மிகப் பெரும்பான்மையோர் இளம் வயதினர் என்பதோடு மட்டுமல்லாது இவ்விளம் வயதினரில் மிகப் பெரும்பான்மையோர் கல்வி அறிவுள்ளவர்கள் என்பது மேலும் விசேடமாகக் குறிப்பிடத்தக்கதொரு அம்சமாகும். 1970 ம் ஆண்டு நடத்தப்பட்ட சமூக பொருளாதார ஆய்வுப்படி 25-25 வயதுக்கு உட்பட்டோரில் 91.7 % எழுத வாசிக்கத் தெரிந்தவர்களாகவும் உள்ளனர்.

அட்டவணை 2

குடிசன தொகையில் 15 வயதிற்கு மேற்பட்டவர்களது கல்வி நிலை

| Age Group | | | | Literacy | | Total |
|---|---|---|---|---|---|---|
| 15 | ... | 25 | ... | Li | ... | 91.7 % |
| | | | ... | Illi | ... | 8.3 % |
| 25 | ... | 54 | ... | Li | ... | 79.8 % |
| | | | ... | Illi | ... | 20.2 % |
| 55 and ... | | | ... | Li | ... | 60.4 % |
| Over ... | | | ... | Illi | ... | 39.6 % |

Source: Socio Economic Survey – 1969 - 70

மேற்குறிப்பிட்ட புள்ளி விபரங்களின் அடிப்படையில் எமது நாடு குறிப்பாக இளம் வயதினரையே மிகப் பெரும்பான்மையாகக் கொண்டதொரு நாடு என்பதையும் கல்வியறிவினைப் பொறுத்து முன்னைய தலைமுறையினரை விட கூடிய

மட்டத்தில் உள்ளனர் என்பதும் வெளிப்படை. இவ்விள வயதினரது, நம்பிக்கைகள், உணர்வுகள் என்பன பெருமளவுக்கு கல்வி, வெகுஜனத் தொடர்புகள் என்பவற்ருல் பாதிக்கப்பட்டுள்ளதால், வயது வந்தோரை விட வேறுபட்டவர்களாகவும் காணப்படுகின்றனர். அதனை விட இந்நாட்டின் அபிவிருத்தியில் முக்கிய கவனத்தில் கொள்ளப்பட வேண்டியவர்கள். அதில் முக்கிய பங்கு ஏற்க வேண்டியவர்களும் இவர்களே என்பதில் எவ்வித சந்தேகமும் கிடையாது.

இன்றைய நிலையில், ஒரு புறம் எமது சனத்தொகை அதிகரிப்புக்காரணிகள் மென்மேலும் இளம் சமுதாயத்தினை உருவாக்குகின்றது. அதே வேளையில் அபிவிருத்தி வழிமுறை மிகவும் வேகங் குறைந்ததொன்ருகவும் காணப்படுகிறது. மறுபுறம், இத்தகைய சம நிலையின்மையால் இளைஞரிடையே மிகத் தீவிரமான வேலையின்மையினையும் ஏற்படுத்தியுள்ளதோடு அவர்களை சமூக அமைப்பிலிருந்து அந்நியப்படுத்தி விடுகிறது.

ஆகவே இளைஞர் தலைமை என்ற பிரச்சினையும், அபிவிருத்தியில் அவர்கள் பங்கு என்பதும் தவிர்க்க முடியாதவாறு அவர்கள் கூடிய வேலை வாய்ப்பளித்தல் என்பதோடு தொடர்புபட்டுள்ளது. அதனுல்தான் கடந்த காலங்களிலும் இப்போதும், அரசினுல் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்களில் இளைஞர்களுக்கு முக்கிய இடம் அளிக்கப்பட்டது, படுகிறது.

1971ம் ஆண்டு குடிசன மதிப்பீட்டு புள்ளி விபரத்தின்படி, இளைஞர்களின் மிகப் பெரும்பான்மையினர் கிராமப் புறங்களிலேயே காணப்படுகின்றனர். கிட்டத்தட்ட 70% முழுச் சனத்தொகையில் 25% அல்லது 646,000 பேர் பாடசாலை செல்பவர்களாவர். கிட்டதட்ட 451,000 இளைஞர்கள் (அதாவது 15-24 வயதுக்குட்பட்டோர் வேலையற்றும் இருந்தனர். இவர்களது தொகை முழுச் சனத்தொகையில் 18% ஆகும்.

மேற் குறிப்பிட்ட புள்ளி விபரங்களின்படி இளைஞர் தலைமை பிரச்சினையும், அபிவிருத்தித் திட்டங்களும் கிராமியத் துறையையே இலக்காகக் கொண்டு அமைக்கப்பட வேண்டும் என்பதை சுட்டிக்காட்டி நிற்கிறது. இந்த வகையில் கிராமிய விவசாயத் துறையிலேயே வேலை வாய்ப்பு வசதிகள் அதிகமாக உள்ளதோடு, அபிவிருத்தித் திட்டங்களும் அத்துறையிலேயே அமைவது தவிர்க்க முடியாது. ஆகவே மரபு ரீதியான எமது சமுதாயத்தை நவீனப்படுத்தி, அபிவிருத்தியாக்குவதில் பங்குதாரர்களாகவும் முகவர்களாகவும் இளைஞர்களே செயற்படலாம், செயற்பட வேண்டும். இந்த வகையில், இளைஞர்களின் தலைமைத்துவம் உள்ளூர் ஒழுங்கமைவுகளிலேயே இடம் பெறுதல் வேண்டும். உள்ளூர் ஒருங்கமைப்புகள் இரண்டு வகைப்பட்டவை.

(i) Formal — முறைப்படி அமைந்தவை
(ii) Informal — முறைப்படி அமையாதவை.

முறைப்படி அமைந்த ஒழுங்கமைப்புகள், அங்கத்தவர்களை உடையதாகவும் குறிப்பிட்ட நோக்கங்களை உடையதாகவும் இருக்கும். இவற்றையும் நாம் இரண்டாகப் பிரிக்கலாம்.

(i) சட்டப்படி அமைந்தவை (ii) தன்னிச்சையான ஒங்கமைப்புகள்ழு.

(1) முதலாவது பிரிவில் – பயிர்ச் செய்கைக் குழு, கூட்டுறவுச் சங்கங்கள் என்பவற்றைக் குறிப்பிடலாம்.

(11) 11 வது பிரிவில் கிராமிய அபிவிருத்திச் சபைகள், மத சார்பான சங்கங்கள், பெற்ருேர் ஆசிரிய சங்கங்கள், கலாச்சார சபைகள் சன சமூக நிலையங்கள். இளம் விவசாயிகள் சங்கங்களைக் குறிப்பிடலாம்.

முறைப்படி அமையாத ஒழுங்கமைப்புகளுக்கு உதாரணமாக கிராமிய தேநீர் கடை, பொது கிணறு, சந்தை, மதகு சந்தி என்பவற்றில் சந்திக்கும் குழுக்களைக் குறிப்பிடலாம். இக்குழுக்கள் தனியே சந்தித்து உரையாடுவதோடு நின்று விடாது தகவல்களை பரஸ்பரம் பரிமாறிக் கொள்வனவாகும். பொது அபிப்பிராயங்களை உருவாக்கும் குருக்களாகவும் இருப்பதால் இவையும் முக்கியம் வாய்ந்த அமைப்புகளேயாகும்.

இலங்கை சுதந்திரம் பெற்ற காலம் முதல் உள்ளூர் ஒழுங்கமைப்புகளில் மரபு ரீதியான தலைவர்களே அவற்றுக்குத் தலைமை தாங்கி வந்தனர். இத்தலைவர்கள், வயது, பால், சாதி, சொத்துடமை, குடும்பச் செல்வாக்கு என்பவற்றின் அடிப்படையிலேயே தெரிவுசெய்யப்பட்டனர்.

உதாரணம்: (i) கிராமச் சபை (ii) கூட்டுறவுச் சங்கம்

(iii) நகர சபை (iv) கிராம அபிவிருத்திச் சபை

இளைஞர்கள் இத்தகைய பலதரப்பட்ட உள்ளூர் ஒழுங்கமைப்புகளில் பங்கு பற்றுவதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். (i) பிரச்சினைகளைப் பொறுத்து பழைய தலைமுறையினரை தமது கருத்துகளை கற்கச் செய்வதற்கும் அவர்களது ஆதரவையும், ஒத்துழைப்பையும் பெறுவதற்கும் முயற்சிக்க வேண்டும். ( ii ) இவ் வொழுங்கமைப்புகளில் தலைமைத்துவ நிலைகளைப் பெற்றுக்கொள்ள முயற்சிக்க வேண்டும்.

ஆனல் மரபுரீதியான தலைவர்களிடமிருந்து ஆதரவும், ஒத்துழைப்பும் இளைஞர்களுக்கு கிடைப்பது அரிது. ஆகவே இளைஞர்கள் இத்தகைய அமைப்புகளில் தலைமைத்துவ நிலைகளை கைப்பற்றிக் கொள்வதற்கு உபாயங்களை கையாள வேண்டும். தலைமைத்துவ நிலைகளை இளைஞர்கள் கைப்பற்றிவிடுவதனல் மாத்திரம் பிரச்சினைகள் தீர்ந்துவிடாது. அத்தகைய ஒழுங்கமைப்புகளை செயற்படுத்துவதற்குரிய அறிவும் நுட்பமும் கொண்டவர்களாக இளைஞர் இருப்பதும் அவசியம். முறையான கல்வி அமைப்பிடமாகவும் பாடசாலையில் இடைநிறுத்தம் செய்து வெளியேறும் மாணவர்களும் தொடர்ந்து கல்வியும், பயிற்சியும் அளிப்பதன் மூலம் இத்தகைய பொறுப்புகளை ஏற்றுச் செயற்படுத்த வல்லவராக அவர்களை மாற்றுதல் அவசியம்.

தேசிய மட்டத்தில் எடுக்கப்படும் அபிவிருத்தித் திட்டங்களை விட பிரதேச, கிராமிய ரீதியில் எடுக்கப்படும் அபிவிருத்தித் திட்டங்களிலேயே, இளைஞர்களையும் பங்கு பெறச் செய்வதும், அவர்கள் தலைமை தாங்கும் வாய்ப்பும் அதிகம் உண்டு. உதாரணமாக சிரமதான பணிகள் மூலம், தெருக்கள், சிறு கட்டிடங்கள்

அதைத்தல், குளம் துப்பரவு செய்தல் என்பன இதற்குள் அடங்கும். ஆனால், தேசிய ரீதியில் அமைக்கும் திட்டங்களிலும் இளைஞர்களைப் பங்குபெறச் செய்து, அவர்கள் தலைமையிலேயே நடவடிக்கைகளை எடுக்கச் செய்தல் சிறப்பானது. அண்மைக் காலத்தில் மகாவலி அபிவிருத்தித் திட்டத்தில் இளைஞர்களுக்கு அளிக்கப்படும் இடம் வரவேற்கத்தக்கது.

இளைஞர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்காத எந்த அபிவிருத்தித் திட்டமும் வெற்றிகரமாகச் செயற்படுதல் முடியாது. அதேவேளையில் அத்தகைய அபிவிருத்தித் திட்டங்களில் பங்குபற்றி தலைமை தாங்கும் பக்குவத்தினையும் நம் இளைஞர்கள் பெறுதல் வேண்டும்.

★

# இளைஞரும் தலைமையும்

க. குகதாசன்
(கணக்காளர், மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம்)

இன்றைய இளைஞர்களே வருங்காலத் தலைவர்கள்! இன்றைய வளரிளமைச் செல்வங்களே வருங்காலச் சமுதாயத்தை வார்த்தெடுக்க விருக்கும் சிற்பிகள்! இன்றைய இளைஞர்களே வருங்கால மழஇளைஞர்களை வழிநடாத்த விருக்கும் வழிகாட்டிகள்!

இளைஞர்களே முற்போக்கு எண்ணங்களின் முன்னோடிகள். புதுமை வேகத் துடனும், புரட்சி எண்ணங்களுடனும், பொங்கி எழும் இலட்சியத் துடிப்புட னும், பொதுநல நோக்குடனும் வாழ்வாங்கு வாழ வேண்டியவர்கள் புதுமலர்ச் சிப் பருவத்தினரே! புதுமலர்ச்சிப் பருவத்தில் மறுமலர்ச்சிச் சிந்தனைகள் திரள்படு வளர்ச்சி அடைந்து, பூரிப்புடன் வாழவேண்டிய பல இளைஞர்கள், உடைந்த உள்ளங்களுடனும் தாழ்ந்த எண்ணங்களுடனும், நிலைகுலைந்து தலை குனிந்து விரக்தியின் விளிம்பில் நிற்பதைக் கவனிக்கக் கூடியதாகவிருக்கின்றது.

இத்தகைய இளைஞர்கள் வருங்கால வளவாழ்வு பெறவிரும்பின், தலைமைக் கலைபற்றி அறிவது அவசியமாகின்றது.

### தலைமை வழிகாட்டல்

மாறிவரும் உலகிற்கேற்ப மலர்ந்துவரும் இளைஞர்களின் சுதந்திர உள்ள உணர்ச்சிகளைப் புரிந்து அவர்களை நல்வழிப்படுத்தி நன்நெறிப்படுத்த ஆசிரியர்கள் தவறிவிடுகின்றனர். மாறிவரும் தொழிலுலகில் ''எத்தொழிலும் நற்தொழிலே'' என்ற ஏற்றமிகு எண்ணக்கருவை இளைஞர் உள்ளங்களில் ஏற்றி ஆற்றல்மிகு தொழிற் கல்வி புகட்டக் கல்விக் கூடங்கள் தவறிவிடுகின்றன.

இளம் உள்ளங்களின் இதய வேதனை சமூக அந்தத்திற்காகவும், சமூக அங்கீ காரத்திற்காகவும் சமூக ஏற்பிற்காகவும், பெருமித உணர்வுகளுக்காகவும் ஏங்கித் தவிக்கும்பொழுது, அவர்கள் பராமுகமாக நடத்தப்படுகின்றனர். தகுதியும் தக்க நிலையிருந்தும் ''தங்களை ஒருவரும் மதிக்கிறார்களில்லையே - பாராட்டுகிறார்க ளில்லையே'' என்ற விரக்தி நிலையே இன்றைய இளைஞர் பிரச்சினைகளுக்கு முக்கிய காரணி.

### விழுமிய எண்ணங்கள்

வளர்ச்சியுறும் வயதில் வலுவுடன் ஊட்டப்பட வேண்டிய ஆக்க அறிவுரை களையும் ஊக்க உறுதியுரைகளையும் ஊட்டிட உற்றார் உறவினர் தவறிவிடுகின்ற னர். வாழ்க்கையிலே உயருவதற்கு உற்ற ஊற்றாகவும் உயர்ந்த உயிர்நாடியாக வும் விளங்கும் இடையறா ஈடுபாடு விடாமுயற்சி, பற்றுறுதி ஆகியன என்ன வென்றே அறியாமல் இன்றைய இளைஞர் வாழுகின்றனர். இதன் விளைவுகளே விரக்திமிகு இளைஞர் சமுதாயம்.

இதனுல் இவர்களது இயக்க ஆற்றல், செயல்வீரம், உயிரோட்ட ஆர்வம் ஆகியவை தாழ்ந்து தளர்வுறுகின்றன. விழுமிய எண்ணங்கள் விரைந்தோடவல்ல வீரநெஞ்சங்களில் துன்பச் சாயல்கள், துயரக் கோலங்கள் தோல்வி எண்ணங்கள், இயலாது - முடியாது என்ற கோழமைக் கொடிகள் படருகின்றன.

இவ்வாறுன எண்ணக்குலேவும் செயற்குலேவும் இவர்களேச் சுற்றிச் சூழ்ந்த வுடன், உலகிலுள்ள நிறைகள் யாவும் இவர்களது கண்களுக்குத் தென்படாமல் குறைகள் மட்டுமே தென்படுகின்றன. ''இனியதோர் எதிர்கால உலகம் எமக் கில்லே என்ற தாழ்வுணர்ச்சியினுலும் எதிர்மறை எண்ணங்களினுலும் இவர்கள் பீடிக்கப்படுகின்முர்கள்.

இத்தகையதோர் இழிகீழ் சூழ்நிலேயில், புது மலர்ச்சிப் பருவத்தினரைப் பின்வரும் வழிமுறைகளில் நல்வழிப்படுத்துவதன் மூலம் அவர்களுடைய வாழ் விலே மறுமலர்ச்சியையும் தலேமைசாய பண்புகளேயும் பெருக்கமுடியும்.

1. சமூக வழிகாட்டல்

2. ஆக்கத்திறன்களே வளர்த்தல்

3. தொழில் வழிகாட்டல்

**1. சமூக வழிகாட்டல்**

இளேஞர் முன் சிறிய விடயங்களேப் பெரிதாக்கி, இல்லாத தடைகளே இருக் கும் தடைகளென்று விபரிப்பது இறுதியில் அவர்களது நெஞ்சங்களில் கோழமை மனப்பான்மைக்கும் எதிரிடை நடத்தைகளுக்குமே வித்திடும். மாருக, அவர்கள் ''உலகிலே பலவற்றைப் பயிற்சியாலும் முயற்சியாலும் அடைந்துவிடலாம்'' ''உழைப்பே உயர்வு - ஊக்கமே ஆக்கம்'' ஆகிய ஒளிமய வெற்றி எண்ண அலே களேப் பரப்பிவரும்போது அவர்கள் உறுதி உடையவர்களாகவும் ஆண்மையுடைய வர்களாகவும், ஆற்றல் மிகுந்தவர்களாகவும் இலங்கித் துலங்குவார்கள்.

அவர்களே இடையருு ஈடுபாடுடன் செயற்பட ஊக்குவிப்பதன் மூலமும், விடா முயற்சியுடன் கருமங்களே ஆற்றத் தூண்டுவதன் மூலமும், பற்றுறுதியுடன் பயன் மிக்க பணிகளே மேற்கொள்ள வழிகாட்டுவதன் மூலமும் அவர்கள் உள்ளங்களில் இடர்களேயும் தடைகளேயும் தாண்டிச் செல்லவல்ல மனப் பக்குவத்தினே வளர்க்க முடியும்.

அவர்களுக்கு வீட்டிலேயே பொறுப்புணர்ச்சியுடன் பணியாற்றவல்ல வசதி களும் வாய்ப்புகளும் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். அவர்களது மனவெழுச்சி களே நசுக்க முற்படாமல் அவைகள் பயனுள்ள பல்வேறு வழிகளில் வெளிப்படப் பாடசாலேகளில் களம் அமைத்துக் கொடுக்கப்படல் வேண்டும்.

**போட்டிமிகு உலகம்**

இந்த உலகத்திலே போட்டிப் போராட்டங்களே அதிகம் என்று எண்ணிச் சில இளேஞர் சோர்வடைந்து விடுகின்றனர். உலகம் தோன்றிய காலத்திலிருந்தே போட்டிகள் நிலவுகின்றன என்பதினே இவர்கள் உணருவதில்லே. போட்டிகளால் பின்னிப்பிணேந்ததே இவ்வுலகம். இப்போட்டி மனப்பான்மையினுலேயே இவ்வுல

கம் முன்னேறிக் கொண்டிருக்கிறது. தினம் தினம் புதிய கண்டுபிடிப்புகள் அறிமுகப்படுத்தப்படுகின்றன. பல்வேறு புதிய புதிய சாதனைகள் தினம் தினம் நிலை நாட்டப் படுகின்றன. இவ்வாறான போட்டிப் போராட்டங்கள் நிலவாவிடின் நாங்கள் இன்னமும் கற்காலத்திலேயே வாழ்ந்து கொண்டிருப்போம்.

போட்டிப் போராட்டங்களைக் கண்டு இளைஞர் சோர்ந்துவிடலாகாது. இடர்களும் இன்னல்களும் சாதனைகளை நிலை நாட்டுவதற்குத் தடைக் கல்லாகவிருக்கும் சோம்பலையும், முயற்சியின்மையையும் களைந்து உறுதியையும் ஊக்கத்தையும் பெருக்கவல்ல சாதனங்களேயன்றி வேறொன்றல்ல.

''வசதியில்லை''. ''வாய்ப்பில்லை'', சூழ்நிலை சரியில்லை'' என்ற கற்பனைத் தடைகளைச் சில இளைஞர் தாமாகவே அமைத்துக் கொள்கின்றனர். விஞ்ஞான முன்னேற்றத்தின் பெறுபேற்றால் பற்பல வசதிகளும் வாய்ப்புக்களும் பெருகிவிட்ட இந்நாட்களிலா வசதியில்லை ? வாய்ப்பில்லை ? உகந்த சூழ்நிலையில்லை ?

**ஆக்கத்தின் திறன்களை வளர்த்தல்.**

ஆக்கச் சிந்தனைகள் வாயிலாகவே ஆக்கத் திறன்களை வளர்க்க முடியும். ஆக்கத்திறன் என்பது மற்றையோரின் மந்தை மனோபாவத்திற்கு அடிமையாகாது உலகெங்கும் பரந்து கிடக்கும் ஏனைய துறைகள் எவை ? என்றுணர்ந்து தனக்கோர் தனிவழி சமைப்பதேயாகும்.

இளைஞரின் ஆக்கத் திறன் வளர்ச்சிக்குப் பெற்றோரோ, கல்வி நிலையங்களோ களமாக அமைவதில்லை.

இளைஞர்களது தனிச் சிறப்பு என்ன? தனித்தன்மை என்ன ? என்று ஆராயாது ''எனது மகன் டாக்டராக வந்தாலே எமது குடும்பத்திற்கு மதிப்பு'' ''எனது மகன் இங்கிலாந்திற்கு சென்றாலேயே எம்மை அவர்கள் மதிப்பார்கள்'' என்ற மந்தை மனோபாவ எண்ணங்களால் தங்களது குழந்தைகளின் ஆக்கத் திறன்களையும், ஆளுமை வளர்ச்சிகளையும் பெற்றோர் நலியவைக்கின்றனர்,

**நற்சூழல்**

ஆக்கத்திறன் வளர்ச்சி இயற்கையாகவே அமைதல் வேண்டும். செயற்கைக் கட்டுப்பாடுகள் ஆளுமைத் தளர்ச்சிக்கும், தாழ்வுக்குமே வழிகோலும். இயற்கையாகவே மலரவேண்டிய ஆக்கத்திறன் வளர்ச்சிக்குப் பெற்றோர்களும் ஆசிரியர்களும் நற்சூழ் நிலைகளை உருவாக்கிக் கொடுக்கவேண்டும்.

மாணவர்கள் தொழில் துறைச் சஞ்சிகைகள், தொழிலறிவு நூல்கள் முதலியனவற்றை வாசிக்கத் தூண்டவேண்டும். கல்வி பயிலும்பொழுதே தொழிற்சாலைகள், இயந்திரப் பேட்டைகள், அரச அலுவலகங்கள் முதலிய நிலையங்களுக்கு அவர்களை அழைத்துச் செல்லுதல் வேண்டும். இப்படிப்பட்ட உலக அறிவினூடாகவே ஆக்கத்திறன்களும், ஆளுமை அம்சங்களும் மலர்ச்சியடைய முடியும். பலவகை அறிவினூடாக மலரும் சிந்தனைச் சிறப்பும் உளமலர்ச்சியுமே ஆளுமை வளர்ச்சியின் அடி அம்சம் என்பதினை மறத்தலாகாது.

மாணவர்களிடமிருந்து புதிய கருத்துக்கள், புதிய சிந்தனைகள் பூத்திடும் பொழுது அவற்றை ஆசிரியர்களும் பெற்றோரும் வரவேற்கவேண்டும். அவ்வாறான

சிந்தனை கருவூலங்களுக்குச் சிறப்பளிக்காவிடின் அவர்களது ஆக்கத்திறன் குன்றிட ஏதுவாகும்.

### பய உணர்ச்சி

"மற்றவர்கள் என்னைப் பற்றி என்ன எண்ணுவார்கள் ?", "என்னைப்பற்றி அவர்கள் தமக்குள் பரிகசிப்பார்களோ ?" என்ற எண்ணங்களுக்கு இளைஞர் அடிமையாகாது தமக்குச் சரியென்று தோன்றுவன வற்றைச் சரியாகவே செய்ய முனைதல் வேண்டும். மற்றோர் உம்மைப்பற்றியே சதா எண்ண – அவர்களுக்கு நேரமேது ? அவர்களும் அவரவரின் பிரச்சினைகள் பற்றியே எண்ணிடுவார்கள். உம்மைப்பற்றியல்ல.

"தம்மைப்பற்றிப் பிறர் எண்ண எண்ணுவார்கள் ?" என்று எண்ணிக் கருமமாற்றும்பொழுதும் எண்ணி ஏங்கி வாழ்ந்து வந்தாலும் ஆக்கத்திறன்கள் குன்றிவிடவே வழி வகுக்கும்.

உதாரணமாக வகுப்பறையில் ஆசிரியர் கேட்கும் வினவொன்றிற்கு விடை பகராமல் விழித்திடும் மாணவர்களின் உதட்டில் விடை கொப்பளிக்கும்போதும், "சரியான விடையாக இருக்குமோ ?", "ஆசிரியர் நையாண்டி செய்வாரோ", "ஏனைய மாணவர்கள் சிரிப்பார்களோ" என்ற தாழ்வுப் பய உணர்ச்சி காரணமாக விடை தடைப்படுகின்றது. ஆக்கத்திறன் வளர்ச்சி குன்றுகின்றது,

### தொழில் வழிகாட்டல்

இளைஞரின் உடலும் உள்ளமும் வளர்ச்சியடைவது போல அவர்களுடைய தொழில் ஆர்வங்களும் படிப்படியாக வளர்ச்சி அடைகின்றன. இக்காலகட்டத்தில் தொழில் வழிகாட்டி வல்லுநர் ஒருவரினாலேயே அவ்விளைஞனது மனோநிலை, நோக்கம், ஆர்வம், ஆக்கத்திறன் ஆகியவற்றினைப் புரிந்து, அவனுக்கோர் ஆக்க வழி சமைத்துக் கொடுக்க முடியும்.

"தொழில் வழிகாட்டல்" கருத்தரங்குகளை பாடசாலைகள் சர்வகலாசாலைகள், இளைஞர் மன்றங்கள் ஒழுங்கு செய்தல் அவசியமானதே! இக்கருத்தரங்குகளில் தொழில்துறை, கமத்துறை, அரசதுறை, தனியார்துறை ஆகிய துறை வல்லோர்களை அழைத்து 'அவ்வத்துறைச் சிறப்புக்கள் பற்றிச் சொற்பெருக்காற்ற வேண்டப்படலாம்: கருத்தரங்குகளில் நடைபெறும். கலந்துரையாடல்கள் மூலம் இளைஞர்கள் தங்களது திறமைகள், திறன்கள், ஆர்வங்கள், எதிர்காலச் சாதனைகள் ஆகியவற்றினை மனதில்கொண்டு தக்கதோர் தொழிலினைத் தெரிவு செய்ய முடியும்.

### தலைமை என்றால் என்ன ?

ஒரு சமுதாயத்தின் கூட்டு எண்ணச் சக்தி, எழுச்சிச் சக்தி, தொழிற் சக்தி, சாதனைச் சக்தி ஆகிய சக்திகள் யாவற்றினையும் எவ்வாறு ஒருங்கிணைந்து, ஒன்று திரட்டி, திசை திருப்பி அணைகட்டி அக்கூட்டுச் சக்தி யாவற்றினையும் தேக்கியும் ஆக்கியும் தனது நாட்டினதோ, சமூகத்தினதோ, கழகத்தினதோ அன்றேல் சங்கத்தினதோ வளர்ச்சிக்கும் வளத்திற்கும் எவ்வாறு திறம்பட ஆக்குதல் வேண்டும் என்பதினை ஆராய்ந்து அறியும் கலையே தலைமைப் பயிற்சிக் கலையாகும்.

எவனொருவன் ஒரு குழுவினது தேவைகளையும் நோக்கங்களையும்: இலக்குகளையும் இலட்சியங்களையும் நன்குணர்ந்தறிந்து அக்குழுவினரது ஆக்க சக்தி அனைத்தையும் ஒருங்கிணைத்து ஒன்று திரட்டி அவ்விலக்கினையும் இலட்சியத்தினையும் அடைதற் பொருட்டுத் தனது திறமையினாலும் அக்குழுவினரை ஒன்றிணைந்த உழைப்புடன் இயக்குகிறானோ. அவனே ஓர் உத்த தலைவனாவான்.

மனித சக்தியினை இவ்வாறாக ஒன்றிணைத்து ஒருநிலைப்படுத்தி ஒரே மார்க்கத்தில் பொங்கிப் பெருகிச் செழிக்க விட்டால், அச்சமூகமோ அன்றேல் அச்சங்கமோ வெற்றியால் நிறைவதற்கும் வீரத்தால் சிறப்பதற்கும், சாதனையால் பொலிவதற்கும் தடையேதுண்டோ ?

வீதிதோறும் சங்கங்கள்—மன்றங்கள், பட்டிதொட்டி எங்கும் பட்டிமன்றங்கள், கழகங்கள் பூத்துக் குழுங்கிப் பொலிவுடன் காட்சிதருகின்றன. இவை பொலிவுடன் விளங்கிப் புகழுடன் ஓங்குவதற்குக் காரணம் அதன் தலைவர்களே!

## நல்லியற் பண்புகள்

ஒரு நாட்டினது மேன்மையும், ஒரு சங்கத்தினது புகழும், ஒரு கட்சியினது வளர்ச்சியும், ஒரு கலாசாலையினது பெயரும், ஒரு படையினது வல்லமையும், ஏன் ஒரு குடும்பத்தினது சிறப்பும் பெருமையும் அவ்வத் தலைவர்களது திறமையிலும் சிறமையிலுமே தங்கியுள்ளது.

ஆகவே தலைவன் என்பவன் பற்பல நல்லியற் பண்புகளைத் தன்னகத்தே கொண்டவனாகத் துலங்குதல் வேண்டும். அவன் தன் கருத்துக்கு ஒவ்வாயதாரையும், தனது இடையீட்டு இணக்கத் திறமையினால் தன்வசப்படுத்தி, அவர்களது ஒத்துழைப்பு, நல்லெண்ணம், நம்பிக்கை முதலியவற்றினைப் பெற்றிடல் வேண்டும். ''இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து அதனை அவன்கண்'' விடும் திறமையினையும் அவன் கொண்டிருப்பதோடல்லாமல் அக்கருமங்களை அவர்கள் பற்றுறுதியுடன் பயன்நிறைவு மிக்கதாக ஆக்குகின்றார்களா என்பதினையும் கண்காணித்திடல் வேண்டும். உறுப்பினர்களிடையே உட்பூசல்களும், கருத்துவேற்றுமையும் ஏற்படாவண்ணம் அவர்களை நன்நெறிப்படுத்துவதும் அவனது இணக்க இசைவு வழிகாட்டித் திறனிலேயே தங்கியுள்ளது. மேலும் தலைவனானவன் இன்சொல் உடையவனாகவும், இணக்க நயம் மிகுந்தவனாகவும், அன்பணைப்பு மிக்கவனாகவும், தோழமைப் பண்பு மிளிர்ந்தவனாகவும் துலங்கிடல் வேண்டும்.

## சிறந்த தலைவனும் சிறப்பான சமுதாயமும்

நாட்டிலே வாழும் நன்மக்கள் யாவரிலும் தலைமை சால்தனிப் பண்புகள் மிளிர்ந்திடும் பொழுதே அந்நாட்டில் சிக்கல்கள் அகன்று, சிறப்புக்கள் பெருக முடியும். ''மன்னர்கள் எப்படி, மன்னுயிர் அப்படி'' என்பது போலவே ''தலைவர்கள் எப்படி, தரணியும் அப்படியே'' ஆகிவிடும். ஆகவே சிறந்த தலைவர்களை உருவாக்குவதன் மூலம் சிறப்பான சமுதாயத்தை உருவாக்கிவிட முடியும்.

## அவதரிப்பதில்லை ஆக்கப்படுகின்றனர் !

கருவிலே தோன்றும் திருவே தலைமைப் பண்புகளின் மூலகாரணி என்று மக்கள் இதுவரை காலமும் நம்பிவந்தனர். உயர்குடியில் அவதரிப்போர் மத்தி

யிலும், உயர் பரம்பரையில் தோன்றுவோர் மத்தியிலுமே தலைமைத் தனிப் பண்புகள் தலைதூக்க முடியும் என்றும் மக்கள் கருதிவந்தனர். மேலும், சூழ்நிலையைவிடப் பரம்பரை மரபு நிலையே தலைவர்களை உருவாக்கும் இரு என்றும் மக்கள் ஆண்டாண்டு காலமாக நம்பி வந்துள்ளனர். ஆனால், தற்கால மனோதத்துவ நிபுணர்கள் தலைமைத் தனித்திறன்கள் கருவில் தோன்றும் திருவல்ல என்றும், தலைவர்கள் 'அவதரிப்பதில்லை,' ஆனால் ''ஆக்கப்படுகின்றனர்'' என்றும் நிருபித்துள்ளனர்.

ஆகவே, தலைமைசால் தனித்திறன்கள் ஒரு சிலரின் ஏகபோகச் சொத்தோ; முயற்சி இன்றி இயல்பாகவே அமையும் இயற்கைக் கொடையோ, பரம்பரைப் பரிசோ, அன்றேல் குடிப்பெருமையினால் ஏற்படும் குருட்டு அதிட்டமோ அல்ல. ''உன்னத உயர்வாழ்வு வாழ்ந்திடல் வேண்டும்'' என்ற எண்ண எழுச்சித் தீர்மானம் உடையோர் யாவரும், தத்தமது திண்ணிய முயற்சியாலும் சிறந்த நல் பயிற்சியினாலும் தலைமைத் திறனாற்றல்களைப் படிப்படியாக அடைய முடியுமென்பது திண்ணம்.

**நீங்களும் தலைவனாகலாம் !**

நீங்களே உங்கள் எண்ணத்தில் எழில் அரசன்! நீங்களே உங்கள் உள்ளத்தின் உயர் அரசன்! உங்களது எண்ணம், எழுச்சி, செயல் முதலியனவற்றையும், கட்டுப்படுத்தும் அதிகாரி நீங்களல்லவா ? ஆகவே உங்களது எண்ணங்கள், எழுச்சிகள், சிந்தனைகள், செயல்கள் யாவற்றினையும் ஒன்றுதிரட்டி - ஒருமுகப்படுத்தி, அவற்றினை உங்களது உன்னத வாழ்விற்காக ஏன் திசைதிருப்பக் கூடாது ? உங்களது குன்றாத ஊக்கத்தினாலும், குலையாத பயிற்சியினாலும் நீங்களும் இவ்வுலகில் தலைவர்களாகப் பரிணமிக்கமுடியும்!

**முதல் படி**

உயர்ந்த தலைவனாக வாழ்வதற்கு முதல்படி உத்தம சீடனாக வாழ்வதே. உத்தம சீடர்களாகப் பலகாலம் வாழ்ந்தோரே உயர்ந்த தலைவர்களாகவும் பல காலம் வாழ்ந்துள்ளனர். ஆகவே தலைமைத் தனிப்பண்புகள், தம்மில் மிளிர்ந்திடல் வேண்டும் என்னும் அவாவுடையோர் முதலில் ஏதாவது கழகத்திலோ, சங்கத்திலோ உறுப்பினராகச் சேர்ந்திடல் வேண்டும். அச்சங்கத்தின் வளர்ச்சியில் அவர்கள் அதிக ஈடுபாடு காட்டல்வேண்டும். சங்க வளர்ச்சியில் ஈடுபாட்டுடன் உழைக்கும்பொழுதே உங்களைப் பீடித்திருக்கும் ''தாழ்வு மனப்பான்மை'', ''அவநம்பிக்கை'' ''மேடைப் பயம்'' ஆகியவை அகன்று ''வெற்றி மனப்பான்மை'' ''தன்நம்பிக்கை'' ''மேடைத் துணிவு'' ஆகிய ஆற்றல்களை ஆக்கிக்கொள்ள முடியும்.

**கூட்டுப்பணியின் மேன்மை**

அரியபெரிய காரியங்கள் யாவற்றையும் எம்மால் தனித்து நின்று சாதித்துவிட முடியாது. கூட்டுறவு மனப்பான்மையே நமது உயர்வுக்கும், நாட்டு உயர்வுக்கும் வித்தாகும். ஏனையோருடைய ஒன்றுபட்ட ஒத்துழைப்பின் மூலமே எம்மால் சாதனைகளை நிலைநாட்ட முடியும். தனியாகக் காரியத்தினைச் சாதிக்க முயல்வதைவிட ஏனைய குழு அங்கத்தினருடன் சேர்ந்து, கூட்டு முயற்சியில் ஈடுபடும்

பொழுது, தலைமை சால் பண்புகளுக்குத் தடைக் கல்லாக இருக்கும் ''சுயநலம்'' ''குறுகிய மனப்பான்மை'' ஆகியவை அகன்று ''பொதுநலம்'', ''பரந்த மனப்பான்மை'' ஆகிய தலைமைப் பண்புகள் தலைதூக்கும்.

### வெற்றி மனப்பான்மை

தலைவர்களாகப் பரிணமிக்க விரும்புவோர், தங்களது மன அறைகளில் மண்டிக் கிடக்கும் தோல்வி எண்ணங்கள், துயரச் சாயல்கள், துன்பத் தொழுநோய் ஆகிய அழுக்குகளை அகற்றி. அங்கு வெற்றி மனம்பான்மை, வீரச் செயல், ஆர்வம், சித்தி நோக்கு, சிறப்பான எதிர்கால நம்பிக்கை ஆகிய ஒளிமயத் தீபங்களை ஏற்றிடல் வேண்டும். அவர்களிடம் தணியாத தன்னம்பிக்கை, குலையாத ஆர்வ உணர்ச்சி, எழுச்சிச் சிந்தனைகள், ஏற்றத் துணிவு ஆகியவை பொங்கித் ததும்புதல் வேண்டும்.

ஒரு கருமத்தை ஆற்றத் தொடங்குமுன், அக்கருமத்தில் ''வெற்றி அடைந்து விட்டோம்'' என்றோர் படம் அவர்களது மனத்திரையில் ஓடுதல் வேண்டும், ஏனெனில் ''வெற்றி அடைவேன்''. ''சித்தி பெறுவேன்'' என்ற தன்நம்பிக்கையே பெருப்பாலும் வெற்றிக்கு வழிவகுக்கின்றன! 'தோல்விதான்' என்ற ஐயக் கண்ணோட்டமே தோல்விகளுக்கு வித்தாகின்றது!

சீரிய சிந்தனைகளும், விழுமிய எண்ணங்களுமே ஒரு தலைவனின் அணிகலன்களாக அமைதல் வேண்டும். எதிர்கால வெற்றி வாய்ப்பு எண்ணங்களும், இன்மகிழ் நலநோக்குப் பார்வையுமே தலைவர்களிடம் தளராத தன்நம்பிக்கையையும், ஊக்க உற்சாகத்தையும், மனத்திண்மையினையும், செயல் உறுதியையும் உண்டாக்குகின்றன. வெற்றி நோக்குப் பார்வையே, இடையிடையே காணப்படும் இடர்களையும் தடைகளையும் தாண்டி முன்னேறவல்ல உறுதியை அளிக்கவல்லது.

### ஆளுமை

பல்வேறு தலைவர்கள் இவ்வுலகில் ஆற்றும் சாதனைகளுக்கு உறுதுணையாக விளங்குவது அவரவர் ஆளுமை அம்சங்களே. தத்தமது ஆளுமை அம்சங்களை ஆக்க ரீதியாக அபிவிருத்தி செய்யும் தலைவர்கள், இவ்வுலகில் சாதனைகளுக்கு மேல் சாதனைகளை நிலைநாட்டுகின்றார்கள்.

கவர்ச்சியும், கம்பீரமும் மட்டுமே ஆளுமை அம்சங்கள் ஆகமாட்டா. ஒருவருடைய அறிவு, ஆண்மை, நல்லியற் பண்புகள், சமூகப் பார்வை, மனித உறவு நுண்ணுற்றல் ஆகிய அம்சங்கள் அனைவற்றினதும் கூட்டு மொத்த வடிவமே ஆளுமையாகும்.

### மனத்தக உருவம்

மானிடர் அனைவரும் தம்மைத் தாமே எடைபோட்டு தம்மைப் பற்றிய தொரு மன உருவத்தினைத் தத்தமது நெஞ்சங்களில் ஏற்றி வைத்திருக்கின்றனர். இம்மன உருவம் மகோன்னத உருவமாக உருவாக்கப்பட்டால், அம்மனிதர்களது ஆளுமை அம்சங்களும் அபிவிருத்தி அடைய முடியும். ஆனல் அம்மன உருவம் சிதைந்து சின்னபின்னமான உருவமாக உருவாக்கப்பட்டால், அவர்களது ஆளுமை அம்சங்களும் சிதைந்து சின்னபின்னமாகிவிடும். ஆகவே ஆளுமை அம்

சங்களை அபிவிருத்தி செய்வதற்கு முதலில் உங்களைப் பற்றி நீங்களே உயர்வெண்ணம் பூண்டு, நல்லதொரு சுயமன உருவினை உங்கள் நெஞ்சங்களில் ஏற்றிடல் வேண்டும்.

ஒருவருடைய முதல் தோற்றத்திலேயே அவரைப் பற்றியதோர் அபிப்பிராயத்தினை மற்றோர் பூண்டுவிடுகின்றனர், முதல் முதலில் ஒருவரைப் பற்றி ஒருவர் தனது ஆழ்உள்ளத்தில் ஆழப்பதிக்கும் மதிப்பீடே, அறுதிவரை இறுக்கமாக இருக்கும் இரும்பு அபிப்பிராயமாகும் என்பது மனவல்லுனரின் ஏகோபித்த முடிவாகும். ஆகவே தலைவர்கள் முதல் எடுப்பிலேயே தமது நல்லியல் நடையுடை, பாவனையாலும், பேச்சின் இனிமையாலும், குரலின் எடுப்பாலும், தன்நம்பிக்கை ஒளிவீசும் செயல்களாலும் மற்றோர்களது நெஞ்சங்களில் நிலையான நற்படிமத்தினைப் பதித்திடல் வேண்டும்.

### மானிட நல்லுறவு

மனிதர்களுடன் ஊடாடி உறவாடுவதும் ஒரு நற்கலைப் பண்பாகும். மானிட நல்லுறவு என்பது, ஒரு குழுவினது தலைமைப் பீடத்திற்கும் ஏனைய உறுப்பினர்களுக்குமிடையே நிலவும் நலமார்ந்த நல்லுறவினையும், நன்நெறி ஓங்கும் நட்பு மனப்பான்மையினையும், சுமுகமான இசைவு இணைக்கத் தொடர்பையும் பெரும்பாலும் குறிக்கும்.

நலமார்ந்த நல்லுறவு நிலைக்க வேண்டுமானால் தலைவர்களிடையே பின்வரும் பண்புகள் பொங்கிடல் வேண்டும்:-

(1) எவர் மனதையும் புண்படுத்தாத இனிமையான உரையாடல்,

(2) எவருக்கும் மகிழ்வூட்டக்கூடிய செம்மையான செயல்கள்.

(3) எவரையும் கவர்ந்திழுக்கவல்ல நல்லியல் நடையுடை பாவனை.

(4) எவருடனும் அளவளாவி ஊடாடும் தோழமைப் பண்பு.

(5) எவருக்கும் நல்வாய்ப்பு அளிக்கும் பரந்த நல் நோக்கம்.

(6) சிடுசிடுப்பற்ற இன்முகப் பண்பும், நகைமுகத் தோற்றம்.

### கடமைகள்

ஒரு தலைவனுடைய முக்கிய கடமைகளைப் பின்வருமாறு வரையறுக்கலாம்:-

1. முன்னாய்வுத் திட்டமிடல்.
2. அமைப்பாக்கம்.
3. தூண்டுதல் - உற்சாக மூட்டல் - ஊக்குவித்தல்.
4. தொடர்பு கொள்ளல்.
5. தீர்மானம் எடுத்தல்.

தீர்க்கதரிசனத்துடன் திட்டமிடப்பட்டுச் செயற்படுதல் ஒரு தலைவனின் தலை யான கடமையாகும். ஒரு கருமத்தைத் தொடங்குமுன் அக்கருமத்தின் பின் விளைவுகள் யாவை? பலாபலன்கள் யாவை? எழக்கூடிய சிக்கல்கள் சிரமங்கள் யாவை? இவற்றினை எவ்வாறு எதிர்கொள்ளல் வேண்டும்? இவ்வாறான தீர்க்க தரிசனச் சிந்தனை எக்கருமத்தைப் பூணும்போதும் மேற்கொள்ளப்படல் வேண் டும். இதனாலன்றோ ''எண்ணித் துணிக கருமம்'' என்று வள்ளுவர் கூறியுள்ளார்.

சிறந்த அமைப்பாளன் ஒருவனே உயர்ந்த தலைவனாக முடியும். எவ்வாறு ஒரு நாட்டினது அரசியல் பிரச்சினைகளைத் தீர்க்க ஒரு அரசியல் அமைப்புமுறை உண்டோ; எவ்வாறு அரசின் நிதி நிர்வாகத்தினை வழிநடாத்துவதற்கு நிதிப் பிரமாண அமைப்புமுறை உண்டோ அது போலவே எவ்விடயத்தையும் எச்செய லையும் திறம்பட நடாத்துவதற்கு ஒரு திட்டமிட்ட அமைப்புமுறை மிக மிக அவசியமாகும்.

ஒருவனுடைய முன்னேற்றத்திற்குத் தூண்டுதல், ஊக்குதல், உற்சாக மூட்டல் ஆகிய சாவிகள் அவசியமானதாகும். ஒருவனை அவன் பூண்டுள்ள பணியில்— கருமத்தில் ஒரு முகமைய எண்ணத்துடனும் முழு ஈடுபாடுடனும் செயலாற்றத் தூண்டி, அவனை அப்பணியில் மேன்மேலும் முன்னேற்றம் அடையும் வண்ணம் ஊக்குவித்து உற்சாகமூட்டுதல் ஒரு தலைவனது தலையான கடமையாகும்.

எவ்வாறு' பிறரை அவமதிப்பவன் நாளடைவில் தானே அவமானத்திற்கு ஆளாகின்றானோ; எவ்வாறு பிறரை மதித்து நடப்பவன் நாளடைவில் தானும் மதிப்புக்குரியவனாகின்றானோ; எவ்வாறு பிறரை மகிழ்விப்பவன் தானும் மகிழ்வுடை வனாக வாழ்கின்றானோ அவ்வாறே பிறரை ஊக்குவித்து உற்சாகப்படுத்துவதன் மூலம் தானும் வாழ்நாள் முழுவதும் ஊக்கத்துடனும் உற்சாகத்துடனும் வாழ முடியும் என்ற உண்மையினை ஒரு தலைவன் நன்குணர்ந்து தனது குழுவினரை ஊக்குவித்து உற்சாகப்படுத்துதல் வேண்டும்.

### தொடர்பு கொள்ளல்

நீங்கள் நுட்பதிட்ப முறையறிந்த சிறந்த நிருவாகியாக விருக்கலாம். திட்ட மிட்டுச் செயலாற்றும் தலைவனாகவுமிருக்கலாம். அமைப்புமுறை என்ற வரம்பின் மீதேறி நிற்கும் தீரனாகவிருக்கலாம். ஆனால் உங்கள் திறமைகள் அனைத்தையுமே மற்றோர்க்கு எடுத்தியம்பவல்ல நாவன்மையினையும் எழுத்துவன்மையினையும் நீங் கள் பெற்றிடாவிடில், உங்களில் பொதிந்திருக்கும் மற்றைய சிறப்பு அம்சங்கள் மங்கி மறைந்து மாண்டுவிடும்.

உங்களது அனுபவ ஆற்றலையும் வீர தீரத்தையும், சிறந்த திறமையையும், திட்ட வட்டங்களையும் பிறருக்கு அறிமுகப்படுத்தும் இரு அரும் பெரும் சாதனங் களே நாவன்மையும் எழுத்து வன்மையுமாகும்-

தொண்டர்களையும் தலைவர்களையும் இறுக்கமாக இணைத்துவைத்திருக்கும் சக்தியினைத் தொடர்பாற்றல் சக்தி கொண்டுள்ளது. தலைவர்கள் தங்களது தொண் டர்களது ஆக்க சக்தி அனைத்தையும் அரவணைக்க விழைந்திடில் தொடர்பாற்றல் கலைமூலம் தமது தொண்டர்கள், தம்மீது பூண்டுள்ள நல்லெண்ணத்தினையும், நல்லபிப்பிராயத்தினையும், நல்லுறவினையும் மேன்மேலும் வளப்படுத்தலாம். தான் முன்னின்று நடத்திச் செல்லும் குழுவினது இயல்புகளையும், இயக்கங்களையும் நன்

குணர்ந்து அறிந்து, தன் குழுவினரைத் தனது எழுத்தாற்றல், பேச்சாற்றல் உரையாடல் பண்பு ஆகிய தொடர்பாற்றல் கலைமூலம் திட்டமிட்ட முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்வதே ஒரு தலைவனது தலை சிறந்த பணியாகும். தன் கருத்துக்கு ஒவ்வாதோரையும் தனது இடையீட்டு இணக்கத்திறனால் தன் வசப்படுத்தி அவர்களது ஒத்துழைப்பையும் ஒத்தாசையையும் பெறும் திறனும் தொடர்பாற்றல் கலைக்குள் அடங்கும். மேலும் உறுப்பினர்களிடையே உட்பூசல்களும், கருத்து வேற்றுமையும் ஏற்படா வண்ணம் அவர்களை ஒருமுக நோக்குடன், ஒருவழிப் பாதையில் கொண்டிழுத்துச் செல்லும் நுட்பமும் தொடர்பாற்றல் கலைக்குள் அடங்கும்.

### தீர்மானம் எடுத்தல்

பிரச்சினைகளை இலகுவில் தீர்ப்பதற்கு, அப்பிரச்சினைகளை திடமுடன் எதிர் நோக்கித், திறந்த மனத்துடனும், வெற்றி மனப்பான்மையுடனும், தீர்க்க ஆலோசனையுடனும் பலரது கருத்துக்களை அலசி ஆராய்ந்த பின்னர், ஒத்திப் போடாமலும், தள்ளிப் போடாமலும் உடனுக்குடன் உறுதியான முறையிலும், ஐயத்திற்கிடமற்ற வகையிலும், ஆணித்தரமான செயல் முறை வடிவிலும் தீர்மானம் எடுத்திடல் வேண்டும்.

எவரிடத்திலேனும் சிறிது முன்னேற்றம் காணப்பட்டால் அம்முன்னேற்றத்தை வாயாரப் பரிந்து பாராட்டி, நெஞ்சாரப் புகழ்ந்து, ஊக்கம் ஊட்டி உறு துணை அளித்து அவரது மேல் நிலை வாழ்விற்கு அத்திவாரமிடல் ஓர் உன்னதத் தலைமைப் பண்பாகும்.

குறை கூறுமை, ஏளனச் சிரிப்பின்மை, மரியாதை, வீண் விவாதங்களைத் தவிர்த்தல் ஆகிய நயநலப்பண்புக் காந்தக் கற்களை ஒருவன் தன்னகத்தே கொண்டுள்ளானாயின், அவன் மற்றோரைத் தன்பக்கம் கவரவல்லதோர் கவர்ச்சிக் காந்தத் தலைவனாக உருவெடுத்து விடுவான்.

ஒருவன் தவறிழைக்கும் போது அத்தவற்றினைச் சுட்டிக்காட்டி எள்ளி நகையாடாமல், மறைமுகமாக அப்பிழையினை எடுத்துக் கூறியோ அன்றேல் அவ்விடயத்தினை இவ்வாறு செய்திடாமல் இவ்வாறு செய்திருந்தால் மேலும் சிறப்புற்றிருக்கும் என்று உள்ளங்கொள்ளத்தக்க வகையிலும், நட்பாங்கிழமை மனப்பான்மையுடனும் இழைவு குழைவாக இன்னுரைமூலம் எடுத்தியம்புவது ஒரு பண்பட்ட கலையாகும். தலைவர்களிடம் மிளிர வேண்டியதோர் நயநலப் பண்பாகும்.

### புறங்கூறித் திரிவோர்

தலைமையினை உவர்த் தேர்க்கத் துடிக்கும் ஒருவனிடம் புன்னகை சிந்திப் பொறுமை ஒளி உமிழும் இம்முகம் இனிதே இலங்கிடல் வேண்டும். அவனது வதனத்திலிருந்து மோகனப் புன்னகை ஊற்றுச் சுரந்து கொண்டேயிருத்தல் வேண்டும்.

ஆகவே குதிரைக் களைப்பினைத் தவிர்த்து புன்சிரிப்பென்னும் புனித ஆயுதத்தைப் பூண்டு மற்றோரது உள்ளத்தில் இடத்தினைப் பெற்றிடுங்கள்.

போகவிட்டுப் புறங்கூறித் திரிவோரிடமும் தலைமை தாழ்ந்து வணங்கி விடை பெற்றுவிடும். நீர் ஒருவரிடமும் மற்றோரைப் பற்றிப் புறங்கூறும்போது, தன்னைப்

பற்றியும் இவ்வாறே மற்றோர் முன் புறங்கூறித் தன்னைத் தாழ்த்தி வீழ்த்த நீர் முனைவீர் என்பதினை அவர் அறிய அதிக நேரம் சென்றுவிடாது.

ஒருவனுடைய பெயரே அவனுக்கு இப்புவியில் 'இனிமை' என்ற உண்மையினை உணர்ந்து தன்னுடன் கூடிக் குலாவிடும் நண்பர்களை அவர்களது பெயரினாலோ, அன்றேல் அவரைக் குறிக்கும் செல்லப் பெயரினாலோ இணக்க வணக்கத்துடன் அழைத்திடல் வேண்டும்.

தனிமனிதர் உழைப்பாலும், கூட்டு எண்ணங்களாலும், ஒருமித்த இலட்சியத்தினாலும், கூட்டுறவு மனப்பான்மையினாலுமே, தனது சங்கத்தையோ, சமூகத்தையோ உயர்த்த முடியும் என்ற உண்மையினை உணர்ந்து தலைவன் தனது உறுப்பினர்கள் மத்தியில் உழைப்பை உயர்த்தி ஊக்கத்தை வளர்த்து அவர்களது விரக்தியை நீக்கி மலர்ச்சியை ஊட்டி வாழ்த்திடல் வேண்டும்.

## முடிவாக

ஒரு உத்தம தலைவன் தான் பூண்ட எக்கருமத்திலும் முழுநிறை முயற்சி கலந்த வெற்றி நோக்குடனே அணுகுவான், அக்கருமத்தில் வெற்றியடைவேன் என்ற நல்லார்வ நம்பிக்கை அவனிடம் ஊற்றெடுத்தவண்ணம் காணப்படும். எக்கருமத்திலும் எச்செயலிலும் பரிபூரண வெற்றியடைவேன் என்ற தன்னம்பிக்கை அவனிடம் கரைபுரண்டு ஓடும். அவனிடம் பொறுப்புணர்ச்சியும், மற்றவர்களுக்காகவும், தனது குழுவினருக்காகவும் பாடுபடும் தன்மை மலிந்தவண்ணம் இருக்கும். அவன் தனது அலுவல்களிலும் கடமைகளிலும் ஒரு முன்னோடியாக— உதாரண புருஷனாக, எல்லோரும் பின்பற்றக்கூடிய இனிய செயல்திறன் வீரனாகவும், திடங்கொண்டு போராடும் தீரனாகவும் காணப்படுவான். அவனிடம் அதிக பொறுப்புணர்ச்சியும், அப்பொறுப்புணர்ச்சியின் உந்தலினால், முனைந்து முயற்சி செய்து முன்னேறும் மனப்போக்கும் பொதிந்திருக்கும். அவன் பங்குபற்றும் நிகழ்ச்சிகள் யாவும் ஒரு குதூகலக் களைகட்டிவிடும்,

அவன் ஒரு பகுதிக்கோ அன்றேல் ஒரு குழுவிற்கோ முதுகெலும்பாக உயிர் நாடியாக விளங்குவதோடல்லாமல் குறுகிய மனவெறுமையை அறவே அறுத்து. பிறரது விரிந்த எளிமை மனப்பான்மையுடன் தனது உறுப்பினருடன் சரிசமமாக- தாராளமாக—சிநேகிதபூர்வமாக அன்பொழுகப் பண்பொழுகப் பழகுவான். அவனிடம் சதா உற்சாகமும், தன்னம்பிக்கையும், ஆர்வ உணர்ச்சியும் கரைபுரண்டோடும். அவ்விடமுள்ள உறுதி உற்சாகம், தன்னம்பிக்கை; விடாமுயற்சி, வெற்றி மனப்பான்மை ஆகியவைகளே அவனது வெற்றியின் காரணிகளாகும். அக்காரணிகளே அவனுக்கு மனத்துணிவையும், தோல்வியினை எதிர்நோக்கும் போது அத்தோல்வியினை வெற்றியாக மாற்றவல்ல தைரியத்தையும் உருவாக்குவதோடல்லாது நினைத்தவற்றை நினைத்தவாறே நிறைவேற்றும் நிகரில்லாத் திறமையினையும் கொடுக்கின்றது. அவனையே நாடும் ஏடும் போற்றிடும். அவனே ஓர் உத்தம தலைவன்!

★

# பண்பாடு, அபிவிருத்தி, இளைஞர்

**பேராசிரியர், கார்த்திகேசு சிவத்தம்பி**
*யாழ்ப்பாணத்துப் பல்கலைக் கழகம்*

அபிவிருத்தியிற் பண்பாடு பெறும் இடம் பற்றியும், பண்பாட்டுக் கோலத்தினுள் இளைஞர் பெறும் இடம் பற்றியும், இளைஞரும் அபிவிருத்தி பற்றியும் விரிவான பொருளியல், சமூகவியல் ஆய்வுகள் உள்ளன. ஆனால் இங்கு நாம் மிகக் குறுகிய ஆனால் அதேவேளையில் மிகச்சிக்கலான ஒரு அம்சம் பற்றி நோக்க வேண்டியுள்ளது. ''இளைஞர்'' — ''அபிவிருத்தி'' என்ற இருநிலைகள் / கோட்பாடுகள் சங்கமிக்கும் பொழுது அச்சங்கமத்தில் அல்லது அவ்விணைப்பில் பண்பாடு பெறும் முக்கியத்துவம் யாது; அதன் மீதான தாக்கம் யாது, அது எவ்வாறு தாக்கப்படுகின்றது என்பது பற்றிச் சில பிரச்சினைகளை அறிமுகஞ்செய்து வைப்பதே எனது நோக்கமாகும்.

இவ்வாறு செய்யும்பொழுது எனது முக்கிய விடயத்தளமாகப் பண்பாட்டினையே கொள்வேன். ஏனெனில் அபிவிருத்தி என்னும் கோட்பாடு, நடைமுறை பற்றிய பூரண அதிகாரபூர்வமான விளக்கம் எனக்கு உண்டு என்று நான் கூற முடியாது. அத்துடன் ''இளைஞர்'' ( Youth ) பற்றிய சமூக உளவியற் பிரச்சினைகளையும் நான் பூரணமாக விளங்கிக் கொண்டவனல்லன். ஆயினும் ''அபிவிருத்தி'', ''இளைஞர்'' என்ற இவ்விரு துறைகளிலும் தொக்கிநிற்கும் பண்பாட்டம்சங்களை விதந்து கூறவேண்டியது எனது கடமையாகும்.

இப்பிரச்சினையைப் பின்வரும் வரிசைக்கிரமத்தில் அணுகுதலே பொருத்தம்.

1. இளைஞர் என்றால் யார்.
2. பண்பாடு என்றால் என்ன.
3. அபிவிருத்தி என்பது யாது.
4. பங்குகொளல் என்பதன் கருத்து என்ன;

ஆனால் எனது துறைக்கு அழுத்தமும் முக்கியத்துவமும் கொடுக்கும் வகையில்

1. பண்பாடு என்பது யாது.
2. அபிவிருத்தி என்பது யாது
   அது பண்பாட்டுடன் எவ்வாறு தொடர்புறுகின்றது
3. இளைஞர் என்போர் யாவர்
   அபிவிருத்தியில் அவர் பங்குகொள்ளும் பொழுது
   பண்பாடு எவ்வாறு தொழிற்படுகின்றது

என்றவகையிலே ஆராய விரும்புகின்றேன்.

பண்பாடு என்னும் சொல் பலவிதமான துஷ்பிரயோகங்களுக்கும் உட்பட்டுள்ளது. அதனை நாம் விஞ்ஞான ரீதியாக விளங்கிக் கொள்ளவேண்டுவதவசியம். பண்பாடு பற்றி மானிடவியல், சமூகவியல் ஆகியன தரும் வரைவிலக்கணங்களைத் தொகுத்து நோக்குவோம்.

> ''பண்பாடு என்பது குறிப்பிட்ட ஒரு மக்கள் கூட்டம். தனது சமூக, வரலாற்று வளர்ச்சியினடியாகத் தோற்றுவித்துக்கொண்ட பௌதீகபொருட்கள். ஆத்மார்த்தக் கருத்துக்கள், மதநடைமுறைகள், சமூகப்பெறுமானங்கள் ஆகிய யாவற்றினதும் தொகுதியாகும். ஒரு கூட்டத்தின் பண்பாடு என்று நாம் குறிப்பிடும் பொழுது அக்கூட்டத்தினரின் தொழில்நுட்பவளர்ச்சி, உற்பத்தி முறைமை, உற்பத்தி உறவுகள் கல்வி, விஞ்ஞானம், இலக்கியம், கலைகள், நம்பிக்கைகள் ஆதியனவற்றின் தொகுதியாகும்''

பேச்சு, பொருள்பயன்பாடு, கலைஜதீகங்கள், விஞ்ஞான அறிவு, மதஅநுட்டானங்கள், குடும்பமும் பின் சமூக அமைப்புக்களும், சொத்து, அரசாங்கம்

இவ்வாறு நோக்கும்பொழுது பண்பாட்டை இருவகையாக எடுத்துக்கூறுவதுமுண்டு.

பௌதிகப் பண்பாடு (Material Culture)

பண்பாட்டுப் பெறுமானங்கள் (Cultural Values)

முதலாவதனுள் பானை சட்டி முதல் வேட்டி, சேலைகட்டும் முறைமைவரை சகலதும் அடங்கும்.

இரண்டாவதனுள் கருத்துப்பெறுமானங்கள் வரும். கற்பு, அறம், இரத்தபாசம் போன்றவை.

பண்பாடு பற்றிய இந்தவிளக்கம் பொருளியலாளருக்கு அவர்கள் துறையில் ''பொருளியல் அகவுறுப்புக்கள்'' என வழங்கும் கோட்பாட்டை நினைவுறுத்துவதாகவிருக்கலாம். அதாவது பொருளியற்றுறையில் சமூக தொழில்நுட்ப அமைப்பு (Socio - technical System) என்பதற்கும் பௌதிக பண்பாட்டுக்கும் நிறைந்த தொடர்புண்டு.

இக்கட்டத்தில் மரபுவழிப்பண்பாடு (Traditional Culture) என்று ஒரு சொற்றொடர் பற்றி நாம் அறிந்துகொள்ளுதல் அவசியம். இது நாம் அடிக்கடி கேட்கும் ஒரு சொற்றொடரே. இதுபற்றி நாம் சிறிது விபரமாகப் பின்னர் பார்ப்போம்.

ஆனால் அதற்கு முன்னர் பண்பாடு என்பது பற்றிய சில கருத்து மயக்கங்களையும் அறிந்து கொள்வோம்.

அவற்றுள் முதலாவது பண்பாட்டை நடைமுறை வாழ்க்கையின் வாழ்க்கைப் பரிணமமாகக் காணுது முற்றிலும் வரலாற்றுநிலைப்பட்ட, ஆதர்சவடிவமாக (Historical–ideal type) காணுதல். (தமிழர் பண்பாடு, சிங்களப் பண்பாடு)

இரண்டாவது பண்பாடு என்பதை உயர்ந்த சாதனங்கள், உயர்ந்த பண்புகளாக மாத்திரம் காணுதல்.

இவ்வாறு நோக்குவதற்கான சமூகக்காரணிகள் உள்ளன. ஆனுல் இந்நோக்குப் பண்பாடுபற்றிய பூரண, விஞ்ஞான ரீதியான விளக்கத்தைத் தராது.

பண்பாடு என்று நாம் கூறும்பொழுது எமது அறப்பெறுமானங்கள், நோக்கு முறைகள் என்பன பண்பாட்டுக்கோலத்தினால் தீர்மானிக்கப்படுகின்றன என்பதை அறிந்து கொள்ளல் வேண்டும்.

பண்பாட்டின் சமூகவியலம்சங்களை நாம் மனத்திருத்தல் அவசியம்.

( i ) பண்பாடு என்பது தேக்கநிலைப்பட்டதல்ல.

( ii ) அது கற்றறிவினால் வரும் நடத்தைமுறைமை
இதுவே எமது கண்ணோட்டத்தினை, பெறுமானங்களை நிர்ணயிக்கின்றது.

( iii ) குறிப்பிட்ட குழுவினர்க்குப் பொதுவானது, அவர்களிடையே கையளிக்கப்படுவது.

( ii ) அது மனிதனின் சமூக, ஆத்மீகத் தேவைகளைப் பூர்த்திசெய்ய உதவுகின்றது.

( iii ) அது பிற் தாக்கங்ககளுடன், இணையக்கூடியது,
பிறவற்றுக்கேற்ப தழுவியமைக்கப்படத்தக்கது.

( iv ) மனித ஒழுங்கு சேரலுக்கான இலட்சியப்பரிமாணங்களை நிலைநிறுத்துகிறது,

மாற்றம் பண்பாட்டின் இயல்பு. ஆனால் அம்மாற்றம் சுலபமான ஒன்றன்று. சவால்கள், நெருக்கடிகள் ஏற்படுகின்றபொழுது பண்பாடு மாறும். புதியனவற்றைக் கண்டுபிடிப்பதன்மூலமும் ஏற்கனவேயுள்ள சில பண்புகளை மீளவலியுறுத்துவதன்மூலமும், பிற பண்பாடுகளிலிருந்து சிலவற்றை உள்வாங்கிக் கொள்வதன் மூலமும் பண்பாட்டுமாற்றம் ஏற்படும்.

சுருக்கமாகக் கூறினால் நாம் தமிழராக நடந்துகொள்வது தமிழ்ப் பண்பாட்டினாலேதான்

இது தனியே ஆராயப்படுவது சுவாரசியமான முயற்சிதான். ஆனால் பண்பாடு அபிவிருத்தியோடு இணைகின்ற பொழுதுதான் சில முக்கியமான பிரச்சினைகள் தோன்றுகின்றது.

''அபிவிருத்தி'' என்பது உற்பத்தியிலும் நுகர்விலும் அதிகரிப்பு ஏற்படுவதாகும். அதாவது ஒரு பிரதேசத்தின் அல்லது பிரதேச மக்களின் வர்த்தமான உற்பத்தி, நுகர்வு நிலையிலும் பார்க்க அவர்களது உற்பத்தி நுகர்வுச் சக்திகளை முன்னேற்ற முயலும்பொழுதுதான் அபிவிருத்தி தொடங்குகின்றது. அதன் மீண்டும் பெறத்தக்க, புதுப்பிக்கத்தக்க மீண்டும் பெறமுடியாத மூலவளர்ச்சிகளின் பயன்பாட்டை அதிகரிப்பதன் மூலம் இந்த அபிவிருத்தி ஏற்படுகின்றது.

பொருளியலமைப்பிலே உற்பத்தி விநியோகம் நுகர்வு முறையின் அமைப்புத்தான் சமூக அமைப்பு. இந்த உற்பத்தி, விநியோக – நுகர்வு உறவுகளுக்கிடையவே நெறிப்படுத்தப்பட்டுள்ளது. எனவே அபிவிருத்தி என்னும் பொழுது குறிப்பிட்ட ஒரு சமூக, பொருளாதார நிலையிலிருந்து இன்னொரு சமூக, பொருளாதார நிலைமைக்குச் செல்வதற்கான (அல்லது கட்டத்துக்கான) மாற்றம்தான்

பொருளியலமைப்புக்கும், சமூகவுறவுகளுக்கும் பண்பாட்டுக்கும் நெருங்கிய, இன்றியமையாத உறவுகள், பிணைப்புக்கள் உண்டு என்று நாம் சற்று முன்னர் பார்த்தோம். இப்படியானால் நாம் இந்த அபிவிருத்தியின் மூலம் பண்பாட்டின் இன்னொரு வளர்ச்சிக் கட்டத்துக்குச் (அதாவது அபிவிருத்தியை வளர்ச்சியென்று கொண்டால்!) செல்கின்றோமென்பதே கருத்து. இந்த பண்பாட்டு மாற்றம் இன்னொரு வளர்ச்சிக் கட்டத்தின் தோற்றமாகவிருக்கலாம். அன்றேல் புதியதொரு பண்பாட்டின் தோற்றமாகவுமிருக்கலாம்.

பொருளாதார அபிவிருத்தி அத்தகைய ஒரு மாற்றத்தை ஏற்படுத்தப் போகின்றதெனும் தர்க்கத்தை ஏற்கவே மனம் மறுக்கின்றதல்லவா.

இந்த மயக்க நிலையில் தான் நாம் '' **மரபுவழிப்பண்பாடு** '' என்பது பற்றி விரிவாக அறிந்து கொள்வது அவசியமாகின்றது. மூன்ருவது உலக நாடுகளின் அபிவிருத்தியில் இச்சொற்ருெடர் மிகமுக்கியமான இடம் வகிக்கின்றது.

**மரபுவழிப்பண்பாடு** என்பது **மரபுவழிப் பொருளாதாரத்தின்** வழியாகவே வரும்.

இயற்கைச் சூழலுக்கியைந்த அதனுடன் இணைந்து நிற்கின்ற உற்பத்தியமைப்பைக் கொண்ட ஒரு பொருளாதாரமே மரபுவழிப்பண்பாட்டின் அடிப்படையாகும். காற்று, மழை, வெய்யில் போன்ற இயற்கைச்சக்திகளும் தனது இயக்க வேகத்தை நிர்ணயிக்கின்ற உற்பத்திச் சாதனங்களைக் கொண்டது.

மரபுவழிப்பண்பாட்டில் மனிதவிருப்பம் இயற்கையதீத சக்திகளின் கட்டுப்பாட்டுக்குட்பட்டதாகவே காணப்படுவது இயற்கை-

நிலைபேறுடைய வாழ்க்கை, சமாதானமான நிலைமை, சமூக அசைவியக்கமின்மை ஆதியனவே உலகவாழ்க்கையமைப்பின் அச்சாணியான அமிசமெனக் கொள்ளும், ஒரு சமுதாயக் கண்ணேட்டம் மரபுவழிப்பண்பாட்டின் தொடர்ச்சிக்குக் காரணமாகும்.

இந்த மரபுவழிச்சமுதாயங்களில் அதிகாரம் படிமுறையானதாக அமைந்திருக்கும். பன்முகப்படுத்தப்பட்டு மதம் போன்ற துணைக்கருவிகளாலும் நிலை நிறுத்தப்படும்.

ஓரளவு நிலைபாடுடைய உலக நோக்கினைக்கொண்ட ஒரு சமூக அடிப்படையினடியாகத் தோன்றும் இப்பண்பாடு அவ்வட்டத்தினுள் வரும் மனித நடவடிக்கைகள் யாவற்றையும் மதம், ஆத்மார்த்தம் என்பவற்றுடன் இணைத்துக்கொள்கின்றது. மதத்திற்கும் தொழிலமைப்புக்கும் நெருங்கிய இணைப்பைக் காணக்கூடியதாகவிருக்கும். கலை முதல் விஞ்ஞானம், தொழில்நுட்பமுறைமைகள், தொடர்புச்சாதனங்கள் யாவுமே ஒரு வகையில் மதத்துடன் அல்லது மத அநுட்டானங்களுடன் தொடர்புபட்டிருக்கும்.

இப்பொழுது எமது பண்பாட்டின் சில அடித்தளச்சிந்தனைகளின் தன்மைக்கான சமூகவியற்காரணிகளை அறிந்துகொள்ளலாம்.

இத்தகைய ஒரு சூழலில் அபிவிருத்தி முயற்சிகள் எத்தகைய பிரச்சினைகளை ஏற்படுத்துகின்றன என்பதனை நோக்குவோம்-

படிமுறையான பேதங்களை சமூக அடிப்படைகளிலொன்ருகக் கொண்டுள்ள மரபுவழிப்பண்பாட்டமைப்பினுள், சமத்துவத்தை அடிப்படையாகக்கொண்ட அபிவிருத்தி முறைமை, அந்தப் பொருளாதார அபிவிருத்தியின் நடைமுறையிற் பல பிரச்சினைகளை கொண்டது.

அபிவிருத்தி என்பது வளர்ச்சியடைந்த ஒரு சூழலிலுள்ள தொழில்நுட்ப முறைமையை வளர்ச்சிகுன்றிய சூழலுக்கு மாற்றுவதனலேயே ஏற்படுவதொன்ருகும். இயந்திரங்களின் தொழிற்பாடு, அவற்றை இயக்குவதற்கான அமைப்புப் போன்றன தொழில்நுட்பமுறை மாற்றங்களின் (Transfer of Techhology) வழியாக வருவனவாகும். தொழில்நுட்பமாற்றமில்லாத அபிவிருத்தியின் வேகத்தை அதிகரிக்க முடியாது.

ஆனல் உண்மையில் தொழில்நுட்ப மாற்றம் என்பது ஒரு பண்பாட்டுப் பிரச்சினையாகும். தொழில்நுட்பம் / தொழில்நுட்பமுறைமைகள் என்பது குறிப்பிட்ட ஒரு பண்பாட்டுக் கோலத்தினடியாகவே தோன்றமுடியும். அத்துடன் இயற்கைச் சக்திகளைக் கட்டியாள்வது பற்றிய சில சமூகக்கண்ணேட்டங்களே தொழிற்நுட்ப முறைமைகளை நிர்ணயிக்கின்றன.

எனவே அபிவிருத்தி என்பது ''பண்பாட்டுத்தழுவலை'' ஏற்படுத்தும் ஒரு முயற்சியாகவும் அமைந்துவிடுகின்றது இதனல் அபிவிருத்தி நடைமுறை முடியவும் பண்பாடு முற்றிலும் மாறுபட்டதாக அமைந்துவிடுமொரு நிலைமை ஏற்பட்டுவிடும்.

கொலோனியலிசம், ஏகாதிபத்தியச்சூறையாடல் போன்ற வரலாற்றுக் கொடுமைகளுக்கு ஆட்பட்டு நின்ற பிரதேசங்கள், தமது தனித்துவத்துக்கும், தமக்கிழைக்கப்பெற்ற கொடுமைகளுக்கெதிராகத்தாம் தொடங்கிய போராட்டங்கட்கு வேண்டப்பெற்ற ஒற்றுமைக்கும் அச்சாணியாகவிருந்த இந்த ''மரபுவழிப்பண்பாடும், பாரம்பரிய உணர்வும், அந்த அரசியல் வெற்றிகளைப் பூரணப்படுத்திக் கொள்வதற்கென மேற்கொள்ளப்படும் பொருளாதார அபிவிருத்தி இயக்கத்தின் பொழுது இழக்கப்படும் நிலைமை ஏற்படுமேல், அந்த அபிவிருத்தியின் நோக்கமே நிறைவேருது போய்விடும்.

பண்பாட்டுக்கும் அபிவிருத்திக்குமுள்ள தொடர்புகள் பற்றிய இவ்வாருன சிந்தனைகள், அபிவிருத்திபற்றிய, புதிய கோட்பாடுகள் தோன்றுவதற்குக் காரணமாகவுள்ளன. **27** மார்ச் **1966**ல் தொடங்கிய இந்நிலை தொழில்நுட்ப அபிவிருத்திக் குழுவுக்கு **1956**ல் சர்வோதய இயக்கத்தினர் வரைந்த அபிவிருத்தித்திட்ட முறைமைக்கும் நெருங்கிய தொடர்புண்டு. மேலும் அண்மையில் ''வாழ்க்கையின் தரத்தைப்'' பேணும் அபிவிருத்தி முறைமை (Quality of Life) என்பதற்கும் மூன்ருவது உலக நாடுகளின் அர்த்தமான பண்பாட்டுநிலைமைக்கும் தொடர்புண்டு.

முதல், முதலாளித்துவத்தை முதன்மைப்படுத்திநிற்கும் அபிவிருத்திக் கோட்பாட்டில் அபிவிருத்திற்கும் பண்பாட்டுக்கும் முரண்பாட்டினை அகற்றுவது முடியாத ஒன்ருகும். அந்த முரண்பாடு நீங்குவதற்கு சமதர்மவழி அபிவிருத்தி உதவும்.

இந்தப் பண்பாடு, அபிவிருத்தி இணைவு – முரண்பாடுகளில் இளைஞர்கள் எங்கே வருகின்றனர்.

இளைஞர்களை நிரந்தரமான தனியொரு சமுதாயக் குழுவாகக் கொள்ளலாமா?

''இளைஞர்'' என்ற சொற்ருெடர் இன்று தனியான ஒரு சமுதாயப்பிரிவினைக் குறிப்பிடும் தொனியுடன் பயன்படுத்தப்படுகின்றது. உண்மையில் சிறிது ஆழமாகச் சிந்தித்தால், யௌவன நிலையென்பது தனிமனித வளர்ச்சியின் காலநிலைப் பட்ட ஒரு கட்டம்.

ஆனால் இந்த வளர்ச்சிக்கட்டத்திலுள்ளோருக்குள்ள சில இயல்புகள் காரணமாக சில இளைஞர் தொகுதியினை சில பொதுப்படையான பண்புகள் கொண்ட ஒரு சமுதாய நிகழ்வு ஆகக்கொள்ளும் முறைமையொன்றுண்டு. சமூகவியல் இளைஞரை ஒரு உப-பண்பாட்டுக் கூருகக்கொள்ளும் முறைமையுண்டு.

ஆயினும் இதனை ஒரு நிரந்தரகுழுவாகவோ, கருத்துச்தொடர்ச்சியுடைய வரன்முறையான ஒரு குழுவாகவோ கொள்ளமுடியாது.

சமூகவியலில் எடுத்துப்பேசப்பெறும் வர்க்கம், இனம் போன்று இது ஒரு ''நிலையான குழு'' வா எனில் அல்ல என்றே பதில் கூறல்வேண்டும்.

வரலாற்றுக்கண்ணோட்டத்திற் பார்க்கும்பொழுது கடந்த சில வருடங்களாகவே இது உக்கிரமான பிரச்சினையுடைய ஒன்ருகக் கருதப்பட்டது.

''தலை-முறை இடைவெளி'' (Generation-Gap) என்ற பிரச்சினையின் மறுபக்கம் தான் இளைஞர் பிரச்சினை. முதலாளித்துவ உற்பத்திமுறைமைகள் ஏற்படுத்திய சமூகப்பராதீன முறைமை, உக்கிரமமைந்துவரும் வேலையில், போர்க் கொடுமை, அடக்குமுறை அக்கிரமம் போன்ற அரசியற் சமூக குற்றங்கள் அதிகரிக்க அதிகரிக்க, அவற்றைத் தடுப்பதன் அவசியத்தை உணர்ந்த அதேவேளையில் தடுக்கமுடியாத தவிதவித்த 1960 இன் இளைஞர் பரம்பரையின் தாக்கமே இன்றைய இளைஞர் பிரச்சினையைத் தோற்றுவித்ததெனலாம்.

இளவயதினர்களுக்குள்ள இயல்பான உள உந்துதல்கள், நடத்தைமுறைகள் மேற்கூறிய வரலாற்றுக்கட்டத்தில் தொழிற்பட்டபொழுது இளைஞர் இயக்கம் உலக முக்கியத்துவமடைந்தது.

இளவயதினர்களுக்குள்ள இயல்பான பண்புகளை அரிஸ்தோத்தில் ஓரிடத்திற் கூறியுள்ளார்.

> இளைஞர்களிடத்தே வன்மையான உணர்ச்சிகள் உள்ளன. அதனை அவர்கள் வகைதொகையற்ற தாறுமாருன முறையில் தீர்த்துக்கொள்ள முனைகின்றனர். அவர்களுக்கு விரைவில் கோபம் வந்துவிடும். வீரம், கௌரவம் போன்ற உணர்வுகளின் பாற்கொண்டு விருப்புக்காரணமாக மற்றவர்களால் புறக்கணிக்கப்படுவதைப் பொறுக்கமாட்டாதவர்கள் நியாயமற்றமுறையில் நடத்தப்பெற்ருல் பொங்கியெழும் பண்புடையவர். அவர்கள் பணத்தைப் பெரிதும் விரும்புவதில்லை. பணமில்லாது வாழமுடியாது என்பதை உணர்ந்து கொள்ளாதனுலேதான் இப்படிப்பணத்தைப் பெரிதும் விரும்பாது விட்டுவிடுகின்றனர். அவர்கள் சற்று உயர் நிலைப்பட்ட கருத்துக்களையும் இலட்சியங்களையுமே வைத்திருப்பார். ஏனெனில் அவர்கள் இன்னும் வாழ்க்கையால் தலைகுனிவவைக்கப்படாத

வர்கள். வாழ்க்கையின் வரையறைகளைத் தெரியாதவர்கள். பிரயோசன மான காரியங்களைச் செய்வதிலும் பார்க்க உயர்ந்த இலட்சியபூர்வமான கருமங்களையே செய்யமுனைவார்கள். அவர்கள் வாழ்க்கையில் உண்மை யான உலக நியாயத்திலும் பார்க்க தர்மாவேசத்துக்கே அதிக இடம் உண்டு. தமக்கு எல்லாமே தெரியுமென்பர். அதுபற்றிச் சந்தேகமே அற்றவர்கள். இதனாலேயே அவர்கள் எதையும் மிகைப்படச் சொல்கி ருர்கள்.

இந்தத்தர்மவேசத்தை உலகத் தேவைகளுடன் இணைத்தபொழுது இளைய தலை முறைபற்றிய பிரச்சினை ஏற்பட்டது.

இந்த இளையதலைமுறை, நடைமுறையிலிருக்கும் சமூக, பொருளியல் முறை மையை முற்றிலும் மாற்றியமைக்கும் கருத்துக்களை மேற்கொண்டு தாம் வாழும் சமுதாய அமைப்பையே மாற்றியமைக்க முனைகிருர்கள் எனக் கண்டபொழுது. இளைஞர் பிரச்சினையைக் கையாள்வதற்கான வழிமுறைகளையும் மேற்கொள்ளத் தொடங்கினர்.

இளைஞர் பிரச்சினையைத் தீர்த்துக்கொள்வதற்கு ''அவர்கள்'' கையாண்டுள்ள முறைமை இளைஞர்களுக்கு பங்குபற்றல் வாய்ப்பினை (The Facility Participation) அளித்தமையே.

பங்குகொள்ளல் என்பதற்கு ஒரு பிரசித்தமான விளக்கமேயுண்டு.

> **The capacity to influence or to play a vital role in the decision making process or in the development or the various economic and social process.**

தீர்ப்பெடுத்தலில் அல்லது பல்வேறு பொருளாதார, சமூக நடைமுறைகளில் முக்கிய பங்குவகித்தற்கான அல்லது தாக்கத்தை ஏற்படுத்துவதற்கான ஆற்றல் தான் ''பங்குபற்றல்'' ஆகும்'

நாட்டு நிலையிலும் உள்ளூர் நிலையிலும் இத்தகைய பொருளாதார, சமூக நடைமுறைகள் காணப்படுகின்றன. நாம் இங்கு உள்ளூர் நிலையில் இளைஞரின் பங்குபற்றலைப்பற்றியே பெரிதும் ஆராய்கின்ருேம்.

அந்த மட்டத்தில் பண்பாடு இவர்கள் கொண்டுள்ள ஆதிக்கத்தையும், இவர்கள் பண்பாட்டின் மீது செலுத்தும் பாரம்பரிய எல்லைக்கோடுகளைப் படிப் படியாக அகற்றுவதையும் நாம் காணலாம்.

★

# கிராமிய பகுதிகளின் சமூக மாற்றத்தில் இளைஞர் பங்கு

செல்வி எம். கந்தையா
*சகிராக் கல்லூரி, குருணகல்*

'சமூக மாற்றம்' என்ற பதம் எமது நாட்டைப் பொறுத்த மட்டில் புதிய தோன்றல்ல. எமது பழைய வரலாற்றினைத் திருப்பிப் பார்ப்போமானால் பண்டைக் காலம் தொட்டு இன்றுவரையில் ஏற்பட்ட பலவகையான ஆட்சி முறையில் சமூக மாற்றத்திற்காக பலவகை முயற்சிகளை எடுத்து வந்தமையை எம்மால் அவதானிக்க முடிகிறது. புராதன கோயில்களும், பழைய குளங்களும், கால்வாய்களும், சமூக அபிவிருத்திக்காக மேற்கொள்ளப்பட்ட திட்டங்களின் விளைவுகளே என்பதைப் பார்த்த உடன் அனுமானிக்கக் கூடியதாக இருக்கின்றது. இலங்கையில் மட்டுமன்றி உலக நாடுகளிலும் சமூக அபிவிருத்தியில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கே அயரா முயற்சி எடுக்கப்பட்டு வருவதை எம்மால் உணரக் கூடியதாக இருக்கின்றது.

சமூகம் என்று சொல்லும்போது அது ஒரு தனிப்பட்ட மனிதனை அன்றி மனிதரின் சேர்க்கையை அதாவது குழுநிலையினை குறிக்கிறது. ஒவ்வொரு சமூகத்திலும் வாழும் மனிதனது பண்பாடு, கலாச்சார முறைகள் வேறுபட்டதாக அமைகிறது. சமூக அடிப்படையில் பலதரப்பட்ட கலாச்சார, பண்பாட்டு முறைகளுக்கு இயைந்து போகக் கூடியதான பொருளாதார அபிவிருத்தியை ஆக்குவிப்பதையே சமூக மாற்றம் என்பது குறிப்பிடுகின்றது. இதனைப் பரந்த ரீதியில் நாம் நோக்குவோமானால் சமூகத்தில் உள்ள ஒவ்வொரு மனிதனின் தேவைகளும் தன்னிறைவு பெற்றுத், திருப்தியும் பெறும் வாய்ப்பினை அளிப்பதனையே ''மாற்றம்'' என்ற பதம் சுட்டிக் காட்டுகின்றது.

சமூக மாற்றத்திற்கு அத்தியாவசியமாக விளங்குவது ஒரு சமூகத்தின் உண்மைத் தேவைகளை அலசி ஆராய்வதேயாகும். ஒரு மனிதன் தனித்து வாழ முடியாத நிலையில் அவன் தனது தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ள வேண்டிய நிலையில் பலரை அணுக வேண்டிய நிலை உருவாக்கப்படுகின்றது. இந்நிலையிலே தான் ஒரு 'குழு' அதாவது ஒரு சமூகம் தோற்றுவிக்கப்படுகின்றது. எனவே இத்தகைய பலதரப்பட்ட சமூகங்களை ஒன்றிணைந்ததாகவே கிராமிய சமுதாய அமைப்புக் காணப்படுகின்றது. இத்தகைய சமுதாய அமைப்புக்களில் சமூக தேவைகளை ஆராய்ந்தறிந்து அதனை நிவர்த்தி செய்வதில் பங்குகொள்ள வேண்டிய நிலை இளைஞர் சமூகத்தை சார்ந்ததாக இருக்கிறது.

இலங்கையின் பொருளாதார அமைப்பில் கிராமியத்துறை எப்போதும் ஒரு முக்கிய பங்கு வகித்து வந்திருக்கின்றது. 1959ல் தேசிய உற்பத்தியில் 39.1% ஆக இருந்த விவசாயத்தின் பங்கு 1970ல் தொடர்ந்து ஏறக்குறைய 35% ஆக இருந்தது. 1971ம் ஆண்டிற்கான குடிசன மதிப்பீட்டின்போது மொத்த சனத்தொகையில் 2.83 மில்லியன் மக்கள் அதாவது 22.4%த்தினர் நகர்ப்புறங்களிலும் 68.5% கிராமங்களிலும் 9.1% பெருந்தோட்டங்களிலும் வாழ்ந்ததாக மதிப்பிடப்பட்டுள்ளது. இந்நாட்டு கிராமிய மக்கள் 10,000 மேற்பட்ட கிராமங்களில் பரவி

வாழ்கின்றுர்கள். **1974**ல் **13.6** மில்லியன் குடித்தொகை காணப்பட்ட போதிலும் இதிலே **78%**த்தினர் கிராமிய மக்களேயாவார். இலங்கையின் பொருளாதாரத்தில் கிராமியத்துறை என்று கூறப்படும் விவசாயத்துறையில் இருந்து **35%** உள் நாட்டு மொத்த உற்பத்தியாக பெறக் கூடியதாக உள்ளது. உணவு உற்பத்தியில் தன்னிறைவை காணத் துடித்துக் கொண்டிருக்கும் இக்கால கட்டத்தில் உணவு உற்பத்திக்கு முதன்மை அளிக்கும் கிராமிய பொருளாதார, சமூக அபிவிருத்திக்கு ஊக்கமளிக்க வேண்டியது அத்தியாவசியமாகிறது.

கடந்த காலங்களில் அமுல் நடத்தி வந்த கல்வித் திட்டங்களுக்கும் இளைஞருக்கும் இடையில் நெருங்கிய மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளன. கிராமப்புறத்தில் இளைஞர் தாம் பெற்ற கல்வியின் தேர்ச்சியைக் கொண்டு கிராமத்தில் தொழில் புரிய விரும்புவதில்லை. நகரப்புறங்களிலேயே வேலை வாய்ப்பினை தேடுகிறுர்கள். மேலும் பொருளாதார வசதிக்காகவும், புதிய கலாச்சார வசதிக்காகவும் அந்நியர் புகுத்திய கல்விக் கொள்கையினுல் இளஞ் சந்ததியினர் கிராமங்களை விட்டு நகரப்புறம் நோக்கி நகரலாயினர். அந்நிய இறக்குமதிப் பொருட்களாலும், கிராமப்புற பொருளாதார சீர்கேட்டினுலும் பாரம்பரிய கலைகள் அழிந்து கொண்டிருக்கும் நிலை நீடித்தமையினுலும் கிராமிய வாழ்க்கை வரட்சியுடையதாக மாற்றம் அடைந்தது. இத்தகைய நிலை மேலும் தொடராமல் இருக்க இளைஞர் மத்தியில் பல அபிவிருத்தி நடவடிக்கைகள் ஏற்படுத்தப்பட்டன.

முழுநேரமும் தொழில் இல்லாத இளைஞர்கள் கிராமப் பகுதிகளில் செறிந்து காணப்படுகின்றுர்கள். இதனுல் உற்பத்தித் திறன் குறைவடைவதோடு மொத்த உற்பத்தியும் குறைவாக உள்ளது. கல்வி வசதி இலவசமாகவும், பரவலாகவும் அமைக்கப்பட்டமையினுல் ஏறத்தாழ எல்லோரும் ஆரம்பக் கல்வியைப் பெற்றுள்ளார்கள். கணிசமான துறையினரே இடைத்தர கல்வியைப் பெற்றுள்ளார்கள் கல்விமுறை பெரும்பாலும் பொதுக் கல்வியாகவும், கலைத்துறை சார்ந்த கல்வியாகவும் உள்ளதினுல் அதிகமானேர் சாதாரண தொழிலாளராகவே பணிபுரியக் கூடியவர்களாகக் காணப்படுகின்றனர். தொழில் முறைக் கல்வி பயிற்சி பெறுதோர் தொகை மொத்த தொழிலாளர் தொகையோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது குறைவாகும். உயர் நிலையிலும் கலைத்துறை சார்ந்த கல்வி கற்றேரோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது இயந்திரவியல், மருத்துவம், கட்டிடக்கலை, புள்ளி விபரவியல், கணக்கியல், தொழில் நுட்பவியல் முதலான சிறப்புத்துறையில் பயிற்சி பெற்றேர் தொகை குறைவாகும். வளர்ச்சியடையும் தொழில் துறைகளில் தொழிலாளர் பணிபுரியவும், சுயமான தொழில்களில் ஈடுபட்டு உழைக்கவும் பொருத்தமான முறையில் தொழில்நுட்ப வசதி கொடுக்கப்படுதல் வேண்டும். கூடிய முதலீட்டு அடிப்படையில் இயந்திர சாதன வசதிகளோடு அமைந்த தொழில் நுட்பம் விரைவாக தொழிலாளர் பெருக்கத்தை உடைய நாடுகளுக்கு உகந்ததல்ல. எனவே இடைநிலைத் தொழில்நுட்ப உதவியுடன் சுறுசுறுப்பும், வேலை ஒழுங்கும் செயல்திறனும், தொழிலூக்கமும் உடைய தொழிலாளர் மூலம் இயற்கை வளத்தினைப் பேணி பயன்படுத்துவது இன்றியமையாதது என்பது இப்போது உணரப்பட்டுள்ளது.

**1963**ல் கிராமிய பிரதேசங்களில் தொழில் அற்றவர்களாக ஏறத்தாழ **7.3%** காணப்பட்டனர். **1968**ல் இவ்விகித அளவானது **10.4%** உயர்ச்சி அடைந்திருந்த போதிலும் **1970**ம் ஆண்டளவில் **15.4%** ஆக அதி உயர்ச்சி அடைந்தது. **1969/70**ஆம் ஆண்டுகளில் மொத்தமாக எல்லாத்துறைகளிலும் வேலை அற்றேர்

தொகை 550,000 ஆக காணப்பட கிராமப்பகுதிகளில் குறிப்பாக 384,000 ஆக காணப்பட்டனர். 15–24 வயதிற்கும் இடைப்பட்ட இளைஞர்களே இந்த வேலை அற்றோர் படையில் உள்ளோராவார். இதில் 46.8% நடுத்தர கல்வியை முடித்தோரும், 23.9% கல்விப் பொதுத் தராதரப் பரீட்சையில் சித்தி அடைந்தோரும் என்பது குறிப்பிடத்தக்கது.

கற்ற இளைஞர் 'வெள்ளைப்பட்டி' வேலைகளை விரும்பி கிராமங்களில் இருந்து நகரத்திற்கு நகருவதினால் கிராமங்களில் கற்றவர்களின் தலைமை, திறமையினை இழக்க வேண்டிய நிலை உருவாக்கப்படுகின்றது. உயர்தர தொழிலில் கூடிய வேதனமுள்ள தொழில் மட்ட வாய்ப்பு உயர்மட்டக் கல்வியுடன் இணைக்கப்பட்டுள்ளது. இத்தகைய தொழில் வாய்ப்புக்கள் நகர துறையில் அரசாங்க ஸ்தாபனம் கூட்டுத்தாபனம், தனியார் ஸ்தாபனங்களில் கிடைக்கிறது. மேலும் தற்போதைய கல்வித் திட்டத்தில் இளைஞர் உயர்கல்வி பெறுவதற்கே மனத் தூண்டல் உடையவர்களாக காணப்படுகின்றனர். மொத்த தொழில் அற்றவர்களின் எண்ணிக்கையில் 15–24 வயதிற்குட்பட்டோர் 75% ஆகும். மேலும் வேலையற்ற படித்த இளைஞர் பங்கு அதிகரித்துக் கொண்டே வருகின்றது. ஒருவர் வருமான எதிர்பார்க்கை, உத்தேசித்த தொழிலின் இடம், தொழிலின் சுபாவமும், தரமும், தொழிலின் குறுகிய நீண்டகால தன்மைகள் என்பவற்றை எதிர்பார்த்தே ஒரு தொழிலைத் தேடுகிறார்கள். 1968/69ல் நடாத்திய தொழில் மதிப்பீட்டில் இளைஞரின் தொழில் சம்பந்தமான உளப்பாங்கினால் ஏற்பட்ட சில விளைவுகளை கீழே தரப்படும் தரவுகள் விளக்குகின்றன.

**ஆண்**

| தொழில் தெரிவு | நகரம் | | கிராமம் |
|---|---|---|---|
| ஏதாவது ஒரு வேலை | 43.0 | — | 42.7 |
| நுட்பமற்ற வேலை | 14.9 | — | 19.1 |
| நுட்பமான வேலை | 7.7 | — | 7.0 |
| எழுதுவினைஞர் | 14.8 | — | 13.7 |
| ஆசிரியர் | 1.6 | — | 2.7 |
| தொழில் நுட்பவேலை | 7.1 | — | 3.8 |
| பொது வேலைகள் | 10.9 | — | 11.6 |

மேலும் மாவட்ட அடிப்படையில் வேலையற்றிருக்கும் இளைஞரின் தரவுகளை அவதானிப்பின் பின்வருமாறு அமைந்துள்ளது.

**மாவட்ட வாரியாக வேலையின்மை 1971**

| மாவட்டம் (ஆண்) | தொழிலற்றவர் எண்ணிக்கை |
|---|---|
| களுத்துறை | 37,360 |
| காலி | 34,865 |
| கேகாலை | 29,744 |
| மாத்தறை | 21,119 |
| இரத்தினபுரி | 23,865 |
| புத்தளம் | 10,467 |

| மாவட்டம் (ஆண்) | தொழிலற்றவர் எண்ணிக்கை |
|---|---|
| குருணுகல் | 27,205 |
| பதுளை | 18,675 |
| யாழ்ப்பாணம் | 17,140 |
| திருகோணமலை | 5,263 |
| அம்பாறை | 6,257 |
| மாத்தளை | 7,194 |
| மொனராகலை | 4,059 |
| மட்டக்களப்பு | 4,636 |
| அனுராதபுரம் | 5,427 |
| மன்னர் | 1,082 |
| வவுனியா | 1,159 |

வயது அடிப்படையில் இந்த வேலையின்மையை அவதானிப்பின் கீழ்வரும் தரவுகள் இதற்கு எடுத்துக்காட்டாக அமையும்.

| வயது | வேலை அற்றோர் தொகை (1969/70) |
|---|---|
| 15–24 | 4,51,000 |
| 25–34 | 69,,500 |
| 35–44 | 14,7000 |
| 45-54 | 6,700 |

இவ்வாருக கிராமப்புற இளைஞர் மத்தியில் வேலையற்ற நிலையினை உருவாக்கிய கல்வித் திட்டத்தில் சீர்த்திருத்தங்கள் அவசியம் ஏற்படுத்த வேண்டியுள்ளன.

(1) இரண்டாம்தர கல்வி முறையினை இன்னும் அதிக அளவிற்கு பலவகைப் பட்டதாக்கியும் குறிப்பிட்ட வேலைகளுக்கு உரியதாக்கியும், அமைக்க வேண்டும். இப்படி செய்வதினுல் உயர் கல்வி பெற செல்லும் மாணவர் தொகையினை குறைக்க முடியும்.

(2) நாட்டின் பொருளாதார திட்டத்தின் தேவைகளுக்கு ஏற்ப பலவகைப் பட்ட துறைகளில் கல்விப் போதனையும், பயிற்சியும் அளிக்கப்படல் வேண்டும்.

(3) பாடவிதானங்களை மட்டும் சீர்படுத்தினுல் போதாது. தொழில்களை உருவாக்கும் ஸ்தாபனங்கள், நிறுவனங்கள், தொழிற் கல்வியையும், பயிற்சியை யும் அளிக்க வேண்டும். மேலும் கல்வி அமைச்சின் தொழில் கல்வித் திட்டத்தை இந்த ஸ்தாபனத்தின் திட்டங்களுடன் இணைக்க வேண்டும்.

இவ்வாருக கல்வித் திட்டம் பரவல்படுத்தப்படுமாயின் கிராமப்புற இளைஞர் சமுதாய ரீதியில் வெற்றிபெற வாய்ப்புண்டாகும்.

நிலச் சுவாந்தர்களும், சொத்துரிமை பாராட்டும் வர்க்கத்தினரும் வெளிப் படையாக விவசாய அமைப்பில் ஆதிக்கம் செலுத்தி வந்தமையினுல் கிராமப் பிரதேசங்களின் சமுதாய அமைப்பு தன்னிறைவுபெறும் வளர்ச்சிக்கான மாற் றத்தை அடையவில்லை. மேலும் வெளிநாட்டு பொருட்களின் பாவனை அதிகரிக் கப்பட்டமையினுல் உள் நாட்டில் தயாரிக்கப்படும் பொருட்களுக்கு கிராக்கி

நிறைத்தது. உள் நாட்டுப் பொருட்கள் வெளிநாட்டுப் பொருட்களுடன் போட்டி போட முடியாத நிலையில் கிராமிய விவசாய பெருக்கம் பாதிக்கப்பட்டு. கிராமியத் துறை பின்தங்கிய நிலையில் இருக்க நகரத்துறை பிறநாட்டு மூலப் பொருட்களிலும் வர்த்தகத்திலும் கணிசமான அளவில் தங்கியிருக்கலாகியது. மேலும் நகர தொழில்களுக்கு உதவியும் அளிக்கப்பட்டன. குறைந்த வட்டி அறவிட்டு உதவிப் பணம் வழங்கப்பட்டதால் மேலும் அவை விருத்தி அடைந்தன. கைத்தொழில் துறையில் உள்நாட்டு மூலப் பொருட்களில் 25.3% உள்நாட்டில் பெறப்பட்டன. மீதி வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டது. கிராமப் புறங்களில் கிடைக்கக் கூடிய மூலவளங்களை பயன்படுத்தி சிறு தொழில்களை ஆக்க வேண்டும்.

சிறுகைத்தொழில்கள், குடிசைக் கைத்தொழில்கள், கைவினைத்திறன்கொண்ட கைத்தொழில்கள், விருத்தியாக்க முடியும். பாரிய கைத்தொழில்களை விருத்தி யாக்குவது கிராம ரீதியில் ஒவ்வாததாக இருப்பதினால் கிராமத்தோடு சார்பான நெசவு, பன்ன வேலை, பனங்கட்டி தொழில், கரும்பு தொழில், தளபாடம் செய்தல், விவசாய உபகரணம் செய்தல் என்பவற்றை ஸ்தாபிப்பதால் கிராம ரீதியில் கூடிய இளைஞரை இதில் அமர்த்த முடிகிறது. மக்கள் தொகை, திறமை, சந்தைப்படுத்தும் வசதி இவற்றிற்கேற்ப இத்தொழில்களை விருத்தி ஆக்கினால் கிராமத்தை பன்மடங்கு முன்னேற்றலாம் என்பதில் சிறிதளவும் ஐயமில்லை.

அடுத்து விவசாய ரீதியில் எவ்வளவு தூரத்திற்கு சமூக மாற்றத்தை இளைஞர் மத்தியில் ஏற்படுத்தலாம் என்பதனை நோக்கும்போது இளைஞர் விவசாய திட்டங்களை ஏற்படுத்துவதன் மூலம் படித்த இளைஞருக்கு விமோசனம் அளிக்க முடிகின்றது. 1966/70 வரை ஏற்படுத்தப்பட்ட 35 திட்டங்களில் 23,500 இளைஞருக்கு தொழில் வாய்ப்பு அளிக்கலாம் என எதிர்பார்த்த போதிலும் 1971 ல் 41 திட்டங்களை செயற்படுத்தப்பட்டு 2739 இளைஞர்களே வேலை பெறக் கூடிய நிலை காணப்பட்டது. மேலும் 7174.— காலப் பகுதியில் 52 திட்டங்களில் 3183 இளைஞருக்கு வேலை வசதி அளிக்கப்பட்டது. மாதம் ஒன்றிற்கு 250/- ரூபா வருமானம் பெறத்தக்கதாக இத்திட்டம் வகுக்கப்பெற்று நிரந்தர விவசாய முயற்சியில் விவாகமாகாத இளைஞரை உட்படுத்துவதே இவற்றின் முக்கிய நோக்கமாக இருந்தது.

இவற்றைவிட அனைத்துலக தொழில் நிறுவன உதவியுடன் நிறுவப்பட இருக்கும் தேர்ச்சித் திறனுக்க நிறுவனம் தொழில் அற்றவருக்கு தொழில் துறையிலும், கமத்தொழில் துறையிலும், சமூகத் துறையிலும் பயிற்சி அளிக்க முன் வந்துள்ளது.

கிராமப்புற ரீதியில் விவசாயத்தில் ஈடுபட இருக்கும் இளைஞருக்குப் போதிய பயிற்சி அளிக்க வேண்டும். இளைஞர் விவசாய கழகங்கள், விவசாய திணைக்களங்கள் போன்றன செயன்முறை பயிற்சியை அளிக்க முன்வர வேண்டும்.

விதைகளை திறமையாக தேர்ந்தெடுத்தல் கால நிலைக்கேற்ப பயிர்களைப் பயிரிடுதல் போன்றவற்றில் தேர்ச்சி அளிக்க வேண்டும். வருடம் ஒன்றிற்கு கிராமப் பகுதிகளில் 60.000 ஏக்கர் நிலத்தை பயிற்செய்கைக்குள்ளடக்கினால், 143,000 பேருக்கு வருடத்திற்கு கிராம ரீதியில் வேலை வாய்ப்பளிக்க முடியும். இதைவிட

பல் இன பயிர்ச்செய்கை மூலம் மேலும் அதிக இளைஞரை வேலைக்கு அமர்த்த முடியும்.

கிராமப் புறத்தை விட்டு படித்த இளைஞர் நகரப் புறத்தை நோக்கி நகர்தலை தடுப்பதற்கும் கிராமப்புறத்தை சமூக ரீதியில் சிறந்த பொருளாதார சிறப்புடையதாக மாற்றவும் முற்படுவதற்கு பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொண்டால் நல்ல பயனைத் தரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(1) கிராமப்புற தொழில்களில் உறுதியாக வருமானம் பெற வழி செய்ய வேண்டும்.

(2) நகர வேலைகளுக்கும் கிராமிய வேலைகளுக்குமிடையில் காணப்படும் சம்பள ரீதியான வித்தியாசத்தை குறைத்து சமரீதியான சம்பள திட்டங்களைப் புகுத்த வேண்டும்.

(3) எல்லா வேலைகளுக்கும் மாதச் சம்பளம் என்ற ரீதியில் வழங்கப் பட வேண்டும்.

(4) எல்லோருக்கும் விடுமுறை நாட்கள் சமமாக இருக்க வேண்டும்.

(5) இளைஞருக்கு கிராமங்களில் இருக்கும் பொதுவான நிறுவனங்களில் தலைமைப் பதவி அளிக்க வேண்டும்.

(6) சிறந்த பயிர்காப்புறுதித் திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டும்.

(7) பயிர்ச்செய்கைக்கு மக்கள் வங்கியின் மூலம் போதிய கடன் குறைந்த வட்டியில் பெற்றுக் கொடுக்க வேண்டும்.

(8) சிறு கைத்தொழில்களை ஆக்குவதற்கு மக்கள் வங்கி கடனுதவி கொடுத்து ஊக்கப்படுத்த வேண்டும்.

(9) உள்ளூர் மூலவளங்களை பாவனைக்குட்படுத்த வேண்டும்.

(10) உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கும் விவசாயத்தில் உள்ளவருக்கும் இடையில் உள்ள வேறுபாட்டைப் படிப்படியாக நீக்க வேண்டும்.

(11) விவசாயத்தால் ஏற்படக் கூடிய நன்மைகளை, படக்காட்சிகள், கருத்தரங்குகள் மூலம் கிராமிய சமூகத்தினரிடத்தில் பதிய வைகக வேண்டும்.

(12) நவீன கருத்துக்களை இளைஞர் மத்தியில் பரப்ப வேண்டும்.

(13) நகரங்களில் கிடைக்கப் பெறும் சுகாதார, கல்வி, வீட்டு வசதிகளை கிராம ரீதியிலும் அமைத்துக் கொடுக்க வேண்டும்.

(14) கிராம மக்களுக்கு மின்சாரத்தை அறிமுகப்படுத்த வேண்டும். இதனால் மக்களின் வேலை நேரத்தை அதிகரிப்பதுடன், கடைகளை

கூடிய நேரத்திற்கு திறந்து வைப்பதுடன், இரவு நேரங்களில் மக்கள் நடமாட்டத்தை ஏற்படுத்தி சமூக உறவுகளை அதிகரிக்க முடியும்.

(15) அனுபவம் மிக்கவர்கள் இளைஞருக்கு தகுந்த ஆலோசனை வழங்கி வழி நடத்த வேண்டும்.

கிராம அபிவிருத்தி திணைக்களத்தால் பயிற்சி நிலையங்கள் பிலிமத்தலாவை, நாலந்தா, நிக்கவரட்டி, மாதம்பை, டிக்வெல, புசல்லாவை, பிந்துனுவெல, மதவாச்சி, கல்லடி, அச்சுவேலி ஆகிய இடங்களில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. இத் தகைய அபிவிருத்தி நிலையங்களில் கிராம இளைஞரை அனுப்பி பல துறைகளில் பயிற்சி அளிக்கப்பட வேண்டும். இப்பயிற்சி நிலையம் நடாத்தும் பயிற்சி நெறி களில் கிராமம் தோறும் உள்ள சங்க உறுப்பினர்கள் பலரும் கட்டாயம் கலந்து கொள்ள வேண்டும். மேலும் இவை கிராம மட்டத்தில் இயங்கும் பல்வேறு சங்கங்களின் பிரதிநிதிகளுக்காக பல்வேறு கருத்தரங்குகளை ஒழுங்குபடுத்தி நடாத்தி வருகின்றன.

கிராமிய இளைஞருக்கு கல்வி அறிவூட்டுதல் மூலமும் மறைமுகமான எடுத்துக் காட்டுதல் மூலமும் சமூக வளர்ச்சிக்கு வேண்டிய மனோ நிலையினை உருவாக்க முடியும். பிரச்சாரம் செய்வதிலும், சமூக வளர்ச்சிக்கேற்ற தகுந்த தகவல்களை யும், அறிவுரைகளையும் பரப்புவதன் மூலம் மக்களை அறிவுடையவர்களாக்க முடிகிறது. சுயமுயற்சி, சமூகம் பற்றிய தெளிவான அறிவு, செயலாற்ற உகந்த திட்டம் ஆகிய அனைத்தும் சமூக அபிவிருத்தி இயக்கத்தை மேம்படுத்த முனை யும் ஒவ்வொரு இளைஞர் மத்தியிலும் நன்கு வேரூன்ற வேண்டும். அப்போது தான் இளைஞர் அறிவு பெற்று தாமும் சேவை ஆற்ற வேண்டும் என்ற மனப் பான்மை பெற்று கிராம விருத்திக்கு தம் பங்கு அளப்பரியது என்பதனை உண ரக்கூடிய ஒரு வாய்ப்பு ஏற்படும்,

★

# இளைஞரும் விவசாய அபிவிருத்தியும்

திரு. இரா. சிவசந்திரன்
விரிவுரையாளர், களனிப் பல்கலைக்கழகம்

இலங்கையின் தேசிய அபிவிருத்தி பெருமளவுக்கு விவசாய அபிவிருத்தியிலேயே தங்கியுள்ளது. ஏனெனில் இலங்கையின் பொருளாதாரத்தில் விவசாயத் துறையே முக்கிய பங்கினை வகிக்கின்றது. இலங்கை, தனது உள்நாட்டு மொத்த உற்பத்தியில் 35 வீதத்தினையும் ஏற்றுமதி வருமானத்தில் 90 வீதத்தினையும் விவசாய உற்பத்தியிலிருந்தே பெறுகின்றது. அத்துடன் உழைப்பை நல்கும் குடித் தொகையில் 50 வீதத்தினருக்கு வேலைவாய்ப்பளிப்பதுவும் இத்துறையேயாகும்.

இலங்கையின் விவசாயத்தில் ஒன்றுடன் ஒன்று பெரிதும் தொடர்பற்ற 'இருமைத்தன்மை' காணப்படுகின்றது. ஒருபுறம், உற்பத்தி முறைகளில் விருத்தியடைந்த பெருந்தோட்ட விவசாயத்துறை உள்ளது. இலங்கையின் மொத்த விளைபரப்பில் 60 வீதத்தினை (2.4 மில். ஏக்) உள்ளடங்கிய இத்துறையில் தேயிலை (0.6 மில். ஏக்) இறப்பர் (0.67மில். ஏக்.) தென்னை (1. 5 மில். ஏக்) போன்ற வர்த்தகநோக்கத்திற்காக உற்பத்தி செய்யப்படும் பயிர்கள் செய்கை பண்ணப் படுகின்றன. மறுபுறம், உற்பத்திமுறைகளில் விருத்தியுறுத கிராமியக் குடியானவர் விவசாயத்துறை காணப்படுகின்றது. இத்துறையில் பெரிதும் உணவுத் தேவை கருதி நெல், ஏனைய சிறு தானிய வகைகள் போன்ற உணவுத் தானிய உற்பத்தியே முதன்மை பெறுகின்றது. உணவு உற்பத்தியில் தன்னிறைவை நோக்கிச் செல்லும் இக் காலகட்டத்தில் உணவு உற்பத்திக்கு முதன்மையளிக்கும் கிராமிய விவசாயத் துறையின் அபிவிருத்தியின்பால் அதிக அக்கறை காட்டப்பட்டு வருகின்றது. விவசாய உற்பத்தி தனியே உணவுத் தேவையை மாத்திரம் நிறைவு செய்வதல்ல அது கைத்தொழில் வளர்ச்சிக்குத் தேவையான விவசாய மூலப் பொருட்களையும் வழங்குகின்றது.

இலங்கையின் இன்றைய குடித்தொகை 14 மில். ஆகும். 1871 ஆம் ஆண்டில் 2. 4 மில் இருந்த குடித்தொகை இன்றுவரையுள்ள நூறுண்டு காலத்தினுள் ஆறுமடங்காக அதிகரித்துள்ளமை அஞ்சத்தக்க அதிகரிப்பாகும். இலகுவாக இதனைக் கூறுவதாயின் இலங்கையில் ஒவ்வொரு மணித்தியாலத்திற்கும் 44 குழந்தைகள் பிறந்து உணவுக்காக வாய் திறந்து குரல் கொடுக்கின்றன. இக் குடித் தொகையின் விரைவான அதிகரிப்புக்கு ஏற்ப நாம் உணவு உற்பத்தியை அதிகரிக்காதுவிடின் வறுமை தோன்றி மக்கள் பட்டினிச் சாவுக்குள்ளாகும் கொடுமை நிகழும். இக் கொடுமைகளைத் தடுக்க நாம் விவசாயத்தை விரைந்து அபிவிருத்தி செய்து வரவேண்டியது தவிர்க்க முடியாத பொறுப்பாகும். குடித்தொகை அதிகரிப்பிற்கேற்ப உணவு உற்பத்தியையும் அதிகரித்து வந்து இரண்டிற்குமிடையே இடைவெளி அதிகரிக்காமல் பாதுகாப்பதே இன்றைய மக்கள் சந்ததியினரின் மிகப்பாரியதும், முதன்மையானதுமான கடமையாகும்.

நாட்டின் விவசாய அபிவிருத்தி துரிதமாக வளர்ச்சிபெற விவசாய மூலவளங்ள் முறையாகவும் – திறமையாகவும் பயன்படுத்தப்படுதல் அவசியம். விவ

சாய மூலவளமென்கையில் அதனுள், நிலவளம், நீர்வளம், இயற்கைத் தாவர வளம், மன் வளம், மூலதனவளம், போக்குவரத்து வசதி வளம் என்பனவும் இன்னும் சிலவும் அடங்கும். இதனைத் திறமையாகப் பயன்படுத்த மனித சக்தி வளமே இன்றியமையாத முதற்றேவையாகும். மனிதன் வளமாக மாற அவன் உழைப்பை நல்கி உற்பத்தியைத் துரிதப்படுத்துபவனுக இருக்க வேண்டும். ஒரு நாட்டின் குடித்தொகையில் குழந்தைகள், உழைப்போர், முதியவர்கள் ஆகிய வயதுப் பிரிவினரை அடையாளம் காணலாம். இதில் குழந்தைகளும், முதியவர் களும் உற்பத்தி நல்காது நுகர்வோராகவே காணப்படுவர். இவர்கள் உழைப் போரில் தங்கி வாழ்பவர்களாக மாத்திரமன்றி கூடிய சமூக செலவினங்களையும் உருவாக்குபவர்களாக உள்ளனர். (உதாரணம்: இலவச கல்வி வசதி, சுகாதார வசதி) எனவே உழைக்கும் மக்களே நாட்டின் செல்வவளமாகும். இவ் உழைப்பை நல்குவோருள் கணிசமான தொகையினர் இளைஞர்களேயாகும். எனவே விவசாய அபிவிருத்தியில் இளைஞர்கள் உயிர்நாடியாயுள்ளனரென்பதில் ஐயமின்று. இலங் கையின் குடித்தொகையில் 15–59 வயதுப் பிரிவினரான உழைக்கும் மக்கள் தொகையினர் 64 வீதத்தினராக உள்ளனர். இவர்களுள் 50 வீதமானோர் இளை ஞர்கள். அதாவது 15–35 வயதுக்குட்பட்டோர் குடித்தொகையின் 34 வீதத் தினராகவுள்ளனர், இதிலிருந்து இலங்கையின் உழைக்கும் மக்களில் இளைஞர் படை முன்னனி வகிக்கின்றமை தெளிவாகின்றது. இவ்வாருன இளைஞரின் உழைப்பைச் சரியாகப் பயன்படுத்த முடியாதபடி எமது அபிவிருத்தித் திட்டங் கள் காணப்பட்டமை கசப்பான உண்மையாகும். இதனுல் இங்கு இளைஞர்களி டையேதான் வேறு எந்த வயதுப் பிரிவினரிடமும் இல்லாதவாறு அதிகப்படியான வேலையற்ற நிலைமை காணப்படுகின்றது. வலிமை வாய்ந்த உழைப்பை நல்கக் கூடிய இளைஞரின் உழைப்பை நாம் அபிவிருத்திகளுக்குப் பெற்றுக் கொள்ள முடியாத நிலை மிகவும் துரதிஸ்டமானதே. இத்தவறுகளை இன்றைய நிலையில் நாம் அதிகம் உணர்ந்துள்ளோமென்பதை இளைஞர்களுக்கு வேறு எக்காலத்திலும் இல்லாதவாறு அண்மைக் காலத்தில் பொருளாதார, சமூக, அரசியல் ரீதியில் அளித்து வரும் முக்கியத்துவம் உணர்த்த வைக்கின்றது. குறிப்பாக விவசாய அபிவிருத்தியின் பால் இன்று இளைஞர் கவனம் திசைதிருப்பப்பட்டுள்ளமை குறிப்பிடக்கூடிய அம்சமாகும்.

**விவசாய அபிவிருத்தி**

இலங்கையின் விவசாய அபிவிருத்தியை முன்னெடுத்துச் செல்வதற்கு இரு வழிகள் உள்ளன. அவையாவன;

(அ) விளை நிலப்பரப்பை அதிகரித்தல்

(ஆ) ஏலவேயுள்ள விளைநிலப்பரப்புகளில் விளைவை அதிகரித்தல்

(அ) இலங்கையில் 1930 ஆம் ஆண்டளவில் ஆரம்பிக்கப்பட்ட வரண்ட பிர தேச விருத்தியுடன், விளைநிலப்பரப்பை அதிகரித்தலெனும் விவசாய அபிவிருத்தி நடவடிக்கை ஆரம்பமாயிற்று, 1935 ஆம் ஆண்டிலேற்படுத்தப்பட்ட நில அபி விருத்திச் சட்டத்தின்பின், வருடம் 75 அங். குறைவாக மழை பெறும் வரண்ட பிரதேசத்தில் அரசாங்கச் செலவில் நீர்பாசன வசதிகள் ஏற்படுத்தப்பட்டு குடி யேற்றத் திட்டங்கள் உருவாக்கப்பட்டன. பலநோக்குத் திட்டங்கள், பாரிய குடியேற்றத் திட்டங்கள், மத்திய வகுப்பார் திட்டங்கள், கிராம விஸ்தரிப்புத் திட்டங்கள் போன்றவைகளாக. அவை ஆரம்பத்தில் அமைந்தன. குடியடர்த்தி கூடிய பகுதிகளிலிருந்த குடியமுக்கத்தைக் குறைத்தமை, நிலமற்ருேருக்கு நிலம்

கிடைக்க வழி செய்தமை, வேலையற்றிருந்த சிலருக்கும் பகுதி நேரக் கூலி வேலை செய்து வந்த சிலருக்கும் வேலை வாய்ப்பை அளித்தமை போன்ற சமூக நலன் களைக் குடியேற்றத் திட்டங்கள் ஆற்றின. மேற்படிக் குடியேற்றத் திட்டங்களில் அக்காலத்தே பல இளைஞர்கள் கவரப்பட்டு விவசாய அபிவிருத்திக்கு உழைத்த னர். ஆனால் இளைஞர்களுக்கு அதுவும் குறிப்பாகப் படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பளிப்பதை நோக்கமாகக் கொண்டு விவசாய அபிவிருத்தித் திட்டங் கள் அண்மைக் காலத்திலேயே, அதாவது 1966ஆம் ஆண்டுகளின் பின்னரே உரு வாக்கப்பட்டன. உண்மையில் இக்காலகட்டமே அரசாங்க குடியேற்றத் திட்டக் கொள்கை இளைஞர்பால் கவனத்தைச் செலுத்தத் தொடங்கிய காலம் எனத் துணியலாம். புதிய, இளைஞர்களுக்காக உருவாக்கப்பட்ட விவசாய அபிவிருத்தி நடவடிக்கைகளை 5 வகையாகப் பிரித்து ஆராய்தல் பொருத்தமானதாகும். அவையாவன :

(1) இளைஞர் குடியேற்றத் திட்டங்கள்.
(2) பிரதேச அபிவிருத்திச் சபைகளின் விவசாயத்திட்டங்கள்.
( D. D. C. Agricultural Projects )
(3) கூட்டுறவு விவசாயப் பண்ணைகள்,
( Co-operative Farms )
(4) நிலச்சீர்திருத்த விவசாய அபிவிருத்தித் திட்டங்கள்.
(5) பொதுசன இயக்கங்களின் விவசாய அபிவிருத்தித் திட்டங்கள்.

(1) இளைஞர் குடியேற்றத் திட்டங்கள்:

1960ஆம் ஆண்டளவில் 2,00,000 வேலையற்ற இளைஞர் (19-25 வயது) இலங்கையில் காணப்பட்டனர். இவர்களில் 40 வீதத்தினர் க. பொ. த. ப. (சா/த) வரை படித்தோராவர். இவர்களுக்கு விவசாயக் குடியேற்றத் திட்டத் தில் வேலைவாய்ப்பளிக்கத் திட்டமிட்ட அரசாங்கம் பொதுவாக, குடியேற்றவாசி கள் தெரியும்போது 10 வீதமான தொகை இளைஞர்களுக்கு ஒதுக்கப்பட வேண்டு மெனப் பணித்தது. இது சிறிது வெற்றியளிக்கவே 1966இல் இளைஞர் குடியேற் றத் திட்டங்கள் தனியாக ஆரம்பிக்கப்படலாயின. நில அபிவிருத்தி, விவசாய நீர்ப்பாசன அமைச்சுகள் கூட்டாக இணைந்து இக்குடியேற்றத் திட்டங்களை ஆரம் பித்தன. 1966-1970 ஆண்டு காலத்தின் 15 கோடி ரூபா செலவில் 235 இளை ஞர் குடியேற்றத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட வேண்டுமெனத் திட்டமிடப்பட் டது. ஒவ்வொரு குடியேற்றத் திட்டத்திலும் 100 இளைஞர் கூட்டாக நில அபி விருத்தி செய்ய வேண்டுமெனவும், பின்னர் அவர்களுக்குக் காணித் துண்டுகள் பிரித்தளிக்கப்படுமெனவும் கூறப்பட்டது. இவ் இளைஞர் குடியேற்றத் திட்டங்கள் அதிக ஆய்வுக்குட்படுத்தப்பட்டு நீர்பாசன வசதியுடன் அமைவுறவும், பெருமள வுக்கு உப உணவுப் பயிர்ச்செய்கை உற்பத்திக்கே முதன்மையளிப்பதெனவும் திட்டமிடப்பட்டது. இத்திட்டம் பூர்த்தியடையும் போது 23,500 இளைஞர் 250/- — 300/- வரையான வருமானத்தைப் பெற்று வாழ்தல் சாத்தியமாகுமென நம்பப்பட்டது. இத்திட்ட நிர்வாகத்தில் அரசாங்க அதிபர், காணி அபிவிருத்தி உத்தியோகத்தர், ஒவ்வொரு திட்டத்திற்கும் ஓர் அதிகாரி ஆகியோர் பங்கு கொள்ள வேண்டுமெனவும் இவர்கள் இளைஞரை நல்லமுறையில் பயிற்சியளிக்க வேண்டுமெனவும் திட்டம் கூறியது.

1966-71 கால கட்டத்தினுள் எமது பல திட்டங்கள் போல் இதுவும் எதிர் பார்த்த முழுப் பயனையும் அளிக்கத் தவறினாலும் ஓரளவு வெற்றியைத் தந்த தென்றே கூறவேண்டும். 23,500 இளைஞர்களைக் குடியேற்றுவதற்குப் பதிலாக 2,739 இளைஞர்கள் குடியேற்றப்பட்டதும், 235 குடியேற்றத் திட்டங்களுக்குப் பதிலாக 41 திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டதுமே உண்மையில் நடந்த அபிவிருத்தி யாக அமைந்தது. 41 திட்டங்களில் 13 திட்டங்கள் பாரிய வெற்றியைத் தந் தன. இவற்றுள் சில திட்டங்களிலுள்ள இளைஞர்கள் மாதம் எதிர்பார்த்த வரு மானத்தைவிடவும் இருமடங்காக மாதம் 500/- மேலாகப் பெற்றனர். இவ் வெற் றியின் பெறுபேருக அண்மைக் காலத்தே மேலும் பல இளைஞர் குடியேற்றத் திட்டங்கள் அமைக்கப்படவும், விருத்தி செய்யப்படவும் நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. மிக அண்மைக்கால ஆய்வுகளின்படி பல இளைஞர் குடியேற்றத் திட்டங்கள் மிகப்பெரும் வெற்றியை அளித்துவருகின்றமை புலனு கின்றது. உதாரணம்: முத்தையன்கட்டு, விஸ்வமடு என்பன மிளகாய், வெங்காய உற்பத்தியிலும் குடஓயா, யர்ரபாதா என்பன முறையே காய்கறி, பசன்பழ உற்பத்தியிலும் ஈடுபட்டு வெற்றியளித்துள்ளன.

(2) **பிரதேச அபிவிருத்திச்சபைகளின் விவசாயத் திட்டங்கள் :**

1971ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட 5 ஆண்டுத்திட்ட அறிக்கையில் கூறப் பட்டவாறு, பிரதேச அபிவிருத்திச் சபைகள், கிராமிய மட்டத்தில் காணப் படும் மூலவளங்களைப் பயன்படுத்தி, வேலையற்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப் பளிப்பதை நோக்கமாகக் கொண்டு உருவாக்கப்பட வேண்டுமென பணிக்கப்பட் டிருந்தது. இது கிராமிய மக்களுக்கும் அரசாங்கத்திற்குமிடையே ஒரு நெருக்க மான இணைப்பை உருவாக்குவதற்கு அரசாங்க அதிகாரிகள், கூட்டுறவுச் சங்கம், மக்கள்குழு, விவசாயக்குழு, உள்ளூராட்சிச்சபைப் பிரதிநிதிகளைக் கொண்ட சபை யாக விளங்கி கிராம மட்டத்தில் சிறு விவசாய, கைத்தொழில் அபிவிருத்தித் திட் டங்களை உருவாக்கிச் செயல்படுத்தும் ஒன்ருக விளங்க வேண்டுமெனவும் எதிர் பார்க்கப்பட்டது.

1971-73 வரை 1,198 பிரதேச அபிவிருத்தித் திட்டங்களுக்குத் திட்ட அமைச்சு அனுமதி வழங்கியது. இவற்றுள் 503 (41%) விவசாயத் திட்டமாகவும் 628 (52%) கைத்தொழில் திட்டமாகவும் 67 (7%) பலதொழில் திட்டமாகவும் விளங்கியது. 1973 டிசம்பரில் அனுமதிக்கப்பட்டவற்றுள் 918 (76%) செயற்படத் தொடங்கியது. 503 விவசாயத் திட்டங்களுள் 87 விலங்கு வளர்ப்புத் திட்டங் களாகும். மிகுதி 416 திட்டங்களும் மொத்தம் 10,623 ஏக்கரில் விவசாயச் செய் கையை மேற்கொண்டன. அரசாங்க நிலமும், அரசுடமையாக்கப்பட்ட தனியார் நிலங்களும் இவற்றுள் அடங்கும். ஒவ்வொரு பி. அ. திட்டப் பண்ணைகளும் 25-100 ஏக்கர் வரை பரப்பளவைக் கொண்டவை. ஒவ்வொரு ஏக்கர் அபிவிருத் திக்கும் அரசாங்கம் 1.600/- கடனாக வழங்கியது. பி. அ. சபையின் திட்டத்தால் 1971-73 வரை 22,449 பேருக்கு வேலைவாய்ப்பளிக்கப்பட்டுள்ளது. இதில் 11,250 பேர் விவசாய அபிவிருத்தித் திட்டங்களின் கீழ் வேலைவாய்ப்பைப் பெற்ருேராவர். இத்திட்டத்தினை அமுல்படுத்துவதில் 680 அரசாங்க உத்தியோகத்தர்கள் ஈடுபட் டுள்ளனர். இவர்களில் 550 பேர் பிரதேச அபிவிருத்தித் துணையாளர்களாகக் கடமையாற்றும் இளம் பட்டதாரிகளாவர். இப் பி. அ. சபைகள் நடாத்தும் விவ சாய அபிவிருத்தித் திட்டங்களில் பெருமளவு இளைஞரே சேர்க்கப்பட்டுள்ளனர். இவர்கள் கூட்டுறவு மனப்பான்மையுடன் உழைப்பதோடு, நல்ல வருமானமும்

பெற்று வருகின்றனரென்றும் இத்திட்டம் நல்ல வெற்றியையளித்துள்ளதென்றும் அண்மைக் காலக் கணிப்பீடுகளிலிருந்து அறிய முடிகின்றது.

**(3) கூட்டுறவு விவசாயப் பண்ணைகள்:**

1971 மே மாதத்தில் அரசாங்கம் கூட்டுறவு விவசாயப் பண்ணைத் திட்டமென்ற புதிய விவசாய அபிவிருத்தித் திட்டத்தை ஆரம்பித்தது, அரசாங்க நிலங்கள், தேவையற்ற காட்டு ஒதுக்கு நிலங்கள் என்பனவும், அத்துடன் முறையாகப் பயன்படுத்தப்படாத காரணத்தால் சுவீகரிக்கப்பட்ட தனியார் நிலங்களென்பனவும் இக் கூட்டுறவுப் பண்ணை நிலங்களாக மாற்றப்பட்டன. இப் பண்ணைக்குரிய விவசாய அங்கத்தவர்களைத் தேசிய அரசுப் பேரவை உறுப்பினரைக் கலந்தாலோசித்து அரசாங்க அதிபர் தேர்ந்தெடுப்பார். இவர்கள் பண்ணை அமைந்திருக்குமிடத்திலிருந்து 5 மைல் சுற்றுடலில் இருப்பவராகவும் 18–35 வயதுக்கு இடைப்பட்டவராகவும், விவசாயத்திலும் கூட்டுறவு விவசாயத்திலும் ஆர்வமுள்ளவராகவும் பங்குப் பணத்தைச் செலுத்தக் கூடியவராகவும் (500/- — 1000/-) இருக்க வேண்டும். அரசாங்கம் அவசியமெனக் கருதின் ஏக்கருக்கு 1600/- அளிக்கும். மக்கள் வங்கி அவசிய தேவைகளுக்கு கடன்வசதியளிக்கும்.

கூட்டுறவு விவசாய அமைப்பில் தொகுதி ரீதியில் வேலைவாய்ப்புக்களை உருவாக்கும் இப்பண்ணை 200 ஏக்கருக்கும் அதற்குக் கூடியதுமான அளவு பரப்பைக் கொண்டிருக்க வேண்டும். குறைந்த பரப்பளவு 100 ஏக்கரேயாகும். ஒரே அலகாக இயங்க வேண்டிய இப்பண்ணை உறுப்பினர்கள் கூட்டுறவு முறையில் ஒன்றுபட்டு கூட்டுறவுச் சங்கத்தை உருவாக்கிச் சில உத்தியோகத்தர்களைத் தெரிந்தெடுத்து இதனை நிர்வாகிப்பர். உறுப்பினர் நாள் அடிப்படையிலோ வேலை அடிப்படையிலோ கூலி பெறலாம். பண்ணைச் செலவு போக இலாபம் அங்கத்தவர்களிடையே பகிர்ந்தளிக்கப்படும்.

மேற்கூறப்பட்ட அமைப்பில் 1971-75 காலப் பகுதியினுள் 14,581 ஏக். உள்ளடக்கிய 65 பண்ணைகள் ஆரம்பிக்க அரசாங்கம் அனுமதியளித்தது. 1974 ஏப்பிரல் வரை 52 பண்ணைகள் உருவாக்கப்பட்டுள்ளன. இவற்றில் 3,183 இளைஞர் (எதிர்பார்ப்பு 6,193) வேலைவாய்ப்பினைப் பெற்றுள்ளனர்,

எடுத்துக்காட்டாக 'டெறனியாகல காரியாதிகாரி பிரிவின் அமைந்துள்ள (கேகாலை மாவட்டம்) 'லஸ்சனகம' கூட்டுறவுப் பண்ணையின் விபரத்தை நோக்கலாம். இப்பண்ணை 549 ஏக். பரப்பைக் கொண்டது. இப்பரப்பு 20 வருடமாகக் கைவிடப்பட்ட பழைய இறப்பர் தோட்டமாகும். இதனைப் புதிய பண்ணை நிர்வாகம் பின்வரும் முறையில் அபிவிருத்தி செய்து பெரும் வருமானம் பெற்று வருகின்றது.

| தானியம் | ஏக்கர் |
|---|---|
| இறப்பர் | 150 |
| பசன் பழம் | 150 |
| கடலை | 25 |
| மிளகாய் | 25 |
| காய்கறி | 25 |
| புல் | 55 |

மிகுதிப் பரப்பில் விலங்கு வளர்ப்பு இடம் பெறுகின்றது.

(4) நிலச்சீர்திருத்த விவசாய அபிவிருத்தித் திட்டங்கள் :

1972ஆம் நிலச் சீர்திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டமைக்கு 1971ஆம் ஆண்டு இளைஞர் கிளர்ச்சி காரணமாக இருந்ததென்றும், அதுவே நிலச் சொந்தக்காரரை நிலத்தை இழப்பதற்குரிய மனப்பான்மையைத் தயார்படுத்திற்றென்றும் அத்துடன் சட்டத்தை அமைதியாக அமுலாக்குவதற்குரிய சாதகமான அரசியல், சமூக சூழ்நிலைகளை உருவாக்கித் தந்ததென்றும் கூறப்படுகின்றது. எது எப்படியாயினும் இதுவரைகால விவசாய அபிவிருத்தி வரலாற்றில் இச்சட்டம் தீவிரமானதோர் முயற்சியாகுமெனப் பலராலும் கூறப்படுகின்றது. இச்சட்டத்தின் நோக்கம் பின்வருமாறு :

(1) விவசாய நிலங்களுக்கு உச்சவரம்பு விதிக்கப்பட்டது. இது நெற் காணியைப் பொறுத்தவரை 25 ஏக் / மேட்டுக் காணியைப் பொறுத்தவரை 50 ஏக். மாகும். இதற்கு மேல் எவரும் நிலத்தைச் சொந்தமாக வைத்திருத்தல் முடியாது.

(2) உச்சவரம்பால் சுவீகரிக்கப்பட்ட நிலத்தில் உற்பத்தித் திறனை அதிகரிக்கச் செய்வதோடு வேலை வாய்ப்பினை அதிகரிக்கும் வகையில் அவற்றினைப் பயன்படுத்துதல்.

(3) உச்சவரம்பிற்கு மேலதிகமாகவுள்ள காணிகள் இச்சட்டம் அமுலாகிய தினம் முதல் (1971 ஏப்பிரலிலென சட்டம் முன்னேக்கி விஸ்தரிக்கப்பட்டது.) நிலச் சீர்திருத்த ஆணைக்குழுவிற்கு உரிமையாக்கப்படும்.

இச் சட்டத்தைத் தொடர்ந்து 1973 இல் விவசாய விளைபெருக்கச் சட்டமும் 1975 இல் பெருந்தோட்டங்களைத் தேசியமயமாக்கிய நிலச்சீர்திருத்த சட்டமும் முக்கியமானவையாகும்.

1971ஆம் ஆண்டு சட்டத்தின் உடனடி விளைவாக 9,74,885 ஏக். காணிகள் ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டன. இதில் பெருந்தோட்டக் காணி 4,15,508 ஏக். நெற்காணி 5,59,377 ஏக்கருமாகும். மேற்படி ஆணைக்குழுவினுல் சுவீகரிக்கப்பட்ட பெருந்தோட்டங்கள் துண்டாடப்படாது அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் 'உசவசம' என்றழைக்கப்படும் கூட்டுறவு சபைகள் என்பனவற்றின் முகாமைத்துவத்தின் கீழ் ஒப்படைக்கப்பட்டன. கிடைக்கப்பெற்ற நெற்காணிகளுள் பெரும்பங்கு குத்தகைக் குடியானவர்களுக்கும், நிலமற்ற விவசாயிகளுக்கும் பிரித்தளிக்கப்பட்டன. இவர்களிற் குறிப்பிடக் கூடிய தொகையினர் இளைஞரேயாகும். பெருந்தோட்டங்கள் 1975 இல் முற்றுகத் தேசிய மயமாக்கப்பட்டபின் முகாமைத்துவம், நிர்வாகம் என்பவற்றில் மாற்றங்கள் செய்யப்பட்டன. தோட்டத்து அல்லது அண்மைய கிராம மக்கள் இப் புது நிர்வாக சபைகளில் இடம் பெற்றனர்.

இவர்களில் கணிசமான தொகையினர் இளைஞராக உள்ளனர். பெருந்தோட்டம் முறையாக நிர்வாகத்தை வேண்டும் ஒன்றுகும். புது நிர்வாகம் எவ்வளவு தூரம் இலாபகரமாகத் தோட்டங்களைப் பரிபாலிக்கின்றதென்பதை எதிர்காலமே உணர்த்த வல்லதாகும்.

### பொதுசன இயக்கங்களின் விவசாய அபிவிருத்தித் திட்டங்கள் :

இதில் Y.M.C.A, Y.M.B.A, Y.M.M.A, Y.M.H.A, காந்தி சேவா சங்கம், சர்வோதய இயக்கம், இளைஞர் விவசாய சங்கம் என்பன அடங்கும். இவை ஆங்காங்கே சிறியளவில் விவசாயப் பண்ணைகளையும், விலங்கு வளர்ப்பு நிலையங்களையும், ஏனைய சிறு மூலப்பொருள் அடிப்படையான கைத்தொழில் திட்டங்களையும் இயக்கி இளைஞரை முறையாக வழி நடத்தி வருகின்றன. இவை சிறு சிறு அமைப்புக்களேயாயினும் பயன் பெரிதாம். உதாரணம்: 400 மேற்பட்ட கிராமங்களில் சர்வோதய இயக்கம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. காந்தி சேவா சங்கம் கிளிநொச்சியில் ஒரு விவசாயப் பண்ணையை அமைத்துள்ளது, இராமகிருஷ்ண மிசன் மட்டக்களப்பில் விவசாயத் திட்டங்களை நடாத்தி வருகின்றது.

### (ஆ) விளைவை அதிகரித்தல் :

இலங்கையில் விவசாய அபிவிருத்தியை ஏற்படுத்தும் வழிவகைகளில் மேலே விபரிக்கப்பட்ட விளை பரப்பை அதிகரிக்கும் நடவடிக்கையே அண்மைக் காலம் வரை அதிகம் கவனிக்கப்பட்டாலும் சமீப காலங்களில் ஏலவே உள்ள நிலப் பரப்புகளில் விளைவை அதிகரிக்கும் நடவடிக்கையும் வலியுறுத்தப்பட்டே வருகின்றது. *1961* இல் *36* புசல்களாக இருந்த ஏக்கரொன்றுக்கான நெல் விளைச்சல் *1970* இல் *51* புசல்களாக அதிகரித்துள்ளமை குறிப்பிடக் கூடிய அம்சமாகும். இப் பசுமைப் புரட்சிக்குப் பின்வரும் காரணிகள் காரணமாக அமைகின்றன.

★ நல்லின விதைப் பாவனை (H4, H8, IR8)

★ இரசாயன உரப்பாவனையின் அதிகரிப்பு
(*1958* இல் ஏக். *13* இரு: *1970* ஏக். *38* இரு.)

★ இயந்திரமயமாக்கல்

★ இரசாயன களை கொல்லி, கிருமிநாசினிப் பாவனை அதிகரிப்பு.

என்பனவவாகும். பல விவசாய வெளிக்கள ஆய்வுகளில் இருந்து நவீன முறையில் விவசாயச் செய்கை மேற்கொள்வதில் புதுமைகாண விருப்பமுடைய, துணிவுடைய இளைஞரே முன்னணி வகுக்கின்றனரென்பதை அறியமுடிகின்றது. முதிய விவசாயிகள் பழமை பேணுபவராகவும், நவீன முறைகளைப் பாவிப்பதில் தயக்கமும் காட்டுபவரர்கவும், புதுமையில் நம்பிக்கையற்றவர்களுமாகவே காணப்படுகின்றனர்.

இவை தவிர அரசாங்கத்தால் விவசாய அபிவிருத்தி நோக்கம் கருதி செயல் படுத்தப்படும் கடன் வசதியினை நல்ல முறையில் பயன்படுத்தவும், கிராமிய மட்டத்தின் விவசாய சுபீட்சத்திற்காக ஏற்படுத்தப்பட்டுள்ள நிறுவன அமைப்புக்களான கூட்டுறவுச் சங்கங்கள், விளைபெருக்கக் குழுக்கள், மக்கள் குழுக்கள், தேர்தல் மாவட்ட அபிவிருத்திச் சபைகள் என்பவற்றின் இயக்கத்தில் அச்சாணியாக இருந்து செயல்படுத்துவதும் பெருமளவு அக்கிராமிய இளைஞர்களே என்பதில் ஐயமில்லை.

எமது நாட்டின் விவசாய அபிவிருத்தி மாத்திரமன்றி பொதுவாக பொருளாதார, சமூக, கலாச்சார அபிவிருத்திகள் அனைத்தும் பெருமளவுக்கு இளைஞர் கரங்களையே நம்பியுள்ளனவென்பது பெரிதும் உண்மையாகும். சுருக்கமாக இலங்கையின் எதிர்காலம் இளைஞர் கைகளிலேயே தங்கியுள்ளதென்னும் கூற்று மிகையானதன்று.

★

# இளைஞர்களும், வேலைவாய்ப்பும், குடியேற்றத் திட்டங்களும்

திரு. எம். எம். மக்பூல்
(உதவி காணி ஆணையாளர்)

**1.** குடியேற்றத் திட்டங்கள் பல நோக்கங்களை அடைவதற்காக இலங்கையில் ஏற்படுத்தப்பட்டுள்ளன; ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. ஆரம் பத்தில் ஈர வலயத்தில் தோன்றிய சன நெருக்கடியைத் தளர்த்தும் நோக்கில் உலர் வலயத்தில் குடியேற்றத் திட்டங்கள் அமைக்கப்பட்டன. இவ்வுலர் வலயம் ஒரு காலத்தில் இலங்கை முழுவதற்குமே உணவு வழங்கிய நெற்களஞ்சியமாக இருந்துள்ளதனை வரலாற்று மூலமாக அறியக் கூடியதாயிருக்கிறது. உலர் வலயம் முழுவதும் பரந்துகிடக்கும் பாரிய குளங்களும், நீர்ப்பாசன வடிகால் அமைப்புகளும், இதற்குச் சான்றாக விளங்குகின்றன. எனவே இங்கு குடியேற்றங்களை அமைப்பதன் மூலம் ஈர வலயத்தின் சன நெருக்கடியைத் தளர்த்துவதோடு நாட்டின் உணவுற்பத்தியை அதிகரித்து அதன் மூலம் வேலை வாய்ப்பையும் அதிகரிக்கலாம் என்ற நோக்கத்திலேயே இக் குடியேற்றத் திட்டங்கள் அமைக்கப்பட்டன.

குடியேற்றத் திட்டங்கள் என்ற பதம் காணிகளைப் பகிர்ந்தளித்து, ஒரு காலத்தில் நாகரீகத்தின் தொட்டில்களாக விளங்கிப் பின்னர் இயற்கையின் சீற்றத்தாலும், படையெடுப்புக்களின் அழிவினாலும் சிதைந்த ஒரு கலாச்சாரத்தை, ஒரு சமூக அமைப்பை மீள நிலை நாட்டும் ஒரு முயற்சியைக் குறிப்பதாகக் கொள்ளலாம். எனவே இத் திட்டங்களில் வழங்கப்படுகின்ற காணிகள் வெறு மனே உடைமையாக இருக்க வேண்டும் என்ற கருத்தில் வழங்கப்பட்ட காணிகள் அன்று. அவை விவசாயக் காணிகளாகும் எனவே இக் குடியேற்றத் திட்டங்களில் வழங்கப்படும் காணிகள் ஒரு பெறுமதிவாய்ந்த உற்பத்திச் சாதனமாகும். எமது கருத்தரங்கின் கதாநாயகர்களான இளைஞர்களும் ஆற்றலும், வேகமும் உடைய உற்பத்திக் காரணியாவர். இவ்விரு உற்பத்திச் சாதனங்களும் பொருத்தமுற ஒரே சீராக இணையும்போது ஏற்படும் விளைவு உற்பத்தியில் பெருக்கமும், அதிகரிக்கும் வேலை வாய்ப்புக்களும் ஆகும்.

## 2. இளைஞர்களின் முக்கியத்துவம்

**2 : 1** இன்று எங்கு பார்த்தாலும் இளைஞர்கள் பற்றிப் பரவலாகப் பேசப்படுகிறது. பத்திரிகைகளாயினும் சரி, அரசியல்வாதிகளாயினும் சரி, அரசாங்கங்களாயினும் சரி இளைஞர்கு முக்கியத்துவம் கொடுப்பதில் முன்னணியில் காணப்படுகின்றனர். இளமை என்பது பொதுவாகவே வனப்பும், உல்லாசமும், வேகமும் உடையது. மனித சீவராசிகளிடையேயாயினும், மிருக இனங்களிடையேயாயினும் இளமையே பொன்னன காலமாகக் கணிக்கப்படுகின்றது. எனவே இளமையைப் பொக்கிஷமாகக் கொண்டுள்ளோரை நாடுவது எவர்க்கும் இயற்கையாகும். அரசாங்கங்கள் இளைஞர்க்குத் தேவையான சகல வசதிகளையும், வாய்ப்புக்களையும் ஏற்படுத்திக் கொடுக்கத் தம்மாலான சகல முயற்சிகளையும்

மேற்கொள்கின்றன. காரணம் என்னவெனில் இளைஞர்களே ஒரு நாட்டின் முதுகெலும்பு எனக் கருதப்படுவதேயாகும். இன்றைய இளைஞர்கள்தான் நாட்டின் நாளைய தலைவர்களாவர். எனவே இளமை கழிந்து முதுமையில் காலடி எடுத்து வைத்துள்ளோர் தம் எதிர்காலத் தலைவர்களைப் பேணிப் பாதுகாக்க முற்படுவதும், அவர்களது ஆற்றலையும் வேகத்தையும் உரிய பயன்தரு வழியில் வழிநடத்த முற்படுவதும் மேலே கூறப்பட்ட காரணத்தினாலேயாகும்.

இந்த முக்கியத்துவம் திடீரென இளைஞர்க்கு வழங்கப்படுகிறதா ? இல்லை ! பன்னெடுங்காலமாக எல்லாச் சமூகங்களும் தமது இளைஞர்களைப் பேணிப் பாதுகாத்து முக்கியத்துவம் அளித்துள்ளனர். ஆனால் தற்காலத்தில் கல்வி முறைகளும், அணுகு முறைகளும் அடைந்துள்ள மாற்றத்தால் வெளிப்படையாகத் தோன்றுகின்ற வகையில் இத்தகைய முக்கியத்துவம் வழங்கப்படுகிறது என்றே கூறல் வேண்டும்.

2: 2 ஒரு காலத்தில் பொருளாதார முயற்சிகளுக்கு, உற்பத்தி முயற்சிகளுக்கு இன்றியமையாத சாதனங்களாக இயற்கை மூல வளங்களே கருதப்பட்டு வந்தன. மனித வளம் இயற்கை வளங்களைப் போல முக்கியமானதாகக் கருதப்படவில்லை. அண்மைக் காலம் வரை மனித வளம் இன்றி இயற்கை மூல வளங்களைக் கொண்டே பொருளாதார முயற்சிகளை மேற்கொள்ளலாம் எனத் தவறாகக் கருதப்பட்டு வந்தது. இயற்கை வளங்கள் குறைந்த நாடான ஜப்பான் போன்ற நாடுகளின் முன்னேற்றத்திற்குப் பின்னரே இயற்கை மூல வளங்களைப் போன்று மனித வளமும் இன்றியமையாதது; ஏன் ஒருபடி மேலானது என்று கூட கருதத் தொடங்கலாயினர். உண்மையில் மனித வளப் பிரயோகமின்றி ஏனைய மூல வளங்களால் எதுவித பிரயோசனமுமில்லை. அவை சடப்பொருள்களாக, பொருளாதாரப் பெறுமானம் அற்ற பொருள்களாகவே விளங்கும். மனித வளம் இணையும்போதுதான் அவை பயன்தரு பொருளாதாரப் பொருள்களாக மாறும். எனவே இந்தக் காரணத்தினால்தான் அரசாங்கங்கள் மனித வளத்தில் ஆற்றலும், வேகமும், வலிமையுள்ள வாலிபத்தைப் பெரிதும் மதிக்கத் தொடங்கின.

## 3. இளைஞர்கள் என்ற பதம் யாரைக் குறிக்கும்!

3 : 1 இளைஞர்கள் என்போர் யார்? இப்பதம் யாரைக் குறிக்கும்? இக்கேள்வி மிகச் சிக்கலானதாகும். இவர்கள்தான் இளைஞர்கள் என்று எவரையும் சுட்டிக்காட்டுவது இயலாத கருமமென்று சிலர் கூறக் கூடும். இளைஞர்கள் என்று பொதுவாகக் கருதப்படும் வயதினரிடையேயும் மனநிலையில் விரக்தியும், சோர்வும் உடைய எத்தனையோ பேரைக் காண்கிறோம். இவர்களையும் இளைஞர்கள் என்ற வரிசையில் சேர்க்க முடியுமா? முதியவர்கள் என்று கூறப்படுவோரிடையே சுறுசுறுப்பும், ஆர்வமும் உடைய எத்தனையோ பேரைக் கண்டிருக்கிறோம். அவர்களை எந்த வகையில் சேர்ப்பதுஎன்றெல்லாம் கருத்து வேறுபாடு தோன்ற இடமுண்டு. எனினும் இளைஞர்கள் என்ற பதம் பொதுவாக 14 வயதுக்கும் 30 வயதுக்குமிடைப்பட்டோரைக் குறிக்கும் என்பதைப் பெரும்பாலானோர் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

## 4. இலங்கையின் குடிசனமும் இளைஞர் தொகையும்

4 : 1 இலங்கையில் இவ் இளைஞர்கள் என்ற குழுவினர் சனத் தொகையில் எத்தனை விகிதம் உள்ளனர் என்ற நம்பிக்கையான புள்ளி விவரங்கள் எதுவும்

இதுவரை கிடைக்கக் கூடியதாயில்லே. எனினும் இன்றைய சனத்தொகையில் அரைவாசிப்பேர் 1948 க்குப் பின் பிறந்தவர்களென்பது ஓரளவுக்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட புள்ளி விபரமாகும். 1970ல் மேற்கொள்ளப்பட்ட குடிசன மதிப்பீட்டின்படி சனத்தொகையில் 39% மானவர்கள் 14 வயதுக்கும் 35 வயதுக்குமிடைப்பட்டவர்களென மதிப்பிடப்பட்டுள்ளது. இன்று நாட்டின் பூதாகாரமாக உருவெடுத்திருக்கும் வேலேயில்தாத் திண்டாட்டத்தால் வெகுவாகப் பாதித்திருக்கும் ஒரு சமூகப் பிரிவினர் இவ்விளைஞர்களே ஆவர்.

## 5. வேலையில்லாப் பிரச்சினையும் அதன் விளைவுகளும்

**5 : 1** குடியேற்றத் திட்டங்களில் இளைஞர்களின் பங்கை ஆராய்வதற்கு முன்னர் வேலையில்லாத் திண்டாட்டத்தையும் அதனை நீக்குமுகமாக வேலை வாய்ப்புக்களை அதிகரித்தல் பற்றியும் ஆராய வேண்டியது அவசியமாகின்றது. அதனை ஆராயும்போதுதான் குடியேற்றத் திட்டங்கள் எந்தவகையில் இந்தத் தீர்வுக்கு உதவி இருக்கின்றன; உதவ முடியும் என்பதை அறிந்து கொள்ளக் கூடியதாயிருக்கும்.

**5 : 2** வேலையில்லாப் பிரச்சினை என்ற பதம் பொதுவாக எல்லோருக்கும் தெரிந்த ஒரு பதமாகும். வளர்முக நாடுகளை மட்டுமன்றி வளர்ச்சியடைந்த நாடுகளையும் இது வெகுவாகப் பாதித்து வருகின்றது. நாடுகளில் இரத்தப் புரட்சி தோன்றுவதற்கும் இப்பிரச்சினை அடிப்படைக் காரணமாயமைந்துள்ளது. இப்பதம் பொதுவாக வேலை செய்ய ஆற்றலிருந்தும் அவ்வேலையைப் பெற்றுக்கொள்ளக் கூடிய வாய்ப்புக்களில்லாத ஒரு நிலைமையையே குறிக்கின்றதெனலாம். 1971 ல் மேற்கொள்ளப்பட்ட ஒரு கணிப்பின்படி அவ்வாண்டில் இலங்கையில் 5,500,00 பேர் வேலையில்லாதோர் பட்டியலில் உள்ளடங்குவர் எனக் கணிக்கப்பட்டுள்ளது. அத்துடன் ஆண்டொன்றுக்கு இத்தொகை 3% வீதத்தால் அதிகரித்து வருகிறதென்றும் கணிக்கப்பட்டுள்ளது. அதாவது சனத்தொகையில் 3% புதிதாக வேலையில்லாதோர் பட்டியலில் வந்து சேருவர் என்பதே இதன் கருத்தாகும். இதன்படி 1979ம் ஆண்டில் வேலையில்லாதோர் தொகை ஏறத்தாழ 10 லட்சத்துக்கு அதிகமான ஒரு தொகையை எட்டி விடும். இதன் விளைவுகள் மிகவும் பாரதூரமானவை. இந்தப் 10 லட்சம் பேரும் வேலை செய்துகொண்டிருக்கும் ஏனையோருக்கு ஒரு பாரமாக அமைகின்றனர். இவர்களில் பெரும்பாலானோர் இளைஞர்கள். தமது குடும்பத்தை அண்டி வாழ்பவர்கள். எந்த விதமான வருமானத்தையும் அளிக்காமல் தமது குடும்ப வரவு செலவுத் திட்டத்தையே பாதித்து அதன் மூலம் அவர்களது வாழ்க்கைத் தரம் வீழ்ச்சியடைவதற்கு இவர்கள் காரணமாக அமைகின்றனர். அதுமட்டுமின்றி வேலை செய்யாது இருப்பதினால் சமூக ரீதியில் எந்த நேரமும் வெடிக்கக் கூடிய ஒரு ''வெடி மருந்துக் கிடங்குக்கு''ச் சமானமாகக் காணப்படுகின்றனர்.

**5 : 3** இவ்வாறு வேலையில்லாப் பிரச்சினை பற்றிக் கூறும்போது போதிய வேலை வாய்ப்பின்மையால் அவதியுறுகின்றவர்களையும் இங்கு கவனிக்கவேண்டும். ஆங்கிலத்தில் இதனை Unemployment என்று கூறுவார்கள். உதாரணமாக நெற்பயிர்ச் செய்கையை எடுத்துக்கொண்டால் இது ஒரு பருவப் பயிராகும். எனவே இத்துறையில் கிடைக்கின்ற வேலை வாய்ப்பும் பருவகால வேலை வாய்ப்பாகவே அமைகின்றது. பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்படும் காலங்களில் போதிய வேலை வாய்ப்புக்கள் தொழிலாளர்க்குக் கிடைக்கும். ஆனால் பயிர்

வெட்டி நிலம் தரிசாகக் கிடக்கும் காலங்களில் அத் தொழிலாளர் வேலை வாய்ப் பின்றி அவதியுறுவர்.

5 : 4 இதுபோல வேலை வாய்ப்புக்கள் கிடைக்கக் கூடிய சில துறைகளை நாடிச் செல்லாத மனப்பான்மையையும் இங்கு குறிப்பிட வேண்டும். இன்று படித்த வாலிபர்க்கிடையே ''வெள்ளை வேட்டி'' உத்தியோகங்களுக்கே ''மவுசு'' இருப்பதை யாவரும் அறிவர். குடியேற்ற அரசாங்கம் மேற்கொண்ட தவறான கல்வி முறையால் ''வெள்ளை வேட்டி'' உத்தியோகங்களை நாடும் தவறான மனப் பான்மை, படித்த இளைஞர்களிடையே தோன்றியது. குடியேற்ற ஆட்சி நீங்கிய பின்பும் இந்த மனப்பான்மை நீங்கவில்லை. இதனால் உடலுழைப்பை மையமாகக் கொண்ட எத்தொழிலையும் செய்யப் பெரும்பாலான படித்த வாலிபர்கள் தயங்கு கின்றனர். உதாரணமாகக் கட்டிடவேலையை இங்கு குறிப்பிடலாம். இன்று எமது நாட்டில் கட்டிடத் தொழிலாளர்க்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. ஆனால் படித்த இளைஞர்களோ இத்தொழிலில் ஈடுபடத் தயங்குகின்றனர்; தமது தகுதிக்குக் கீழானதென்று துச்சமாக நினைக்கின்றனர். இதனால் வேலை வாய்ப் பிருந்தும் அதனை உபயோகிக்க மறுக்கும் ஓர் துர்ப்பாக்கிய நிலை தோன்றியுள்ள தோடு வேலையில்லாப் பிரச்சினையின் தீவிரத்தையும் இது அதிகரித்துள்ளது. இவர் களின் எதிர்பார்ப்பு முழுவதும் வெள்ளை வேட்டி உத்தியோகங்களையே நாடுவ தாயுள்ளது. ஆனால் வெள்ளை வேட்டி உத்தியோகங்களோ நாட்டின் உற்பத்தித் துறையின் அதிகரிப்பில்தான் தங்கியுள்ளன. உற்பத்தித் துறையோ மிக மந்த மாகவே முன்னேறி வருகின்றது. இது குறைவான வெள்ளை வேட்டி உத்தியோ கங்கள் உருவாகும் ஒரு நிலமையையே தோற்றுவிக்கிறது. இதனால் வெள்ளை வேட்டி உத்தியோகங்களுக்கு கிராக்கியும், ''கழுத்தறுப்புப்'' போட்டியும் ஏற் படுகின்றன. கடைசியில் போட்டியில் வெற்றி பெறாதவர்கள் வேலையில்லாதோர் பட்டியலில் சேரும் ஒரு ''மாயச் சுழற்சி'' (Vicious Circles) இயக்கத்துக்கு வரு கின்றார்கள்.

5 : 5 இது போலவே சமூகத் தடைகள் அல்லது கட்டுப்பாடுகளும் (Social Taboos) வேலையில்லாப் பிரச்சினையைத் தீவிரமடையச் செய்கின்றன. இலங் கையில் கள்ளிறக்குதல், முடிவெட்டுதல் போன்ற துறைகளில் ஏராளமான வேலை வாய்ப்பு வசதிகள் இருக்கின்றன. எனினும் இத்தொழிலில் ஈடுபடுவதைச் சமூ கக் கட்டுப்பாடுகள் தடுக்கின்றன. இத்தொழில்கள் ஒரு குறிப்பிட்ட சாதிக்குரிய னவாகக் கருதப்படுவதால் அச்சாதிக்குப் புறம்பானவர்கள் அதனைச் செய்தால் அவர்கள் சமூகத்தால் ஒதுக்கப்படும் ஒரு நிலை காணப்படுகிறது. எனவே இத் தொழில்களை எல்லோரும் நாடுவதில்லை. கள்ளிறக்கும் தொழிலில் தொழிலாளர் தட்டுப்பாடு இருப்பதையும் இந்தியாவில் இருந்து தொழிலாளர்களை இங்கு வரு விப்பதையும் இங்கு குறிப்பிடலாம்.

5 : 6 உண்மையில் வேலைவாய்ப்பின்மை, வேலை இருந்தும் தொடர்ச்சியான வேலையில்லாமை, வெள்ளை வேட்டி உத்தியோகங்களை நாடும் தவறான மனோ பாவம், சமூகக் கட்டுப்பாடுகளினால் ஏற்கத் தயங்குவதினால் தோன்றும் வேலை வாய்ப்பின்மை ஆகியவையே அவ் வேலையில்லாப் பிரச்சினை என்பதில் கவனிக்கப் படத்தக்க அம்சங்களாகும்.

## 6. வேலையில்லாப் பிரச்சினைக்குத் தீர்வு: இரு வேறு சிந்தனைகள்

6 : 1 இப்பிரச்சினை அண்மைக்காலமாக அரசியல்வாதிகள் பொருளியல்

விற்பன்னர்கள் சமூகவியலாளர்கள், பரிபாலகர்கள் ஆகிய பலரது கவனத்தையும் தொடர்ந்து ஈர்த்து வருகிறது. பதவிக்கு வரும் அரசாங்கங்கள் யாவும் இப்பிரச்சினைக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளன என்பதையும் நாம் அறிவோம். வேலையில்லாப் பிரச்சினையைத் தீர்க்கச் சுலபமான வழி விவசாயத்தை அபிவிருத்தி செய்வதேயாகும் எனச் சிலரும் தொழிற் துறையை அபிவிருத்தி செய்வதே சிறந்ததெனச் சிலரும் தத்தம் கருத்துக்களை வலியுறுத்தி வருகின்றனர்.

6 : 2 இலங்கையின் விவசாயத்தை அபிவிருத்தி செய்வதே இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஒரே வழி என்று வாதிடுபவர்கள் பின்வரும் காரணங்களைத் தமக்குச் சாதகமாகக் கூறி வருகின்றனர். இலங்கை அன்று தொட்டு இன்று வரை ஒரு விவசாய நாடாகவே இருந்து வந்திருக்கிறது; தொடர்ந்தும் அவ்வாறே இருந்து வரும். மிகப் பண்டைய காலத்தில் இலங்கையின் அரசர்கள் இதனை உணர்ந்தே பாரிய குளங்களை அமைத்து நீர்ப்பாசன வசதிகளை அமைத்துக் கொடுத்தனர். இலங்கையின் சமூகங்களும் இத்தகைய குளங்களைச் சுற்றி உருவாகிய சமூகங்களாகவே விளங்கின. ஒரு காலத்தில் எமது நாட்டிலிருந்து பிற நாடுகளுக்கு அரிசி ஏற்றுமதியாகியது. அதனாலேயே இலங்கை ''ஆசியாவின் நெற்களஞ்சியம்'' என அழைக்கப்பட்டது எனப் பழம் பெருமை கூறி தற்போதைய நிலையையும் எடுத்துக் காட்டி இலங்கை ஒரு விவசாய நாடுதான்; விவசாயத்திலேதான் அதற்கு மீட்சி உண்டு என்று கூறுகின்றனர். அவர்களது கூற்றுப்படி இன்றும் இலங்கை தனது ஏற்றுமதி வருமானத்திற்காக தேயிலை, இறப்பர், தென்னை ஆகிய விவசாயப் பொருட்களிலேயே தங்கியுள்ளது. நாட்டினது மொத்த உற்பத்தியில் 35 வீதமானது விவசாயத் துறையிலிருந்தே கிடைக்கின்றது. தொழிற் துறை 13 வீதத்தையே வழங்குகிறது. அதுமட்டுமன்றி வேலை செய்வோரில் 50 வீதமானோர் விவசாயத்துறையிலேயே வேலை செய்கின்றனர். 10 வீதம் மட்டுமே தொழிற் துறையில் ஈடுபட்டுள்ளனர். ஆகவே எமது நாட்டின் மீட்சி விவசாயத் துறையிலேயே தங்கியுள்ளது என இவர்கள் வாதிடுகின்றனர். இன்றும் உலர் வலயக் காணிகளில் 13 வீதமே பாவனைக்குள்ளாக்கப்பட்டிருக்கிறது. இவ் வலயத்தில் பயிர்செய்யக் கூடிய மீதி நிலங்களையும் பயிர்ச் செய்கையின் கீழ் கொண்டு வருவதன் மூலம் உற்பத்தியைப் பெருக்குவது மட்டுமின்றி வேலையில்லாப் பிரச்சினையையும் தீர்க்க முடியும் என்று இவர்கள் கருதுகின்றனர். பல பொருளியல் விற்பன்னர்கள் இக்கருத்தை ஆதரித்திருக்கின்றனர் இதனை மையமாகக் கொண்டே ''பசுமைப் புரட்சி'', ''உற்பத்திப் போராட்டம்'' என்ற பல இயக்கங்களை ஆட்சிக்கு வந்த பல அரசாங்கங்கள் மேற்கொண்டதை இங்கு நாம் நினைவு கூறலாம்.

6 : 3 ஆனால் இதற்கு மாறான கருத்துடையவர்களின் கருத்துக்களையும் இங்கு ஆராய்வதும் பொருந்தும் என நினைக்கின்றேன். இவர்கள் இலங்கையின் பொருளாதாரப் பிரச்சினைக்குத் தீர்வு தரக் கூடியது தொழிற்துறை அபிவிருத்தியே என்று கூறுகின்றனர். இவர்களது கூற்றுப்படி எமது தேவை உணவுடன் மட்டுப்படுத்தப்பட்டது அன்று. நாளாந்தப் பாவனைக்குப் பல உற்பத்திப் பொருட்கள் தேவைப்படுகின்றன. இவற்றை நாம் பிறநாடுகளிலிருந்தே இறக்குமதி செய்கின்றோம். இதனால் பாரிய அளவில் அந்நிய செலாவணியை இழக்கின்றோம். இவற்றை இங்கே உற்பத்தி செய்வதன் மூலம் பல நன்மைகளை நாம் அடைவோம்; பிற நாடுகளின் சுரண்டலிலிருந்து விடுபடுவோம்; ஏனெனில் வளர்ச்சியடைந்த நாடுகள் எமது விவசாயப் பொருள்களுக்கு வருடா வருடம் குறைந்த விலையைத் தந்து உற்பத்திப் பொருள்களுக்குத் தாம் நினைத்த விலையையே குறித்து வந்தி

ருக்கின்றனர். இவ்வாறுன சுரண்டலிலிருந்து எம்மைப் பாதுகாக்க ஒரே ஒரு வழி அப்பொருள்களை இங்கு உற்பத்தி செய்வதேயாகும் என இவர்கள் கூறுவர்.

6 : 4 ஆனல் இருவரது வாதங்களையும் சீர்தூக்கிப் பார்த்த பலர் தொழிற் துறை அபிவிருத்தி அவசியமானதொன்றேயாயினும் அவ்வபிவிருத்திக்குப் பல கட்டுப்பாடுகள் இருக்கின்றதைக் கவனத்துக்கெடுத்துக் கொண்ட பின் தொழிற் துறை அபிவிருத்தியும் அவசியம்தான், எனினும் அது நீண்டகால நோக்காகவே இருக்க முடியும்; ஆனல் பிரச்சினைக்கு உடனடித் தீர்வை குறுகிய காலத்தில் வழங்கக் கூடியது, போதிய வேலை வாய்ப்புக்களைக் குறுகிய காலத்தில் ஏற்படுத்தித் தரக் கூடியது விவசாயத் துறையே என்ற முடிவுக்கு வந்துள்ளனர். முன்னையர்கள் கூறியது போல தொழிற் துறை அபிவிருத்தியடைய பல இடர்ப்பாடுகள் உள்ளன.

6 : 5 தொழிற் துறை விருத்தியடைய வேண்டுமாயின் பெருந்தொகையான அந்நியச் செலாவணி தேவைப்படும். இயந்திரங்கள் முதலானவற்றை அந்நிய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்ய வேண்டியது அவசியமாகையால் இதற்குப் பெருந்தொகையான அந்நியச் செலாவணி தேவைப்படும். ஆனல் எமது நாட்டின் அபிவிருத்திக்கு என்றும் தடையாக விளங்குவது அந்நியச் செலாவணிப் பற்றுக் குறையேயாகும். விவசாயப் பொருட்களை ஏற்றுமதி செய்தே இவ் அந்நியச் செலாவணியை நமது நாடு பெற்றுக் கொள்கிறது. ஆனல் உலகச் சந்தையில் இவற்றுக்குக் கிடைக்கும் விலைகள் வருடத்திற்கு வருடம் வீழ்ச்சியடைந்து கொண்டே வருகின்றன, ஒரு சமயம் எமக்கு நான்கு நாட்களுக்குத் தேவையான உணவுப் பொருட்களை இறக்குமதி செய்வதற்குக் கூட அன்னியச் செலாவணி யின்றி நமது நாடு கஸ்டப்பட்டது பலருக்கு நினைவிருக்கலாம். பிறநாடுகளின் பொருளாதார உதவிகள் எந்த நாளும் கிடைத்துக் கொண்டிருக்கும் என்று நம்பவும் முடியாது. இப்படிப்பட்ட ஒரு தர்மசங்கடமான நிலையில் தொழிற் துறையைத் தீவிரமாக வளர்ச்சியடையச் செய்வது இயலாத கருமமாகும்.

6 : 6 அதுமட்டுமன்றி பாரிய தொழிற்சாலைகளை இங்கு நிறுவுவதற்குப் பல தடைகள் இயங்கி வருகின்றன. எமது நாட்டில் உற்பத்திப் பொருள்களுக்குரிய சந்தை மிகச் சிறியதாக இருக்கின்றது. எனவே பாரிய தொழிற்சாலைகளை உருவாக்க முடியாது. அவ்வாறு உருவாக்குவதாயின் வெளிநாடுகளின் சந்தைகளைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்க வேண்டும். ஆனல் வளர்ச்சியடைந்துள்ள நாடுகளின் உற்பத்திப் பொருட்களோடு போட்டியிட்டுச் சந்தைகளைக் கைப்பற்றுவதாயின் உற்பத்திப் பொருள்களின் தரம் உயர்ந்ததாக இருக்கவேண்டும். ஆரம்ப நிலையில் இத்தகைய உயர் தரத்தை எதிர்பார்ப்பது மிகக் கடினமானதாகும். சுருங்கச் சொல்லப்போனல் அண்டை நாடான வளர்முக இந்தியாவின் உற்பத்திப் பொருள்களோடு கூடப் போட்டியிட முடியாத நிலையில் நாம் இருக்கின்றோம். ஆகையால் வளர்ச்சியடைந்த நாடுகளின் உற்பத்திப் பொருள்களோடு போட்டியிட்டு உலகச் சந்தையைக் கைப்பற்றுவதென்பது இயலாத கருமமாகும். எனவே உள்நாட்டுச் சந்தையை மாத்திரம் நம்பிப் பாரிய தொழிற்சாலைகளை ஆரம்பிக்க முடியாது. அவ்வாறு ஆரம்பித்தால் இயந்திரங்கள் தமது இயல் நிலையிலும் பார்க்கக் குறைந்த நிலையிலேயே இயங்கும் நிலைமை ஏற்பட இடமுண்டு. இதனுல் பரும்படி உற்பத்தியின்போது கிடைக்கும் பாரிய சிக்கனங்கள் கிடைக்க வழியில்லாமல் போகும். இதன் காரணமாக உள்நாட்டில் பொருள்களின் விலை அதிகரிக்கும். உள்நாட்டு உற்பத்திப் பொருட்களின் விலைகள் இறக்குமதி செய்யு

திலும் பாக்கக் கூடிய விலேயாயின் உள்நாட்டுச் சந்தையிலும் அதனை விற்க முடியாத நிலை தோன்றும். இதனுல் உற்பத்தி மேலும் குறைந்து பாரிய நட்டமடைய நேரிடும். இலங்கையில் அமைக்கப்பட்ட பல தொழிற்சாலைகள் இத்தகைய இடர்ப்பாடுகளை இன்று எதிர்நோக்கிக் கொண்டிருப்பதை இங்கு சுட்டிக் காட்டலாம்.

**6 : 7** மேலே கூறிய காரணங்களால் தொழிற் துறையை விருத்திசெய்வதென்பது நாட்டின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்யும் ஒரு நீண்டகால நோக்காகவே அமைய முடியுமேயல்லாது உடனடிப் பிரச்சினையான வேலையில்லாத் திண்டாட்டத்தை நீக்குவதற்கு அது ஒரு தீர்வாகமாட்டாது. இத்தீர்வை விவசாயத் துறையே வழங்கக் கூடியது என இவ்வாதத்தை முன்வைப்போர் கூறுகின்றனர்.

## 7. செறிந்தமுறை விவசாயமும் பரந்த விவசாயமும்! இரு வேறு கருத்துக்கள்.

**7 : 1** எனவே விவசாயத்தை விஸ்தரிக்க வேண்டியது அவசியமாகின்றது. இதனை மனதில் கொண்டே பல குடியேற்றத் திட்டங்கள் முன்னர் ஆரம்பிக்கப்பட்டன; தற்போதும் ஆரம்பிக்கப்படவுள்ளன. ஆனுல் விவசாயத் துறையின் அபிவிருத்தி வேலை வாய்ப்புகளை அதிகரிக்கும் என்பது உண்மையேயாயினும் இதனை எவ்வாறு செய்வதென்பதில் நிபுணர்க்கிடைவே அபிப்பிராய பேதம் காணப்படுகிறது. செறிந்த பயிர்ச் செய்கை முறை மூலம் விவசாயத் துறையை அபிவிருத்தி செய்வது இலகுவானதும், செலவு குறைந்ததும் விரைவாகச் செயல்படக் கூடியதுமாகும். எனவே ஏற்கனவே பயிர்ச் செய்யப்படுகின்ற காணிகளில் புதிய விஞ்ஞான வழி முறைகளைப் பிரயோகித்து அதிக விளைவைப் பெற்றுக் கொள்ள முயல வேண்டும் என இவர்கள் கருத்துக் கொண்டுள்ளனர். செறிந்த பயிர்ச் செய்கை முறையென்பது பயிரிடும் காணிகளின் விஸ்தீரணத்தை அதிகரிக்காது காணிகளின் விளை திறனை அதிகரிப்பதைக் குறிக்கும். உரிய காலத்தில் நிலத்தைப் பண்படுத்தல், உரிய காலத்தில் விதைத்தல், உரிய காலத்தில் உரமிடுதல், உரிய காலத்தில் களை பிடுங்குதல், கிருமி நாசினி தெளித்தல், வீரிய விதைகளைப் பயிரிடுதல் போன்ற நவீன வழி முறைகளை அனுசரிப்பதன் மூலம் காணிகளின் விளை திறனை அதிகரிக்கலாம். இதுவே எமது நாட்டின் இயல்புக்குப் பொருத்தமான முயற்சியாகுமென்று இவர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். தங்களது கருத்துக்கு ஆதாரமாக புதிய நிலங்களைக் குடியேற்றத் திட்டங்களுக்காகப் பயிர்ச் செய்கையின் கீழ் கொண்டு வந்தபோது ஏற்பட்ட தவறுகளைச் சுட்டிக் காட்டுகின்றனர். இந்நிலங்களைப் பயிர்ச் செய்கைக்குக் கொண்டு வருவதற்காக குடியேற்ற வாசிகள் அந்நிலங்களில் குடியமர்த்தப்பட்ட போது அவர்களைக் குடியமர்த்துவதற்காக ஏராளமான பணம் செலவிடப்பட்டது. ஒரு குடியானவனுக்கு ரூபாய் 12,000 வீதம் செலவிடப்பட்டுள்ளதாகக் கணிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு செலவிடப்பட்டுள்ளது 3 ஏக்கர் காணியை மட்டுமே பயிர்ச் செய்கையின் கீழ் கொண்டு வருவதற்காகும். அவ்வாறு செலவிடப்பட்டும் கூட அதனுல் எதிர்பார்த்த பலன் கிட்டவில்லை. மிகக் குறைந்த நெல் உற்பத்தியே இந்நிலங்களில் கிடைத்தன. இன்று 40 வருடங்களுக்கு மேலாகியும் சில குடியேற்ற வாசிகள் தமது சீவியத்துக்குத் தேவையான வருமானத்தைக் கூடப் பெற முடியாத நிலையிலிருக்கின்றனர். எனவே இத்தகைய பாரிய செலவினைச் செய்து மிக நீண்ட

காலத்துக்குப் பின்னர் உரிய பயனை அடைவதிலும் பார்க்க மிகக் குறைந்த செலவினத்தைச் செய்து விரைவில் விளை திறனை அதிகரிப்பது சாலச் சிறந்ததாகும் என இவர்கள் கருதுகின்றனர். இலங்கையில் அபிவிருத்தித் திட்டங்களை ஆராய்ந்த பல நிபுணர்கள் இத்தகைய கருத்தையே தெரிவித்திருப்பதோடு செறிந்த பயிர்ச் செய்கை முறையையே சிபாரிசும் செய்திருக்கின்றனர்.

7 : 2 ஆனால் இக்கருத்தை உள்ளூர் பொருளியல் நிபுணர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. புதிய நிலங்களைப் பயிர்ச் செய்கையின் கீழ் கொண்டு வரும் முயற்சி செலவு கூடிய முயற்சிதான் என்பதனை இவர்கள் மறுக்கவில்லை. இது போலவே இம்முயற்சி குறுங்காலத்தில் திடீரென உற்பத்தியை அதிகரிக்க முடியாதென்பதையும் இவர்கள் மறுக்கவில்லை. ஆனால் இத்தகைய முயற்சி வேலை வாய்ப்புக்களை உடனடியாக அதிகரிக்கும். இதனால் பல சமூகப் பிரச்சினைகள் தவிர்க்கப்படும். எல்லாவற்றுக்கும் மேலாக இவ்வளவு பெருந்தொகையான பயிர்ச் செய்கைக்குப் பொருத்தமான காணிகளை வெகு சில நாடுகளே பெற்றிருக்கின்றன. இத்தகைய நாடுகளில் இலங்கையும் ஒன்றாகும். எனவே இந்த வரப்பிரசாதத்தை உரிய வகையில் உபயோகித்து வேலையில்லாப் பிரச்சினையைத் தீர்ப்பது அவசியமானதாகும் என இவர்கள் கருதுகின்றனர். இதற்குச் சான்றாக இவர்கள் இலங்கையின் பயிர்ச் செய்கைக்குரிய காணிகளின் விபரங்களைச் சுட்டிக்காட்டுகின்றனர். B. H. பார்மர் என்பவர் தனது ''இலங்கையில் குடியேற்றத் திட்டங்கள்'' என்ற நூலில் இலங்கையில் உலர் வலயத்தில் 600,000 ஏக்கர் காணிகள் பயிர்ச் செய்கைக்குரிய காணிகளாகக் காணப்படுகின்றன என்று கூறுகிறார். உலக வங்கி நியமித்த குழுவொன்று இத்தொகை 12 லட்சமாகுமெனக் கூற 10 ஆண்டுத் திட்டக் குழு நியமித்த ஒரு குழு முழு இலங்கையிலும் பயிரிடப்படக் கூடிய காணிகளின் விஸ்தீரணம் 160 லட்சம் ஏக்கராகுமென்றும் இவற்றில் 30 லட்சம் ஈர வலயத்தில் காணப்படுகின்றதென்றும் மீதியான 130 லட்சம் ஏக்கர் காணிகளில் 40 லட்சம் ஏக்கர் காணிகள் பயிர்ச் செய்கைக்கு உதவாதவையென்றும் மீதியான 90 லட்சம் காணிகள் பயிர்ச் செய்கையின் கீழ் கொண்டு வரப்படக் கூடியவையென்றும் மதிப்பிட்டுள்ளது. எனவே இவ்வளவு பெருந்தொகையான காணிகளை வைத்துக்கொண்டு அவற்றைப் பயிர்ச் செய்கையின் கீழ் கொண்டு வருவது செலவான முயற்சியென வாளாவிருத்தல் உண்மையில் நாட்டுக்கு இழப்பாகுமென்று இவர்கள் கூறுவர். இந்த செலவினைப் பொருட்படுத்தாது அது தோற்றுவிக்கும் வேலை வாய்ப்பையும் தவிர்க்க உதவும் சமூகப் பிரச்சினைகளையும் மனதில் கொண்டே இதனைத் தீர்மானிக்க வேண்டுமென இவர்கள் கூறுகின்றனர்.

7 : 3 அதுமட்டுமன்றி செறிவான பயிர்ச் செய்கை முறையே மேலானதெனக் கூறுவோர் ஒன்றை மனதில் கொள்வதில்லை. அவர்களது கூற்றுப்படி அம் முயற்சி செலவு குறைந்ததும், குறுகிய காலத்தில் பயன் தருவதாயிருப்பினும் அதனால் ஏற்படும் பலன் உண்மையில் ஏற்கனவே கமத்தொழிலில் ஈடுபட்டோரைச் சென்றடையுமே தவிரப் புதியவர்களுக்கு அது எவ்வித பிரயோசனத்தையும் அளிக்கமாட்டாது. செறிந்த பயிர்ச் செய்கை ஏற்கனவே கமத்தொழிலில் ஈடுபட்டுள்ளோரது வருமானத்தை அதிகரிக்கும். அதன் மூலம் அவர்களது வாழ்க்கைத் தரத்தை அதிகரிக்கும். ஆனால் எதுவிதத்திலும் அது புதியவர்களுக்கு வருமானத்தையோ தொழில் வாய்ப்பையோ அளிக்கமாட்டாது.

7 : 4 மேலும் புதிய காணிகளைப் பயிர்ச் செய்கையின் கீழ் கொண்டு வரும் முயற்சி விவசாய உற்பத்தியை அதிகரிப்பது மட்டுமன்றி வேறு பல பக்க விளைவு

களையும் ஏற்படுத்தும். இதன் காரணமாக வேலை வாய்ப்புக்கள் பெருகும். இத்தகைய புதிய காணிகளில் குடியேற்றத் திட்டங்களை அமைக்கும் போது நீர்ப்பாசன வேலைத் திட்டங்கள் பலஅமைக்கப்படும். இதே போலவே காடுகளை அழித்து காணி அபிவிருத்தி மேற்கொள்ளப்படும். இதன் காரணமாகப் பலருக்கு இம் முயற்சிகளில் வேலை வாய்ப்புக்கள் கிட்டும். அது மட்டுமன்றிக் குடியேற்ற வாசிகளின் வசதிக்காக மேற்கொள்ளப்படுகின்ற ஆதார வசதிகள், பாதையமைத்தல், வீடு கட்டுதல் போன்ற துறைகளிலும் வேலை வாய்ப்பு வசதிகள் பெருகும். இத்துடன் சிறு கடைகள் போன்ற வியாபார வாய்ப்புக்கள் தோன்றும். இத்துறைகளிலெல்லாம் பெருந் தொகையான வேலை வாய்ப்பு வசதிகள் தோன்றக் கூடிய வாய்ப்புண்டு.

7 : 5 எல்லாவற்றுக்கும் மேலாக இம் முயற்சி விவசாயத் துறையைப் பல்விதப்படுத்தும் ஒரு தன்மையையும் தோற்றுவிக்கும். புதிய காணிகளைப் பெற்றவர்களது பயிர்ச் செய்கை முயற்சியினுல் அவர்களது வருமானம் பெருகும். இவ்வாறு பெருகும்போது நாட்டின் நுகர்வு அமைப்பும் மாறத் தொடங்கும். தற்போது அடிப்படையான உணவுகளையே பெற்றுக் கொள்ள வருமானமில்லாது தவிக்கும் இவர்கள் வாங்கும் சக்தியின் அதிகரிப்பால் தமது நுகர்வு முறையை மாற்றத் தொடங்குவர். பால், இறைச்சி, மரக்கறி ஆகிய புரதத் தேவைகள் அதிகரிக்கும். எனவே இத்துறைகளில் அபிவிருத்தி ஏற்படத் தொடங்கும். விவசாயத் துறை ஓரளவுக்குத்தான் வளர இடமுண்டு; சுய தேவை பூர்த்தி செய்யப்படுவதற்கு மேலாக உற்பத்தி அதிகரிக்கத் தேவையில்லை என்று கூறப்படுகிற வாதம் உண்மையில் ஒரு மாயையாகும் என்று இவர்கள் கூறுவர். சுய தேவை பூர்த்தி செய்யப்பட்டதும் அது பல்விதப்படுத்தப்படலாம் அல்லது வர்த்தக ரீதியான உற்பத்தியாக்கப்படலாம்.

7 : 6 மேலும் புதிய காணிகள் பயிர்ச் செய்கையின் கீழ் கொண்டு வரப்படுவது உண்மையில் தொழிற் துறை வளர்ச்சிக்கும் சாதகமானதாக அமையும். விவசாயம் அபிவிருத்தியடைய பிறநாடுகளிலிருந்து உணவுப் பொருட்களை இறக்குமதி செய்ய வேண்டிய நிலை நீங்கும். இதனுல் அன்னியச் செலாவணி மீதமடையும். இவற்றைத் தொழில்களை ஆரம்பிப்பதற்கு மூலதனமாக உபயோகிக்கலாம். அதுமட்டுமன்றி விவசாயம் சார்ந்த பல தொழில்களை ஆரம்பிக்கக் கூடிய வாய்ப்புத் தோன்றும். உதாரணமாக வைக்கோலிலிருந்து கடதாசி அட்டை தயாரித்தல் போன்ற தொழில்களை இங்கு குறிப்பிடலாம். சோயா, சீனி, பழவகைகள் ஆகியவற்றைப் பதம்படுத்தும், தகரத்தில் அடைக்கும் தொழில்களும் பெருவாரியாகப் பெருகக் கூடிய வாய்ப்புண்டு. இவற்றுல் தொழிற்துறை வளர்ச்சியடைவது மட்டுமன்றி வேலை வாய்ப்புக்களும் பெருகத் தொடங்கும்.

7 : 7 எனவே இத்தகைய காரணங்களால் புதிய காணிகளைப் பயிர்ச் செய்கையின் கீழ் கொண்டு வருவது அவசியமேயாகும் என இவர்கள் அறுதியிட்டுக் கூறுகின்றனர். இக்காரணங்கள் உறுதியானவை என்ற அசைக்க முடியாத நம்பிக்கையினுல்தான் அரசாங்கங்கள் முன்னர் குடியேற்றத் திட்டங்களை அமைத்தன. இன்றும் அமைக்க முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன. இத்தகைய நம்பிக்கையின் புதிய பரிணுமமாகத் தோன்றியவையே ''இளைஞர் குடியேற்றத் திட்டங்களாகும்''.

## 8. இளைஞர் குடியேற்றத் திட்டங்கள்

8 : 1 இலங்கையில் இளைஞர் குடியேற்றத் திட்டங்கள் 1965ம் ஆண்டுக்குப் பின்னரே ஆரம்பிக்கப்பட்டன. அப்போது நாட்டில் அன்னியச் செலாவணிப் பற்றுக் குறை மிக மோசமாக ஏற்பட்டிருந்தது. எங்களுக்குத் தேவையான உணவுப் பொருள்களைக் கூட இறக்குமதி செய்ய முடியாத ஓர் இக்கட்டான நிலை தோன்றியது. இதன் காரணமாக அன்னியச் செலாவணியைச் சேமிக்க வேண்டி இங்கு உற்பத்தி செய்யக் கூடிய பல உணவுப் பொருள்களின் இறக்குமதி பூரணமாகத் தடை செய்யப்பட்டது. இக்காலத்தில்தான் ''பசுமைப் புரட்சியினை'' தோற்றுவிக்க அரசாங்கம் முழுமூச்சாக இயங்கத் தொடங்கியது. இத்தகைய ஒரு சூழ்நிலையில்தான் ''இளைஞர் குடியேற்றத் திட்டம்'' என்னும் ஒரு எண்ணம் கருக் கொண்டது எனலாம்.

8 : 2 இக்கால கட்டத்தில் வேலையில்லாப் பிரச்சினை இளைஞரிடையே உக்கிரமடைந்திருந்தது. இளைஞர்களில் பலர் வெள்ளை வேட்டி உத்தியோகங்களை நாடி அலைந்தனர். அவ்வாறு அவர்கள் திரிந்ததற்கும் அடிப்படைக் காரணமொன்று இருந்தது. அரசாங்க உத்தியோகமென்பது ஒரு ஸ்திரமான வருவாயை மாதா மாதம் வழங்கக் கூடிய நிலையிலிருந்தது. அது மட்டுமன்றி வயதான காலத்தில் ''பென்ஷன்'' தரும் தொழிலாகவும் அது விளங்கியது. அதே சமயத்தில் விவசாயம் பருவ காலத்தை நம்பிச் செய்யப்படும் தொழிலாக விளங்கியது. பருவம் பொய்த்தால் வருமானமே அற்றுப் போகும் ஸ்திரமற்ற தொழிலாகவும் காணப்பட்டது. அதுமட்டுமின்றி விவசாயத்தில் கிடைக்கும் வருமானம் உத்தியோக வருமானத்தோடு ஒப்பிடும் போது உயர்ந்ததாக இருக்காததினால் இளைஞர்களை ஈர்க்கும் சக்தியை அது பெற்றிருக்கவில்லை.

8 : 3 எனவே அரசாங்க உத்தியோகங்களிலும் பார்க்கக் கூடுதலான வருமானத்தை அளிக்கும் வகையிலும், நாட்டுக்குத் தேவையான உணவு உற்பத்தியை அதிகரிக்கும் வகையிலும் வேலை வாய்ப்பை அதிகரிக்கும் வகையிலும் இளைஞர் குடியேற்றத் திட்டங்கள் உருவாக்கப்பட்டன.

8 : 4 இவற்றுக்குத் தெரிவு செய்யப்பட்ட இளைஞர்கள் ஜீ. சீ. ஈ. (சாதாரண) கல்வியறிவுடையவர்களாகவும் 18 க்கும் 30 வயதுக்குமிடைப்பட்டவர்களாகவும் காணியற்றவர்களாகவும், விவசாயத்தை தனது தொழிலாகக் கொள்ளக் கூடிய மனோபாவம் உடையவர்களாகவும் இருக்க வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. இளைஞர்கள் புதிய நவீன முறைகளை இலகுவில் ஏற்று நடைமுறைப்படுத்தக் கூடிய மனோபாவம் உடையவர்களாக இருப்பார்களாதலால் உற்பத்தி அதனால் அதிகரித்து வருமானமும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்பட்டது.

8 : 5 இதற்கு அமைவாக 1965 முதல் இன்று வரை 51 இளைஞர் குடியேற்றத் திட்டங்கள் இலங்கை முழுவதும் அமைக்கப்பட்டுள்ளன. இவையெல்லாவற்றிலுமாக கிட்டத்தட்ட ஏழாயிரம் இளைஞர்கள் குடியமர்த்தப்பட்டுள்ளனர். உப உணவுப் பொருள்களான மிளகாய், வெங்காயம், தேயிலை, கறுவா, தென்னை, பழவகைகள் ஆகியன இவ்விளைஞர் குடியேற்றத் திட்டங்களில் பயிரிடப்பட்டு வருகின்றன, இவை அடைந்த வெற்றியின் காரணமாக 1980ம் ஆண்டளவில் 5க்கு மேற்பட்ட இளைஞர் குடியேற்றத் திட்டங்களைப் புதிதாக அமைப்பதென்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**8 ; 6** இவ்விளைஞர் குடியேற்றத் திட்டங்களின் பெறுபேற்றை ஏனைய குடி யானவரது குடியேற்றத் திட்டங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது ஏனைய குடியேற்றத் திட்டங்களிலும் பார்க்க இவற்றால் கிடைத்த பயன் பெரிதளவா யுள்ளதை அவதானிக்கக் கூடியதாயுள்ளது. யாழ் மாவட்டத்தில் அமைந்துள்ள விசுவமடு வாலிபர் திட்டத்தில் அதன் அங்கத்தவர்களான இளைஞர் பலர் மாத வருமானமாக 2000/-க்கு மேற்பட்ட தொகையைப் பெற்றுள்ளதை அவதானிக் கூடியதாயிருக்கிறது. ஆகக் குறைந்த் வருமானமாக மாதமொன்றுக்கு 600/- பெறும் வாய்ப்பு இத்திட்டத்தில் அமைந்துள்ளது. இதன் காரணமாக குடியேற் றத் திட்டத்தில் காணி பெறுவதற்கு இளைஞர்களிடையே பெருத்த போட்டி நிலவுவதை அவதானிக்கக் கூடியதாயிருக்கிறது.

## 9. இளைஞர் குடியேற்றத் திட்டங்களின் குறைபாடுகள்

**9 : 1** அதே வேளையில் இக்குடியேற்றத் திட்டங்களிலும் பல குறைபாடுகள் இருப்பதை அவதானிக்கக் கூடியதாயிருக்கிறது. எதற்கும் உத்தியோகத்தர்களி லேயே தங்கி நிற்கும் மனப்பான்மை இளைஞர்களிடையே காணப்படுகிறது. இத் திட்டத்தை உருவாக்கியவர்கள் இறுதியில் இளைஞர்கள் தாமே முன்வந்து திட் டத்தை நிருவகிக்க வேண்டுமென்று எதிர்பார்த்தார்கள். ஆனால் இந்நோக்கம் கைகூடவில்லை. அடுத்ததாக கமத்தொழிலை விரும்பிய ஒரு தொழிலாக இளைஞர் கள் கருதத் தொடங்க வேண்டுமென்று திட்டங்களை வகுத்தவர்கள் எண்ணினார் கள். ஆனால் அரசாங்க உத்தியோகத்தை நாடும் மனப்பான்மை முற்றாக அகல வில்லை போலத் தோன்றுகிறது. ஏனெனில் அரசாங்க உத்தியோகத்திலும் பார்க் கக் கூடுதலான வருமானத்தைப் பெற்ற சிலர் கூட சில காலம் சென்றபின் தாம் பெறும் வருமானத்திலும் குறைந்த பஸ் கண்டக்டர் போன்ற தொழில்களை நாடிச் சென்றுள்ளதை அவதானிக்கக் கூடியதாகவிருக்கிறது. தற்போதும் அர சாங்க உத்தியோகத்திற்கு ஓர் தனி சமூக அந்தஸ்து வழங்கப்படுவதே இதற்குக் காரணமாகும். இந்நிலை மாறவேண்டுமானால் கல்வி முறை சகல தொழிலுக்கும் மதிப்பளிக்கும் ஒரு மனோபாவத்தை ஏற்படுத்தக் கூடியவாறு மாற்றமடைய வேண்டும்.

**9: 2** சில திட்டங்களில் மிளகாய்,வெங்காயம் போன்ற ஓரினப் பயிர்கள் தொட -ர்ந்து செய்யப்பட்டதனாலும் செயற்கை உரம் மிகுதியாகப் பாவிக்கப்பட்டதனாலும் விளைவு குறைந்து, பூச்சிகளின் த்ாக்கம் மிகுந்து, மண் வளம் இழந்து காணப் படுகிறது. இதனால் பயிர்ச் செய்கையைத் தொடர்ந்து செய்ய முடியுமா? என்ற கேள்வியும், ஐயமும் பலர் மனதில் தோன்றியுள்ளது. இக் குறைபாட்டை நிவர்த்தி செய்யவேண்டுமாயின் மாற்றுப் பயிர்களை மாறிமாறிப் பயிரிடவேண்டும்; இயற்கை உரத்தைப் பாவித்து மண்ணை வளமடையச் செய்யவேண்டும். அப்படிச் செய்து வரின் வாழ்நாள் முழுவதும் பயிர்ச் செய்கையை மேற்கொள்ளக் கூடியதாயிருக்கும்.

**9 : 3** ''செய்யும் தொழிலே தெய்வம்'', ''எத்தொழிலும் சம்மதமே'' என்ற மனநிலை தோன்றி பயிர்ச் செய்கையின் மூலம் உயந்த வருமானம் கிடைப்பின் இளைஞர்கள் நிச்சயமாக விவசாயத் தொழிலில் நீடித்து நிற்பர். இவ்விளைஞர்களைத் தொடர்ந்து இத்திட்டங்களில் நிலைத்து நிற்கச் செய்வதில் அர சாங்கத்திற்குப் பெரிய கடமைப்பாடொன்று உண்டு. நாட்டின் கல்விக் கூடங் கள் யாவற்றிலும் விவசாயம் பரவலாகப் போதிக்கப்பட வழி செய்யப்பட வேண்

டும். தொழில் மகத்துவம் பற்றிச் சிறுவர் மனதில் பதியக் கூடிய வகையில் கல்வி முறை அமைவதோடு மாத்திரமின்றி நடைமுறைக் கல்விகளும் ஒழுங்கு செய்யப் பட வேண்டும். பல இளைஞர் திட்டங்களில் அவர்களது உற்பத்திப் பொருள்களை நியாயமான விலைக்கு விற்க முடியாமல் அவர்கள் அவதிப்படுவதை அவதானிக் கக் கூடியதாயிருக்கிறது. அத்தோடு உரிய காலத்தில் கடன் வசதிகள், உரங்கள் கிருமி நாசினிகள் கிடைக்காமலிருக்கின்றன. இவற்றிலெல்லாம் கவனம் செலுத்தி வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க அரசாங்கம் முயல வேண்டும்.

9 ; 4 இதைவிட கால்நடை வளர்ப்பு என்னும் துறை போதிய அளவு கவ னிக்கப்படாத துறையாகவே இருந்து வந்திருக்கிறது. இத்துறையை விருத்தி செய் வதன் மூலம் புரதச் சத்து மிகுந்த உணவைப் பெற்றுக்கொள்ள முடிவது மட்டு மன்றி மண்ணை வளமடையச் செய்யும் இயற்கை உரத்தைப் பெற்றுக்கொள்ள வாய்ப்பு ஏற்படும்.

9 : 5 விவசாயிகளிடையேயும் இளைஞர்களிடையேயும் வாழ்வதற்கேற்ற விவ சாயம் செய்தல் (Subsistence Forming) என்ற அளவில் காணப்படும் கோட்பாடு மாறி வர்த்தக ரீதியாக் விவசாயம் செய்தல் என்ற (Commercial Agriculture) நிலை தோன்ற வேண்டும். அப்போதுதான் வருமானம் உயரும்; தொழிலைப் பலர் நாடுவர். இங்கே ஒரு உதாரணத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். காய் கறிக்குப் பெரும் தட்டுப்பாடு இருப்பதை நீங்கள் எல்லோரும் அறிவீர்கள். ஆனல் அதன் விலையோ ஒரு குறிப்பிட்ட அளவுக்கு அதிகமாக ஏறிச் செல்லாத விந்தையை நாம் காண்கிறோம். ஆனல் அதே வேலையில் மிகக் குறைந்த விலையில் பெறக் கூடியதாயிருந்த இறால் இன்று யானை விலை, குதிரை விலை என்று விலை போவ தைக் காண்கிறோம். காரணம் இறாலைப் பதனிட்டு வெளிநாடுகளுக்கு அனுப்பத் தொடங்கியதே ஆகும். இதுபோலவே காய்கறிகளையும் பதனிட்டு ஏற்றுமதி செய் யக் கூடிய நிலை உருவானல் நிச்சயமாக வர்த்தக ரீதியான விவசாய முயற்சிகள் நிலைபெறத் தொடங்கும் இதனைச் செய்து கொடுக்க வேண்டிய பொறுப்பும் அர சாங்கத்துக்கு உள்ளது.

## 10. முடிவுரை

10 : 1 இறுதியாக முன்னர் கூறியவற்றைத் தொகுத்துரைக்கும் போது எமது நாட்டின் எதிர்காலம் விவசாயத்திலேயே தங்கியுள்ளதெனவும், இதனை விஞ்ஞான ரீதியாகச் செய்யக் கூடிய ஆற்றல் இளைஞர்களிடமும் இளைஞர் குடி யேற்றத் திட்டங்களிலும் நிச்சயமாக உண்டு என நாம் திடமாக நம்பலாம். இளை ஞர்களிடையே புதுமை நாடும் மனப்பக்குவம் நிறைய உண்டு. பழையவர்கள், முதியவர்கள் புதுமையை ஏற்கத் தயங்குவர். ஆனல் இளைஞர்களோ அவ்வாறன்றி அவற்றை நாடிச் செல்லும் மனப்பாங்குடையவர். விவசாயம் உயர் வருமானத் தைத் தருமாயின் அதனைத் தொழிலாகக் கொள்ள நிச்சயம் அவர்கள் தயங்க மாட்டார்கள். எனவே அதற்குரிய ஆக்கத்தையும் ஊக்கத்தையும் வழங்க வேண் டிய பொறுப்பு அரசுக்கும் அரசின் கொள்கையை அமுல் செய்பவர்களுக்கும் நிறைய உண்டு. இதனை உணர்ந்தே அரசு பாரிய நீர்ப்பாசனத் திட்டங்களை மேற் கொள்ளத் திடசங்கற்பம் கொண்டுள்ளது. மகாவலி அபிவிருத்தித் திட்டம், கிரிந்தி ஓயாத் திட்டம், மதுறு ஓயாத் திட்டம், முத்துக் கண்டியத் திட்டம் போன்ற பாரிய நீர்ப்பாசனத் திட்டங்கள் இந்த எண்ணத்தின் விளைவே என லாம். அரசு காட்டும் ஆர்வத்தைச் "சிக்கெனப்" பிடித்துக் கொள்ளவேண்டியது

இளைஞர் கடமையாகும். இந்த நாட்டைச் சுபீட்சப் பாதைக்கு அழைத்துச் செல்லக் கூடிய ஆற்றல் இளைஞர்கே உண்டு என்பதை அரசு உணர்ந்துள்ளதென்பதற்கு எதிர்காலத்தில் தெரிவு முறையில் மேற்கொள்ளப்பட வேண்டிய மாற்றம் பற்றி அரசு செய்துள்ள தீர்மானம் நன்கு எடுத்துக் காட்டிக் கொண்டிருக்கிறது. இத்தீர்மானம் காணிக்குத் தெரிவு செய்படுவர்களின் முன்னுரிமை 18 வயதுக்கும் 30 வயதுக்குமிடைப்பட்ட இளைஞர்க்கே வழங்கப்பட வேண்டுமே தவிர முன்னரைப் போன்று அதிக தலைகளைக் கணக்கெடுத்து வழங்கப்பட கூடாது என்று கூறுகிறது. அரசாங்கத்தின் இந்த நல்ல எண்ணத்தை ஏற்று நாட்டைச் சுபீட்சப்பாதைக்கு அழைத்துச் செல்ல முன் வருமாறு நாளைய தலைவர்களாகிய உங்களை அழைக்கின்றேன்.

★

# கூட்டு விவசாய முறையும் இளைஞரும்

திரு. ஜி. கிருஷ்ணமூர்த்தி
உதவி அரசாங்க அதிபர், மன்னர்.

1. பத–விளக்கம்:

'Group Farming' எனும் ஆங்கிலப் பதத்தின் பிரயோகத்திலேயே தெளிவில்லை. பல்வேறு நாடுகளிலும் ஆராய்ச்சியாளர் பலராலும் இப்பதத்திற்கு நேரொத்த வேறு பதங்கள் பயன்படுத்தப்படுகின்றன. இப்பதத்தினை தமிழ்ப் படுத்துகையிலும்கூட தடுமாற்றம் ஏற்படுகின்றது. பொருத்தமான தமிழ்ப்பதம் வழக்கில் இல்லை. கூட்டு முறை விவசாயம் என மொழிபெயர்க்கும்போது 'Co-operativeness' எனும் அர்த்தத்திலே கூட்டுறவு முறையைக் குறிக்கின்றதோ எனும் சந்தேகம் எழக்கூடும். தொகுதிமுறை விவசாயம் எனும்போது தேர்தல் தொகுதி முதலான தொடர்பற்ற வேறுபல அர்த்தங்கள் தோன்றி சிக்கலைத் தோற்றுவிக்கிறது. எனவே பொருத்தமான பதம் வழக்கிலே வரும்வரை தற்காலிகமாக நேரொத்த பதமாக குழுமுறை விவசாயம் எனும் பதம் பயன்படுத்தப்படுகின்றது.

2. குழுமுறை விவசாயம் (Group Farming)

குறிப்பிட்ட விவசாயிகள் சிலர் ஒன்றுகூடி, இதுவரை காலமும் மரபு ரீதியாக செய்து வந்தது போல தனித்தனியாக விவசாயத்தில் ஈடுபடுவதை விடுத்து அதற்குப் பதிலாக குறித்த சில பொது நோக்கங்களுக்காக ஒன்றுகூடி ஒரே குழுவாக விவசாய நடவடிக்கைகளில் முழுவதையுமோ அல்லது ஒருசிலவற்றையோ கூட்டாகச் செய்வதையே குழுமுறை விவசாயம் எனலாம். இம்முறையின் கீழ் காணியிலே தமக்குள்ள சொந்தத்தினை கைவிடாமல் அதே நேரத்தில் தம்முள் ஒன்று சேர்ந்து தமக்குள்ளேயே இணங்கிக்கொண்ட விவசாய நடவடிக்கைகளில் நிகழ்ச்சித் திட்டத்திற்கு (Calender of Operations) இணங்க பயிர்செய்கை உற்பத்தியிலோ கால்நடை வளர்ப்பிலோ ஈடுபடுத்தலாகும். சுருங்கக் கூறின் நிலத்துரிமை தம்வயமே வைத்துக்கொண்டு கூட்டாக உழைப்பதே 'Owning their land but working Co-operatively' இம்முறையின் சிறப்பியல்பாகும்,

3. ஏனைய கூட்டுமுறை விவசாய முயற்சிகள்:

அ. கூட்டுப்பண்ணைமுறை (Collective Farming)

இம்முறையின்கீழ் அங்கத்துவ விவசாயிகள் கூட்டு முறையிலே ஒன்றாகவேசெய்கை பண்ணும் நிலப்பரப்பு முழுவதற்குமே உரிமை கொண்டாடுவர். கூட்டாகவே உழைத்து வருகின்ற உற்பத்திப் பயனையோ அல்லது ஈட்டும் இலாபத்தினையோ தாம் தாம் அளித்த உழைப்பின் தன்மைக்கு இணங்க பகிர்ந்து கொள்வர்,

ஆ. கூட்டுறவுப் பண்ணை முறை (Co-operative Farming)

பாரிய அளவிலே விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டு நலன் பெறுவதற்கும் ஏனைய வாய்ப்பு நலன்களின் (Facilities) பயன்பாட்டிலே கூடிய பயனுறுதியினைக் (Efficiency) காண்பதற்குமாக விவசாய அங்கத்தவர்களால் நிலம், முதல், உழைப்பு முதலான சகல வள ஆதாரங்களை (Resource) யும் ஒன்று திரட்டப்படும் முறையே கூட்டுறவுப் பண்ணையாகும். இவ்வமைப்பிலே விளைவின் பயன்கள் அவரவரின் உழைப்பிற்கும் அளித்த வள ஆதாரத்திற்கும் ஏற்பபங்கிட்டுக்கொள்ளப்படும்.

இ. அரசபண்ணை முறை (State Farming)

இம்முறையின் கீழ் நிலமனைத்தும் அரசிற்கே சொந்தமாகும். இங்குழைப்பவர்கள் கூலி வேலையர் ஆவர்.

4. குழுமுறை உற்பத்தியின் முக்கியத்துவம்

ஏனைய வளர்ச்சியுறும் நாடுகளைப் போன்றே இலங்கையிலும் விவசாய அமைப்பானது பலவாறாக சிதறுண்டு கிடக்கும் சின்னஞ்சிறு காணி விவசாயக் குடியானவர்களின் வசமே பெருமளவு தங்கியுள்ளது. இவர்களது செயல் நிறைவேற்றத்தினாலேயே (Performance) இலங்கையின் சமூக பொருளாதார முன்னேற்றத்தின் தரம் உறுதிசெய்யப்படுகின்றது.

தொழில் நுட்பத்தீர்வுகளாலும் தாபனரீதியான சீரமைப்புக்களாலும் இத்தொகையினரின் செயல் நிறைவேற்றத்தினை செம்மைப்படுத்துவதற்கு கடந்த பல ஆண்டுகளாக பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருப்பினும் பல சந்தர்ப்பங்களில் அடைய விரும்பிய பெறுபேறுகளை பெற்றுக்கொள்ளவே முடியவில்லை.

மேற்கூறிய வழிவகைகள் மூலமாக இத்தொகுதி விவசாயிகளுக்கும் பொருத்தமாக பயனுறுதிமிக்க உற்பத்தி அமைப்பொன்றினை உருவாக்கிக் கொள்ள முடியவில்லை. உடனடியாகவே உற்பத்தியைப் பெருக்கிக் கொள்ளக் கூடியதாய் தொழில்நுட்ப, தாபன, நிறுவனங்களின் ஊடாக இடை நிலையான உற்பத்தி அமைப்பு முறைகளை (Intermediate forms of Production Organization) பின்பற்றுதலின் அவசியம் இங்கு நன்குணரப்பட்டுள்ளது.

அரசாங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்ட குடியேற்றத் திட்டங்களில்கூட இடப்பட்ட பெருந்தொகையான முதலீடு, எடுத்துக்கொண்ட சிரத்தை ஆகியன வற்றின் அடிப்படையிலேயே ஆராயும்போது குறிப்பிடத்தக்க நன்மைகள் எதுவும் பெற்றுக்கொண்டதாகத் தெரியவில்லை. ஆகவே புதிய முறையில் பிரச்சினைகளை அணுகவேண்டிய அவசியம் எழுந்துள்ளது.

கூட்டுறவுப் பண்ணை போன்ற அமைப்புக்கள் முன்னேற்றகரமானவையே எனினும் இத்தகைய உற்பத்தி அமைப்புக்கள் அரசாங்கத்தினால் அரச நிலங்களிலேயே பெரிதும் நடைமுறைப்படுத்தப்பட்டன. ஆனால் அதுவும் பரந்த அளவில் அல்ல. பல திட்டங்கள் தோல்வியடைந்துள்ளன. பலவற்றிலே பிரச்சனைகள் பல பல புதிதாக எழுச்சியுற்று அதன் திறமையான போக்கினை மங்கச் செய்துள்ளன.

எனினும் இன்றைய அரசியல், சமூக, பண்பாட்டு சூழ்நிலைகளின் பின்னணியிலே கூட்டுறவு அமைப்பு முறையினை சிதறுண்டு கிடக்கும் சிறு காணி விவசா

யிகளின் முன்னேற்றத்திற்கு ஊறுசெய்யும் பிரச்சனைகளைத் தீர்க்கும் நிவாரணியா கக் கொள்ளலாமோ என்பது கேள்விக்கிடமாக உள்ளது. ஏனைய வளர்முக நாடுகளிலும் கூட இம்முறை பெரும் வெற்றியினை ஈட்டவில்லை. சொந்தக் காணி களிலேயே பரம்பரை பரம்பரையாக தாம் அனுபவித்து வந்த தனியுடமை உரிமை இழப்பதற்கோ ஏனையவருடன் பங்கிட்டுக் கொள்வதற்கோ காட்டும் தயக்கமே இதற்கான முக்கிய காரணமாகும்.

கூட்டுறவு முறை மக்கள் மனதிலே நன்கு செல்வாக்கடையும் வரை தேச முன்னேற்றமானது காத்துக் கொண்டிருக்க முடியாது. இதற்காக சிறு காணி விவசாயிகளை தேச முன்னேற்றத்தில் பங்கு பெறுதவகையிலே ஒதுக்கிவிடவும் முடியாது. அவர்களையும் நன்முறையிலேயே பயன்படுத்திக்கொள்ள வேண்டும். உணவு உற்பத்தியை பெருமளவில் அதிகரிப்பதுடன் அதில் ஈடுபடும் சில காணி விவசாயிகளுக்கு அதிகரித்த வருவாயை ஈட்டுவதற்கும் இசைந்தமுறையிலேயே சிறு காணி விவசாயத்துறையினை திறம்பட ஒழுங்கமைத்துக் கொள்ளவேண்டிய அவசியப்பாடு முன்னெப்போதும் விட இன்றைய சூழலிலேயே பெருமளவில் எதிர் நோக்குகிறது.

காணி சீர்திருத்தச் சட்டத்தின் கீழ் சுவீகரிக்கப்பட்ட பெருந்தொகையான பலதரப்பட்ட விவசாயக்காணிகளும் வெவ்வேறு அளவுகளிலே நிலமற்றோருக்கு தனிப்பட்ட முறையிலே மீளவும் பங்கிட்டுக் கொடுக்கப்பட்டு வருகின்றன. இவ் வாறு பயன்பெற்ற பயன்பெறப்போகின்ற ஏழைக் குடியானவர்களிடம் சொந்த மாக நிலத்தைப் பயன்படுத்த தேவையான மூலவளங்களையோ, தேவையான விஞ்ஞான தொழில்நுட்ப அறிவினையோ நிர்வாகத்திறனையோ எதிர்பார்க்க முடி யாது. இத்தகையவர்களுக்கு உதவுவதற்கு பெருந்தொகையான முதலை செல வழிக்கக் கூடிய நிலையில் அரசாங்கம் இன்றில்லை. அத்துடன் நாட்டிலே இன் றுள்ள நிர்வாக, தொழில் நுட்ப மூலவளங்கள் புதிதாக உருவாகிக் கொண்டி ருக்கின்ற ஆயிரக்கணக்கான காணிச் சொந்தக்காரர்களுக்குத் திருப்திகரமாக சேவையாற்றக் கூடியவகையில் போதுமானதாக இல்லை. இதுபோன்ற நிலைமை காரணமாக இலத்தீன் அமெரிக்க நாடுகளிலேயே காணி சீர்திருத்த நடவடிக்கை களின் போது மோசமான விளைவுகள் ஏற்பட்டன. புதிதாக காணிகளைப் பெற் றோர் உடனடியாகவே உற்பத்தித் திட்டத்தினை உருவாக்கிச் செயல்படத் தொடங் குவதுடன் காணிகளை இழந்தவர்களால் மீண்டும் காணிகளுக்கு இடையூறு ஏற் படாதவாறு தம்மைப் பலப்படுத்திக் கொள்ள வேண்டியுள்ளது.

பரந்த அடிப்படையிலேயே விஞ்ஞானபூர்வமாக திறமையாக நிர்வகிக்கக் கூடிய கூட்டுறவுமுறையிலேயே விவசாய முயற்சி மேற்கொள்ளப்படுவதே விரும் பத்தக்கது. எனினும் இம்முறை நன்கு சுமூகமாக இயங்கக் கூடிய உறுதியான சூழ்நிலை இற்றைவரை இலங்கையிலே நன்கு உருவாகவில்லை. எனினும் அந்நிலை உருவாகும்வரை காத்திராமல் உடனடியாகச் செயல்பட இடைக்காலத்திட்ட மொன்று அவசியமாகின்றது.

எனவே குடியேற்றத் திட்டங்களைச் சீர்படுத்துதல் காணிச் சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துதல் ஆகிய நடவடிக்கைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு விவசாய முன்னேற்றத்தின் அடிப்படையிலேயே முன்னேற முயன்று கொண்டி ருக்கும் இன்றைய நெருக்கடியான சூழ்நிலையிலேயே குழுமுறை விவசாய உற்பத்தி தனிச்சிறப்புடையதாக செல்வாக்குப் பெற்று வருகின்றது.

## 5. குழுமுறை விவசாயத்தின் செயற்பாடு

இம்முறையின் கீழ் ஒன்று சேர்பவர்கள் கூட்டுமுயற்சி என்பதற்காக தமது சொந்தக்காணிகளிலேயே தாம் வகித்து வரும் சொத்துரிமைகளை இழக்கத் தேவையில்லை. உற்பத்திச் செய்கையில் மட்டுமே கூட்டுறவு தொழிற் படுகின்றது. ஒவ்வொரு பங்காளியும் தனது சொந்தக் காணிக்கு பொறுப்புடையவராய் விவசாய உற்பத்தியில் ஈடுபடலாம். ஒன்றுகூடி உற்பத்தி முயற்சியிலே ஈடுபட்ட போதிலும்கூட தமது நிலத்தின் உற்பத்தி விளைவினை தான் மட்டும் பயன்படுத்த முடியும் ஏனையவர்களுடன் பங்கிட்டுக் கொள்ளத் தேவையில்லை.

விவசாயிகளின் சமூகப் பின்னணி, தொழில்நுட்பத் தராதரம், உழைப்பாற்றல், முதலீடு, உபகரணங்கள் ஆகிய இன்னோரன்னவற்றின் அடிப்படையில் விவசாய நடவடிக்கைகளில் எவை, எவை கூட்டாகவும் எவை எவை தனித்தும் மேற்கொள்ள வேண்டுமென தீர்மானித்து தமக்குள்ளே நிகழ்ச்சித் திட்டம் ஒன்று வகுத்துக் கொள்ளப்படும். எனினும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் தன் தன் காணிகளுக்கு தான் தான் பொறுப்பாளி ஆவர்.

விவசாயத்துறையிலேயே குழுமுறை உற்பத்தி ஏற்பாடானது விறைப்பான (Rigid) முறையல்ல. மாறிக்கொண்டே வருகின்ற பலதரப்பட்ட சூழ்நிலைகளுக்கும் ஏற்ப இசைந்து போகக்கூடியதான நெகிழ்வுடைய (Flexibility) தன்மையுடையது. நாளடைவில் குழுமுறை விவசாயம் நன்கு செல்வாக்குற்று உறுதிப்படுத்தப்பட்டு விரிவாக்கப்படுகையிலேயே குழுவினது பொறுப்பின் தரம் கூடக் கூடும். அத்தகைய சந்தர்ப்பங்களிலேயே ஏற்படும் செலவினங்களையும் அநுகூலங்களையும் பங்கிட்டுச் கொள்ள வேண்டிவரும்.

## 6. குழுமுறை விவசாய முயற்சியினால் பெறக்கூடிய நன்மைகள்

இம்முறையினால் பெறக்கூடிய நன்மைகளை ஆராய்வதற்கு முன்னர் இன்றைய கிராமப்புற விவசாய நிலையினை கற்பனை பண்ணிப் பார்த்தல் நன்று. குறிப்பிட்ட விவசாயக் கண்டத்தில் (Tract) உள்ள விவசாயிகள் பலரும் தம் விருப்பப்படியே தனித் தனியாக வெவ்வேறு நேரகாலங்களில் வெவ்வேறு இன கால இன, விதைகளைப் பயன்படுத்தி வெவ்வேறு நடு முறைகளை மேற்கொண்டு வெவ்வேறு அளவுகளிலேயே உரத்தைப் பயன்படுத்தும் சந்தர்ப்பங்களிலேயே ஏற்படக்கூடிய விளைவுகளை ஓர் அளவு கற்பனை செய்து பார்ப்பதன் மூலமாக குழுமுறையினால் ஏற்படும் நன்மைகளின் முக்கியத்துவம் நன்கு புலனாகும். தனிப்பட்ட முறையிலே இயங்கும்போது பொதுவான வேலைத்திட்டத்திற்கு உட்பட்டு செயல்பட வாய்ப்பில்லை. தன்னிச்சையாக நடைபெறும் விவசாயத்திலேயே பொன்னான பாசன நீர் வீண் விரயம் செய்யப்படும். ஒரு சிலர் நோய் தடுப்பு முதலான முன்னேற்றகரமான முறைகளை நேரகாலத்திற்கு கையாண்டாலும் கூட அயலவர் அவருடன் ஒத்துழைக்காவிடின் ஏனைய இடங்களில் பரவும் நோய்களில் நின்றும் தமது விவசாயத்தை அவரால் காப்பாற்றிக்கொள்ள முடியாது போகின்றது. மேலும் உடன்பாடு இன்மையினால் எழும் பல்வேறு பிரச்சினைகளை ஒவ்வொரு விவசாயியும் தன்னந் தனியே எதிர்நோக்க வேண்டியே வரும்.

அ. ஆனால் குழுமுறை உற்பத்தியிலேயே பொதுவான பயிர்ச் செய்கைத் திட்டத்தினை தாமே உருவாக்கி நடவடிக்கைகள் முழுவதை

யுமோ சிலவற்றையோ அந்தந்தக் காலத்திலோ அனைவரும் ஒன்று சேர்ந்து மேற்கொள்ள வேண்டி வரும் அனைவரும் ஒரே இன விதையினைப் பயன்படுத்துவர். சரியான நேரத்தில் உரிய பிரமாணத்தில், சமகாலத்தில் உரமிடுதல் நோய் தடுப்பு முறைகளும் பயன்படுத்தப்பட வேண்டும். இவ்வாறு ஒருமுறை உற்பத்தியின் மூலம் செயற்படுவதினால் பொதுவான வேலைத்திட்ட நிகழ்ச்சி நிரல்களுக்கு ஒன்று சேர்ந்து கட்டுப்படுகின்றனர். இதனால் விளையும் நன்மைகளோ பல.

i. நிர்வாகத்திலே ஒரே சீர்மையினை உருவாக்கிக் கொள்ள முடியும் (Uniform standard in Management)

ii. பொருளாதார அந்தஸ்து, தொழில் நுட்ப அறிவு முதலானவை காரணமாக குழு அங்கத்தவர்களிடையே எழக் கூடிய ஒப்பின்மைகள் பெருமளவு குறைய முடியும்.

iii. விவசாய முன்னேற்றத்திற்கு அடிப்படையானது நீர் விநியோக முகாமைத்துவம் (Water Management) இம்முறையின் கீழ் திறம்பட இயங்க முடியும். நீரின் வீண் விரயத்தினைக் குறைப்பதுடன் நீர் விநியோகத்தின்போது விவசாயிகளிடையே அடிக்கடி எழக்கூடிய வீண் சச்சரவுகளும் குறைந்து அமைதியும் நிலவக்கூடும்

iv. சகலருக்கும் ஒரே தன்மையான உயர் விளைச்சல் பெற முடிகிறது. அதன் மூலம் போட்டி பொறாமை எழாமலும் தடுக்க முடியும்.

ஆ. விவசாய உற்பத்திக்கு தேவையானவற்றை ஒரே முறையிலே கொள்வனவு செய்யும்போது விவசாய உள்ளீடுகள் (Inputs) பொருள்கள் ஆகியவற்றை கொண்டுவருவதற்கும் ஏற்படக் கூடிய செலவினங்கள் கணிசமான அளவு குறைகின்றது.

இ. இதனால் பெருமளவு நேரம் மீதப்படுகின்றது. மீதமாகும் நேரத்தை பயனுள்ள வேறு நடவடிக்கைகளுக்கு பயன்படுத்திக் கொள்ளலாம்.

ஈ. விலை உயர்ந்த உழவு இயந்திரம் முதலானவற்றை பொதுவாகக் கொள்வனவு செய்ய வசதி உண்டு. பொதுவாகக் களஞ்சியப்படுத்துவதற்கு பண்டகசாலையும் கட்டிக் கொள்ளமுடியும்.

உ. கூட்டாகச் சந்தைப்படுத்துவதற்கும் பலத்துடன் பேரம் பேசுவதற்கும் இம்முறையில் கூடிய வசதியுண்டு.

ஊ. விவசாய உற்பத்தி நன்கு பெரிதாக்குவதற்கு விரிவாக்க உத்தியோத்தர்கள் சேவைகளையும் அறிவுரைகளையும் விவசாயிகள் நன்கு பயன்படுத்தாமையும் ஒரு முக்கிய காரணமாகும். இக்குறைபாடு இம்முறையின் கீழ் செயல்படும்போது இல்லாது போகின்றது.

i. விரிவாக்குவதற்கு உத்தியோகத்தர் தனிப்பட்டோரை அடிக்கடி சந்திப்பதோ சிரமம். ஆனால் குழுக்களால் இயங்கும் விவசாயிகளை அடிக்கடி சந்திக்க முடியும். குழு அங்கத்தவருடன் தொடர்பு கொள்வதற்குச் சமமாகும். இதனால் விரிவாக்கத்திற்கு தேவைபடும் நேரடித் தொடர்பு ஏற்படுகின்றது.

ii. மேலும் பல்வேறு மனப்போக்குடைய தனிப்பட்ட விவசாயிகளுடன் தொடர்பு கொள்வதிலும் பொது நோக்குடன் செயல்படும் குழுக்களுடன் வேலை செய்வது சுலபம்.

iii. விரிவாக்க உத்தியோகத்தருக்கு திறமையாக மேற்பார்வை செய்து விவசாய நடவடிக்கைகளை திறமையாக வழிப்படுத்தவும் குழுமுறையின் கீழ் இலகுவாகின்றது.

vi. குழு நிலையிலேயே பிரச்சனைகள் ஆராயப்படும்போது அவற்றில் பல தெளிவடைய வாய்ப்புண்டு,

எ விவசாய உற்பத்திக்கு பக்கபலமாக உள்ள நிறுவனங்களின் சேவைகளை இம்முறையின்கீழ் மிகக் கூடுதலாக திறம்படப் பெற்றுக் கொள்ள முடியும். விவசாயிகளுடன் தனித் தனி தொடர்பு கொள்வதிலும் விவசாயக் குழுக்களுடன் இலகுவாயும் விரைவாகவும் தொடர்பு கொள்ளலாம். அதே போன்று விவசாயிகளுக்கும் தனி தனித் தொடர்பு கொள்வதிலும் குழுரீதியில் தொடர்பு கொள்வது இலகுவாகும். இவ்வாறு தனிப்பட்ட ஒருவர் பல்வேறு சேவை நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு கடன் முதலான பல உதவிகளையும் பெறச் செயல்படுகின்றாரோ அதேபோன்று பலர் சேர்ந்து உருவாகிய குழுவும் தனிய ஓர் ஆள்போல (Corporate Personality) மாறிச் செயல்படுகின்றது.

ஏ. இவ்வாறு விவசாயிகளுக்கும் விவசாய விரிவாக்கல் உத்தியோகத்தர்களுக்கும் நிறுவனங்களுக்கும் இடையே அர்த்த புஷ்டி உள்ள நெருங்கிய தொடர்பு ஏற்பட முடிகின்றது. இவர்கள் அலட்சியமாக இருப்பின் தனியாட்களாக இருந்து செயல்படுவதை விட ஒழுங்குபடுத்தப்பட்ட கூட்டு நடவடிக்கையினால் அவர்கள் மீது பலத்த தாக்கத்தினை (Pressure) செலுத்த முடியும். அதற்கு ஈடு கொடுக்க முடியாமல் அலட்சியமாக இயங்குகின்ற தாபனங்களும் உத்தியோகத்தர்களும் துரிதமாக செயலாற்ற தூண்ட முடியும்.

ஐ. இலங்கை போன்ற வளர்முக நாடுகளுக்கு மூலதனமே முக்கிய பிரச்சினையாகும். இம் முயற்சியிலே பெருத்த மூலதனம் தேவையில்லை. அதுவுமின்றி பரந்த அளவில் தொழில் நுட்பத்திறனை ஆகக் கூடிய அளவுக்கு திறம்படப் பிரயோகித்து பயன் பெற முடியும்.

ஒ. தனிப்பட்ட முறையிலேயே பயன்படுத்த துணியாது தயங்கிய பல நவீன முறைகளை கூட்டுமுறையிலே செயல்படுத்தும்போது பயன்படுத்துவதற்கான உந்துதல் ஏற்படுத்தல் இயல்பே.

ஓ. நெருக்கடியான இன்றைய காலகட்டத்திலேயே விவசாய அமைப்பின் நடைமுறையிலே எத்தகைய பாரிய புரட்சிகரமான மாற்றங்களைச் செய்யாமலே இக் குழுமுறையினை அறிமுகப்படுத்த முடியும். இம்முறையின் வெற்றிகரமான தொழிற் பாட்டுக்கு நிலஉடைமை அமைப்பின் இன்றைய நிலையில் எவ்வித மாற்றமும் தேவையில்லை. பாரிய முறையிலேயே விரிவாகச் செய்து அடையக்கூடிய பல நன்மைகளை சிதறுண்டு கிடக்கும் சிறிய காணி உடைமை அமைப்பிலேயே பெற்றுக்கொள்ள முடியும்.

ஔ. வருங்காலத்திலேயே அவசியம் உருவாகப்போகின்ற அல்லது உருவாக்கியே தர வேண்டிய கூட்டுறவுப் பண்ணை முறைக்கு முன்னோடியாக இம்முறை அமைகின்றது. தனியார் முயற்சியில் இருந்து கூட்டுறவு முயற்சியை நோக்கிச் செல்லும் முன்னேற்றப் பாதையிலேயே இம்முறை இடைப்பட்ட தரிப்பாகும். இதன் மூலம் பெறும் அனுபவத்தைக் கொண்டு பிற்காலக் கூட்டுறவுத் திட்டத்தை உருவாக்கிக் கொள்ளலாம். தனிப்பட்ட விவசாயிகளிடையே வேண்டப்படுகின்ற கூட்டுறவு மனப்பான்மை இம்முறையின் ஊடாக அமைப்பு ரீதியாக செயல்பட்டு மேலோங்க வாய்ப்புண்டு.

## 7. குழுமுறை விவசாய நடைமுறைக்குச் சாதகமான பின்னணி

அ. பரந்தகன்ற அளவிலே இம்முறை விரிவாக்கப்பட்டு வெற்றிகரமாகச் செயல்பட வேண்டுமாயின் கிராமிய மட்டத்திலேயே உள்ள நிறுவனச் சட்டம் (Institutional Framework) மறு சீர் அமைக்கப்பட வேண்டும். கிராமிய நிறுவனங்களுக்கு இத்தகைய முன்னேற்றகரமான திட்டங்களுக்கு முன்னுரிமை அளித்து கூடிய ஆதரவும் ஒத்துழைப்பும் நல்குவதே முக்கிய கொள்கையில் ஒன்றுகக் கொண்டிருத்தல் வேண்டும். இன்றைய சூழலில் ப. நோ. கூ. சங்கங்கள் கமத்தொழில் விளைவுப் பெருக்கக்குழுக்கள் பிரதேச அபிவிருத்திச் சபைகள் வலுவற்று செயல் இழந்துள்ளன. இவற்றையோ இவற்றுக்குப் பதிலீடாக உருவாக்கப்படும் புதிய நிறுவனங்களையோ, இம்முறைக்கு முக்கியத்துவம் அளிக்கும்படி ஊக்குவித்தல் வேண்டும். கிராமிய மட்டத்திலேயே இன்று செல்வாக்குற்று வரும் கிராம முன்னேற்றச் சங்கங்கள், சனசமூக நிலையங்கள் ஆகியவற்றையும் இம்முயற்சிகளில் ஈடுபடுத்துவது நன்று.

ஆ. சமூக முன்னேற்ற ஆர்வமுள்ள மக்கள் குறிப்பாக இளைஞர்கள் இம் முயற்சிகளில் ஈடுபடுதலுக்கேற்ற முறையில் உருவாக்குதல் வேண்டும்.

இ. சேவை மனப்பான்மையுடைய ஆற்றல்மிகு அதிகாரிகள் ஒத்துழைப்பு அவசியம்.

ஈ. நிலவுடைமைப் பிரச்சினைகள் சிக்கல் உடையதாகவோ பெருமளவாகவோ மேலோங்கி இருத்தல் ஆகாது. பயிர் செய்கையில் ஈடுபடுவதாயின் நீர்வளம் வாய்ப்பானதாக இருத்தல் வேண்டும்.

உ. அடிக்கடி பயிர் அழிவுகள் வராது இருத்தல் வேண்டும்.

ஊ. இம்முறையானது பரந்த அளவிலே நாடெங்கும் பரவுவதற்கு அரசாங்கத்தின் அங்கீகாரமும் உதவியும் தேவை. இம்முறையின் கீழ் உருவாகும் குழுக்களினது உரிமைகள், சலுகைகள், கடமைகள், பொறுப்புக்கள் ஆகியன தெளிவாக வரையறுக்கப்பட்டு திட்டவட்டமான சட்ட அந்தஸ்து அளிக்கப்படல் வேண்டும்.

விவசாயத்தில் தன்னிறைவினை வெகுவிரைவிலே அடைவதற்கு பாடுபடும் இலங்கை அரசாங்கம் பலவகையிலும் இம்முயற்சிக்கு உதவத்தயாராக உள்ளது.

i. அரசாங்க அதிபரின் ஊடாக இம்முயற்சியை நடைமுறைப் படுத்த நிலங்களை கொடுத்துதவுகிறது.

ii. விரிவாக்க உத்தியோகத்தர்களை நியமித்து இம்முயற்சியில் வழிகாட்டுகின்றது. கிராம முன்னேற்றச் சங்கம், சனசமூக நிலையம் ஆகிய நிறுவனங்களுக்கு புத்துயிர் அளித்து இத்தகைய முயற்சிகளிலே ஆர்வம் காட்டும்படி பணித்துள்ளது.

iii. வங்கிகள் மூலமாக கடனுதவி அளிக்கின்றது.

iv. இது தொடர்பாக பல்வேறு நிறுவனங்களிலும் பயிற்சி தர முன்வந்துள்ளது.

8. பாதகமான சூழ்நிலை

அ. வெவ்வேறு கண்டங்களில் பெருந்தொகையான நிலத்துண்டுகள் இருப்பதுவும் குழுமுறை நடைமுறைக்கு அத்துணை உகந்ததல்ல.

ஆ. நிலவுடைமைகளிலே குத்தகை, கூட்டுடைமை போன்றவற்றிலே சிக்கல்கள் இருப்பின் இம்முறை வெற்றி அளிக்காது. பாதுகாப்பற்ற குத்தகைக்காரரும் இம்முறையினால் பயன்பெறமுடியாது. ஒவ்வொரு போகத்திற்கோ, வருடத்திற்கோ விவசாயச் சொந்தக்காரர்கள் மாறிக்கொண்டிருக்கின்ற சிக்கல் உடைய கூட்டுச்சொத்து உரிமையுடைய நிலப்பகுதிகளிலும் இதனை அமுல் நடத்துவது சிரமம்,

இ. மேலதிக விளைச்சலைப் பெற்று வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதிலே ஆர்வமற்றவராய் வெறுமனே சீவனோபாயத்திற்காக (Subsistence) மட்டுமே விவசாய முயற்சியில் ஈடுபடுபவர்களிடையே இம்முறை செல்வாக்குப் பெறமாட்டாது.

ஈ. பகுதி நேர வேலையாக விவசாயத்தில் ஈடுபட்டோருக்கும் முக்கிய தொழில் விவசாயமாக இல்லாதபடியால் அத்தகையவர்களிடமும் இம்முறை. செல்வாக்குப் பெறுமென எதிர்பார்க்க முடியாது.

9, இளைஞர்

15 க்கும் 26 க்கும் உட்பட்ட வயதினரையே பொதுவாக இளைஞர் என்பர். எனினும் இச்சந்தர்ப்பத்தில் இளமை முடுக்குடன் இளமை மன

பாவத்துடனும் செயலாற்றும் பெரியவர்களையும் இளைஞருடன் சேர்த்துக் கொள்வதில் தவறில்லை. இலங்கையிலேயே செயலாற்றலுடைய சனத் தொகையிலேயே தனித்த பெரும்பிரிவினுள் இளைஞர் அடங்குகின்றனர்' இவ்விளைஞர் பிரிவினுள்ளும் கிராமப்புறத்தைச் சார்ந்த திருப்திகரமான வேலையற்ற இளைஞரின் தொகையோ மிக மிக அதிகம்.

### 10. இளைஞர்களின் பங்களிப்பு

எனவே ஆற்றல்மிக்க இளைஞர்களை முக்கியமாக கிராமப்புறத்து வேலையற்ற இளைஞர்களை பலன்தரக் கூடிய குழுமுறை விவசாய உற்பத்தியிலேயே உடனடியாக பெருமளவிலே ஈடுபடவேண்டுமென எதிர்பார்ககப்படுகின்றது. இதற்குப் பல காரணங்கள் கூறப்படுகின்றது.

அ. விரக்தியுற்று இருக்கும் இளைஞரை தமது ஆற்றலை தவறான வழியில் பயன் படுத்தாது ஆக்கபூர்வமான முறையில் தமக்குத் திருப்தியினையும் நல்வருவாயினையும் அளிக்கக் கூடிய வேலைத் திட்டங்களில் ஈடுபடவே பெரிதும் விரும்புவர். விவசாயத்துறையே இன்னும் பல வருட காலங்களுக்கு பெருமளவு வேலைவாய்ப்பு அளிக்கக் கூடிய துறையாக உள்ளது. விவசாயத் திட்டங்களில் இளைஞர்கள் ஈடுபடுவதன் மூலம் அவருக்கும் நாட்டுக்கும் நன்மைகள் உண்டு.

ஆ. நன்மை தருவதும் முன்னேற்றகரமானதும் புரட்சிகரமானதுமான கருத்துக்களிலும் கோட்பாடுகளிலும் இலகுவில் உறுதியாக ஈடுபாடு கொள்ளக் கூடியவர்கள் இளைஞர்களேயாவர்.

இ. ஆக்கபூர்வமாகவோ அல்லது அழிவு பூர்வமாகவோ குழு நிலையில் நின்று ஆற்றலுடன் செயல்படும் தன்மை ஏனைய வயதினரிலும் இளைஞரிடையேதான் கூடுதலாக மேலோங்கி உள்ளது.

ஈ. வருங்காலத்திலேயே பல்வேறு துறைகளிலும் தலைமை தாங்க நாட்டினை வழி நடத்தப்போகும் இன்றைய இளைஞர்களுக்கு கூட்டுறவு உணர்வு பரந்து வளர்ந்து உறுதியடைய இத்தகைய திட்டங்களும் பக்க பலமாய் அமையக் கூடும்.

எனவேதான் விவசாயத்துறையில் துரிதமாக வியத்தகு முன்னேற்றங்களை உடனே காண்பதற்கும் இக்காலச் சூழ்நிலைக்கும் இசைந்ததுமான குழுமுறை விவசாயத்தில் இளைஞர்களையும் ஈடுபடுத்து மாறு தூண்டுவதன் மூலம் அவர்களது ஆற்றலை நன்நெறிப்படுத்துவதுடன் தேச முன்னேற்றத்திலும் அவர்களையும் உடனடியாகப் பங்குபெறச் செய்து நாடு முழுதும் பயன் பெற்றுக் கொள்ள முடிகிறது.

### 11. குழுமுறை செல்வாக்குறச் செய்யும் தூண்டுதல்கள்

மேலே காட்டிய பல்வேறு நன்மைகளையும் நல்கக் கூடிய இம்முறையிலேயே இளைஞர்கள் ஆர்வம் காட்டுவதற்கான உத்வேகத் தூண்டுதல்களை (Stimulus) இரு முறைகளில் பெறமுடியும்.

அ. எம்மரபிற்கு புதியதன்று

இலங்கையில் பண்டைக்காலம் முதல்தொட்டு விவசாயத்துறை உட்பட பல் வேறு துறைகளிலும் குழுமுறை நடவடிக்கைகள் பல்வேறு வகைகளிலேயே செயல் பட்டு வந்துள்ளது. நாற்று நடுதல், அறுவடை செய்தல், வாய்க்கால்கள் திருத் துதல் முதலானவற்றில் ஒரு குடுபத்தினர் மற்றக் குடும்பத்தினருக்கு உதவி செய்து வருதல் இயல்பாய்க் காணக்கூடியதாக உள்ளது.

அவற்றின் வரலாறு எச்சங்களாக (Relics) சிங்களப் பகுதிகளிலே இன்றும் கூட 'கைய' (Kaiya) 'அத்தன்' (Atthan) 'பெத்ம' (Bethma) என்னும் குழுமுறை நடவடிக்கைகள் செயல் பட்டு வருகின்றது. 'கைய' என்னும் முறையில் சக விவசாயிக்காக அவரது விவசாய நடவடிக்கைகளில் ஒருசிலவற்றிலே ஏனைய விவ சாயிகள் அடங்கிய குழுக்கள் ஈடுபடுகின்றது. இவ்வுதவி கூலிக்காகவோ அல்லது 'அத்தன்' என்னும் முறையாலோ பெறப்படும். கூலியில்லாவிடில் ஒத்துழைப் போருக்கு உணவு வழங்கப்படும். இம்முறையில் செய்யப்படும் அறுவடைக்கு மன் னூர்ப் பகுதியில் பரத்தை வெட்டு என்று அழைக்கப்படும்.

'அத்தன்' என்பது பரஸ்பரம் தமக்குள்ளே விவசாயிகள் தமது உழைப்பாற் றலை கொடுத்துதவுவதாகும். சிறுபோகத்தின் போது குளங்களிலே நீர் அதிகம் இல்லாவிடில் செய்யப்படும் புலவுச் செய்கையிலும், குழுமுறை நடவடிக்கைகளின் சில பண்புகளை அவதானிக்கலாம்.

விவசாயத்துறையிலே குழுமுறை நடவடிக்கையானது இலங்கையைப் பொறுத்த மட்டில் புதியதோர் போக்கென்று கூறமுடியாவிடினும் ஒழுங்கான முறையிலே குழுமுறை உற்பத்தியை ஒரு அமைப்பு முறையாக முன்னைய காலத்தில் பயன் படுத்தப்படவில்லை. எனவே பழைய மரபுகளை புனரமைப்புச் செய்து பயன்பெற விரும்பும் இளைஞர்கள் புத்துணர்ச்சியுடன் மரபுக்கு முரணற்ற இம்முறைக்கு திருந்திய நவீனத்துவ வடிவினை அளிப்பதில் ஆர்வம் காட்ட முடியும், குழுமுறை உற்பத்தி முயற்சியினை மரபுரீதியாக இயங்கி வந்த முறையானது நன்றாகவும் விரிவாகவும் இயங்குவதற்காக ஒழுங்காக அமைக்கப்பட்ட அமைப்பாக இனங் கண்டு புத்துணர்ச்சியினைப் பெறலாம்.

ஆ பிறநாடுகளின் முன்மாதிரி

உலக நாடுகள் பலவற்றிலே அரசியல் பாகுபாடு இன்றி இக்குழுமுறை உற் பத்தியானது திறம்பட இயங்கிவருகின்றது. சமதரும முதலாளித்துவ நாடுகள் இம்முறை முக்கியத்துவம் கொடுத்துள்ளன, எடுத்துக்காட்டாக போலந்து, பிரான்ஸ், இத்தாலி, மத்திய கிழக்கு நாடுகள், ஜப்பான் முதலான நாடுகளைக் குறிப்பிடலாம். ஜப்பானில் மட்டும் 1970 ம் ஆண்டளவில் ஏறக்குறைய 24,000 விவசாயக் குழுக்கள் இயங்கிவந்தன, இம்முறையானது சமூக பொருளாதார முன்னேற்றத்தை காண்பதற்கான வழிவகையாகவே பரவலாக ஏற்றுக்கொள்ளப் பட்டதெயன்றி அரசியல் கருத்தியலாக (Political Ideology) முக்கியத்துவம் பெற்று அங்கீகரிக்கப்படவில்லை. உள்நாட்டு சொந்த மரபுகளிலிருந்து புத்துணர்ச்சி பெற விரும்பாது அந்நிய நாட்டு முன்மாதிரியிலேயே உத்வேகம் பெற விரும்பி நிற்கும் எம்மத்தியில் உள்ள இளைஞர் பலருக்கு கூட மேற்காட்டிய எடுத்துக் காட்டுக்கள் பேரார்வத்தை ஏற்படுத்தும் என்பது சந்தேகமில்லை.

**12. உற்பத்திக் குழுக்களை நடைமுறைப்படுத்தும் விதம்**

கிராமப் புறங்களைச் சார்ந்த இளைஞர்கள் இரு வழிகளில் இம்முறை அறிமுகமாவதற்கு உதவலாம்.

அ. இதன் முக்கியத்துவத்தை பெறக்கூடிய நன்மைகளை தமது குடும்பத்தினர், உறவினர் நண்பர், அயலவர் ஆகியோருக்கு உணர்த்தி அவர்களையும் இம்முறையில் நாட்டங்கொள்வதற்கு தூண்டலாம்.

ஆ. தாமே முன்மாதிரியாக நின்று இம்முறையினை செயற்படுத்தி நன்மை பெறுவதுடன் பிறருக்கும் முன்மாதிரியாயும் வழிகாட்டியாகவும் நிற்கலாம்.

1. இளைஞர் பலருக்கு இம்முறையிலே செயல்பட ஆர்வமிருப்பின் அவர்களுக்கு சொந்தத்திலே நிலங்கள் இல்லாதிருக்கலாம். அதற்காக செயல் ஊக்கம் குன்றி நிற்கத் தேவையில்லை.

   அ. தத்தம் கிராமங்களிலே செயல்படும் கிராம முன்னேற்றச் சங்கங்கள், சனசமூக நிலையங்கள், பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றைத் தூண்டி அவற்றின் ஊடாக உதவிகளைப் பெற்றுக்கொள்ளலாம்,

   ஆ. அல்லது கிராமிய மட்டத்திலுள்ள விரிவாக்க உத்தியோகத்தர், பிரதேச அபிவிருத்தி உத்தியோகத்தர் ஊடாக உதவி அரசாங்க அதிபருடன் தொடர்பு கொண்டு அரசுக்குச் சொத்தமான காணிகள் இருப்பின் அவற்றைப் பெற்று குழுமுறை உற்பத்திக்கு செயல் உருவம் கொடுக்கலாம்.

   இ. அரசாங்கத்தைவிட சமூக நல தாபனங்களும் பல இளைஞர்களுக்கு விவசாய முயற்சியிலே உதவுவதற்கு முன் வந்துள்ளன. அவற்றுள் சர்வோதய இயக்கம், தேசிய இளைஞர் சபை, முஸ்லீம் இளைஞர் சங்கம் (Y. M. M. A.) கிறிஸ்தவ இளைஞர் மன்றம் (Y.C.C.A.), இந்து இளைஞர் மன்றம், (Y.M.H.A.) முதலான பல நிறுவனங்களுடன் தொடர்புகொண்டு உதவி பெறலாம். இவற்றைவிட வெளிநாட்டு முக்கியமாக மேற்கு ஜெர்மனியின் ஆதரவுடன் இயங்கும் பட்டினி ஒழிப்பு இயக்கம் 'செடாக்' (Sedac) எனப்படும் நிறுவனம் என்பன உதவக்கூடிய நிறுவனங்களாகும்.

2. விவசாயத்திற்கு நிலமுடைய இளைஞர்களை இருபெரும் பிரிவாக பிரிக்கலாம்.

அ. **சொந்தத்தில் நிலமுடையோர்**

இப்பிரிவினுள் அடங்குவோர் யாருடைய அனுமதியையும் எதிர்பார்க்காமல் உடனடியாக ஆரம்பிக்கலாம் அவர்களுக்கு

ஏற்படக் கூடிய சிரமம் ஏனைய சக இளைஞர்களையும் பெரியோர்களையும் இம்முறையில் ஈடுபட தூண்டுவதில் மட்டும் தான் உள்ளது.

இத்தகையோர்களுக்கு உதவுவதற்கு பட்டினி ஒழிப்புச் சங்கத்தின் (Freedom from Hunger Movement) ஆதரவுடன் இயங்கும் 'அக்ரொஸ்கில்ஸ்' (Agroskills) நிறுவனம் முன் வந்துள்ளது. ஏற்கனவே இந்நிறுவனம் மன்னார்ப் பகுதிகளில் 'மக்டா' (Magda) எனப்படும் மன்னார் நிலநீர் அபிவிருத்திச் சங்கம் ஒன்றினை ஏற்படுத்தி சொந்தத்தில் காணி உள்ள இளைஞர்களுக்கு இத்தகைய குழுச்களை நிறுவுவதற்கு உதவுகின்றது. குறிப்பாக முசலி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலே மேத்தன் வெளி கிராமசேவயாளர் பிரிவின் ஏறக்குறைய 26 விவசாயக் குழுக்களை உருவாக்கியுள்ளது, இக்குழுக்கள் வற்றாத நல்லூற்றுள்ள திறந்த மேற்புற கிணறுகளின் (Open Wells) உதவிகளுடன் வருடத்தில் மூன்று போகம் பயிர்ச்செய்கையில் ஈடுபட தொடங்கியுள்ளன. சில குழுக்களில் 4 பேர்களும் வேறு சில வற்றில் 5 அல்லது 6 பேர்கள் அங்கத்தவர்களாக உள்ளனர். இந்நிறுவனம் மன்னார் மாவட்டத்தில் குழாய்க்கிணறுகளினால் (Tubed Wells) நீர்பாய்ச்சி பயிர் செய்யும் விவசாயக் குழுக்களையும் உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகின்றது.

ஆ. **அரசாங்க உதவியுடன் நிலம் பெற்றோர் இளைஞர்களுக்குரியவை**

(1) இளைஞர் குடியேற்றத் திட்டங்கள்.
(விஸ்வமடுக்குளம், மண்டலபுர, மன்னம்பிட்டிய)

(2) விவசாய அமைச்சினால் உருவாக்கப்பட்ட கூட்டுறவுப் பண்ணைகள்.
(கிலிமலே, லஸ்ஸனகம, பத்தேகம)

(3) காணிச்சீர்திருத்தச் சட்டத்தின் கீழ் உருவாக்கப்படும் குடியேற்றத் திட்டங்கள்.
(பச்சிலப்பள்ளி)

(4) பிரதேச அபிவிருத்தி சபையின் இளைஞர் கூட்டுறவுப் பண்ணைகள்.
(முற்கொம்பன்)

**பொதுப்படையானவை**

மேற்கூறிய இளைஞர் திட்டங்களைவிட இளைஞரையும் உள்ளடக்கியதாய் பொதுப்பட பெருங்குடியேற்றத் திட்டங்கள் நாடெங்கும் உள்ளன. இத்தகையத் திட்டங்களில் குழுமுறை உற்பத்தியினை திறம்படச் செயல்படுத்த முடியும். ஏனெனில் நிலவுடைமைகள் பெரிதாயும் சம அளவினதாயும் கட்டுப்பாடுள்ள நீர்ப்பாசன வசதியுடையதாயும் உள்ள சூழலில் குடியேற்ற வாசிகளை வசப்படுத்தி அவர்களின் ஒத்துழைப்புடன் அறிமுகப்படுத்த முடியும்.

குழுமுறை உற்பத்தியமைப்பினை தனியே நெற்பயிர்ச் செய்கைக்கு மட்டுமன்றி மேட்டு நிலப்பயிர்ச் செய்கைக்கும் கால்நடை வளர்ப்புக்கும் கூட பயன்படுத்திக் கொள்ளலாம்.

# விவசாய விரிவாக்க சேவைகள்

திரு. எஸ். எஸ். கணேசானந்தன்
(பிரதி இயக்குனர் கிராமிய கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு)

எக்ஸ்ரன்சன்......

ஆங்கிலத்திலே எக்ஸ்ரன்சன் என்னும் சொல்லுக்கு தமிழிலே பல்வேறு விதமாக சொல்கின்றோம்......விஸ்தரிப்பு, நீடிப்பு, விரிவாக்கம்...... எப்படிச் சொன்னாலும், அர்த்தம் ஒன்றுதான். அரசாங்க உத்தியோகத்தர்களைப் பொறுத்த வரையிலே எக்ஸ்ரன்சன் என்று சொன்னவுடனே அவர்கள் தங்கள் சேவையோடு அந்தச் சொல்லைச் சேர்த்துக் கொள்வார்கள். அவர்களைப் பொறுத்த வரையிலே சேவை நீடிப்பு...... இதையே எக்ஸ்ரன்சன் என்றசொல் குறிக்கின்றது. கைத்தொழில் அதிபர்களைப் பொறுத்த வரையில் எக்ஸ்ரன்சன் என்ற சொல், அவர்களின் கைத்தொழில்களை விசாலிப்பது என்ற அர்த்தத்தினை அவர்களுக்குக் கொடுக்கின்றது. சிறு கைத்தொழிலை மூலதனத்தைப் பெருக்கி வேலை செய்யும் தொழிலாளர்களைப் பெருக்கி, இயந்திர சாதனங்களை பெருக்கி, தங்கள் கைத்தொழில்களை பெருக்கும்போது அவர்கள் தங்கள் கைத்தொழிலை விசாலித்துக் கொள்கிறார்கள்...... ஆனால், கமத்தொழில் பற்றிக் குறிப்பிடும்போது, இந்த எக்ஸ்ரன்சன் என்ற சொல் பல அர்த்தங்களைக் குறிப்பிடுகின்றது. ஒரு விவசாயி தான் விவசாயம் செய்யும் நிலத்தை விரிவுபடுத்துவது, விவசாய அறிவை விரிவு படுத்துவது ஆகியவையே முக்கியமாக விவசாயத்தைப் பொறுத்த வரையிலே இந்த எக்ஸ்ரன்சன் என்ற சொல் சுட்டிக் காட்டுகின்றது. விவசாய விரிவாக்கம் அல்லது விஸ்தரிப்பு ஆகியவற்றிற்கிடையே உள்ள தொடர்பினை எடுத்துக் கூறுவதே என்னுடைய நோக்கமாகும். காரணம், இன்று விவசாயம் தான் எம் நாட்டிலே முக்கிய இடத்தைப் பெற்றிருக்கிறது.

இன்று உலகம் எங்கிலும் விவசாய அறிவைப் பெருக்கிக்கொள்ள எத்தனையோ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. முக்கியமாக விஞ்ஞானிகள் மனித சமுதாயத்துக்கு அத்தியாவசியமான இந்த விவசாயத்திலே ஆர்வம் காட்டுகின்றனர். காட்டவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. ஒவ்வொரு நாட்டிலும் விஞ்ஞானிகள் இதற்காக இரவு பகலாக உழைக்கின்றார்கள். புதிது புதிதாக தானிய வகைகள், நெல்லிலே எத்தனை வகைகள் கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றன. அந்தத் தானியங்கள் கூடுதலான விளைச்சலைத் தருவதற்கு அவற்றிற்குப் பாவிக்க வேண்டிய உரக்கலவைகள்...... தானியங்களை நோய்கள் தாக்காமல் இருக்க கிருமி நாசினிகள். களைகளை அழிப்பதற்கு களை நாசினிகள்...... இவற்றையெல்லாம் விஞ்ஞானிகள், கமத்தொழில் ஆராய்ச்சியாளர்கள் கண்டு பிடித்துக் கொண்டே இருக்கிறார்கள்...... உலகமெங்கும் ஜனத்தொகை பெருகி வருகின்ற இந்த வேளையிலே தானிய உற்பத்தி அதிகரிக்க வேண்டியது அவசியம். அந்தத் தானிய உற்பத்தியின் அதிகரிப்பினை விவசாயிகள் தனித்துச் செய்ய முடியாது. ஆராய்ச்சியாளர்களின் ஒத்துழைப்புடனேயே அது சாத்தியமாகும்.

இன்று யாழ்ப்பாணத்திலே விவசாயம் செய்யும் நிலப்பரப்பு அதிகரித்துள்ளது. நிலப்பரப்பு விசாலித்திருக்கிறது. இங்கே கூட அந்த 'எக்ஸ்ரன்சன்' என்ற

சொல் பயன்படுத்தப்படுகிறது. இது எப்படிச் சாத்தியமாகிறது. இங்கே தான் விஞ்ஞானிகள் மறைமுகமாக இந்த விஸ்தரிப்பிற்கு உதவி செய்திருக்கிறார்கள். ஒரு காலத்திலே விவசாயி தன்னையே நம்பியிருந்தான். தன்னுடைய உழைப்பினை நம்பி இருந்தான். அந்தக் காலத்திலே யாழ்ப்பாணத்து விவசாயி காலையிலே நாலு மணிக்கு எழுந்து வயலுக்குப் போவான். அவன் தோளிலே கலப்பை... மாடுகள் அவனுடன் கூடிப் போகும். அது மட்டுமன்றி கிணற்றிலிருந்து தண்ணீர் இறைக்க துலாவையும் மனிதர்களையும் அவன் நம்பியிருந்தான்... ஆனால் இன்று, விஞ்ஞானிகள் செய்த ஆராய்ச்சியின் பயனாக, வயலை உழ ட்ராக்டர்கள், தண்ணீர் இறைக்க தண்ணீர் பம்புகள்... விவசாயியின் வேலைபளு குறைக்கப்பட அவன் விவசாயம் நிலப்பரப்பு விசாலிப்பு அடைந்தது. ஆகவே, விஞ்ஞானிகள், ஆராய்ச்சியாளர்கள் இந்த எக்ஸ்ரன்சன் என்ற சொல்லை விவசாயத்தில் புகுத்த அரும்பாடு பட்டு இருக்கிறார்கள்... அவர்களுடைய சண்டு பிடிப்பு விவசாய விரிவாக்கத்திற்கு பெரும் துணை செய்துள்ளது... இப்போது இந்த விஸ்தரிப்பு என்ற சொல் விஞ்ஞான ரீதியாக விவசாயிகளிடம் எப்படிப் பயன்படுத்தப்படுகிறது என்பதை பார்க்கலாம்...இந்த விஞ்ஞானிகள், கமத்தொழில் ஆராய்ச்சியாளர்கள், கமத்தொழில் ஆராய்ச்சியாளர்கள் கண்ட கண்டுபிடிப்புகளை விவசாயிகளிடம் எடுத்துச் செல்வதே விஸ்தரிப்பு என்பதன் கருத்தாக அமைந்துள்ளது. உதாரணமாக ஆராய்ச்சியாளர்கள் ஆய்வு நடத்துகின்றனர். புதிய புதிய கண்டு பிடிப்புகளை செய்கின்றனர். இந்தக் கண்டு பிடிப்புகளை, அதாவது புதிய இராசயனப் பொருட்கள்... புதிய புதிய விதை தானியங்கள், புதிய புதிய உரக் கலவைகள், புதிய புதிய கால்நடை வகைகள்... இப்படியாக அவர்கள் ஆராய்ச்சி பரந்துபட்டுக் கொண்டே இருக்கின்றன. இந்த ஆராய்ச்சியின் பயன்களை விவசாயிகள் நன்மை கருதி அவர்களிடம் அதனைக் கொண்டு சென்று சேர்ப்பதே விசாலிப்பு, விஸ்தரிப்பு, விரிவாக்கம் என்ற சொற்களின் அர்த்தமாக அமைந்துள்ளது. இத்துடன் விஸ்தரிப்பு நின்றுவிடவில்லை. ஆய்வாளர்கள் விவசாயத்தை மேம்படுத்த கண்டு பிடிக்கப்படும் ஒவ்வொரு பொருளும் விவசாயி தன்னுடைய வயலுக்கு சரியான நேரத்தில் சரியான உரக்கலவையையோ புதிய தானிய விதைகளையோ, சரியான பரவப் பாவிக்கும் பயிற்சியைப் பெற்றுவிட்டால் விஸ்தரிப்பு அவன் மனதில் பதிந்துவிட்டதென்று அர்த்தமாகும்.

விஸ்தரிப்பு என்பது ஐந்து கட்டங்களைக் கொண்டுள்ளது.

1. முதலாவது உணர்தல்...... ஒரு விவசாயிக்கு அவனுடைய விவசாயத்திலே முன்னேற்றம் ஏற்பட வேண்டுமாயின் அவன் செய்ய வேண்டியவை யாவை என்பதை அறிய வைக்கவேண்டும். அவனுக்கு பழைய முறைகள் தெரிந்திருக்கலாம். ஆரம்பத்திலே துலாவை நம்பியிருந்த விவசாயி இப்போது வாட்டர் பம்பை வாங்கினான். அதை வேடிக்கை பார்த்த அதே விவசாயிகள்தான் பின்னர் வாட்டர் பம் தங்கள் விவசாயத்திற்கு அத்தியாவசியமானது என்று உணர்ந்தார்கள்...... எப்படியும் ஒரு வாட்டர் பம் வீட்டிலே இருக்க வேண்டுமென்று அதைப் பெறுவதற்கு அக்கறை காட்டினார்கள்...... இது அவர்கள் அனுபவ பூர்வமாக அறிந்த உண்மை. இதே போன்று விவசாயத்திலே உள்ள நுணுக்கமான விஷயங்களை விவசாயிகள் இதய பூர்வமாக ஏற்றுக் கொள்ளுதலே இந்த உணர்தல் என்பதாகும். இதனை உணர வைக்க என்ன செய்தல் வேண்டும். விவசாயிகளுக்கு இதனை அறிய வைக்க, தற்போது பயன்படுவது பிரசாரம்...... கமத்தொழில் பிரசாரத்திற்கு பல வழிகள் உள்ளன. பத்திரிகை சஞ்சிகை,

இவை படிக்காத விவசாயிகள் இருக்கிறார்கள். அவர்களுக்கு சுவரொட்டிகள் ஏதோ அரசியல் கூட்டம் என்றோ நாடகமென்றோ நினைத்த அந்தச் சுவரொட்டிகளை ஆர்வமுடன் பார்க்கும் ஒரு விவசாயிக்கு அந்தச் சுவரொட்டியில் தன் தொழிலைப் பற்றி எழுதியிருப்பதைப் பார்க்கும்போது அதனைப்படிக்க வேண்டுமென்ற ஆர்வம் எழும். சுவரொட்டி, துண்டுப் பிரசுரங்கள்...... இவைகளை விட இன்று இந்த விவசாய உணர்வை ஏற்படுத்தி வருகின்ற வேறு சாதனங்களில் வானொலி முக்கிய பங்கு வகிக்கின்றது. தொலைக்காட்சியும் இனிமேல் இந்த நாட்டில் பயன்படுத்தப்பட இருக்கின்றது. இது மட்டுமின்றி பொதுக் கூட்டங்கள், தனியார் கலந்துரையாடல்கள், கருத்துப் பரிமாறல்கள், செய்கை முறை விளக்கங்கள்...... இவைகள் இந்த உணர்தல் என்ற சக்தியை, விவசாயிகளுக்கு ஏற்படுத்த உதவுகின்றன.

இரண்டாவது மதிப்பிடுதல்...... கணித்தல்...... சரியா பிழையா... வானொலியிலே சொல்கிறார்கள்...... பத்திரிகைகளில் எழுதுகிறார்கள்...... பொதுக் கூட்டம் வைத்து இந்தக் கலவையைப் போடுங்கள்... இந்த விதையை விதையுங்கள் என்று சொல்கிறார்களே...... இவர்கள் சொல்லுவது சரியா பிழையா? அவன் மனதிலே பெரிய போராட்டம்...... இதுதான் அவன் தன் விவசாயத்தை விஸ்தரிக்க போகிறானோ இல்லையா என்பதை முடிவு செய்வதாக அமையும் கட்டம்... இந்தக் கட்டத்திலே அவன் எடுக்கும் முடிவு சரியான முடிவாக இருக்க அவன் இது பற்றிய கருத்தரங்குகளில், பொதுக் கூட்டங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்பினை ஏற்படுத்தல் முக்கியம். அடிக்க அடிக்க அம்மியும் நகரும் என்ற முதுமொழி இருக்கிறதல்லவா? இது நன்மை பயக்கும் என்று அடிக்கடி அவன் மனதிலே சொல்லிக் கொண்டிருக்கும்போது தான் ஏன் ஒரு முறை செய்து பார்த்தாலென்ன என்ற எண்ணம் அவன் மனதில் ஏற்படும்.. மற்றவர்கள் செய்கிறார்களே... நாமும் ஏன் ஒரு முறை செய்து பார்க்க கூடாது என்ற மனிதனுக்கே உள்ள இயல்பான பலவீன உணர்ச்சி அவனுக்கு ஏற்பட அவர் மனதைத் திடப்படுத்துகிறார்... சரி செய்து பார்க்கலாம்...என்று ஒரு பரீட்சை செய்ய வருகிறார் அந்த விவசாயி...

அடுத்த கட்டம்... பரிசோதனைக் கட்டம்...

அவர் தன்னுடைய வயலிலே சில இடத்திலே இந்தப் புதிய முறை விவசாயத்தை மேற் கொள்கிறார். அவர் தன் விவசாயத்தை விஸ்தரிக்கப் போவதற்கு இதுதான் முதற் கட்டம்... அப்படி அந்தப் பரிசோதனையை மேற்கொள்ளப் போகும்போது, அதுவும் அரை மனதுடன் அவன் செயலில் இறங்கும்போது, அவருக்கு தேவையான விதை, உரக்கலவை, கிருமிநாசினி... இவைகள் தங்கு தடையில்லாமல் கிடைக்க வேண்டும்... அப்போதுதான் அவர் தன் முயற்சியில் சிறிது ஊக்கம் காட்டுவார். இல்லையென்றால், இதென்னடா தொல்லை... உரக்கலவை இல்லை... கிருமிநாசினி இல்லை, களை நாசினி இல்லை என்று அவர் மனம் மாறிவிடக் கூடும்... ஆகவே, ஒரு பரிசோதனையில் இறங்கிய விவசாயிக்கு வேண்டியவற்றை கிடைக்கச் செய்வது விஸ்தரிப்பு உணர்வை மேலும் தூண்டி விடும் முக்கியமான கட்டமாகும்...

இனி பரிசோதனை முடிந்தது... அடுத்த கட்டம்... மறு சிந்தனை... கணிப்பு... மறு மதிப்பீடு... விவசாயி தான் போட்ட முதல் எவ்வளவு... செலவு எவ்வளவு...

விளைச்சல் எவ்வளவு... கிடைத்த லாபம் எவ்வளவு .. என்று கணிப்புச் செய்கிறான்... இந்தக் கணிப்புத்தான் அவனை புதிய விவசாய முறைகளைக் கைக்கொள்ளல் தனக்கு கூடுதலான பயனை அளிக்கும் என்ற நம்பிக்கையை ஊர்ஜிதப்படுத்துவதாகும். இந்த மறு கணிப்பிலே தனக்கு நன்மை ஏற்பட்டிருக்கிறதென்ற நம்பிக்கை வந்த பிறகு அந்த விவசாயி இந்த விரிவாக்கலை, விஸ்தரிப்பை ஏற்றுக் கொள்கிறான்... இது மற்றொரு கட்டமாகும்... ஏற்றுக்கொண்ட பிறகு, அவன் உரக்கலவையைத் தேடிப் போவான். கிருமிநாசினியை நாடிச் செல்வான். புதிய புதிய விதைகளின் உபயோகத்தில் மனம் செலுத்துவான்... இந்த ஏற்றுக்கொள்ளல் என்ற நான்காவது கட்டத்தின் இறுதிக் கட்டம்தான் அவனே ஒரு விஸ்தரிப்பு, விரிவாக்க உத்தியோகத்தராக மாறுதலாகும்... அவன் இந்த புதிய முறைகளை உத்திகளை தேடிச் சென்று படிக்க விரும்புவான். பரீட்சித்துப் பார்ப்பான். தான் அறிந்தவற்றை தன் நண்பர்களுக்கு, உறவினர்களுக்கு சொல்லிக் கொடுப்பதில் அவருக்கு ஒரு பெருமை. தான் பெற்ற அனுபவத்தை மற்றவர்களோடு பகிர்ந்து கொள்வதில் ஒரு மகிழ்ச்சி... இப்போது அந்த விவசாயி ஒரு விரிவாக்க உத்தியோகத்தராக மாறிவிட்டான்... இந்த விஸ்தரிப்பு என்ற சொல் விவசாயத்தின் மேம்பாட்டுக்கு உதவும் ஒரு சொல். எமது நாட்டில் நாம் உற்பத்தியிலே தன்னிறைவு காண்பதற்கு ஒரேயொரு வழி இந்த விஸ்தரிப்பு என்ற சொல்லின் அர்த்தத்தினை விவசாயி புரிந்து கொள்ளல் வேண்டும். விரிவாக்க உத்தியோகத்தர்கள் என்ற பணியினைச் செய்யும் கமத்தொழில் விரிவாக்க உத்தியோகத்தர்கள் புரிந்து கொள்ளல் வேண்டும்.

★

# இளைஞர்க்கான கடன் வசதியும் நிதி உதவியும்

திரு. கே. ஜெகநாதன்
உத்தியோகத்தர்—வங்கி மேற்பார்வைப் பிரிவு,
இலங்கை மத்திய வங்கி, கொழும்பு

இளைஞர்கள் என்று கூறும்போது பொதுவாகப் 18 வயதுக்கும் 25 வயதுக்கு மிடைப்பட்டவர்களையே கருதுகின்றோம். இதில் ஆண்களும், பெண்களும் அடங்குவர். இன்று இலங்கை சனத்தொகையில் 18 வயதுக்கும் 25 வயதுக்குமுட்பட்டோர் 20 சதவீதமாக உள்ளனர். இதன்படி கிட்டத்தட்ட 30 இலச்சம் இளைஞர்களும் யுவதிகளும் இந்நாட்டில் உள்ளனர். இளைஞர்களை அவர்களது நடவடிக்கைகளைக் கொண்டு (அல்லது தொழில்) மூன்று வகையினராகப் பிரிக்கலாம்.

(1) கல்வி கற்போர் ;— குறிப்பாக, பாடசாலைகளில் உயர் வகுப்புக்களிலும், பல்கலைக்கழகங்கள், தொழில்நுட்பக் கல்லூரிகள் தனிப்பட்ட போதனா பீடங்களில் கல்வி பயில்வோரை இது குறிக்கின்றது.

(2) வேலையற்றோர்கள் :— எத்தகைய தொழிலும் இல்லாமல் தொழிலுக்காக காத்து நிற்போர் இத்தகையோரையும் இரு பிரிவாகப் பிரிக்கலாம்.

(அ) படித்த வேலையற்ற இளைஞர்கள் — படித்தவர்கள் என்று கூறும்போது கல்விப் பொதுத்தராதர சாதாரண தரத்தில் சித்தியடைந்தோரும் அதற்கு மேல் படித்தவர்களையும் கருதும்.

(ஆ) படிக்காத வேலையற்ற இளைஞர்கள் கல்விப் பொதுத்தராதர சாதாரண தரத்தில் சித்தியடையாதோரும் அதற்குக் குறைவான கல்வியினைப் பெற்றோரையும் இது கருதும்.

(3) தொழிலில் உள்ள இளைஞர்கள்; — அரசாங்கம் மற்றும் அரசாங்க கூட்டுத்தாபனம் தனியார் நிறுவனங்களில் வேலை செய்வோரையும், சுய தொழில்களில் ஈடுபட்டுள்ளோரையும் இது குறிக்கின்றது.

இத்தகைய் மூன்று பிரிவினர்களுக்கும் கல்வி கற்போர் வேலையற்றோர், தொழிலில் உள்ளோர் ஆகியவர்களுக்கு எத்தகைய கடன் வசதிகள், நிதிவசதிகள் உண்டென்பதே எமது பிரச்சினையாகும்.

இலங்கையில் கடன், நிதிவசதிகளையளிப்போர் யார் ?

(1) அரசாங்கம்

(2) வர்த்தக வங்கிகள்

(3) தனியார் நிறுவனங்கள் / சங்கங்கள்

(4) தனிப்பட்டோர்

(5) வெளிநாட்டு அரசாங்கங்கள் அல்லது தனியார் நிறுவனங்கள்

அரசாங்கத்தினைப் பொறுத்த வரையில் உயர் கல்வி படிப்போருக்கு, குறிப்பாக பல்கலைக் கழகங்களில் படிப்போருக்கு நேரடியாக நிதியுதவி தந்தது ஆனல் பின்னர் வங்கிக் கடன் வசதி செய்து கொடுக்கப்பட்ட பின்னர் இது நிறுத்தப்பட்டது. தற்போது அரசாங்கம் வேலையற்ற இளைஞர்களுக்கு மாத்திரமே மாதாந்தம் ரூ 50/— என்ற அடிப்படையில் அவர்களது குடும்ப நிலவரத்தினடிப்படையில் நிதியினையளித்து வருகின்றது. பொதுவாக 300/— ரூபாவுக்கு குறைந்த மாத வருமானம் பெறும் குடும்பத்திலுள்ளோருக்கு, ஆகக் கூடுதலாக இச்சலுகையினையளித்து வருகின்றது. மற்றப்படி அரசாங்கம், கூட்டுத்தாபன மற்றும் தனியார் நிறுவனங்களில் வேலை செய்வோருக்கு வழமையாக கொடுக்கப்படும் கடன் நிதி சலுகைகள் இத்துறையில் உள்ள இளைஞர்களுக்கும் வழங்கப்படுகின்றது. உதாரணம் வீடு கட்டுவதற்குரிய கடன், வாகனம் வாங்குவதற்குரிய கடன், மற்றும் ஊழியர் சேமலாப நிதி போன்றது.

இவற்றினைவிட, அரசாங்கம் மேற்கொள்ளும் குடியேற்றத் திட்டங்களில் நிலம் பெறும் இளைஞர்களுக்கு அக்காணியினைத் திருத்தி, பயிரிட்டு வீடு கட்டி குடியிருக்க அரசாங்கம் நிதி வசதி செய்து கொடுக்கின்றது. முன்பு திட்ட அமுலாக்கலமைச்சுக்கு கீழ் இருந்த பிரதேச அபிவிருத்தி சபையானது (DDC) சில சிறிய செயற்திட்டங்கள் இளைஞர்களுக்காக மேற்கொண்டு அதற்குரிய நிதியினையளித்து மேற்பார்வை செய்து வந்தது. தற்போது இத்திட்டம் கைவிடப்பட்டுள்ளது.

(1) பல்கலைக்கழகத்தில் கல்வி பயில்வோருக்கு வருடாந்தம் 1250/– என்ற அடிப்படையில் அவர்கள் பல்கலைக் கழகத்திலிருந்து வெளியேறும் காலம் வரை (இது 3 முதல் 5 வருடங்களாகும்) இவ்வுதவியினை வழங்கி வருகின்றது. 1971 ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இத் திட்டத்தின்படி மக்கள் வங்கியும், இலங்கை வங்கியும் இக்கடனை வழங்கி வருகின்றன. இக்கடனைப் பெற்றுப் படிக்கும் ஒருவர், அவர் படித்து முடிந்த பின்னர் தொழிலைப் பெற்று மூன்று வருடத்திற்குள் அதற்குரிய வட்டித் தொகையுடன் இக்கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டும். வேலையின்றியிருக்கும் ஒரு பட்டதாரி அக்காலத்தில் இக்கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டிய அவசியமில்லை. இக் கடனைப் பெறுவதற்கு பெற்றோர் அல்லது பாதுகாவலர் பிணை நின்றால் போதுமானதாகும்.

(2) உத்தியோகத்தில் அல்லது தொழிலில் இருக்கும் ஓர் இளைஞர் சாதாரணமாக ஒரு தேவையின் பொருட்டு ஏதாவது ஒரு வணிக வங்கியில் கடனைப் பெறும் வாய்ப்புண்டு. இத்தொகை அவரது மாதாந்த வருமானம் அக்கடனை எடுக்கும் நோக்கம் என்பவற்றைப் பொறுத்து

வேறுபடுகின்றது. உதாரணமாக, 650/- மாத வருமானத்தினைப் பெறும் ஒருவர் தனது வீட்டினைத் திருத்துவதற்கு அல்லது ஏதாவது ஒரு வாகனத்தினை வாங்குவதற்கு 5000/- வினைக் கடனாகப் பெறலாம். இத்தொகையினை அவர் மூன்று வருடத்தில் வட்டியுடன் திருப்பிக் கொடுக்க வேண்டும். அவருக்கு வழங்கப்படும் தொகையானது அவர் வருமானத்தில் கிட்டத்தட்ட நான்கில் ஒரு பங்கு தொகை கடனையும், வட்டியையும் திருப்பிக் கொடுக்கக் கூடிய தொகை என்ற அடிப்படையில் நிர்ணயிக்கப்படுகின்றது. இதனடிப்படையில் வட்டியும் முதலுமாக $15\frac{1}{2}\%$ வட்டிப்படி 166/- மாதாந்தம் செலுத்த வேண்டும். எனினும் கொடுக்கப்படும் தொகையானது குறிப்பிட்ட வங்கி முகாமையாளரினால், வாடிக்கையாளரினது ஏனைய தகைமை போன்ற விடயங்களைக் கொண்டு தீர்மானிக்கப்படலாம். 25% வருமானப் பங்கு 20% மாகவும் கணிக்கப்படலாம். இத்தகைய சிறிய கடன்களை பொதுவாக எந்த நோக்கத்தைக் கொண்டும்-விவசாய அபிவிருத்தி, கைத்தொழில், முதலீடு நுகர்வு போன்றவற்றிற்காக எடுக்கலாம். தற்போது நுகர்வுக்காகக் கொடுக்கப்படும் கடன் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

நீண்டகாலக் கடனாக 20,000/- முதல் ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட தொகையினையும் ஒரு இளைஞர் பெறலாம். இது பொதுவாக 20 வருடங்களில் திருப்பிச் செலுத்த வேண்டும். இது பொதுவாக சொத்துப் பிணையின் அடிப்படையில் கொடுக்கப்படுகின்றது. முன்பு கூறிய சிறிய கடனுக்கு இருவர் பிணை நின்றால் போதுமானது. பிணையாக நிற்போர் அரசாங்க உத்தியோகத்தராயின் மாதாந்தம் 520/-க்கு மேற்பட்ட அடிப்படைச் சம்பளத்தினை பெறுபவராக இருக்க வேண்டும். அரசாங்க உத்தியோகத்திலில்லாதவர்கள் வருமானவரி கட்டுபவராக இருத்தல் சிறப்பானது.

(3) வேலையற்றோர் மற்றும் சுயதொழிலை மேற்கொள்ளும் சிறிய வருமானத்தினையுடையவர்களுக்கும் வங்கிகள் கடன் வழங்கி வருகின்றது.

(அ) வேலையற்ற இளைஞர் ஒருவர் விவசாயத்தில் ஈடுபடவிரும்பினால் அதனை மேற்கொள்வதற்கு வங்கிகள் கடனை வழங்குகின்றன. இவற்றினை மக்கள் வங்கி தனது கிளைகள் மூலமாகவும், கிராமிய வங்கிகள் மூலமாகவும் மற்றும் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகவும் வழங்குகின்றது. இலங்கை வங்கியானது விவசாய சேவை நிலைய் வங்கிக் கிளைகள் மூலமாகவும் (A. S. C. Branches) வழங்கி வருகின்றது. கடனாக வழங்கப்படும் தொகையானது குறிப்பிட்ட பயிர்களைப் பொறுத்தமைகின்றது. உதாரணமாக நெல் உற்பத்தி செய்வதற்கு ஏக்கருக்கு 1110/- கொடுக்கப்படுகின்றது. இத்தொகை 10 ஏக்கர் வரை கொடுக்கப்படுகின்றது. மழையை நம்பி விவசாயம் செய்யும் பிரதேசங்களில் இத்தொகை 980/- ஆகவுள்ளது. இத்தொகை பல்வேறு படிகளில் பிரித்து வழங்கப்படுகின்றது. அதாவது நிலத்தைப் பண்படுத்தி விதைக்க, பசளையிட, மற்றும் அறுவடை செய்தல் போன்றனவே இவையாகும். நெல்லைப் போன்றே பல்வேறு உப உணவு உற்பத்திகளான உருளைக்கிழங்கு, வெண்காயம், புகையிலை, மரக்கறி வகை போன்றவற்றிற்கு வழங்கப்படுகின்றது.

இவற்றைவிட சிறு தொழிலே மேற்கொள்ளும் இளைஞர்க்கு இத்தகைய கடன் வசதிகள் உண்டு. இத்தொகை ஒவ்வொரு தொழில்களையும் பொறுத்து வேறுபடுகின்றது. கூட்டுறவுச் சங்கங்கள் வழங்கும் கடனுக்கு அச்சங்கத்தின் அங்கத்தவர்கள் இருவர் பிணையாக இருக்க வேண்டும். மற்றும்படி வங்கிகள் வழங்கும் சிறிய கடன்களுக்கு 300/– வுக்கு மேற்பட்ட தொகையினை வருமானமாகப்பெறும் இருவர் பிணை நிற்பதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம். திருப்பிச் செலுத்தும் காலம் ஒவ்வொரு துறையைப் பொறுத்து வேறுபடுகின்றது. உதாரணமாக நெல்லிற்கு வழங்கப்படும் கடன் தொகை அதன் அறுவடை முடிந்ததும் முழுத் தொகையும், வட்டியுடன் செலுத்தப்பட வேண்டும். இக்கடன்களைப் பெறும் ஒருவர் தான் தொடங்க இருக்கும் தொழில் அல்லது விவசாய முயற்சியில் ஓரளவு அறிவுடையவர் என்பதனை நிரூபிக்கக் கூடியதாக இருக்க வேண்டும்.

(ஆ) இவற்றினைவிட நாளாந்த அடிப்படையில் இவ்வகையான கடன்கள் வழங்கப்படுகின்றன. காலே கொடுக்கப்படும் கடன் மாலே திருப்பிக் கொடுக்கப்பட வேண்டும். பின்னர் மறுநாட் காலே கடனை எடுக்கலாம். மக்கள் வங்கியே இத்தகைய கடனைக் கொடுத்து வருகின்றன. இதற்கு ''அத்துமாறு'' (Athamaru) முறை அதாவது ''கைமாற்று'' என்று கூறுகின்றனர். உதாரணமாக சிறு வியாபாரம் செய்ய விரும்பும் ஒருவர் காலே 9 மணிக்கு வங்கியில் 500/- கடனைப் பெற்று பின்னர் அக்கடனை மாலே 7 மணிக்கு முன்னதாக திருப்பிச் செலுத்தலாம். இதற்கு ஒரு சிறுதொகை வட்டியாக அறவிடப்படும். இக்கடனை வழங்கும் வங்கிக்கிளைகள் 7 மணி வரை வைப்புச் செய்யக் கூடியதாக திறந்திருக்கும். மீன் வியாபாரிகள் இக் கடனை நன்கு பயன்படுத்தி வருகிறார்கள்.

தனியார் நிறுவனங்கள் சில அதாவது சங்கங்கள், கழகங்கள் என்பன இளைஞர்களுக்கு உதவக் கூடியதாக சில சிறு திட்டங்களை மேற்கொண்டு வங்கியில் கடன் பெற்று அதனை நடத்தி வருகின்றன. இன்னும் நேரடியாக மாணவர்கள் கல்வி கற்பதற்கு நிதியளித்து வருகின்றன. இன்னும் சில சிறு தொழில்களை மேற் கொள்வதற்கு நிதிவசதி, செய்கின்றன. Rotory Club, Lions Club, Y.M.C.A., Y.M.B.A. C.W.C. போன்றன இவற்றில் குறிப்பிடத்தக்கன. நிதி நிறுவனங்கள் சில கடும் வட்டிக்கு பொதுவாக கடன் வழங்கி வருகின்றன. இளைஞர்கள் இதனைப் பெறுவதில் பல சிரமங்கள் இருப்பதோடு, அதனைப் பெறுவது இலாபகரமானதாகவும் இருக்காது. குறைந்தது 24% க்கு மேற்பட்ட வட்டியினையே இவை அறவிடுகின்றன. இத்தகைய கடன்கள் பொதுவாக அபிவிருத்தி நோக்கத்திற்காகவன்றி நுகர்வு தொடர்பாகவே வழங்கப்படுகின்றன.

தனிப்பட்டோர் என்று கூறும்போது வட்டிக்குக் கடன் வழங்குவோரையே கருதுகின்றோம். இது பொதுவாக ஆட்களினது அறிமுக அடிப்படையிலும், நகையினை ஈடு வைப்ப தன்மூலமுமே பெறப்படுகின்றது. சாதரணமாக 36%க்கு மேற்பட்ட வட்டியினையே இவர்கள் அறவிடுகிறார்கள். தொழிலை மேற்கொள்ள விரும்பும் ஓர் இளைஞருக்கு இவ்வகையில் கடனைப் பெறுவது இலாபகரமாக அமையாது.

வெளிநாட்டு அரசாங்கங்கள் தனியார் நிறுவனங்கள் என்பன உயர் கல்வி தொழிற் பயிற்சி போன்றவற்றிற்கு நிதிவசதி செய்கின்றன. பொதுவாக படித்த இளைஞர்கட்கே புலமை பரிசில் என்ற அடிப்படையில் வழங்குகின்றது. இவ்வசதிகள் இலங்கை அரசாங்கத்தினூடாகவே வழங்கப்படுகின்றன.

ஒரு குறிப்பிட்ட நாடு உதவியினை வழங்கும்போது நாளேடுகளில் அதனை விளம்பரம் செய்வதன் மூலம் இதனைத் தெரியப்படுத்துகின்றன. இதற்கு விண்ணப்பித்து நேர்முகப் பரீட்சைக்குத் தோன்றிய பின்னர் தகுதியானவர்கள் தெரிவு செய்யப்படுகிறார்கள். இளைஞர் வேலை வாய்ப்பு அமைச்சு இளைஞர்களுக்கான பல திட்டங்களை தற்போது தீட்டி வருகின்றது. இது தொடர்பான தகவல்கள் இன்னும் வெளியிடப்படவில்லை.

★

# இளைஞர்களும், சுய தொழிற் திட்டங்களும்

திரு. ரி. குமாரதாசன்

(உதவிச் செயலாளர், கிராமிய கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு)

சுயதொழிற் திட்டங்கள் யாவை என்பதை நாங்கள் முதற்கண் தெளிவாக விளங்கிக் கொள்ளல் வேண்டும். ''பொருளிலார்க்கு இவ்வுலகம் இல்லை'' என்று வள்ளுவன். அந்தப் பொருளைத் தேடுவதற்கு இந்த உலகில் இரண்டே இரண்டு மார்க்கங்கள் தான் உண்டு. முதலாவது பிறிதொருவரிடம் குறித்ததோர் வேதனத்திற்காகப் பணிபுரிவது, மற்றது, சுயமாக பணம் சம்பாதிப்பதற்குரிய வழி வகைகளை ஏற்படுத்திக் கொள்வது. கௌரவமாக வாழ விரும்பும் எந்தப் பிரஜையும் இந்த இரண்டு வழிகளில் ஒன்றைக் கட்டாயம் பின்பற்றியே ஆக வேண்டும்.

இன்றைய காலகட்டத்தில் சுய தொழிற் திட்டங்கள் மிக முக்கியமான இடத்தைப் பெற்றிருக்கின்றன. இதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. நாளாந்தம் வேலையற்றோர் தொகை நமது நாட்டில் பெருகிக் கொண்டே போகின்றது. இந்த வேலையில்லாத் திண்டாட்டம் எமது சமுதாயத்தில் ஒரு புதிய பிரச்னையை ஏற்படுத்தியுள்ளது. ஏறக்குறைய 15,20 ஆண்டுகளுக்கு முன்னால் சர்வகலாசாலையில் கல்வி கற்கும் ஒரு மாணவன் தனது பட்டப் படிப்பை மேற்கொண்டிருக்கும் காலத்தில், தான் சர்வகலாசாலையை விட்டு வெளியேறுமிடத்து நல்லதோர் தொழில் தன்னை நாடி வரும் என்ற நம்பிக்கையுடையவனாக இருந்தான். அவனது மனதில் அன்று அச்சமேதும் இருக்கவில்லை. ஆனால், இன்றைய நிலை என்ன? கல்வி கற்கும் இளைஞர்கள் யாவரும் தம்மைச் சுற்றி வியாபித்துள்ள சமூகப் பொருளாதாரப் பிரச்சனைகளை நன்கு அறிந்தவர்களாக இருக்கிறார்கள். தனியார் துறையிலோ, பொதுத் துறையிலோ, சீர்மையான வாழ்க்கைக்குத் தேவையான வருமானத்தைப் பெறக்கூடிய தொழில் வாய்ப்புகளைப் பெற்றுக்கொள்வதில் எத்தகைய சிரமங்கள், சங்கடங்கள் உண்டு என்பதை அவர்கள் அறிவார்கள். தன்னைத் தாங்களே ஏமாற்றிக் கொள்வதற்கு அவர்கள் தயாராக இல்லை. இத்தகைய சிந்தனை அவர்கள் மனதில் வேரோட ஆரம்பித்தது சுயதொழில் திட்டங்கள் என்ற கோட்பாடு பிரபல்யமடையக் காரணமாயிற்று. சுயதொழில் திட்டங்கள் முக்கியத்துவம் பெற்றிருப்பதற்கு மற்றுமொரு காரணம் கல்விகற்றோர் தொகையில் குறிப்பாக, தொழில்நுட்ப அறிவு பெற்றோர் தொகையில் மாபெரும் அதிகரிப்பு ஏற்பட்டிருப்பதாகும். விஞ்ஞான, சமூக, பொருளாதார மாற்றங்களினால் தொழில்நுட்பக் கல்வித் துறையில் ஏற்பட்ட விழிப்பும், தாக்கமும் தொழில்நுட்பக் கல்வியும் விஞ்ஞானக் கல்வியும் பெற்ற இளைஞர்களின் எண்ணிக்கையை எமது சமுகத்தில் அதிகமாக்கியது. தமது கல்விக்கும் தகுதிக்கும் திறனுக்கும் ஏற்ற தொழில் வாய்ப்பைப் பெறமுடியாது விரக்தியடைந்திருக்கும் இளைய தலைமுறையினரின் தாபங்களைத் தீர்க்கக் கூடியது சுய தொழிற் திட்டங்களேயாகும்.

இந்த நாட்டில் தொழில்நுட்ப ஆற்றல் படைத்த ஆர்வமும், ஊக்கமும் கொண்டு கடின உழைப்பை ஈந்து இந்த நாட்டின் வளத்துக்கும், தமது மேம்

பாட்டுக்கும் பாடுபடக் கூடிய ஒரு புதிய சுயதொழிலில் ஆர்வம் கொண்ட முத லீட்டாளர் வகுப்பினை உருவாக்குவதற்கு அரசாங்கம் பற்பல செயற்திட்டங்களை மேற்கொண்டுள்ளது. எனினும், இத்திட்டங்கள் பற்றிய விளக்கமும் அறி வும், அற்றவர்களாக எமது நாட்டு இளைஞர்கள் இருந்து வருகின்றார்கள். இதற்கு முக்கிய காரணம், என்னவெனில் இத்திட்டங்கள் பற்றிய தகவல் கள் எமது கிராமங்களின் வாசற்படிகளை எளிதில் சென்றடைவதில்லை. சுயதொழிற் திட்டமொன்றினை மேற்கொள்ளவிருக்கும் முதலீட்டாளர் ஒரு வர் தாம் முதற்கண் செய்ய வேண்டியது என்ன, முதலில் தொடர்பு கொள்ள வேண்டிய ஸ்தாபனம் யாது என்ற அடிப்படைத் தகவல்களைத் தானும் அறியாதவராக இருக்கிறார்.

சுயதொழில் திட்டங்கள் என்றால் என்ன? தற்போதைய காலகட்டத்தில் அவை ஏன் முக்கியத்துவம் வாய்ந்தன என இதுகாலும் அவதானித்தோம். இனி சுயதொழிற் திட்டங்கள் இளைஞர்கள் மேற்கொள்வதற்கு அரசாங்கம் எத்தகைய பயிற்சித் திட்டங்களையும் ஊக்குவிப்புத் திட்டங்களையும் ஏற்படுத்தியுள்ளது என் பதை அவதானித்தல் முக்கியமாகும். எமது நாட்டில் பல்வேறு அமைச்சுக்களின் கீழுள்ள வெவ்வேறு திணைக்களங்கள் சுயமாகத் தொழில் செய்து சம்பாதிக்கக் கூடியவகையில் இளைஞர்களை ஊக்குவிப்பதற்கு பல்வேறு பயிற்சித் திட்டங்களை வகுத்துள்ளன. இளைஞர் விவகார வேலைவாய்ப்பு அமைச்சின் கீழ் வரும் தேசிய தொழில் பயிலுனர் சபை, தேசிய இளைஞர் சேவைக் கவுன்சில் ஆதியன வேலை செய்யும் காலத்திலேயே பயிற்சியளிக்கும் வகையில் (on the job training) திட்டத் தின் கீழ் கல்வி தகுதி, ஆர்வம் ஆகியவற்றின் அடிப்படையில் இளைஞர்களைத் தேர்ந்தெடுத்து பயிற்சியளித்து வருகின்றது. நவீன தொழில்நுட்ப உத்திகளில் பயிற்சி பெறும் இந்த இளைஞர்கள் தங்கள் பயிற்சிக் காலம் முடிவடைந்ததும் விரும்பினால் தாம் பயிற்சி பெற்ற ஸ்தாபனத்தில் தொடர்ந்தும் கடமையாற்ற லாம், அல்லது அந்த நிறுவனத்திலிருந்து விலகி சுயமாக ஏதும் தொழிலை மேற் கொள்ளலாம். இதேபோன்று கட்டட தச்சுத் தொழிற்துறைகளில் தொழில் திணைக்களமும், நெசவுத் தொழிற்துறைகளில் புடவைக் கைத்தொழில் திணைக் களமும் சிறு கைத்தொழில்கள், கைவினைப் பொருள்கள் ஆகியவற்றில் சிறு கைத்தொழில் திணைக்களமும் கால்நடை உணவு பால் உற்பத்தித் துறைகளில் கால்நடை வளர்ப்பு திணைக்களமும் பயிற்சியளித்து வருகின்றன.

எத்தகைய சுய வேலைத்திட்டங்கள் மட்டக்களப்பு மாவட்டத்திற்கு ஏற்றவை என்று இங்கு நாம் அவதானிக்க வேண்டும். மட்டக்களப்பு மாவட்டத்தின் பிர தான தொழிற்துறைகள் விவசாயமும் கடற்றொழிலும் ஆகும். விவசாயத்தை ஆதாரமாகக் கொண்ட பாரிய தொழிற் திட்டங்கள் தற்போது அமுலில் இருந்து வருகின்றன. வைக்கோலை மூலப் பொருளாகக் கொண்டு காகிதம் செய்யும் பாரிய தொழிற்சாலை அங்கு உண்டு. விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட பண்ணைகளும், பாரிய நீர்ப்பாசனத் திட்டங்களும் குடியேற்றத் திட்டங்களும் அங்கு உண்டு.

எந்தத் துறையில் தனது காலத்தையும், திறமையையும் பணத்தையும் மூல தனமாக்கி வளம் பெற வேண்டும் என்று ஒரு சுயதொழிற் திட்ட முதலீட்டா ளர் சிந்திக்கும்போது, தன்னுடைய மூலதனம், சுய ஆற்றல், ஆர்வம் ஆதியவற்

ரோடு, குறித்த பிரதேசத்தில் மூலவளங்கள், குறித்த பிரதேசத்தின் தேவைகள் ஆகியவற்றை கவனத்திற்கெடுத்தல் அவசியமாகும். மட்டக்களப்பு மாவட்டத்தைப் பொறுத்தவரை பாரம்பரியமான விவசாயம், கடற்றொழில் ஆதியவை சார்ந்த சுய வேலைத் திட்டங்களோடு வேறு பல சுய வேலைத்திட்டங்களிலும் ஈடுபடக்கூடிய சாத்தியக்கூறுகள் பல உண்டு. இந்த மாவட்டத்தில் பல்வேறு பாரிய கட்டிட வேலைத் திட்டங்கள் ஏற்படுத்தப்படவிருக்கின்றன. இத்திட்டங்கள் அங்கு பல்லேறு உபதொழில்கள் ஏற்படுவதற்கு வழி செய்யும்.

மட்டக்களப்பு மாவட்டம் பாரம்பரியமாக பித்தளைக் கைவினைப் பொருட்களுக்கும், மட்பாண்டங்களுக்கும், கைத்தறி நெசவிக்கும் பெயர் பெற்றது. இவற்றைத் தவிர மூங்கில் பிரம்பு, தும்பு ஆகியவற்றை மூலப் பொருட்களாகக் கொண்டு உற்பத்தி செய்யக் கூடிய பொருட்களுக்கு இங்கு பெரும் வாய்ப்புண்டு. பாய் குடைதல், பண்ணை வேலை ஆகியவற்றிற்குரிய வினைத்திறன் இங்கு பெருகிக் காணப்படுகிறது. உப உணவுப் பொருட்கள் உற்பத்தி, தேனீ வளர்ப்பு ஆகியவற்றில் அதிக லாபம் சம்பாதிக்கலாம்.

மேற்கூறிய துறைகளை ஒரு உதாரணத்திற்காகக் கூறினேனேயொழிய சுய வேலைத்திட்டங்கள் இந்தக் கட்டு கோப்புக்குள் தான் அடங்கியிருக்க வேண்டுமென்ற கட்டுபாடு ஏதும் இல்லை. வருவாயைத் தரக்கூடிய தமக்குப் பிடித்தமான எந்த சுய வேலைத்திட்டத்தையும் எவரும் மேற்கொள்ளலாம். சுற்றுலாப் பயணத் துறையில் மட்டக்களப்பு மாவட்டம் துரித கதியில் முன்னேற்றம் அடைந்து வருகின்றது சுற்றுலாத் துறையோடு சம்பந்தப்பட்ட எத்தனையோ துறைகளில் படித்த வாலிபர்கள் ஈடுபடலாம். பயணிகள் விடுதிகளை ஏற்படுத்துதல், பிரயாண ஒழுங்குகளையும் மற்றும் பயண ஒழுங்குகளையும் மேற்கொள்ளும் ஸ்தாபனங்களை ஏற்படுத்துதல் ஆகிய துறைகள் பெரிதும் பயனளிக்க கூடியவையாகும்.

சுயவேலைத் திட்டங்களில் ஈடுபட விரும்பும் வாலிபர்களுக்கு வாணிபம் மற்றும் வர்த்தகம் மிகவும் இலாபகரமான துறைகளாகும். பெரும் வர்த்தக நிறுவனங்களிலிருந்து சிறு பெட்டிக்கடை ஈறுக சகல வர்த்தக நிலையங்களையும் இப்பிரிவு உள்ளடக்கும் தத்தம் ஆற்றலுக்கும் முதலீடுகளுக்கும் தக்கவாறு தமக்குரிய துறையினை இருவர் தேர்ந்தெடுத்துக்கொள்ளலாம். சலவைத் தொழிற்சாலை, முடிதிருத்தும் நிலையம் ஆகியவையும் இப்பிரிவில் அடங்கும்.

விஞ்ஞான, தொழில் நுட்ப கல்வி கற்ற இளைஞர்கள் தம் கல்விக்கேற்றதோர் வேலைத் திட்டத்தை மேற்கொள்ளலாம். இயந்திரங்கள் பழுதுபார்த்தல் / இயந்திரங்கள் தயாரித்தல் உதிரிப்பாகங்கள், இணைப்புப் பாகங்கள் தயாரித்தல் மின்சார உபகரணங்கள் தயாரித்தல் பெரிய கைத்தொழில் நிலையங்களிலிருந்து ஒப்பந்தங்களை பெற்று அவற்றை நிறைவேற்றுதல் ஆதியன இப்பிரிவினுள் அடங்கும்.

விவசாய அறிவும் ஆர்வமும் அதற்கேற்ற நிலமும் மூலதனமும் உடையவர்கள் விவசாயம் சம்பந்தப்பட்ட பற்பல சுயவேலைத் திட்டங்களை மேற்கொள்ள முடியும். உப உணவுப் பொருட்கள் உற்பத்தி, உணவுப் பொருட்களை பதனிடும் கைத்தொழில்கள், விதைகளிலிருந்து எண்ணெய் பெறும் கைத்தொழில்கள், கால் நடை வளர்ப்பு, கோழி வளர்ப்பு ஆகிய பல்வேறு துறைகளில் ஈடுபடலாம்.

மட்டக்களப்பு மாவட்டத்தைப் பொறுத்தவரை சமூக பொருளாதார அடிப் படையிலும் கிடைக்கக் கூடிய மூலவளங்களின் அடிப்படையிலும் மேற்கொள்ளக் கூடிய சுயவேலைத் திட்டங்கள் பற்றிய ஒரு மேலோட்டமான கருத்தினை உங்கள் முன் வைத்தேன். இனி சுயவேலைத்திட்டத்தை மேற்கொள்வதற்கு எந்தெந்த அம்சங்கள் அத்தியாவசியமானவை என்று அவதானித்தல் முக்கியமானதாகும்.

எந்தத் தொழிற் திட்டத்தை தொடங்குவதற்கும் மூலதனம் அத்தியாவசிய மானதாகும். பணமில்லாது எந்த முயற்சியையும் மேற்கொள்ள இயலாது. ஆகவே எந்த வேலைத்திட்டத்தையும் ஆரம்பிக்கும் முன்னர் தேவையான அளவு பணம், அது சொந்த மூலதனமாகவோ, அல்லது வங்கிப் கடனாகவோ தயாராக இருப் பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். அடுத்து முக்கியமான அம்சம் யாதெனில் நாம் மேற்கொள்ளப் போகும் வேலைத் திட்டத்திற்கு தேவையான நுணுக்கங்கள், தொழில் நுட்ப அறிவு ஆதியவற்றைப் பெற்றுக்கொள்வதற்கு ஸ்தாபன ரீதியாக ஏதும் ஒழுங்குகள் இருக்கின்றனவா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். இத்தகைய ஒரு உறுதிப்பாடு இல்லையெனில் நாம் செய்வது என்னவென்று தெரியாத ஒரு வேலைத்திட்டத்தை நாம் ஆரம்பிப்பதைப் போலாகி விடும். அத்துடன் மேற்கொண்ட வேலைத்திட்டம் ஸ்தம்பித நிலையை அடைந்து அதன்மூலம் எமக்குப் பெரு நஷ்டமும் ஏற்படலாம். அடுத்தது நாம் உற்பத்தி செய்யப்போகும் பொருட்களுக்குரிய சந்தைவாய்ப்பு எத்தகையது என்று அனு மானித்துக் கொள்ள வேண்டும். நல்ல சந்தை வாய்ப்பில்லாத பொருட்களை உற்பத்தி செய்தால் அவை விற்க முடியாதபடி தேங்கி அதனால் எமக்கு நஷ்டம் ஏற்படும். ஈற்றில் எமது வேலைத்தலத்தையே மூடிவிட நேரிடும். ஆகவே, நாம் உற்பத்தி செய்யப் போகும் பொருட்களுக்கு நல்ல சந்தை வாய்ப்பு இருக்கிறதா என் று அனுமானித்துக் கொள்ளுதல் மிக்க அவசியமாகும்.

அடுத்தது நாம் எமது தொழில் நிறுவனத்தில் வேலைக்கமர்த்தும் தொழிலா ளர்களை நாம் மேற்கொண்ட துறையில் நன்றாகப் பயிற்றுவித்து அந்தத் துறை யில் அவர்களைத் திறனுடையவர்களாக்கும் தகைமையை நாம் பெற்றிருக்க வேண் டும். அப்போதுதான் எமது நிறுவனம் மேலும் வளர்ச்சியடைந்து புதுப்புதுத் துறைகளில் ஈடுபட்டு தராதரத்திலும் உற்பத்தியிலும் புதிய இலக்குகளை அடை தற்கு வாய்ப்பாக அமையும்.

வளத்திலும், செல்வத்திலும், சிறப்பிலும் மட்டக்களப்பு மாவட்டத்தை ஒரு உன்னத நிலைக்குக் கொண்டு வருதல் இளைஞர்களாகிய உங்கள் கரங்களிலேயே உள்ளது. பெரிய திட்டங்களை நம்பியிராமல் – சிறுகக் கட்டி பெருக வாழ் என்ற பழமொழிக்கிணங்க சிறிய தொழிற்திட்டங்களை முதற்கண் மேற்கொண்டு அதிற் பெற்ற மூலதனத்தையும் பயிற்சியையும் துணையாகக் கொண்டு பாரிய சுய வேலைத்திட்டங்கள் ஏற்பட வேண்டுமென்பதே எமது அவா. தொழிலில் சிறுமை மேன்மை பார்க்காது, செய்யும் தொழிலையே தெய்வமாகக் கருதிச் செயற்பட் டால் எமது முன்னேற்றத்திற்கு எந்த இடையூறும் நேராதென்பது உறுதி.

★

# ஜனநாயக மரபுகளை பேணி வளர்த்தல்

திரு. ஆர் சிவகுருநாதன்
(பிரதம ஆசிரியர்–"தினகரன்"– லேக்ஹவுஸ், – கொழும்பு)

ஜனநாயக பாரம்பரியங்கள் அல்லது சம்பிரதாயங்கள் என்றால் என்ன? ஜன நாயக அமைப்பிலே, மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறைகள், வழக்கங்கள் சம்பிரதாயங்களாகின்றன.

புதிதாகத் தோன்றும் ஓர் இயல்பு சம்பிரதாயமாகாது. தொன்று தொட்டு நீண்ட காலமாக வழக்கில் இருந்தமுறை, முன்மாதிரியாகக் கொள்ளும் முறை என்பதனையே சம்பிரதாயம் என்கின்றோம். எனவே சம்பிரதாயம் வரலாற்று அடிப்படை கொண்டது – சமய சம்பிரதாயங்கள், சமூக சம்பிரதாயங்கள், அரசியல் சம்பிரதாயங்கள் என்று பல கூறுகளாக சம்பிரதாயத்தைப் பகுத்தாராயலாம். ஜனநாயக சம்பிரதாயம் என்கின்றபோது முக்கியமாக அரசியல் அடிப்படையிலேயே நோக்குதல் இயல்பு. சமூக சம்பிரதாயக் கலப்பும் காணப்படுவதும் சகஜமே.

ஜனநாயகக் கோட்பாட்டிலிருந்து பிறந்ததே ஜனநாயக சம்பிரதாயம். எனவே ஜனநாயக சம்பிரதாயத்தைப் பற்றிப் பேசு முன்னர் ஜனநாயகம் என்ன என்பதனை நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

ஜனநாயக ஆட்சி என்றால் மக்கள் தம்மைத் தாமே ஆள்வதனையே குறிக்கின்றது. முடியாட்சியை மட்டும் கண்ட மக்களுக்கு இது மாற்று ஆட்சி முறை, தனி நபர் அரசோச்சிய இடத்தில் மக்கள் தாமே தம்மை ஆளும் வகையே மக்கள் ஆட்சி அல்லது ஜனநாயகம். சனங்களே நாயகமாயிருக்கும் நிலை. அதாவது மக்களுக்காக, மக்களால் நடத்தப்படும் மக்களின் ஆட்சி. ஜனநாயகத்திலே மக்களே முக்கியமானவர்கள்.

ஜனநாயக ஆட்சி ஏதேச்சாதிகாரத்துக்கு எதிரானது. சர்வாதிகாரிக்கு இங்கே இடமில்லை. இவையெல்லாம் கோட்பாடுகள். செயல்முறையில் இக்கோட்பாடுகள் உண்மையென நிரூபிக்கப்படுகின்றனவா என்பது சர்ச்சைக்குரிய விஷயமே.

ஜனநாயக அமைப்பிலும் இன்று இருவகைகள் உண்டு – மேலைத் தேய ஆட்சி முறை. கீழைத்தேய ஆட்சி முறை. இரண்டிலும் மக்கள் ஆட்சியில் பங்கு கொள்கின்றார்கள். ஆனால் எவ்வளவுக்கு இவர்களது கருத்து ஆட்சிமுறை அமைப்பில் தாக்கம் செலுத்துகின்றது. என்பதில் கருத்து பேதம் இருக்கவே செய்கின்றது. கிழக்குலக சோஷலிச நாடுகள் தங்கள் ஆட்சிமுறையையும் ஜனநாயக அமைப்பென்றே கூறுகின்றன. Eastern Democracies, Socialist Democracies என்கின்றார்கள். ஆனால் ஜனநாயகம் என்று குறிப்பிடும்போது மேலைத்தேய ஆட்சி முறையையே பொதுவாகக் கொள்வர். மக்கள் தங்கள் பிரதிநிதிகளைத் தாமே தெரிவு செய்து, இவர்கள் நிர்வாக பரிபாலனம் செய்கின்ற முறை அதாவது பாராளு

மன்ற ஜனநாயகம் என்று சொல்லலாம். பாராளுமன்றத்தின் மூலம் மக்களே சட்டம் தயாரித்து நிறைவேற்றி, இவற்றை அமுல் செய்து, சட்டத்தை மீறும்போது நீதி வழங்கும் உரிமை பெறும் ஆட்சி முறை இது. எனவே மக்கள் தங்கள் வாக்குரிமையைப் பயன் படுத்தி ஆட்சியை நிர்ணயிப்பது முக்கியமானதோர் அம்சம். பொதுவாகக் கட்சி அடிப்படையில் தேர்தல் நடைபெறும். பெறும்பான்மையான இடங்களைப் பெறும் கட்சி ஆளும் கட்சியாகின்றது. அக்கட்சியின் பிரதமர் யார் என்று தீர்மானிக்கும். பெரும்பாலும் பெரும்பான்மையுள்ள அக்கட்சியின் தலைவரே பிரதமராவார். ஒன்றுக்கு மேற்பட்ட கட்சிகள் இணைந்து கூட்டரசாங்கம் அமைப்பின் இக்கட்சிகளின் முடிவின்படி ஒருவர் பிரதமராக பதவி ஏற்பார். பெரும்பாலும் இக்கட்சிகளுள் கூடிய அங்கத்தினர்களைக்கொண்ட கட்சியின் தலைவர் பிரதமராகலாம் திருமதி பண்டாரநாயக்கா பிரதமரானதை உதாரணமாகக் குறிப்பிடலாம்.

இந்த கட்சி அமைப்பிலே முக்கியமான ஓர் அம்சம் பெரும்பான்மையான முடிவே ஏற்கப்படும் என்பதாகும். 51 சத விகித வாக்கைப் பெறும் தீர்மானம் சபையின் தீர்மானமாகிவிடும். எதிர்த்து வாக்களித்த எதிர் கட்சியும் இதனை ஏற்கத்தான் வேண்டும். எதையும் நன்கு விவாதித்தே முடிவு காண்பது சம்பிரதாயமாதலின் பாராளுமன்ற அமைப்பிலே எதிர்க்கட்சி இருக்க வேண்டும்: நல்ல எதிர்க்கட்சி உருவாவது வரவேற்கப்படும். எதிர்க் கட்சியின் தலைவர் அமைச்சரைப் போன்ற முக்கியத்துவம் பெறுவார். விவாதம் பற்றிய ஒழுங்குகளை எதிர்கட்சி தலைவருடனும் பேசியே முடிவு செய்வர். இந்த சம்பிரதாயங்கள் அனைத்தினதும் அடிப்படை பொதுஜன அபிப்பிராயமும், இவ்வபிப்பிராயத்தை வெளிக்காட்டும் வாக்களிப்புமாகும். பொதுஜன அபிப்பிராயம் முக்கியமானதாதலின், இதனை நிதர்சனப்படுத்தும் பேச்சுரிமை, கூட்ட உரிமை, பிரசுர உரிமை ஆகியனவும் ஜனநாயக அமைப்பிலே முக்கியமாகின்றன. ஜனநாயகத்தின் அச்சாணி இவ்வுரிமைகளே. மக்களுக்கு உண்மை நிலையை எழுத்தின் மூலமும் பேச்சின் மூலமும் விளக்கி பொதுஜன அபிப்பிராயத்தை உருவாக்கி, இவ்வபிப்பிராயத்தின் வழியாக ஆட்சி முறையை மாற்றி அமைக்க வழிவகுத்து கொடுப்பது ஜனநாயகம்.

ஜனநாயக பாரம்பரியங்கள் எமது நாட்டில் இதுவரை, பாதுகாக்கப்பட்டே வந்துள்ளன. இன்றைய அரசாங்கம் சென்ற ஆண்டில் அமோக ஆதரவு பெற்று ஆட்சிபீடமேறியமை ஜனநாயகக் கோட்பாடுகளையும் பாரம்பரியங்களையும் எவ்வளவுக்கு எமது மக்கள் நேசிக்கின்றனர்கள் என்பதனை நிரூபிக்கின்றது. ஜனநாயகத்துக்கு ஆபத்து விளையுமோ என அஞ்சியதினாலேயே, ஜனநாயகத்தைப் பாதுகாப்பதாக உறுதியளித்த கட்சிக்கு, வாக்களித்தார்கள் அளித்த உறுதியை நிறைவேற்றும் என்று நம்பிக்கை கொண்டதால் அக்கட்சியினரையே ஒரே முகமாக ஆதரித்தார்கள். எமது வரலாற்றிலே முன்னெப்பொழுதுமில்லாத வகையில் இக்கட்சிக்குப் பெரும்பான்மை இடங்கள் கிடைத்தன.

ஜனநாயகக் கோட்பாடு எமக்குப் புதியதல்ல. புராதன காலத்தில் குழுக்களாக மக்கள் வாழ்ந்தபோது இக்குழுவுக்கு ஒரு தலைவன் இருந்தான். இங்கே பரம்பரைமுறை இருக்கவில்லை, அதாவது தாய் வழியாகவோ தந்தை வழியாகவோ தலைமைப்பதவி பின்வருவோருக்குச் செல்லும் உரிமை இருக்கவில்லை. வல்லமை மிக்கவன், விலங்குகள், எதிரிகளிடமிருந்து பாதுகாக்க வல்லவன் தலை

மையை ஏற்ற கால கட்டம் கழிந்ததும் குழுத்தலைவனைக் குழுவினரே தேர்ந்தெடுத்தார்கள். அவர் செல்லும் வழியிலே பிறர் தொடர்ந்தனர். இத்தலைவனே பிணக்குகளைத் தீர்த்தும் வைத்தார்.

இக்கட்டத்தின் பின்னர் குடியாட்சி தோன்றிற்று. குடியாட்சிக் கால நிர்வாகம் பற்றிக் கூறும் ஏடுகள் எம்மிடமுண்டு. தீப வம்சம், மகாவம்சம், சூள வம்சம் போன்ற பௌத்த குருமாரின் வரலாற்லேடுகள், சமய வரலாற்றைக் கூறும் வேளையில் நிர்வாக அமைப்பு பற்றியும் ஆங்காங்கு தெரிவிக்கின்றன. எமது வரலாற்றிலே சர்வாதிகார ஆட்சி நடத்திய மன்னர்கள் மிகக் குறைவு. எல்லோரும் ஆலோசகர்களையும் ஆலோசனை சபைகளையும் வைத்திருந்தார்கள். இறுதி முடிவுகள் செய்யும் பொறுப்பு அரசனிடமே இருந்தது. எனினும் இவ்வாலோசனைச் சபைகள் மூலம் மக்கள் கருத்து பெறப்பட்டது. அதிகாரிகள், மொஹட்டலாக்கள், திஸாவைகள் எலலோரும் மக்கள் சார்பில் ஆலோசனை கூறியவர்கள். சமூகத்தில் உயர் வரம்பில் இருந்தவர்களே இப்பதவிக்கு நியமிக்கப்பட்டவரெனினும், அரசன்தானே முடிவைச் செய்து தன் இச்சைப்படி, ஆட்சி செய்யாது மக்களின் கருத்தையும் பெற்று அதற்கிணங்க ஆட்சி செய்தார் என்பது ஜனநாயகக் கோட்பாட்டுக்கு அதாவது மக்களே தம்மை ஆட்சி செய்யும் முறைக்கு மரியாதை கொடுக்கப்பட்டது என்பதனைக் காட்டுகின்றது. ஆலோசனை சபைகளை விட ரட்டே சபா, கம்சபா என்ற நிறுவனங்களும் இருந்தன. இவை பிரதேச ஆட்சி அமைப்புகள். நிர்வாகத்தில் அவை பங்கு கொண்டன. வரி வசூல் செய்தல், விவசாய வேலைகளை கவனித்தல், தெரு அமைத்தல் போன்றவற்றோடு நீதி பரிபாலனமும் செய்தன என்று வரலாற்று ஏடுகள் குறிப்பிடுகின்றன. குற்றம் செய்பவர்களை தண்டித்தல் இவற்றின் அதிகாரத்திற்குட்பட்டது. திருடுபவருக்கு சவுக்காலடித்தல், மாடு திருடியவருக்கு குறி சுடுதல் போன்ற தண்டனைகள் வழங்கப்பட்டன. ஆலய விவகாரங்களும் இவற்றின் கீழ் வந்தன. இவை நிர்வாக அமைப்பில் இடம் பெற்றதனால் மக்கள் ஓரளவுக்குப் பங்கு கொள்ளக் கூடியதாயிருந்தது. இன்றுபோல உள்ளூராட்சிமன்றத் தேர்தல் வைத்து பிரதிநிதிகளை தெரிவு செய்து நேரடியாக நிர்வாகம் செய்யும் நிலை அன்றிருக்கவில்லையெனினும், நிர்வாகத்தில் பொது மக்களையும் இணைக்கும் கருத்து என்றும் இருந்தது என்பதனை இவை தெரிவிக்கின்றன. போர்த்துக்கேயரிலும் பார்க்க ஒல்லாந்தர் நிர்வாக அமைப்பில் கவனம் செலுத்தினார்கள். கிராமிய நிறுவனங்கள் இவர்களின் காலத்திலும் இயங்கின. இக்கால நீதி பரிபாலன முறையை இவர்களே ஆரம்பித்தார்கள். லான்ட் ரூட், ரூட்வான் ஜஸ்மம என்ற நீதிமன்றங்கள் நிறுவப்பட்டன, மக்கள் தமது கருத்தை தெரிவிக்க இவை சந்தர்ப்பமளித்தன. கவர்னர் கொர்னலீலியஸ் ஜின் சிமன்ஸ் சட்டத் தொகுப்பில் செய்தவற்றை நாம் மறக்க முடியாது. பழைய தோம்புகளைச் சேகரித்தார். சிங்கள சட்டத் தொகுப்பிலும் காணிகளின் உறுதிகளைத் தயாரிப்பதிலும் இவர் பணி போற்றத்தக்கது, எமது தேச வழமை சட்டத்தைக் கூட சட்டத் தொகுப்பாக்கித் தந்தவர் அவர். யாழ்ப்பாணப் பகுதியிலுள்ள பெரியார்களை அழைத்து மகாநாடு போல் நடத்தி அன்று வழக்கிலிருந்த சம்பிரதாயங்களை எழுத்தில் வடித்து சட்டத்தொகுப்பாக்கினார். அச்சட்டத்தை அனுசரித்தே இன்னும் யாழ்ப்பாணத் தமிழர் செல்கின்றனர்.

பிரிட்டிஷார் வந்த பின்பே தேர்தல் மூலம் பிரதிநிதிகளைத் தெரிவு செய்யும் முறை ஆரம்பமாயிற்று. பிரிட்டிஷ் ஆட்சியின் முற்பகுதியில் அதாவது பிரிட்

டிஷ் கிழக்கிந்தியக் கம்பெனியினர் கையிலிருந்து மாறி இந்நாடு முடிக்குரிய குடியேற்ற நாடானதும், சட்டசபை, நிர்வாக சபை என்ற இரு அமைப்புகள் தோன்றின. ஆரம்பத்தில் இச்சபைகளில் ஆங்கிலேயரே இருந்தனரெனினும் படிப்படியாக இலங்கையரும் இடம் பெறத் தொடங்கினர். மேலைத்தேயக் கல்வி அறிவு பெற்றவர்கள் நிர்வாகத்தில் பங்குரிமை கோரினார்கள். முன்பு போல ஆலோசனை செய்வதுடன் நிற்க விரும்பவில்லை. சட்டமியற்றுவதிலும், இவற்றைச் செயற்படுத்துவதிலும் பங்கு கோரினார்கள். காலகதியில் இலங்கைப் பிரதிநிதிகளுக்கு இடமளிக்கப்பட்டது. இவர்களின் எண்ணிக்கையும் சிறிது சிறிதாக அதிகரித்தது. டொனமூர் என்பவர் பிரிட்டிஷ் அதிகாரிகளால் அனுப்பப்பட்டார். டொனமூர் கமிஷன் இங்கு வந்து விசாரணை செய்தது. இலங்கை மக்களின் அபிலாஷையை உணர்ந்து கொண்டது. இதன் சிபார்சுகளின்படி அரசாங்க சபை (State Council) ஆட்சிமுறை உதயமானது சட்டமியற்றும் அதிகாரம் இதற்கு வந்தது. வாக்களிக்கும் உரிமை வழங்கப்பட்டதனால் இதன் அங்கத்தினர்கள் தெரிவுசெய்யப்பட்டார்கள். செயலாற்றும் அதிகாரம் மூன்று செயலாளர்களிடமும், அமைச்சர்கள் சபையிடமும் இருந்தது. பிரதம செயலாளர், நிதிச் செயலாளர், நீதிச் செயலாளர் ஆங்கிலேய கவர்னரின் நியமனங்கள். இத்துறைகள் நீங்கலாகப் பிற எமது பிரதிநிதிகளிடம் ஒப்படைக்கப்பட்டன. கவர்னருக்கு ரத்து அதிகாரம் இருந்ததெனினும், எம்மை நாமே ஆளும் உரிமை மேலும் கிடைத்தது என்பதனை மறுக்க முடியாது. இதன் அடுத்த கட்டம் சோல்பரி கமிஷன் சிபார்சால் ஏற்பட்டது. ஜனப்பிரதிநிதிகள் சபை, செனட் சபை ஆகிய இரு சபைகளைக் கொண்ட பாராளுமன்றம், அமைச்சரவை ஆட்சிக்காலம் வந்தது. சுதந்திரமும் கிடைத்து விட்டதனால், மக்கள் ஆட்சி ஆரம்பமானது. இதனைத் தொடர்ந்து இலங்கை குடியரசாகியது. பிரிட்டிஷ் தொடர்பே அற்றது. எனினும் பிரிட்டிஷ் ஆட்சி அமைப்பு முறை நிலவிற்று. ஜனாதிபதி ஆட்சி தோன்றியதும் நாம் பூரண சுதந்திர, மக்களாகி விட்டோம். இதுவரை செயலாற்றும் அதிகாரம் இல்லாதிருந்த ஜனாதிபதி இப்போது பூரண அதிகாரம் பெறுகின்றனர். இவ்வதிகாரத்தை மக்களே கொடுக்கின்றனர். எனவே மக்களின் பிரதிநிதியாக இவர் இருக்கின்றார். முக்கிய விஷயங்களை இவர் கவனிக்கப் பிரதமரும் மற்றும் அமைச்சர்களும் இதர விஷயங்களைக் கவனிப்பர். இவர்களை இயக்கும் சக்தி மக்களிடம் உண்டு. மக்களே இவர்களை உருவாக்கி இயங்கவும் செய்கின்றனர். எனவே ஜனநாயகம் இன்று பூரணமாகச் செயல்படுகின்றது.

இந்த ஜனநாயக அமைப்பு, இந்தப் பாரம்பரியம் பாதுகாக்கப்பட வேண்டுமா? இல்லையா? இதுதான் இன்றைய கேள்வி. பாதுகாக்கப்பட வேண்டும் என்பதனை மறுப்பவர் இரார் என்பதே எனது கருத்து. எனவே பாதுகாக்கப் பட வேண்டும் என்ற கேள்வி இந்நிலையில் எழுகின்றது. ஜனநாயகம் பாதுகாக்கப்படாவிடின் என்ன நிலை ஏற்படும்? நிச்சயமாக நாம் பழைய முடியாட்சி நிலைக்கோ, வேடர்களைப் போல, நாடோடிகளைப் போல குழு ஆட்சி நிலைக்கோ செல்ல மாட்டோம். இன்று வேறு அபாயங்கள் இருக்கின்றன.

ஜனநாயக வாழ்க்கைக்கு இன்று சவால் விடுகின்றன. இராணுவ எதேச்சாதிகாரம், கட்சி ஏதேச்சாதிகாரமும், ஜனநாயகத்தில் நம்பிக்கை கொள்ளாத கட்சிகளும் எம்மத்தியில் உண்டு. பாராளுமன்ற ஆட்சி முறை மூலம் சமூக' பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது. ஒரு கட்சி ஆட்சிக்கு வழிகோலும் சமூகப் புரட்சியின் மூலமே இவை சாத்தியமாகும் என்று கூறும் சக்திகளும் இன்று உள. குறிப்பாக கூறப்போனால் மார்க்ஸிய தத்துவ அடிப்படை

யில் பல கட்சிகள் இருக்கும் ஜனநாயக நிலை இயலாத விஷயமாகும். கம்யூனிஸ்ட் கட்சி ஒன்றே அனுமதிக்கப்பட்ட நிலையில், எதிர்க்கட்சி இருக்கும் என எதிர் பார்க்க முடியாது சோவியத் யூனியன், சீன மக்கள் குடியரசு, போலந்து, செக் கோஸ்லவாக்கியா போன்ற நாடுகளில் உள்ள நிலை நாமறிந்ததே. இந்நாட்டு மக்களைக் கேட்டால் இவ்வமைப்பை விரும்பக்கூடும். ஆனால் ஜனநாயக வாழ்க்கை அனுபவித்தவர்கள், இதனை ஏற்கமாட்டார்கள். ஒரே கட்சி எதேச்சாதிகாரத்தை அமைக்கும் முயற்சி 1971 ல் மேற்கொள்ளபபட்டதனை நாமறிவோம். உரிய நட வடிக்கைகளை எடுக்கத் தவறியிருப்பின் எமது வரலாறே மாறியிருக்கும்.

தமிழ்ப் பிரதேசத்திலே குறிப்பாக வடபகுதியில் ஜனநாயகத்துக்குச் சவால் விடுக்கும் நிலை சென்ற ஆண்டில் உருவானது. வடபகுதியில் ஒரு கட்சி மட்டுமே கூட்டங்களை நடத்தக் கூடியதாயிருந்தது. மொழிப் போர்வையில் இவ்வியல்பு தோன்றியதால் பலர் இதனைப் பொருட்படுத்தவில்லை. இதுவும் ஒரு கட்சிச் சர்வாதிகாரம் என்றுதான் கொள்ள வேண்டுமல்லவா?

ஜனநாயகத்துக்கேற்படக் கூடிய இவ்வாபத்துக்களைத் தடுப்பது இளைஞர் கடமை. இதனை எவ்வாறு சாதிப்பது? ஜனநாயக விரோத சக்திகள் வளர்ச்சி காண அனுமதிக்கக் கூடாது. தந்திரமாக அரசியல் அமைப்புச் சட்டத்தைத் திருத்த அனுமதிக்கக் கூடாது. ஜனநாயக சம்பிரதாயத்திற்காகப் போராடும் சகதிகளுக்கு உற்சாகமளிக்க வேண்டும். ஜனநாயக உரிமைகளின் மகத்துவத்தை மக்களுக்கு விளக்க வேண்டும். ஜனநாயக வாழ்வு மறைந்தால் ஏற்படக்கூடிய கஷ்டங்களை வகுத்துக் கூறி ஜனநாயகத்தை ஒழிக்க முனையும் சக்திகளை எதிர்க் கும் அணையைப் பலப்படுத்த வேண்டும். ஜனநாயகம் இன்றி அபிவிருத்தி இல்லை. சுதந்திர மக்களே எமது நாடு போன்றவற்றில் அபிவிருத்தி காண முடியும்.

★

# சூழலைப் பாதுகாத்தல்

பேராசிரியர் சோ. செல்வநாயகம்

(தலைவர், புவியியற்றுறை, இலங்கைப் பல்கலைக் கழகம், யாழ்ப்பாண வளாகம்.)

அண்மைக் காலப்போக்கினைப் பார்க்கும் பொழுது மனிதனுக்கும் சூழலுக்குமிடையில் ஒருவகை இயைபின்மை ஏற்பட்டு வருவதைக் காணமுடிகின்றது. இந்த முரண்பாடு எதிர்காலத்தில் மேலும் மேலும் அதிகரித்து இதனால் பல பலபிரச்சினைகளைத் தோற்றுவிக்கும் என்று எண்ணஇடமுண்டு. குறித்த ஒரு அளவான நிலப்பரப்பில் மக்களது தொகை மிக மிஞ்சிய அளவாக அதிகரித்து வந்ததே இதற்குக் காரணமாகும். அதிகரித்து வரும் மக்களின் தேவைகளுக்காகப் புதிய முறையில் விஞ்ஞான அறிவையும் தொழில் நுட்பத்தையும் கையாண்டு உலகிலுள்ள வளங்கள் எல்லாம் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. முன்பு ஓரளவுக்கே பயனுள்ள பகுதிகள் என்று கருதப்பட்ட பகுதிகளும் இப்பொழுது மக்களின் தேவைக்காகப் பயன்படுத்தப்படுகின்றன.

உலகில் ஏறத்தாழ 40 வீதமான நிலப்பகுதி மட்டுமே பயனுள்ள பகுதியாகும். இந்தப் பகுதியே அதிகம் பாதிப்புக்கு உட்பட்டு வருகின்றது. இப்பகுதியில் சூழல் தொகுதிகள் படிப்படியாகச் சிதைந்து அழிந்து வந்திருப்பதோடு, பல பாலூட்டும் விலங்குகள், தாவரங்கள் என்பனவும் அழிந்துவிட்டன.

உலகில் குடிசனத்தொகை இன்று விரைவாகப் பெருகி வருகின்றது. சராசரியாக வருடத்தில் இரண்டு வீதத்திற்குமதிகமாகக் குடித்தொகைப் பெருக்கம் ஏற்படுவதனால் ஏறத்தாழ 35 வருட காலத்தில் உலகின் மொத்தக் குடித்தொகை பெருகுகின்றது என்றால் அதே அளவுக்கு வளங்களும் பயன்படுத்தப்படுகின்றன என்று கருதவேண்டும்.

கிறுஸ்துவுக்கு முன்பு 8000 வரையில் உலகின் மொத்தக் குடித்தொகை ஏறத்தாழ 5 மில்லியனாக இருந்தது. இத்தொகை கி. பி. 1650 வரையில் 500 மில்லியனாக அதிகரித்தது. 1850 வரையில் இத்தொகை இரண்டு மடங்காகப் (1000 மில்லியன்) பெருகியது. 1930 ஐ அடுத்து இதுமேலும் இரட்டித்தது (2000 மில்லியன்). இப்பொழுது இத்தொகை 4000 மில்லியனாக அதிகரித்திருப்பதோடு, இரட்டிக்கும் காலம் 35 வருடமாகவும் இருக்கிறது. குடித்தொகை 500 மில்லியனிலிருந்து 1000 மில்லியனாக 200 வருடகாலம் சென்றது. ஆனால் இப்பொழுது 35 வருட காலத்தில் இரட்டிக்கின்றது. சமூக பொருளாதார நிலைமைகளில் ஏற்பட்ட மாற்றங்களும் மருத்துவ — சுகாதாரத் துறைகளில் ஏற்பட்ட மாற்றங்களும் பிறவும் இறப்பு வீதம் குறைந்து குடித் தொகை பெருகக் காரணமாயின. உலக நாடுகளின் குடித்தொகை பெருக்க நிலைமைகளில் மாற்றங்கள் ஏற்படாதவிடத்து மொத்தக் குடித்தொகை 2000 ஆண்டளவில் 7000 மில்லியனுக்கும் மேலாக அதிகரித்து விடலாம் என்று எண்ண இடமுண்டு. குடிப் பெருக்கம் ஆசிய – ஆப்பிரிக்க – லத்தீன் அமெரிக்க நாடுகளிலேயே அதிகமாக ஏற்

பட்டு வருகின்றது. குறைவிருத்தியுடைய நாடுகளில் இவ்வாறு ஏற்படுவதனுல் மக்களின் வாழ்க்கை வசதிகள் சீராக அமைய வாய்ப்பு இல்லாது போய்விடும்.

இவ்வாறு பெருகி வருகின்ற மக்களுக்கு ஏற்ற அளவில் நில வசதிகளும் ஏனைய வளவசதிகளும் உண்டா? உலகின் நிலப்பகுதி 58.4 மில்லியன் சதுர மைலாகும். 1971 ஆம் ஆண்டுக் குடித்தொகையை நிலப்பகுதியோடு ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது சதுர மைலுக்குரிய சராசரி அடர்த்தி 64 பேராக உள்ளது. இதன்படி ஆளொன்றுக்கு 10 ஏக்கர் நிலம்வரை உண்டு. ஆனுல் உண்மையான நிலை இதுவல்ல. உலகம் முழுவதும் நிலம் ஒரே மாதிரியாக இல்லை. தரைத் தோற்றம், காலநிலை, தாவரவகை, மண்வகை, நீர்வளம் முதலான தன்மைகள் அதிக அளவுக்கு வேறுபட்டே காணப்படுகின்றன. இதனுல் மக்கள் பரம்பலோ அல்லது சதுரமைலுக்குரிய அடர்த்தியோ ஒரேமாதிரியாக இருக்க மாட்டாது என்பது தெளிவாகிறது.

உலகின் மொத்த நிலப்பகுதியில் ஏறத்தாழ 30 வீதமான பகுதியே ஓரள வுக்குப் பயிர்ச் செய்கைகைக்குப் பயன்படுத்தக்கூடிய நிலமாகும் 20 வீதமான நிலம் பயிர் செய்யமுடியாத மலைகளை உள்ளடக்கிய நிலமாகும். 20 வீதமான நிலம் பாலைநிலங்களையும் வறண்ட ஸ்ரெப்ஸ் புல் நிலங்களையும் அடக்கியுள்ளது. இன்னும் 20 வீதமான நிலத்தில் பனிக்கட்டி படலங்கள் நிரந்தரமாக படிகின் றன. (இதில் 6 மில்லியன் சதுர மைல் பரப்பையுடைய அந்தாட்டிக்காகவும் அடங்கும்) எஞ்சிய 10 வீதமான பகுதி ஓரளவுக்குப் பயிர்ச் செய்கைக்கு ஏற்ற தாயினும் தற்பொழுது பயிர்ச் செய்கைக்குப் பொருத்தமற்ற மண் வகைகளையே கொண்டுள்ளது.

முதலில் குறிப்பிட்ட பயிர்ச்செய்கைப் பயன்பாட்டிற்கு ஓரளவுக்குப் பொருத்தமான 30 வீதநிலத்தில் மூன்றிலொரு பகுதியே இன்று உண்மையில் விவசாய நடவடிக்கைகளுக்குப் பயன் படுத்தப்படுகிறது. உலக ரீதியாகப் பார்க் கும்பொழுது இது ஆள் ஒன்றுக்கு ஒரு ஏக்கர் நிலமாக இருக்கும்.

உலகின் நிலப்பகுதியில் பெரும்பாகம் மக்கள் வாழ்வதற்கு ஒவ்வாத பகுதி யாக இருக்கின்றது பனிகட்டிப் படலங்கள், மலைகள், குத்தான சரிவுகள், பாலை நிலங்கள், சதுப்பு நிலங்கள் என்பனவற்றைக் கொண்டுள்ளதனுல் இப்பகுதி பொருத்தமற்றதாய்க் காணப்படுகின்றது.

இக்காரணத்தினுல் மக்களின் பரம்பலில் செறிவும் செறிவின்மையும் காணப் படுகின்றது. பொருத்தமான நில—நீர் வளங்களையுடைய பகுதிகளிலேயே குடிச் செறிவு அதிகமாகும். இம்பகுதிகளிலுள்ள வளங்களை மிகையாகப் பயன்படுத்தப் பட்டே வருகின்றன. போட்டியான முறையில் நிலப்பயன்பாடு அமைவதையும் காணலாம். விவசாயத்திற்கு மிகவும் பொருத்தமான நிலம் பட்டினவாக்கம்; போக்குவரத்து பாதைகள், வர்த்தக தேவைகள் முதலான பயன்பாடுகளுக்குப் பயன் படுத்தப்பட்டு வருவதையும் காணுகின்றோம்.

நிலத்தைப் போன்றே சக்திப் பொருள்கள் (நிலக்கரி, நிலநெய், இயற்கை (வாயு) முதலியனவும் விரைவாகப் பயன் படுத்தப்பட்டு வருகின்றன. எரிபொருள் தட்டுப்பாடும் விலைவாசி அதிகரிப்பும் இப்பொழுது உலக ரீதியாகக் காணப்படு

கின்றன. அணுசக்தி உற்பத்தி அதிகரித்து வந்துள்ள பொழுதும் உற்பத்திச் செலவு, சூழல் பாதிப்பு என்பன காரணமாக இதனைப் பரவலாகப் பயன்படுத்து வது கடினமாகும். நீர் மின்சக்தியும் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டது. இதன் உள்ளார்ந்த வளம் பெரும்பாலும் கைத்தொழிலாளர்களும் பயன்பாடும் குறை வான மூன்றும் உலக நாடுகளிலேயே காணப்படுகின்றது. சூரிய ஒளியிலிருந்தும் காற்றிலிருந்தும் சக்தியை உற்பத்தி செய்ய முடியுமாயினும் அதுவும் பரவலாகப் பயன்படுத்தக் கூடிய ஒரு சாதகமாக இல்லை. எனவே குடித் தொகையில் ஏற் பட்டுவரும் மிகையான பெருக்கத்திற்கு அதிக அளவு எரிபொருள் சக்தி தேவை யாக உள்ள நிலையில் இது தேவைக்கு ஏற்ற அளவில் இல்லாதிருப்பதும், அதிக செலவையும் சூழல் பாதிப்பையும் ஏற்படுத்தக் கூடியதாகவும் உள்ளது.

உணவு உற்பத்தியையும் ஏனைய வளப்பயன்பாடுகளையும் பற்றி அடுத்து நோக்குவது பொருத்தமாகும். பெருகிவரும் குடித்தொகையின் தேவைக்காக நிலம், நீர், மண்வகை என்பன மிகமிஞ்சிய அளவில் இன்று பயன்படுத்தப்படு கின்றன. பல நாடுகளில் குறிப்பாக மிகையான குடித்தொகையுடைய ஆசிய ஆபிரிக்க நாடுகளில் பட்டினியும் பஞ்சமும் பெருகி வருகின்றன. இதனால் உடல் நலக்குறைவும் நோய்களும் பரவி வருகின்றன. விவசாயத்தில் புதிய முறைகள் புகுத்தப்பட்டு உற்பத்தி பெருக்கப்பட்டு வருகின்றபொழுதும் மிகமிஞ்சிய மக்கள் பெருக்கம் எப்பொழுதும் உற்பத்தியில் பற்றாக்குறை நிலையை ஏற்படுத்தி விடு கின்றது.

கடல் வளத்தின் வருவாயும் குறிப்பாக மீன் உற்பத்தி பெருக்கப்பட்டு வரு கின்றது. இதனால் உலகிலுள்ள குடித்தொகையில் 15 வீதமான தொகையினர் அத்தியாவசியமான விலங்குப் புரதச் சத்தை மீன் மூலம் பெற முடிகின்றது.

உலகின் நீர் வளமும் விவசாயம், விலங்கு வளர்த்தல் கைத்தொழில்கள், நீர் மின்சக்தி முதலான தேவைகளுக்காகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. மிக மிஞ்கிய அளவில் நீரைப் பயன்படுத்துவதனால் நீர்வளமும் பல பகுதிகளில் பாதிக்கப்பட்டு வருகின்றது.

உலகின் பல பகுதிகளில் காடுகள் அளிக்கப்பட்டு வருகின்றது. எரிபொருள் மரத்தேவைகள், கடதாசித் தொழில் முதலான தேவைகள் அதிகரித்தமையால் காடுகள் அதிக அளவில் அழிக்கப்பட்டு வருகின்றன. இதனால் காட்டுவளம் மல்லாமல், ஆறுகளின் நீர் தாங்கு பரப்பும் பாதிக்கப்பட்டு நீர்வளம் குன்றவும், மண்ணரிப்பு முதலியவற்றால் நீர்வளம் அழிந்துவிடவும் நேரிடும்.

மிகையான குடித்தொகைப் பெருக்கத்தினால் கனிப்பொருள் வளங்களும் விரை வாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

இன்று உலகில் நிகழும் இத்தகைய போக்கினால் சூழல் தொகுதிகள் (Ecosystems) சிதைவுற்று வருவதும் இதனால் பலவிதமான பிரச்சினைகள் பெருகி வருவதும் கண்கூடு. இத்தகைய சூழற்சிதைவுகளினால் மக்களின் உடல் நலம் நேரடியாகப் பாதிக்கப்படுவதோடு, மூலவளப்பயன்பாடும் பாதிக்கப்பட்டு மக்களின் முழுமை யான வாழ்க்கை நிலையும் (Quality of Life) சிதைவுற நேருகின்றது. முக்கியமான சில அம்சங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

(1) வளிமண்டலம் மாசுபடல் (**Air Pollution**)

கைத்தொழிலாக்கமும் பட்டினவாக்கமும் அதிகமாகவுள்ள மேலைத் தேச நாடுகளிலேயே இது பெரும்பாலும் ஏற்பட்டுள்ளது. இது படிப் படியாக பூமியைச் சூழவுள்ள முழுவளிமண்டலத்தையும் பாதித்து வரு கின்றது என இப்பொழுது விஞ்ஞானிகள் கருதுகின்றனர்கள். தொழிற் சாலைகளிலிருந்தும் போக்குவரத்து வாகனங்களிலிருந்தும் வெளியேறும் நச்சுப் புகையே இதற்கு முக்கிய காரணமாகும். இதனால் மக்களின் பலவகையான சாதனங்கள் பாதிக்கப்படுவதோடு சுவாசித்தலோடு தொடர்பான நோய்களும் மக்களைப் பாதிக்கின்றன. பலவகையான இரசாயனப் பொருள்களின் சேர்க்கையினால் இது ஏற்படுகிறது.

(2) நீர் மாசுபடுதல் (**Water Pollution**)

மக்களின் கழிவுப் பொருள்கள் நீர்நிலைகளில் தள்ளப்படுவதனாலும், கைத்தொழிலாலைகள் முதலியவற்றிலிருந்து கழிவுப் பொருள்கள் நீர் நிலைகளில் விடப்படுவதனாலும் குடிநீர், பிறதேவைகளுக்கான நீர், மீன் வளர்த்தற்கான நீர் (ஆறுகள், ஏரிகள், கடற்கரைகள்) முதலியன மாசு படுகின்றது.

(3) கழிவுப் பொருள்கள் சேர்க்கப்படுதல் (**Solid Waste**)

வெற்றுப் போத்தல்கள், உலோகப் பொருள்கள், பிளாஸ்ரிக் பொருட் கள் முதலியனவும் பிறவும் பட்டினங்களைச் சார்ந்தும் ஆலைகளைச் சார்ந் தும் கழிவுப் பொருள்களாகச் சேர்க்கப்படுகின்றன. இவற்றோடு கைவிடப் பட்ட பழைய வாகனங்கள் முதலியனவும் சேர்ந்து சூழலைப் பாதிக் கின்றன.

(4) இரசாயனப் பொருள்களினால் ஏற்படும் பாதிப்பு
(**Pesticides and other Compounds**)

DDT முதலான பொருள்களும் வேறும் பல விவசாய இரசாயனப் பொருள்களும் நீர்நிலைகளையும் கடற்கரையோரங்களையும் பாதித்து வருவ தோடு பயிர்வகைகள் உயிரினங்கள் ஆகியவற்றையும் பாதிக்கின்றன. குடிநீர், மீன்வகைக்கு வேண்டிய நீர் நிலைகள், கடற்கரையோர நீர்ப் படுக்கைகள் முதலானவையும் பெரும்அளவுக்குப் பாதிக்கப்பட்டுள்ளன.

(5) உலோக வகைகளால் ஏற்படும் பாதிப்பு (**Pollution of Heavy Metals**)

ஈயத்தால் ஏற்படும் நச்சுத் தன்மை, மெர்க்கூரியினால் ஏற்படும் நச் சுத் தன்மை என்பனவும் பிற கடின உலோகவகைகளும் மக்களுக்கும் விலங்கினங்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்துகின்றன.

(6) கதிர்வீச்சினால் ஏற்படும் பாதிப்பு (**Radiation Effects**)

கதிர்வீச்சுத் தாக்கங்களுள்ளும் அணுச் சக்தி உபயோகத்தால் ஏற் படும் பாதிப்பு முக்கியமானதாகும். அணுச்சக்தி உலைகள், உபயோகங் கள் என்பனவற்றால் இத்தகைய தாக்கங்கள் உண்டாகின்றன.

(7) சத்தத்தினால் ஏற்படும் தாக்கம் (**Noise Pollution**)

வேகமான போக்குவரத்து வகைகள் காரணமாக மக்களின் உடல் நலத்தைப் பாதிக்கும் வகையில் இத்தாக்கம் ஏற்பட்டு வருகின்றது.

(8) பட்டினவாக்கத்தால் ஏற்படும் பாதிப்பு (**Urban environmental Effects**)

குடிசன நெருக்கத்தினாலும் தேவைகளினாலும் பலவகையான பாதிப்புக்கள் ஏற்படுகின்றன. இறுதியில் இவை சமூக பொருளாதார நலிவுகளாக மக்களைப் பெரிதும் பாதிக்கின்றன.

மேற்குறித்த இத்தாக்கங்கள் சூழல் தொகுதிகள் சிதைவுறுவதால் நிகழ்வனவாகும். குடித்தொகை பெருகப் பெருக, தேவைகள் பெருகுகின்றன. நம்தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கான நிலநீர்வளங்களை மேலும் மேலும் பயன்படுத்த விழைவதனால் சூழல் பாதிக்கப்படுகின்றது. இதனால் சூழல் மாற்றமடையவும் மக்கள் பாதிக்கப்படவும் காரணமாகிறது. எனவே, இத்தகைய பாதிப்பினை ஆராய்ந்து ஏற்ற வழிவகைகளை மேற்கொள்ளுதல் அவசியமாகும். குடித்தொகையைக் கட்டுப்படுத்துவதோ புதிய விஞ்ஞான அறிவையையும் தொழில்நுட்பத்தினையும் சூழல் இயைபுகளுக்குப் பொருந்தப்பயன்படுத்துவது அவசியமாகும்.

★

## கருத்தரங்க அமைப்பாளர்கள் :

கலாநிதி டீ. வெகும்பெரும
*இயக்குநர், இ.ம.க.*

கலாநிதி ரோல்வ் பீற்றர் பேர்ண்ட்
*இணை இயக்குநர், இ.ம.க.* பிரட்ரிக் ஈபேட் ஸ்ரிப்ருங்
*வதிவிட பிரதிநிதி*

## பயிற்சி இயக்குநர் :

திருமதி சரோஜா சிவசந்திரன்
*விரிவுரையாளர், இ.ம.க.*
*(கருத்தரங்கு அறிக்கைத் தொகுப்பாசிரியர்)*

திரு. ஓ. ஆறுமுகம்
*விரிவுரையாளர், இ.ம.க.*

## உதவியோர் :

திருமதி சந்திரா அரிபாலச்சந்திரன்
*செயலாளர், இ.ம.க.*

திரு. எஸ். ஆர். அதிகாரி
*வெளியீடு, பிரதிபண்ணல் அதிகாரி இ.ம.க.*

திருமதி சுவினிதா பர்ஞந்து
*விடுதி முகாமையாளர், இ.ம.க.*

## SRI LANKA FOUNDATION INSTITUTE

100, INDEPENDENCE SQUARE
P. O. BOX 1203
COLOMBO
DEMOCRATIC SOCIALIST
REPUBLIC OF SRI LANKA
TELEPHONE – 91814/95249
TELEX: 1417

AKILAM PUBLISHERS, VAT PRINT - COLOMBO-2.